

# ப்ரிட்டிஷ் சரித்திரச் சுருக்கம்

மான்செஸ்ட்டெர் சர்வகலாசாலையில்

சரித்திர ஆசிரியராகிய

T. F. டௌட், LL.D., D.Litt.

இயற்றி

ஸர் பிலிப் ஹார்ட்டாக், C.I.E.

இந்திய பாடசாலைகளின் உபயோகத்திற்காகத் தொகுத்தது

படங்களடங்கியது

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பனி லிமிடெட்
167 மௌண்ட் ரோட், மதராஸ்
கல்கத்தா, பொம்பாய்
1928

*All rights reserved*



பார்லிமெண்ட் மகாசபை மண்டபம்.

# PREFACE

THIS book is a special edition for India of "A First Book of British History," the briefest of the three volumes which jointly form my "Historical Series for Schools," based on the "Concentric System," Book I being a sketch filled in with increasing fullness in Books II and III. It has enjoyed a very considerable circulation in India, but experienced Indian advisers have suggested that the need which it has met would be more adequately filled were it more specially adapted to the wants of that country. To carry out such a revision effectively, practical experience of Indian requirements was necessary, and I count myself fortunate in having found in my old friend Sir Philip Hartog the ideal collaborator by reason of his wide experience of India and intimate knowledge of Indian education. Further help has also come from my old pupils Mr. and Mrs. John Coatman, who have read all the proofs and have made many valuable suggestions both to me in writing and to Sir Philip in personal discussions over the book at Simla. We both wish to express our gratitude to them.

Our plan for adaptation has been only to make alterations when we have seen special reasons for doing so. We have therefore kept substantially to the original plan. We have shortened the book by omitting detail of minor importance to the Indian student, while sometimes adding information on points linking up Britain and India. The scale of the book makes it impossible to do more than briefly touch upon a few of the more salient features of modern Indian History, but we believe that this will

matter the less since many of its readers will be acquainted with the special text-books devoted to this subject. We may add our hope that the changes made will not render the book unsuitable for other readers than those for whom it has been specially designed.

*July 15th, 1927.* T. F. TOUT.

---

## TRANSLATOR'S NOTE

In rendering this book into Tamil, the undersigned has followed the English version as closely as possible, and has avoided the introduction of any extraneous matter. He has also taken great care to make the language simple and idiomatic, and has bestowed considerable thought on the choice of Tamil equivalents for technical words.

Any successful translation should read like an original treatise, and it is for the public to judge how far this aim has been attained.

T. R. RANGASWAMI AYYANGAR.

# பொருளடக்கம்.


| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| I. | கி.பி. 410 வரை ப்ரிட்டானியரும் ரோமானியரும்—ஆங்கிலேயர் ப்ரிட்டன் தேசத்திற்கு எப்படி வந்தார்கள் என்பது, 410–597 .... | 1 |
| II. | ஆங்கிலேயர் கிறிஸ்தவர்களானது, 597–664; இங்கிலண்டு ஒரே ராஜ்யமானது — டேனியர் வரவு, 664–899 .... .... .... | 7 |
| III. | ஆல்ப்ரெட் முதல் எட்வர்ட் பக்த சிரோமணி (confessor) வரைக்கும், 889–1066 .... | 12 |
| IV. | நார்மன் அரசர்கள் .... .... .... | 21 |
| V. | இரண்டாம் ஹென்றியும், 1154–1189; அவனுடைய குமாரர்களும், 1189–1216 .... | 28 |
| VI. | மூன்றாம் ஹென்றி, 1216–1272 .... .... | 37 |
| VII. | எட்வர்ட் I., 1272–1307; எட்வர்ட் II., 1307–1327 .... .... .... .... | 42 |
| VIII. | மூன்றாம் எட்வர்ட், 1327–1377; இரண்டாம் ரிச்சர்ட், 1377–1399 .... .... .... | 48 |
| IX. | லங்காஸ்ட்டரரசர்கள், 1399–1461; யார்க் அரசர்கள், 1461–1485 .... .... .... | 58 |
| X. | ஏழாம் ஹென்றி, 1485–1509; எட்டாம் ஹென்றி, 1509–1547 .... .... .... | 69 |
| XI. | ஆறாம் எட்வர்ட், 1547–1553; மேரி, 1553–1558; எலிஜபெத், 1558–1603 .... .... | 80 |
| XII. | ஜேம்ஸ் I., 1603–1625; சார்ல்ஸ் I. முதல் உள்நாட்டுப்போர் வரைக்கும், 1625–1642 .... | 95 |
| XIII. | முதல் சார்ல்ஸூம் உள்நாட்டுப் போரும், 1642–1649; குடியரசு, 1649–1660 .... .... | 106 |

| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| XIV. | இரண்டாம் சார்ல்ஸ், 1660–1685; இரண்டாம் ஜேம்ஸ், 1685–1688 .... .... | 113 |
| XV. | மூன்றும் வில்லியம், 1689–1702; இரண்டாம் மேரி, 1689–1694; ஆன், 1702–1714 .... | 122 |
| XVI. | முதல் ஜார்ஜ், 1714–1727; இரண்டாம் ஜார்ஜ், 1727–1760 .... .. . .... | 131 |
| XVII. | மூன்றும் ஜார்ஜ், 1768–1820 .... .... | 142 |
| XVIII. | நான்காம் ஜார்ஜ், 1820–1830; நான்காம் வில்லியம், 1830–1837 .... .... .... | 157 |
| XIX. | விக்டோரியா, 1837–1901 .... .... | 163 |
| XX. | ஏழாம் எட்வர்டும், 1901–1910; ஐந்தாம் ஜார்ஜும், மகாயுத்தமும், 1910–1927 .... .... | 179 |
| பொருள் விளக்கம் | .... .... .... .... | 200 |


## அதிகாரம் I

## கி. பி. 410 வரை ப்ரிட்டானியரும் ரோமானியரும் — ஆங்கிலேயர் ப்ரிட்டன் தேசத்திற்கு எப்படி வந்தனர் என்பது, 410–597

முக்கியமானவர்கள்:

ஜூலியஸ் ஸீஸர்.

முக்கிய விஷயங்களும் காலமும்:

கி. மு. **55**. ப்ரிட்டன்மீது ஸீஸரின் படையெழுச்சி.
கி. பி. **43**. ரோமானியர் ப்ரிட்டன் தேசத்தை ஜயிக்கத்தொடங்கல்.
கி. பி. **410**. ரோமானியர் ப்ரிட்டனை விட்டு விலகுதல்.
கி. பி. **449**. ஆங்கிலேயர் தென்ப்ரிட்டனை ஜயிக்கத் தொடங்கல்.

**1. ப்ரிட்டிஷ் தீவுகளின் பூர்வகால நிலை.**—ஒரு நாட்டின் அல்லது ஒரு ஜாதியாரின் முற்கால வரலாற்றைக் கூறுவதுதான் சரித்திரம் என்பது. ப்ரிட்டிஷ் தீவுகளின் சரித்திரத்தை எடுத்துரைப்பதே இச்சிறிய நூலின் கருத்தாம். தற்காலத்தில் இங்கிலண்டு (England), ஸ்காட்லண்டு (Scotland), வேல்ஸ் (Wales) ஆகிய மூன்று பிரிவினையுடைய க்ரேட் ப்ரிட்டன் (Great Britain) என்ற ஓர் பெரிய தீவும், அதற்கு மேற்புறம் அமைந்துள்ள ஐர்லண்டு (Ireland) என்ற ஓர் சிறிய தீவும் அடங்கிய நாடுகள் தாம் ப்ரிட்டிஷ் தீவுகள் என்பது நமக்குத் தெரியும். என்றாலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த ப்ரிட்டன் தேசத்தின் நிலைமை தற்கால நிலைமைக்கு முற்றிலும் வேறுபட்டிருந்தது. 'இங்கிலண்டு' என்ற பெயர் அக்காலத்தில் ஏற்படவில்லை. ஏனெனில், ஆங்கிலேயர் தாங்கள் பூர்வத்தில் வாசஞ்செய்த ஜெர்மனிதேசத்தை விட்டுக் கடலைக் கடந்து இந்நாட்டிற் குடியேறின பிறகுதான் இப்பெயர் இதற்கு வந்தது. ப்ரிட்டன் தேசத்தின் தென்பாகத்தில் ப்ரிட்டானியர் என்ற பெயர்கொண்ட ஜனங்கள் வசித்தபடியால் இப்பெயர் இத்தீவிற்கு உண்

டாயிற்று. ஆயினும், இத்தீவில் வசித்த முதற்குடிகள் இவர்களல்லர். இவர்களுக்கு முந்திச் சிலர் இந்நாட்டில் வசித்தனர். அவர்களைப்பற்றி விசேஷமாய் நமக்கு ஒன்றும் தெரியாது.

2. **ப்ரிட்டானியர் (Britons), பிக்ட்டர் (Picts), ஸ்காட்ஸ் (Scots).**—ப்ரிட்டானியர் நீண்டதேகமும் அழகிய தலைமயிரும் உள்ள ஜாதியார். வீரத்திலும், பலத்திலும், சுறுசுறுப்பிலும் சிறந்தவர்கள். அவர்கள் ப்ரிட்டன் தேசத்தின் எல்லா பாகத்திலும் வசித்தவர்களல்லர். **ஸ்காட்லண்டு மேட்டுப்பிரதேசம் (The Highlands of Scotland)** என்று பெயர்கொண்ட இத்தீவின் வடகோடியில், யுத்தப்பயிற்சியிலும், முரட்டுத்தனத்திலும் இவர்களைக் காட்டிலும் சிறந்த **பிக்ட்டர்** என்ற ஜாதியார் வசித்தனர். ஐர்லண்டு தீவில் **ஸ்காட்** என்று பெயர்கொண்டவர்கள் வாசஞ்செய்தார்கள். பிற்காலத்தில் ஸ்காட் ஜனங்களில் சிலர் ஐர்லண்டு தீவைவிட்டு, ப்ரிட்டனின் வடபாகத்தில் குடியேறி, அந்நாட்டிற்கு **ஸ்காட்லண்டு** என்ற புதியபெயரை அளித்தனர். ஐர்லண்டில் தங்கின ஸ்காட் ஜனங்களுக்கு ஐரிஷ் (Irish) என்றபெயர் உண்டாயிற்று. ஆயினும், பாஷை நடையுடை பாவனைகளில் இம்மூன்று ஜாதியாருக்குள்ளும் விசேஷ வித்தியாசமில்லை.

3. **ஜூலியஸ் ஸீஸரும், ரோமானியரும்.**—இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் **ரோமானியர்**தாம் நாகரிகத்தில் மிக மேலானவர். இட்டலி (Italy) தேசத்திலுள்ள **ரோமாபுரி** (Rome) என்ற நகரத்தைக்கொண்டு அவர்கள் இப்பெயர் பெற்றனர். தற்காலத்தில் ப்ரான்ஸ் (France) என்று வழங்கும் **கால்** (Gaul) தேசத்தை ஜூலியஸ் ஸீஸர் என்ற ஓர் பெரிய ரோமானிய சேனைத்தலைவன் ஜயித்தான். அவன் கி. மு. 55 இல் ப்ரிட்டன் தேசத்தின்மீது படையெடுக்க, ப்ரிட்டானியர் வீராவேசத்துடன் எதிர்த்து அவனுடன் போர்புரிந்தனர். ஸீஸர் அச்சமயம் பின்வாங்கினனாயினும் அடுத்த வருஷத்தில் மீண்டும் படையெடுத்துப் ப்ரிட்டானியரைப் போரில் வென்றான். அவர்கள் ரோமானியருக்கு ஒருவித **கப்பம்** செலுத்தவேண்டுமென்ற நிபந்



தனையை ஏற்படுத்தி, ஸீஸர் அந்நாட்டைவிட்டு அகன்றான். பிறகு, நூறு வருஷங்கள்வரைக்கும் ப்ரிட்டன் தேசத்திற்கு ஒருவித துன்பமும் ஏற்படவில்லை.



ஜூலியஸ் ஸீஸரின் சிலை (நேபில்ஸ்).

4. **தென் ப்ரிட்டனை ரோமானியர் ஜயித்து ஆட்சிசெய்தல்.**—இக்காலத்தில்தான் கிறிஸ்தவமதம் ஏற்பட்டது. கி. பி. 43 இல் ப்ரிட்டனைக் கைவசமாக்கிக்கொள்ள ரோமானியர் தீர்மானித்தார்கள். ப்ரிட்டானியர் கடுமையாய்ப் போர்புரிந்தனர். கடைசியில் வடபாகத்தை ஜயிக்கும் முயற்சியை ஒழித்து ரோமானியர் முந்நூறு வருஷகாலம்வரையில் தென்னாட்டில் அரசுபுரிந்தனர். அவர்களால் ப்ரிட்டன் தேசத்திற்குச் சமாதானமும்,


ஒழுங்கும் ஏற்பட்டன. பல நகரங்களையும், ராணுவக் கோட்டைகளையும், வாசஸ்தலங்களையும் கட்டி, பல கல்ரஸ்தாக்களையும் ரோமானியர் உண்டுபண்ணினார்கள். இக்காலத்தில்தான் ப்ரிட்டானியர் கிறிஸ்தவ மதத்தைக் கைக்கொண்டார்கள். அநேகர் ரோமானியருடைய பாஷையாகிய லத்தீன் (Latin) பாஷையைக் கற்றனர்.

5. **ரோமன் ஆட்சியின் முடிவு.**—பிறகு ரோமானியருக்கு மிகுந்த சங்கடம் விளைந்தது. ஜெர்மனி தேசத்தில் வசித்த முரட்டு ஜனங்கள் இவர்களுடைய ராஜ்யத்தின் மீது படையெடுத்து அவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்படியும்படியுஞ் செய்துவிட்டனர். பிறகு வெகுதூரத்தில் இருக்கும் ப்ரிட்டனை ஆளுவது ரோமானியருக்கு அசாத்யமாகிவிட்டது. கி. பி. 410 இல் அவர்கள் அத்தீவை விட்டுப் போய்விட்டார்கள்.

6. **ப்ரிட்டானியர் மேற்கில் செல்லவேண்டிவந்ததும், வெல்ஷ் ஜாதியாரும்.**—ரோமானியர் சென்றபிறகு, ப்ரிட்டானியருள் கலகம் உண்டாகி, அவர்கள் பல வகுப்பினர்களாகப் பிரிந்தனர். முரட்டுக் கூட்டத்தார் ரோமானியரை தாக்கினதுபோல் இவர்களையும் தாக்கிக் கொஞ்சம் கொஞ்சமாய் இவர்களை மேனாட்டு மலைப்பிரதேசங்களுக்குத் துரத்தினார்கள். ப்ரிட்டானியர் தங்களுடைய வசத்தில் வைத்துக்கொள்ளக் கூடியதாயிருந்த பெரிய பகுதிக்குத் தற்காலத்தில் **வேல்ஸ் (Wales)** என்று பெயர். தற்கால வேல்ஸ் வாசிகள் பழைய ப்ரிட்டானியாரின் சந்ததியாரே; அவர்கள் பேசும் பாஷை பழைய ப்ரிட்டானியர் பாஷையைச்சேர்ந்தது; அவர்களுடைய மதமும் ரோமானியரிடமிருந்து அவர்களுடைய முன்னோர் கற்றுக்கொண்ட கிறிஸ்தவமதம்.

7. **ஆங்கிலேயரின் வருகையும், அவர்களின் உட்பிரிவுகளும்.**—ப்ரிட்டன் தேசத்தின்மீது புதிதாய்ப் படையெடுத்துவந்தவர்கள், வடஜெர்மனி வாசிகளான **ஆங்கிலேயர்.** அவர்கள் இத்தீவை ஜயித்து ஆண்டுவந்த பல பாகங்களில் வெல்ஷ், லத்தீன் பாஷைகளுக்குப் பதிலாக ஆங்கிலபாஷை வழங்கப் பெற்றது. ஆனால், அக்காலத்து ஆங்கில பாஷைக்கும் தற்கால ஆங்கில பாஷைக்கும் மிக்க





வேறுபாடுண்டு. ப்ரிட்டன் தேசத்திற் குடியேறின முக்கியமான மூன்று கூட்டத்தாருக்கு ஜூட் (Jute), ஸாக்ஸன் (Saxon), ஆங்கிலர் (Angles) என்று பெயர். அவர்கள் பல சிறுராஜ்யங்களை அமைத்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் அரசனை நியமித்துக்கொண்டார்கள். ஜூட் ஜாதியாரின் முக்கியமான இருப்பிடம் கென்ட் (Kent). ஆங்கிலேயர் முதன்முதலில் கி. பி. 449 இல் கைவசமாக்கிக்கொண்ட நாடு இதுதான். இங்கிலண்டின் தென் பாகத்தில் ஸாக்ஸோனியர் குடியேறி ஏஸெக்ஸ் (Essex), ஸஸெக்ஸ் (Sussex), வெஸெக்ஸ் (Wessex) முதலிய ராஜ்யங்களை ஏற்படுத்தினார்கள்.

8. **ஆங்கிலர்.**—ஆங்கிலரிடமிருந்துதான் இந்நாட்டுக்கு இங்கிலண்டு என்ற பெயர் உண்டாயிற்று. இப்பெயருக்கு ஆங்கிலநாடு என்பதுபொருள். இவர்கள் இங்கிலண்டின் இடைப்பகுதிகளையும் கீழ்ப்பகுதிகளையும் ஜயித்து மூன்று ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். அவை

(1) ஹம்பர் (Humber) நதிக்கு வடக்கேயுள்ள நாடு நார்த்தம்பர்லண்டு (Northumberland), அல்லது நார்த்தம்பிரியா (Northumbria).

(2) நார்பக் (Norfolk), ஸபக் (Suffolk) அடங்கிய நாடு கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

(3) மேர்ஸியா (Mercia) என்னும் மத்தியராஜ்யம். மேற்கூறிய ஏழுராஜ்யங்கள் தாம் முக்கியமானவை. அவை நெடுங்காலம் நிலைபெற்றிருந்தன.

9. **ஆங்கில ராஜ்யங்களுள் சண்டை.**—இவ்வித வேறுபாடுகளெல்லாம் நடைபெற 150 வருஷங்களாயின. பல போர்கள் நிகழ்ந்து கடைசியில் நான்கு ராஜ்யங்களே மிகுந்தன. அவை நார்த்தம்பிரியா, மெர்ஸியா, வெஸெக்ஸ், கென்ட் என்பன.

## அதிகாரம் II

## ஆங்கிலேயர் கிறிஸ்தவர்களானது, 597–664; இங்கிலண்டு ஒரே ராஜ்யமானதும் டேனியர் வரவும், 664–899

முக்கியமானவர்கள்:

போப் கிரிகரி மகான் (Pope Gregory the Great); கான்டெர்பெரி முதல் பிரதான மதத்தலைவர் அகஸ்ட்டின் (Augustine, First Archbishop of Canterbury); கென்ட் மன்னன் எதெல்பெர்ட் (Ethelbert, King of Kent); நார்த்தம்பிரியா அரசன் எட்வின் (Edwin, King of Northumbria); மேல ஸாக்ஸோனிய அரசர்களாகிய எக்பெர்ட், ஆல்ப்ரெட் (Egbert and Alfred, Kings of the West Saxons).

முக்கிய விஷயங்களும் காலமும்:

**597**. அகஸ்ட்டின் கென்டில் வந்து இறங்கியது.
**627**. எட்வினின் மதமாறுதல்.
**839**. எக்பெர்ட்டின் மரணம்.
**871**. வெஸெக்ஸின்மீது டேனியர் படையெழுச்சி. ஆல்ப்ரெட் பட்டத்திற்கு வந்தது.
**878**. ஆல்ப்ரெடுக்கும் டேனியருக்கும் சமாதானம்.
**899**. ஆல்ப்ரெடின் மரணம்.

1. **பழைய ஆங்கிலேயரின் மதம்.**—ப்ரிட்டன்மீது படையெடுத்துவந்த ஆங்கிலேயர் பல தெய்வங்களை வணங்கி வந்தனர். தாங்கள் ஜயித்த நாடுகளில் வழங்கிவந்த கிறிஸ்தவமதத்தை அடியோடு தொலைத்துவிட்டனர். பிறகு ரோமாபுரியிலிருந்து அம்மதம் இந்நாட்டிற்கு வந்தது. ரோமன் ஆட்சி அழிந்தபிறகும் ரோமிலிருந்த கிறிஸ்தவ மதத்தலைவர் மதவிஷயங்களில் எங்கும் அதிகாரஞ் செலுத்திவந்தார். அவருக்குப் போப் (Pope) என்று பெயர். அப்பதத்திற்குப் 'பிதா' என்பது பொருள். அவரைத்தான் கிறிஸ்தவ நாடுகளுக்கெல்லாம் மதத்தலைவராகப் பாவித்துவந்தனர்.

**போப் கிரிகரியும், ஆங்கிலேய அடிமைகளும்.** — ஆங்கிலேயர் ப்ரிட்டனில் குடியேறிய 150 வருஷங்களுக்குப் பின்னர், கிரிகரி என்று பெயர்கொண்ட ஒரு பெரியவர் போப் ஸ்தானத்தை வகித்தார். இவர் இப்பதவியை அடைவதற்கு வெகுகாலம் முன்னரே, ரோமாபுரிச் சந்தையில் விற்பனைக்குவந்த சில அழகிய ஆங்கில வாலிபர்களைக்கண்டு, "நீங்கள் எத்தேசத்தவர்?" என்று கேட்க, அவர்கள், "நாங்கள் ஆங்கிலர்" என்றார்கள். அதற்கு அவர், "இவர்கள் ஆங்கிலர் அல்லர், அவர்களுடைய முக அழகைப் பார்த்தால் அவர்கள் தேவதைகள் (angels)" என்றார். இவர் அகஸ்ட்டின் என்று பெயர்கொண்ட ஒரு பாதிரியாரை ஆங்கிலேயருக்குக் கிறிஸ்தவமதக் கொள்கையைப்பற்றிப் பிரசங்கம் செய்வதற்காக அனுப்பினார்.

2. **கேன்டில் அகஸ்ட்டின்செய்த பிரசங்கம்.**—597 இல் எதெல்பேர்ட் என்று பெயர்கொண்ட மன்னன் அரசாண்டுவந்த கென்ட் மாகாணத்தில் அகஸ்ட்டின் வந்து இறங்கினார். எதெல்பெர்ட் அவரை ஆதரவுடன் அழைத்துத் தன்னுடைய குடிகளுக்குக் கிறிஸ்தவமதத்தைப் போதிக்க அவருக்கு அனுமதிகொடுத்தான். கொஞ்சகாலத்தில் எதெல்பெர்ட்டும் அவனுடைய குடிகளில் அநேகரும் புதிய மதத்தைத் தழுவினர். கென்டிற்குத் தலைநகராகிய கான்டெர்பெரியில் அவரை முதல் முதல் பிரதான மதத்தலைவராய் நியமித்தனர். அக்காலமுதல் கான்டெர்பெரி மதத்தலைவரே ஆங்கிலக் கோவிலதிகாரத்தைச் செலுத்தும் குருமார்களில் முதன்மையானவராய் இருந்துவருகிறார். கென்ட் ஜனங்கள் கிறிஸ்தவர்களானதே இங்கிலண்டு முழுவதிலும் அம்மதம் பரவுவதற்குக் காரணமாயிற்று.

3. **ஒரே அரசன் ஆட்சியுள்ளும், ஒரே கோவிலின் வழிபாட்டினுள்ளும் இங்கிலண்டு அடங்கியவிதம்.**—ஆங்கிலேயர் எல்லோரும் இப்போது ஒரே மதத்தினராகிவிட்டார்கள். கொஞ்சகாலத்தினுள் எல்லோரும் ஒரே அரசன் ஆட்சியுள்ளும் அடங்கினார்கள். அக்காலத்தில் மற்ற ராஜ்யங்களைக்காட்டிலும் வெஸெக்ஸ் அதிக மேன்மையுள்ளதாயிருந்தது. ஆகையால், அந்நாட்டு அரசன் எக்



பேர்ட் என்பவனுடைய ஆட்சிக்கு மற்ற அரசர்களும் தலைவணங்கினார்கள். அநேக வருஷங்களுக்குப் பின்னர் வெஸெக்ஸ் மன்னர்களே இங்கிலண்டு முழுமைக்கும் அரசர்களாகிவிட்டனர். நம் ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி எக்பெர்ட் வம்சத்தில் பிறந்தவரே.

4. **டேனியர் வரவு.** — எக்பெர்ட் மிக்க பலவான். அவன் நாட்டில் யாதொரு கலகமுமின்றி அரசுபுரிந்தான். 839 இல் அவன் மரித்தவுடன் கடலுக்கு அப்பால் வசித்துக்கொண்டிருந்த ஒரு புதிய வகுப்பினர் இங்கிலண்டு தேசத்தின்மீது படையெடுத்து, ஆங்கிலேயருக்குச் சொல்லமுடியாத தீங்குகளை விளைத்தனர். இவர்கள்தாம் **டேனியரும், நார்ஸ்** ஜனங்களும். இவர்கள் முறையே டென்மார்க் (Denmark), நார்வே (Norway) தேசங்களிலிருந்து வந்தவர்கள். ப்ரிட்டனுக்கு வரும்போது ஆங்கிலேயர் இருந்ததுபோலவே டேனியரும் வீரமும், முரட்டுத்தனமும், கொடிய புத்தியுமுள்ளவர்களாயிருந்தார்கள். முதலில் அவர்கள் கொள்ளையை நினைத்தே இத்தேசம் வந்தவர்கள். ஒவ்வொரு வருஷமும் கோடைகாலம் வரும்போது அவர்கள் அதிக உயரமில்லாத தங்களுடைய நீண்ட கப்பல்களில் ஏறி ஆங்கிலதேசக் கடற்கரை ஓரமாயுள்ள நாடுகளைக் கொள்ளையடித்துக் குளிர்காலம் வந்தவுடன் தங்களுடைய தேசம் திரும்பிச் சென்று, தாங்கள் கொள்ளையடித்து வந்த பொருளைச் செலவிட்டு ஆனந்திப்பார்கள். கொஞ்ச காலத்திற்குள் தங்களுடைய தேசத்தைக்காட்டிலும் இங்கிலண்டு வாசயோக்கியமானதென்று கண்டுகொண்டார்கள். பிறகு ஆங்கிலேயரைப்போல் தாங்களும் இத்தேசத்திலேயே குடியிருக்கத் தலைப்பட்டார்கள்.


**வெஸெக்ஸை டேனியர் தாக்குதல்.** — இங்கிலண்டின் வடக்கிலும், கிழக்கிலுமுள்ள நாடுகளை டேனியர் ஜயித்து 871 இல் வெஸெக்ஸின் மீதும் படையெடுத்தார்கள். அதிர்ஷ்டவசமாய் அந்தச் சமயம் எக்பெர்ட் மன்னனுடைய பேரன்மாருள் மிகச் சிறந்தவன் பட்டத்திற்கு வந்திருந்தான். இவன்தான் ஆல்ப்ரேட் மகான் (Alfred

the Great). பூர்வகாலத்து ஆங்கில மன்னருள் இவன்தான் பெரியவன்.

5. **ஆல்ப்ரேடும், டேனியரும்.**—ஆரம்பத்தில் டேனியருடன் போர்புரிய ஆல்ப்ரெடுக்குக்கூடச் சக்தியில்லை. கடைசியில் அவர்களை ஒருபெரிய சண்டையில் அவன் வென்று, அவர்களைத் தன்னுடன் சமாதானஞ்செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தினான். 878 இல் இங்கிலண்டு தேசத்தை டேனியருக்குப் பாகித்துக்கொடுக்க ஆல்ப்ரெட் சம்மதித்தான். டேனியர் நாட்டின் வடகிழக்குப்பாகங்களை யடைந்தார்கள். டேனியரின் சட்டங்கள் பரவியிருந்த ஜில்லாவிற்கு டேன்லா (Danelaw) என்று பெயர் உண்டாயிற்று. என்றாலும், கொஞ்சகாலத்தில் டேனிய சிற்றரசர்களுள் கலகம் உண்டாகி, அனைவரும் ஆல்ப்ரெடைப் பேரரசனாக ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. 'மேல ஸாக்ஸோனிய நாட்டரசன்' என்று ஆல்ப்ரெட் தன்னைச் சொல்லிக்கொண்டிருந்தாலும் உண்மையில் ஆங்கிலதேசம் முழுமைக்கும் 'முதல் அரசன்' இவன்தான் என்று கூறலாம்.

6. **ஆல்ப்ரேடுக்கு 'மகான்' என்ற பட்டம் வருவதற்குக் காரணம்.** — ஆல்ப்ரெட் மன்னனுக்குப் போர்வலிமையைப்போலவே நாடாளும் திறமையும் நிரம்பியிருந்தது. டேனியர் இனிமேல் படையெழுச்சி செய்யாவண்ணம் அவன் ஒரு வலிய சேனையைத் திரட்டினான். இங்கிலண்டைக் காப்பதற்காக ஒரு கப்பற்படையை யுண்டுபண்ணினான். ஆங்கிலேயர் தற்காலத்தில் கப்பற்படையிற் சிறந்தவர்களாயிருப்பதற்கு இதே காரணமாகும். ஆல்ப்ரெட் காலத்தில் தேசம் வெகு செழிப்படைந்தது. அவன் பல கோவில்களைக்கட்டித் தன்னுடைய குடிகளுக்கு மதத்தைப் போதிப்பதற்காக அநேகரைக் குருமார்களாகும்படி பயிற்சிசெய்வித்தான். அவனுக்குப் படிப்பில் வெகு ஊக்கமுண்டு. அநேக பாடசாலைகளை யுண்டுபண்ணி, ஆங்கிலபாஷையில் சில புஸ்தகங்களை எழுதினான். ஆங்கிலேயருடைய பழைய சட்டங்களைத் திரட்டிச் சில புதிய சட்டங்களையும் ஏற்படுத்தினான். அவன் நல்ல சுபாவமும் புத்தி நுட்பமுமுள்ள அரசன்.





அவன் அடிக்கடி பிணியால் வருந்தினனாயினும் ராஜயத்தின் நன்மைக்காகப் பாடுபடுவதில் எப்பொழுதும் மனத்தளர்ச்சி யடையாதவன். 899 இல் அவன் மரிக்கும்போது ஆங்கில ராஜ்யம் பலம், புத்தி, ஒற்றுமை விஷயங்களில் முன்னிருந்ததைக்காட்டிலும் மிக்கச் சிறப்புள்ளதாயிற்று. இக்காரணத்தினாலேயே இவனுக்கு மகான் என்ற பட்டப்பெயர்வந்தது. அவனுடைய கீர்த்தியை ஜனங்கள் இன்னமும் புகழ்ந்துகொண்டாடுகிறார்கள்.

## அதிகாரம் III

## ஆல்ப்ரேட்முதல் எட்வர்ட் பக்தசீலன் (Confessor) வரைக்கும், 899-1066

முக்கியமானவர்கள்:

இங்கிலண்டு முழுவதற்கும் முதல் அரசனான மூத்த எட்வர்ட்; சமாதானப்பிரியனான எட்கார் (Edgar the Peaceful); பிரதான மதத்தலைவனான டன்ஸ்டன் (Dunstan); பிராணத்யாகி எட்வர்ட் (Edward the Martyr); எதெல்ரெட் மதியீனன் (Ethelred the Unready); டென்மார்க் தேச அரசனான ஸ்வெயின் (Swegen); நட் அரசன் (King Cnut); நார்மண்டி-எம்மா (Emma of Normandy); பக்தசீலனான எட்வர்ட் (Edward the Confessor); ஹாரல்ட் (Harold).

முக்கிய விஷயங்களும் காலமும்:

| | |
|---|---|
| 924. | மூத்த எட்வர்டின் மரணம். |
| 959-975. | எட்காரின் ஆட்சி. |
| 1017-1035. | நட் அரசனின் ஆட்சி. |
| 1042-1066. | பக்தசீலனான எட்வர்டின் ஆட்சி. |
| 1066. | ஹாரல்டின் அரசு. |
| | ஹேஸ்டிங்ஸ் (Hastings) சண்டை. |

**1. ஆல்ப்ரெடின் சந்ததியார் ஆங்கிலேயரின் அரசர்களும் ப்ரிட்டனின் சக்ரவர்த்திகளும் ஆனவிதம்.**—ஆல்ப்ரெட் மரித்தபிறகு எழுபது ஆண்டுகளுக்குமேல் இங்கிலண்டு தேசம் வெகு செழிப்பாயிருந்தது. அரசர்கள் வீரர்களாகவும், உழைப்பாளிகளாகவும் இருந்தபடியால் சத்துருக்கள் தலையெடுக்க முடியவில்லை. ஆல்ப்ரெடின் மகன் மூத்த எட்வர்ட் 'ஆங்கிலேய அரசன்' என்ற பெயரை வைத்துக்கொண்டான். அவன் 924 இல் இறந்தான். கொஞ்சகாலத்தினுள் அவனுக்குப்பின் அரசாண்டவர்கள் டேன்லாவைக் கைவசமாக்கிக்கொண்டார்கள். அவர்கள் வெல்ஷ் ஜனங்களையும் ஸ்காட் ஜனங்களையும் தங்களுடைய ஆட்சியுள் அடக்கித் தாங்கள் 'ப்ரிட்டன் சக்ரவர்த்திகள்' என்ற பட்டப்பெயரை வைத்துக்கொண்டார்கள்.

**2. எட்கார் அரசனின் ஆட்சி; டன்ஸ்டன், பிரதான மதத்தலைவர்.**—ஆல்ப்ரெட் சந்ததியில் மிகுந்த கீர்த்திபெற்ற மன்னன் ஆல்ப்ரெடின் பேரனுடைய மகன் எட்கார் என்பவன். அந்தக்காலம் சீர்குலைந்திருந்தபோதிலும் அவன் 959 ௵ முதல் 975 ௵ வரைக்கும் ஆண்டான். நாட்டில் யாதொரு போருமில்லாமல் சமாதானம் பெருகி இருந்தது இவனுடைய ஆட்சியில்தான். ஆகையால், இவனுக்கு 'சமாதானப்பிரியனான எட்கார்' என்ற பெயர்வந்தது. எட்கார் இங்கிலண்டு தேசத்தை ஆண்டுவந்ததோடு ப்ரிட்டன் தீவு முழுமையிலும் அதிகாரம் செலுத்தினான். வெல்ஷ் ஜனங்களுக்கும் ஸ்காட் ஜனங்களுக்கும் சொந்த அரசர்கள் இருந்தபோதிலும் அவ்வரசர்கள் இவனுக்கடங்கிய சிற்றரசர்களாயிருக்க ஒப்புக்கொண்டனர். கான்டெர்பெரிப் பிரதான மதத்தலைவர் டன்ஸ்டன் என்பவர் இவனுக்கு முதல் மந்திரியாயிருந்தார். அக்காலத்தவர்களுள் இவரைக்காட்டிலும் அறிவிற் சிறந்தவர் ஒருவருமில்லை. அரசுரிமையும், போர்வலிமையும் இல்லாவிடினும் ராஜதந்திரத்தைமாத்திரம் உணர்ந்த ஆங்கிலேயரில் இவரே முதன்மையானவர். இவர் மதவிஷயத்திலும், படிப்பிலும், அதை விருத்திசெய்வதிலும் மிகவும் உழைத்தார். இங்கிலண்டில் வாசஞ்செய்துகொண்டிருந்த பல ஜாதியார்களும் ஒருங்கே ஒத்துவாழும்படி செய்யப் பல முயற்சிகளைச் செய்தார்.

தது. ஆல்ப்ரெட் ஆட்சிக்காலத்தில், இவர்களிற் சிலர் இங்கிலண்டிற்கு வந்து கொலையும், களவும் செய்து கொண்டிருந்த சமயத்தில், இவர்களுள் வேறு சிலர் ப்ரான்ஸ் தேசத்தின் வடபாகத்தைக் கொள்ளையடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இங்கிலண்டிற்கு எதிர்கரையிலுள்ள ஸேன் (Seine) நதிக்கரைப் பிரதேசத்தை ஜயித்துக் கைவசமாக்கிக்கொண்டார்கள். இந்நாட்




பக்தசீலனான எட்வர்ட். (அவனுடைய முத்திரையிலுள்ளபடி.)

டிற்கு நார்மண்டி என்று பெயர் உண்டாயிற்று. ஸேன் நதிக்கரையிலுள்ள ரூஆன் (Rouen) என்ற ஊர் தான் இதற்குத் தலைநகர். நார்மன் ட்யூக் (Norman Duke) என்று இத்தேசாதிபதிக்குப் பெயர்.

9. நார்மானியர்கள் ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் ஆனவிதம்.—ப்ரெஞ்சு அரசர்கள் நார்மன் ட்யூக்குகள் தங்களுடைய தொண்டர்கள்தாம் என்று ஒப்புக்கொள்ளும்படி செய்திருந்தபோதிலும், நார்மண்டி தேசத்தை ஜயிக்க



அவர்களுக்குச் சக்தியில்லை. என்றாலும், இங்கிலண்டில் டேனியர் நாளடைவில் எப்படி ஆங்கிலேயராக ஆகிவிட்டனரோ, அப்படியே நார்மானியரும் ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் மாறிவிட்டார்கள். ப்ரெஞ்சு பாஷையைப் பேசி, ப்ரெஞ்சுக்காரர்களுடைய சட்டங்களையும் நடையுடை பாவனைகளையும் ஏற்றுக்கொண்டார்கள்.





நார்மன் நப்பல்கள்.
(From the Bayeux Tapestry.)

10. எட்வர்ட் நார்மானியரை இங்கிலண்டிற்கு அழைத்தல்.—எட்வர்டின் தாய் நார்மன் கூட்டத்தைச் சேர்ந்தவள். மேலும், நார்மன் அரசனாகிய வில்லியம் (William) என்பான் அவனுக்குச் சிநேகிதனாகவும், சுற்றத்தானாகவும் இருந்தான். எட்வர்ட் எப்பொழுதும் வில்லியத்தினுடைய போதனையைக்கேட்டே நடந்துவந்து, நார்மானியரையும் இங்கிலண்டிற்கு வரும்படி அழைத்தான். ஒரு நார்மானியனைக் கான்டெர்பெரி பிரதான மதத்தலைவனாக நியமித்தான். வேறுசிலரை ஆங்கில சிற்றரசர்கள் (Earls) ஆகச்செய்தான். அக்காலத்தில் தேசத்தின் ஒரு பெரிய பாகத்தை ஆளும் அதிகாரம் பெற்றவனுக்கு 'இயர்ல்' என்ற பட்டம் உண்டு.




ஹேஸ்டிங்ஸ் யுத்தத்தில் ஒரு காட்சி. நார்மன் குதிரைவீரர் ஆங்கிலத் தரைப்படையை ஒரு குன்றின் உச்சியில் எதிர்ப்பது.
(From the Bayeux Tapestry.)




ஹாரல்டின் மரணம்.
(From the Bayeux Tapestry.)



**11. ஹாரல்ட் நார்மானியரைத் துரத்தியது.**—அக்காலத்தில் ஆங்கிலேயர் அன்னியதேசத்தாரை மிகவும் வெறுத்தபடியால், அவர்களுக்கு எட்வர்டின்மீது கோபமுண்டாகிவிட்டது. மேல ஸாக்ஸோனிய சிற்றரசனை ஹாரல்ட் என்பவன் ஆங்கில பிரபுக்களில் மிகுந்த வலிமையுடையவன். எட்வர்ட் தன் நார்மன் சிநேகிதர்களைத் தேசத்தைவிட்டுத் துரத்தும்படி அவன் செய்தான். எட்வர்டுக்குத் தானே நாடாளும் திறமையில்லாதபடியால், அவனுடைய காலம்முழுவதிலும் ஹாரல்டே அவனுக்குப் பதிலாக அரசுசெலுத்திவந்தான். அவனுடைய ஆட்சி மிக ஒழுங்காயிருந்தது. அவன் வீரத்திலும், புத்தியிலும் மிகச்சிறந்தவன்.

**12. ஹாரல்ட் ஆங்கில அரசனாதல்.**—எட்வர்ட் 1066 இல் இறந்தான். அவனுக்கு யாதொரு சந்ததியும் ஏற்படவில்லை. தனக்குப் பிறகு நார்மண்டி ட்யூக் வில்லியம் பட்டத்திற்கு வரவேண்டுமென்ற தன்னுடைய கருத்தைத் தான் சாகுமுன் வெளியிட்டிருந்தான். என்றாலும், அதை நிராகரித்து ஆங்கிலேயர், ஹாரல்ட் வெஸெக்ஸ் ராஜவம்சத்தைச் சேராதவனாயிருந்தும், அவனை அரசனாக நியமித்துக்கொண்டார்கள்.

**13. ட்யூக் வில்லியம் வரவு.**—எட்வர்டின் மந்திரியாயிருந்து நாட்டை யாளுவதைக்காட்டிலும் தானே அரசனாகி ஆள்வது அதிக கஷ்டமுள்ளதென்று ஹாரல்ட் தெரிந்துகொண்டான். சிலமாதம் கழிவதற்குள்ளாகவே வில்லியம் "எட்வர்ட் தனக்கு முன்னரே ஆங்கில ராஜ்யத்தை அளித்துவிட்டான்" என்றுசொல்லிப் பாத்தியம் கொண்டாடினான். நார்மண்டியிலிருந்து ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு, கடலைக் கடந்து தென் கடற்கரையில் வந்து இறங்கினான்.

**14. ஹாரல்ட் நார்வே ஜனங்களை தோற்க அடித்து நார்மானியருடன் யுத்தத்திற்கு வருதல்; ஹேஸ்டிங்ஸ் சண்டை; வில்லியம் ஆங்கில அரசனாதல்.**—அந்தச்சமயம் யார்க் (York) மாகாணத்தில்வந்து குடியேறியிருந்த நார்வே ஜனங்களின் மன்னனை நாட்டைவிட்டுத் துரத்த ஹாரல்ட் முயற்சிசெய்துகொண்டிருந்தான். நார்வே ஜனங்

களைப் போரில்வென்று அவர்களுடைய அரசனையும் கொன்றான். உடனே தெற்கில் ஓடிவந்து 'ஹேஸ்டிங்ஸ்' என்ற இடத்திற்கு ஏழுமைல் தூரத்திலுள்ள ஒரு குன்றின்மேல் வில்லியத்துடன் பலமாய்ச் சண்டை செய்தான். இதற்கு ஹேஸ்டிங்ஸ் சண்டை என்று பெயர். பேயோ படுதாக்கள் (Bayeux Tapestry) என்று பெயர்கொண்ட தையற் சித்திரப்படங்களில் இந்த யுத்தத்தை நன்றாய் வர்ணித்திருக்கின்றனர். வில்லியம் எவ்விதம் பூரண ஜயத்தை அடைந்தான் என்று அவைகள் தெளிவாய்க் காட்டுகின்றன. ஹாரல்ட் தன்னுடைய சிறந்த போர்வீரர்களுடனும் வீராவேசத்துடன் சண்டையிட்டு யுத்தகளத்திலேயே உயிர் துறந்தான். இவ்வெற்றிக்குப் பிறகு வில்லியம் லண்டன்நகரம் சென்றான். ஆங்கிலேயர் அவனை அரசனாக நியமித்துக்கொண்டார்கள். 1066 இல் கிறிஸ்துபிறப்புப் பண்டிகைநாளில் எட்வர்ட் கட்டிய 'வெஸ்ட்மின்ஸ்டெர்' கோயிலில் வில்லியம் முடிசூட்டிக்கொண்டான். அவனுக்கு வில்லியம் ஜயசீலன் (Conqueror) என்ற பெயர் வந்துவிட்டது.

நார்மன் வெற்றிக்குமுந்திய முக்கியமான ஆங்கில அரசர்கள்.

வெஸெக்ஸ் அரசன், எக்பேர்ட்.
|
(பேரன்)
ஆல்ப்ரெட்.
|
மூத்த எட்வர்ட்.
|
(பேரன்)
எட்கார்.
|
பிராணத்யாகம்செய்த எட்வர்ட்.
மதியீனனான எதேல்ரெட் + நார்மண்டி தேசத்திய எம்மா.
|
பக்தசீலனான எட்வர்ட்.

# அதிகாரம் IV

## நார்மன் அரசர்கள், 1066–1154

முக்கியமானவர்கள்:

ஜயசீலனான வில்லியம் (William the Conqueror); நார்மண்டி-ட்யூக் ராபர்ட் (Robert, Duke of Normandy); சிவந்த வில்லியம் (William, Rufus); முதல் ஹென்றி (Henry I.); முதல் ஹென்றியின் மகள் மட்டில்டா (Matilda); ஸ்டீபன் அரசன் (King Stephen)

முக்கிய விஷயங்களும் காலமும்:

**1036–1087.** முதல் வில்லியம் (ஜயசீலனின்) ஆட்சி.
**1087–1100.** இரண்டாம் வில்லியத்தின் ஆட்சி.
**1100–1135.** முதல் ஹென்றியின் அரசியல்.
**1135–1154.** ஸ்டீபனின் அரசியல்.

1. ஆங்கிலேயரையும், நார்மானியரையும் வில்லியம் நடத்திய விதம்.—ஜயசீலனான வில்லியம் எதையும் தன் இஷ்டப்படிச் செய்வதிலேயே எண்ணமுள்ளவன். தன்னை எதிர்த்தவர்களைக் கொடுமையாய் வதைத்திடுவான். என்றாலும், அவன் ஒரு கொடிய மன்னனல்லன். வில்லியம் இங்கிலண்டுதேசத்தை ஜயிப்பதில் தனக்கு உதவிபுரிந்த நார்மன் பிரபுக்களுக்குத் (Barons) தக்கவெகுமதி அளிக்க வேண்டியவனாயினான். ஆகையால், அவன் ஆங்கிலேயர் அநுபவித்துவந்த நிலங்களை அவர்களிடமிருந்து பிடுங்கி, நார்மன் பிரபுக்களுக்குக் கொடுத்தான். நாடாள்வதில் ஆங்கிலேயர் உதவியைத் தேடுவதற்கு வேண்டிய நம்பிக்கை அவர்களிடம் அவனுக்கு ஏற்படவில்லை. ஆகையால், கொஞ்சகாலத்தினுள் பாரன் (Baron), இயர்ல் (Earl), பிஷப் (Bishop) என்ற பட்டப்பெயர் உள்ள பிரபுக்கள் எல்லாரையும் நார்மன் ஜாதியைச் சேர்ந்தவர்களாகவே செய்துவிட்டான். ஆங்கிலேயர் அநுபவத்தில் சிறுசிறு 'மிட்டா' நிலங்கள்தாம் இருந்தன.

2. நிலமானிய ஒழுங்கு (The Feudal System).—வில்லியம் தன்னைப் பின்பற்றி வந்தவர்களுக்கு நிலமானியங்

களை அளிக்கும்போது, அவர்கள் தனக்கு உண்மையான தொண்டர்களாகவும், போர்வீரர்களாகவும் இருக்கும்படி பிரமாணம் வாங்கிக்கொண்டான். இவ்விதமே சிற்றரசர்களாகிய பாரன்களும் தங்களுடைய நிலங்களைத் தங்கள் பரிவாரங்களுக்குப் பாகித்துக்கொடுத்தார்கள். கொடுப்பவனுக்கு இறைவன் (Lord) என்றும், பெற்றுக் கொள்பவனுக்குத் தொண்டன் அல்லது குடிமகன் (Vassal) என்றும் பெயர். இறைவனுக்குத் தான்செய்ய வேண்டிய கடமையைச் செய்யத்தவறினால் தொண்டன் தனக்குக்கிடைத்த நிலமானியத்தை இழக்கவேண்டும். இவ்விதஏற்பாட்டினால்சகலநிலத்திற்கும்அரசனேசொந்தக்காரனும், தனக்குக் கீழ்ப்பட்டவர்கள்மீது தன் இஷ்டப்படியே அதிகாரஞ் செலுத்தக்கூடியவனுமானான். இவ்வித ஏற்பாட்டிற்குச்சிலசமயம்'நிலமானிய ஒழுங்கு' என்ற பெயர் வழங்கி வந்தது. இறைவன் கொடுக்கும் நிலத்திற்கு நார்மன் பாஷையில் பீப் (Fief) என்று பெயர். இறைவனுக்குத் தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட தொண்டர்களை அடக்கி ஆளுவதில் வெகு கஷ்டமிருந்தது. நெடுங்காலம்வரைக்கும் அரசனுக்கும் பாரன்களுக்கும் ஆட்சிவிஷயத்தில் அடிக்கடி சண்டை நடந்துகொண்டே இருந்தது.

3. **நார்மன் கோட்டைகள்; ஆங்கிலேயர் வில்லியத்திற்கு உதவிபுரிந்தது.** — நார்மானியர் நாடெங்கும் பலமான கோட்டைகளைக் கட்டினார்கள். அவைகளைப் பிடித்துக் கொள்ள ஆங்கிலேயர்களுக்குச் சக்தியில்லை. அழிந்து போன அக்கோட்டைகளின் அடையாளங்களை தற்காலத்திலும் காணலாம். அவைகளில் முக்கியமானது **லண்டன் கோபுரம்** (The Tower of London). அதை அடிக்கடி பழுதுபார்த்துவருகிறார்கள். நார்மன் பிரபுக்களை நம்பக்கூடாதென்று கொஞ்சகாலத்தினுள் வில்லியம் தெரிந்துகொண்டான். அவர்கள் எப்பொழுதும் கலகஞ்செய்து கொண்டேயிருந்தார்கள். அவர்கள் அரசனைக்காட்டிலும் கொடுமையாய் ஆங்கிலேயரை நடத்தினார்கள். இந்தப் பிரபுக்களை அடக்கித் தங்களைக் காக்கவேண்டுமென்ற கவலை அரசனுக்கு ஏற்பட்டுவிட்டதென்று ஆங்



கில ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். ஆகையால், நார்மன் பிரபுக்கள் கலகம் செய்யும்போது அந்தக் கலகத்தை அடக்குவதில் அரசனுக்கு ஆங்கிலேயர் உதவிபுரிந்தனர். இவ்வுதவிக்குக் கைம்மாறாக அரசன் தன்னால் இயன்றமட்டும் பழைய சட்டங்களை அநுசரித்து ஆங்கிலேயரை ஆண்டுவந்தான்.

4. **வில்லியம் பலவானானதும், டூம்ஸ்டே புஸ்தகமும் (Domesday Book).** — இவ்வித ஏற்பாடுகளால் வில்லியம் தன் வலிமையை விருத்திசெய்துகொண்டான். இதனால் இங்கிலண்டிற்கு க்ஷேமம் பிறந்தது. அக்காலத்தில் அரசன் வலிமையுள்ளவனாய்க் குடிஜனங்களில் ஒவ்வொருவரையும் தன் இஷ்டப்படி நடக்கச்செய்தாலொழியத் தேசத்தில் சமாதானமும் ஒழுங்கும் ஏற்படா. வில்லியம் தங்களுக்குச் செய்த இப்பேருதவிக்காக ஆங்கிலேயர் கடுமையான வரிகளைச்செலுத்திப் பொருள்நஷ்டம் அடையவேண்டியதாயிற்று. டூம்ஸ்டே புக் என்ற ஒரு புஸ்தகத்தை அவன் எழுதிவைத்தான். அதில் எவ்வளவு நிலம் இங்கிலண்டில் இருக்கின்றதென்றும் அதன் சொந்தக்காரர்கள் யார்யார் என்றும் அவர்கள் செலுத்த வேண்டிய வரி எவ்வெவ்வளவு என்றும் வரைந்திருந்தன. ஒரு குழிநிலமோ, ஒரு எருதோ, பசுவோ, பன்றியோ இக்கணக்கில் அகப்படாமலில்லை என்று ஆங்கிலேயர் சொல்லிக்கொண்டார்கள்.

5. **ஜயசீலனின் புதல்வர்கள்.**—வில்லியத்திற்கு ராபர்ட் (Robert), வில்லியம், ஹென்றி என்று மூன்று பிள்ளைகள். அவர்களில் மூத்தவன் ராபர்ட். 1087 இல் ஜயசீலனான வில்லியம் மரித்தவுடன் அவன் நார்மண்டி தேசாதிபத்தியத்தையடைந்தான். அவன் ஒரு சோம்பேறி, செயலற்றவன் என்று நார்மன் பிரபுக்களுக்குத் தெரியும். ஆகையால், அவன் அரசனாவதில் அவர்களுக்கு இச்சையிருந்தது. அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்கக்கூடும். ஜயசீலன் மரிக்குந்தறுவாயில் தனக்குப் பிறகு வில்லியம் அரசனாகவேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டான். ஆங்கிலேயர் உதவியைக்கொண்டு அவன் தன் இச்சையை நிறைவேற்றிக்கொண்டான். ராபர்ட்

டுக்கு முடிசூட்டவேண்டுமென்று நார்மன் பிரபுக்கள் செய்த முயற்சி பலிக்கவில்லை.

6. இரண்டாம் வில்லியத்தின் ஆட்சி.—இரண்டாம் வில்லியம் வெகு கோபக்காரன்; ஆனால் தந்திரசாலி. அவனுடைய முகமும் தலைமயிரும் சிவப்பாயிருந்தன. ஆகையால், அவனுக்கு சிவந்த அரசன் (Rufus, Red King) என்ற பெயர்வந்தது. அவனது ஆட்சிமுறையில் ஒழுங்கில்லை. 1100 இல் யாரோ ஒருவன் அவனைப் 'புதிய காட்டில்' கொன்றுவிட்டான்.

7. முதல் ஹென்றியின் ஆட்சி.—வில்லியம் ஜயசீலனுடைய கடைசிமகனான ஹென்றி பிறகு அரசனானான். ஆங்கில சிங்காதனத்தைப் பிடுங்கிக்கொள்ள ராபர்ட் இன்னொருமுறை முயன்றான். அவன் முயற்சி பலிக்கவில்லை. ஹென்றி அவனைச் சிறைப்பிடித்து ஆயுள்வரைக்கும் காவலில்வைத்தான். ஆங்கிலேயர் உதவியைக்கொண்டு ஹென்றி பாரன்களை அடக்கி ஒழுங்காய் அரசுபுரிந்தான். இவனுடைய அண்ணனைப்போல் இவனும் கன்னெஞ்சமுள்ளவன்தான். ஆனாலும், அவனைக்காட்டிலும் இவனுக்கு ஜாக்கிரதையும் புத்தியுமுண்டு; இவன் நீதிதவறாமல் அரசுசெலுத்தினான். ஆகையால், குடிகள் இவனுக்கு தர்மசிங்கம் (Lion of Righteousness) என்று பெயரிட்டனர். ஹென்றி ஸ்காட்லண்டு மன்னனுடைய மகள் மட்டில்டா என்பவளை மணந்துகொண்டான். அவள் தன் தாய்வழியில் ஆல்ப்ரெட் சந்ததியில் பிறந்தவள்.

8. ஸ்டீபன் ஆட்சி.—ஹென்றிக்கும், மட்டில்டாவுக்கும் ஒரே புதல்வனும், புதல்வியும் பிறந்தார்கள். மகளுக்குத் தாயின் பெயரையேவைத்தனர். மகன் கடலில் மூழ்கி இறந்துபோனான். தன்னுடைய மரணத்திற்குப் பிறகு தன் மகள் மட்டில்டாவை அரசியாகச்செய்து கொள்ள பாரன்களிடமிருந்து அரசன் ஒரு பிரமாணம் வாங்கினான். அக்காலத்தில் பெண்மக்கள் அரசுசெலுத்தும் வழக்கத்தை ஒருவரும் கேட்டதில்லை. ஆகையால், பாரன்கள் தாங்கள் செய்துகொடுத்த பிரமாணத்தை நிராகரித்தார்கள். அவளுக்குப்பதிலாக அவளுடைய அத்தை மகனும், ஜயசீலனின் பேரனுமான ஸ்டீபனை அர






சனாக்கிக்கொண்டார்கள். அவன் ஒரு பெரிய யுத்தவீரன். ஆனால் அவனுக்கு ஆளுந்திறமையில்லை. ஆகையால், பாரன்கள் தங்கள் மனம்போனபடி செய்துவந்தார்கள்.

**9. மட்டில்டாவுக்கும் ஸ்டீபனுக்கும் நடந்த உள்நாட்டுச் சண்டை.**—சில வருஷங்கள் சென்றபிறகு மட்டில்டா அரசுக்குப் பாத்தியங்கொண்டாடினாள். ‘உள்நாட்டுப் போர்’ நிகழ்ந்தது. சில பாரன்கள் ஸ்டீபன் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். வேறுசிலர் மட்டில்டாவுக்கு உதவிபுரிந்தனர். ஆனால், பெரும்பான்மையோர் இருவரையும் கவனிக்கவில்லை. ஸ்டீபனுக்கும் மட்டில்டாவுக்கும் நேர்ந்தசண்டை நீண்டகாலம் முடியாமலிருக்கும்படி ஒவ்வொரு பாரனும் வேண்டினான். அப்படியிருந்தால்தான் இருவரில் ஒருவரும் நேரில்கவனித்து ஆளமுடியாதென்பது அவர்களுடைய எண்ணம். அநேக வருஷம் கஷ்டப்பட்டபின்னர் இருதிறத்தாரும் சமாதானஞ்செய்துகொண்டார்கள். ஸ்டீபன் ஆயுட்காலம்வரையில் அரசாளவேண்டுமென்றும், அவன் மரித்தபிறகு மட்டில்டாவின் மகன் ஆஞ்சௌ தேசாதிபதியாகிய (Count of Anjou) ஹென்றி பட்டத்திற்கு வரவேண்டுமென்றும் ஒப்பந்தஞ்செய்துகொண்டார்கள். கொஞ்சநாட்களுள் ஸ்டீபன் 1154 இல் இறந்துபோனான். அரசன் ஆட்சியைக்காட்டிலும் பாரன்களாட்சி மிகவும் கொடியதென்று இவனுடைய ஆட்சிமுறையால் வெளியாயிற்று. ஆகையால், இங்கிலண்டுக்கு நார்மன் வெற்றியால் ஏற்பட்ட விசேஷ நன்மையாதெனில், நார்மன் அரசர்கள் மிகுந்த திறமையுடன் தேசத்தை யாண்டுவந்ததே.


### நார்மன் வம்சாவளி.

முதலாவது வில்லியம்.

- ராபர்ட், நார்மண்டி—ட்யூக்.
- இரண்டாவது வில்லியம்.
- முதலாவது ஹென்றி + *மட்டில்டா.
- ஒரு பெண். — ஸ்டீபன்.

* ஸ்காட்லண்டு தேச மார்கரெட்டின் மகளும், மதியீனனான எதெல்ரெடின் சந்ததியிற் பிறந்தவளும்.






இரண்டாம் ஹென்றியின் நாடுகள்.

## அதிகாரம் V

# இரண்டாம் ஹென்றியும், 1154–1189; அவனுடைய குமாரர்களும், 1189–1216

முக்கியமானவர்கள்:

'ஆஞ்சௌ' தேசத்திய இரண்டாம் ஹென்றி (Henry II. of Anjou); அவன் தகப்பன்-'ஆஞ்சௌ' ஜப்ரி (Geoffrey of Anjou); அவனுடைய பாட்டி – ஸ்காட்லண்டு மட்டில்டா (Matilda of Scotland); அவனுடைய மனைவி அக்விடேன் – எலியனார் (Eleanor of Aquitaine); காண்டெர்பெரி பிரதான மதத்தலைவன் டாமஸ் பெக்கெட் (Thomas Becket); முதல் ரிச்சர்ட் (Richard I.); சலதீன் (Saladin); ஆஸ்ட்ரியா – ட்யூக் (Duke of Austria); ஜான் (John); மூன்றும் இன்னொஸெண்ட் (Innocent III.); லாங்ட்டன் பிரதான மதத்தலைவன் (Archbishop Langton); ப்ரான்ஸ் தேசமன்னன் லூயி (Louis of France).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1154. இரண்டாம் ஹென்றியின் முடிசூட்டல்.
1170 பிரதான மதத்தலைவன் டாமஸ் பெக்கெட்டின் கொலை.
1189. இரண்டாம் ஹென்றியின் மரணம்.
1189–1199. முதல் ரிச்சர்டின் ஆட்சி.
1189. மூன்றும் சிலுவைச் சண்டை.
1194 ரிச்சர்ட் சிறையினின்றும் விடுதலையானது.
1199–1216. ஜானின் ஆட்சி.
1215. பெரியபட்டய சாஸனமளித்தல் (Magna Carta granted).

1. ஆஞ்சௌ வம்சத்தின் உற்பத்தி.—மட்டில்டாவின் மகனான இரண்டாம் ஹென்றிக்கு ஆஞ்சௌ ஹென்றி என்று பெயர். ஏனெனில், அவன் தகப்பன் ப்ரான்ஸின் ஒரு பகுதியாகிய ஆஞ்சௌ மாகாணத்தின் அதிபதி. இரண்டாம் ஹென்றிக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் ஆஞ்சௌ வம்சத்தினர் என்ற பெயர்வந்தது.



### இரண்டாம் ஹென்றியின் பிறப்பு.

மதியீனனான எதெல்ரெட்.
|
மார்கரெட், ஸ்காட்லண்டுதேச அரசி, (எதெல்ரெடின் பேரனுடைய மகள்.) — முதல் வில்லியம்.
|
மட்டில்டா + முதல் ஹென்றி.
|
மட்டில்டா.
|
இரண்டாம் ஹென்றி.

2. ஹென்றி அரசாண்ட பெரிய நாடுகள்.—ஹென்றி இங்கிலண்டுக்கு அரசனாகவரும்போது நார்மண்டி–ட்யூக்காகவும், ஆஞ்சௌ அதிபதியாகவுமிருந்தான். அக்விடேன்–எலியனார் என்பவளை அவன் மணஞ்செய்து கொண்டு அவள் மூலமாய் ப்ரான்ஸ்தேசத்தின் தென்பாகத்திலிருக்கும் அக்விடேன் அல்லது காஸ்க்கனி (Gascony) என்ற பெரிய நாட்டையடைந்தான். மேலும், ஸ்காட், வெல்ஷ் ஜனங்களையும் ஐர்லண்டின் ஒரு பாகத்தையும் ஜயித்தான். ஐர்லண்டு தேசாதிபதி என்ற பட்டத்தை வகித்த முதல் ஆங்கில அரசன் இவன்தான். ஆனால், இந்நாடுகளிலும் விசேஷமாக ஐர்லண்டிலும் அவனுடைய அதிகாரம் பலக்கவில்லை. ட்யூடர் (Tudor) மன்னர்கள் காலம் வரைக்கும் ஆங்கிலேயர் ஐர்லண்டை முற்றிலும் ஜயித்ததாக ஏற்படவில்லை.



இரண்டாம் ஹென்றி.

3. ஹென்றியின் குணம். — இரண்டாம் ஹென்றி வலிய அரசன்தான்; திறமையுடனும் அரசுபுரிந்தான். அவன் படபடப்புச் சுபாவமும், முரட்டுத்

தனமும், சில சமயங்களில் கொடிய சித்தமுமுள்ளவனாகவிருந்தான். ஆனால், எவரும் தனக்கு அடங்கி நடக்கும்படி செய்துகொண்டான். அவன் ஸ்டீபன் காலத்தில் அரசனுடைய அநுமதியில்லாமல் பாரன்கள் கட்டின கோட்டைகளை இடித்துத் தள்ளினான். இவனுடைய பாட்டன் முதல் ஹென்றி காலத்தில் இங்கிலண்டில் எப்படி சமாதானமும் ஒழுங்கான ஆட்சியும் இருந்தனவோ அப்படியே இவன் காலத்திலுமிருந்தன.

4. ஹென்றியின் சீர்திருத்தங்கள்.—ஹென்றி நாட்டையாளும் முறையில் சில மாறுதல்களைச்செய்ய விரும்பினான். குற்றவாளிகளை விசாரணை செய்வதற்காகத் தக்க நியாயாதிபதிகளை நாடெங்கும் அனுப்பும் வழக்கத்தைப் பலப்படுத்தினான். இதற்கு அஸ்ஸைஸ் (Assizes) விசாரணை என்று பெயர். குற்றவாளிகளை விசாரிக்கும்பொழுது ஜூரி விசாரணை (Trial by Jury) முறையை அடிக்கடி அவன் அநுசரித்தபடியால் அதுவே கிரமமான முறையாக ஏற்பட்டுவிட்டது. அரசன் நியமித்த நியாயாதிபதிகள் குற்றவாளிகளை விசாரிப்பதற்காக நாட்டைச் சுற்றிவரும்போது ஒவ்வோர் இடத்திலும் சமீபத்திலுள்ள மனிதர்களிற் சிலர் சபைகூடி அவர்களுக்கு உதவிசெய்து வந்தார்கள். இவர்கள் தங்களுக்குத் தெரிந்தவரைக்கும் உண்மையையே பேசுவதாகப் பிரமாணஞ்செய்துகொடுப்பார்கள். இவர்களுக்குத்தான் ஜூரி என்று பெயர். லத்தீன் பாஷையில் 'ஜூராட்டி' (Jurati) என்ற பதத்திற்குப் 'பிரமாணஞ்செய்தவர்கள்' என்று பொருள்.

5. ஆங்கிலேயரும் நார்மானியரும் ஒரு கூட்டத்தாராய்க் கலந்துவிடுதல்.—இரண்டாம் ஹென்றியின் நீண்ட ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயரும், நார்மானியரும் ஒரேஜாதியராகக் கலந்துவிட்டனர். நார்மன் வெற்றிக்குப்பிறகு நெடுங்காலம்வரைக்கும் இவர்களுள் பேதம் ஏற்பட்டிருந்தது. ஆயினும், அநேக நார்மானியர் ஆங்கிலப் பெண்களை மணந்துகொண்டார்கள். இதனால் முழுவதும் ஆங்கிலப்பிறப்பைச் சேர்ந்த அநேக குடும்பங்கள் மேன்மையான பதவிக்கு வந்தன. என்றாலும், மேன்மக்கள்



அப்பொழுதும் ஆங்கில பாஷையைக்காட்டிலும் அதிகமாக ப்ரெஞ்சு பாஷையைத்தான் பேசிவந்தார்கள். ஆயினும், அவர்களுக்கு ஆங்கில உணர்ச்சிதான் இருந்தது. ப்ரெஞ்சு மன்னர்களுடன் போர்செய்வதில் அவர்களுக்கு மிகுந்த அவாவிருந்தது. அதை நிறைவேற்ற அவர்களுக்கு ஆங்கில அரசர்கள் பல சமயங்களில் இடங்கொடுத்தார்கள்.

6. டாமஸ் பெக்கெட்; ஹென்றிக்கும் அவனுக்குமுண்டான விரோதம்.—டாமஸ் பெக்கெட் என்று பெயருள்ள கான்டெர்பெரி பிரதான மதத்தலைவனுக்கும் ஹென்றிக்கும் ஒரு பலமான விவாதமேற்பட்டது. இந்த டாமஸ் முதலில் அரசனுக்கு முக்கியமான மந்திரியாயிருந்தவன். அவன் ராஜகாரியத்தில் மிகவும் பாடுபட்டவன். ஆனால், பிரதான மதத்தலைவனான பிறகு அவன் கோவிலுக்கேற்பட்ட உரிமைகளை வற்புறுத்தத்தொடங்கினான். இதனால் அரசனுக்கும் அவனுக்கும் தீராப்பகையுண்டாகிவிட்டது. குற்றவாளிகளான குருமார்களை கோவிலார் நியாயசபைதான் (Church Court) விசாரணை செய்ய வேண்டும் என்று பெக்கெட் கட்சியாடினான். தான் நியமித்த நியாயாதிபதிகள்தாம் அவர்களை விசாரித்துத் தண்டிக்கவேண்டுமென்பது அரசனுடைய கட்சி. ஹென்றிக்குக் கோபம்பிறந்து, பெக்கெட்டை நாட்டைவிட்டுத் துரத்தினான். அவன் ஆறு வருஷகாலம் தேசப்பிரஷ்டனாயிருந்தான்.

7. விவாதம் ஒருவாறு ஒழிந்து மறுபடியும் கிளைத்தல்; பெக்கெட்டின் கொலை.—கடைசியில், 1170 இல் ஹென்றியும் பெக்கெட்டும் தங்களுடைய விவகாரத்தை ஒருவாறு தீர்த்துக்கொண்டார்கள். பெக்கெட் கான்டெர்பெரிக்குத் திரும்பிவந்தான். உடனே நூதனமான விவகாரங்களைக் கிளப்பிவிட்டான் அரசனுக்குக் கோபாவேசம் வந்தது, "என்னுடைய பயந்த வேலைக்காரரில் ஒருவனாவது இந்தக் கட்டுக்கடங்காதப் போதகனைத் தொலைக்கமாட்டானா?" என்றான். அரசனுடைய சீற்றச்சொற்களை உண்மையாகப்பாவித்து, நான்கு வீரர்கள் கிளம்பி, கான்டெர்பெரி சென்று, கோவிலுக்குள்ளேயே பெக்கெட்

டைத் தங்களுடைய கத்திகளால் வெட்டிக்கொன்ற னர்.

௮. டாமஸை மகாத்மாவாகச் செய்தல்.—பெக்கெட்டின் கொலையைக்கேட்டு ஐரோப்பாவிலுள்ள எல்லோருந் திகிலடைந்தார்கள். பெக்கெட்டின் தூய்மையான வாழ்வைப்பற்றியும், அஞ்சாத மரணத்தைப்பற்றியும் பல கதைகள் எங்கும் சீக்கிரத்தில் பரவின. அவனுடைய சிறந்த மரணத்தைக்கொண்டு அவனுடைய வாழ்க்கையும் சிறந்ததாகவே இருந்திருக்கவேண்டுமென்று ஜனங்கள் நினைத்தார்கள். இப்போது அவனைக் கான்டேர்பேரி டாமஸ் மகாத்மா (Saint) என்றும், 'கோவில் பாத்தியங்களை நிலைநாட்டுவதில் பிராணத்யாகஞ் செய்தவன்' என்றும் வழங்கினர். ஐரோப்பாவின் பலவிடங்களிலுமிருந்து பிரயாணிகள் கான்டெர்பெரி கோவிலிலிருந்த அவனுடைய சமாதிக்குவந்து, அதற்குப் பூஜைசெய்தார்கள்.

9. ஹென்றியின் கஷ்டங்கள்; அவன் பெக்கேட்டின் சமாதிக்கு யாத்திரைபோதல்.—தன்னுடைய நான்கு வீரர்கள் செய்த வேலையைக்கண்டு ஹென்றி திகிலடைந்தான். கிறிஸ்தவர்கள் எல்லோரும் அவனை வெறுக்கும்படி அவர்கள் செய்துவிட்டார்கள். அவன் செய்தகாரியம் ஒன்றும் விருந்திக்கு வரவில்லை. தான் கோபத்தினால் வாய்தவறிச் சொன்ன சொற்களுக்காகத் தான்படும வருத்தத்தை யாவரும் அறியச்செய்யவேண்டுமென்று தெரிந்துகொண்டான். கான்டெர்பெரியில் தன்னுடைய பழைய சத்துருவின் கல்லறைக்குமுன்னால் முழந்தாளிட்டுத் தனக்குத் தண்டனையாக தன்னைக் கோலாலடிக்கச்செய்தான். அரசன் தான்செய்த குற்றத்திற்குத்தகுந்த பரிகாரஞ் செய்துவிட்டான் என்று போப் வாக்களித்தார். பெக்கெட் இஷ்டப்படி சட்டம் நடைபெற அரசன் சம்மதிக்கவேண்டியதாயிற்று. பின்னர் மதச்சீர்திருத்தம் (Reformation) ஏற்பட்ட காலம்வரைக்கும் குற்றஞ்செய்த போதகனை கோவிலார் நியாயசபைகளிற்றான் விசாரித்தனர். அவர்கள்மீது அரசனுடைய நியாயசபைகளுக்கு யாதொரு அதிகாரமுமில்லை.



10. ஹென்றியின் மரணம்.—கடைசிகாலத்தில் ஹென்றிக்குப் பல துன்பங்கள் உண்டாயின. அவனுடைய பிள்ளைகளே அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள். அவனுக்கு விரோதியான ப்ரெஞ்சு அரசன் கட்சியில் அவர்கள் சேர்ந்துகொண்டார்கள். ஹென்றி ஒரு கலகத்தில் சிக்கி பலவிதமான ஆபத்திற்குள்ளாகி 1189 இல் உயிரிழந்தான்.

### இரண்டாம் ஹென்றிமுதல் மூன்றாம் எட்வர்ட் வரைக்கும் வம்சாவளி.

ஹென்றி II. + அக்விடேன் எலியனார்.

ரிச்சர்ட் I. | ஜான்.

ஜான்.
|
ஹென்றி III.
|
எட்வர்ட் I.
|
எட்வர்ட் II. + ப்ரெஞ்சு இஸாபெலா.
|
எட்வர்ட் III.

11. ரிச்சர்ட் சிங்க நேஞ்சன்.—ஹென்றியின் உயிரோடிருக்கும் மைந்தர்களுள் மூத்தவனை ரிச்சர்ட் அரசனுஞன். அவன்தான் முதல் ரிச்சர்ட் மன்னன். அவனுக்கு யுத்தஞ்செய்வதிலேயே பிரியம். தன்னுடைய ராஜ்யத்தை ஒழுங்காய் ஆளவேண்டுமென்ற எண்ணத்தை ஒழித்துத் தான் போரில் கீர்த்தியடையவேண்டுமென்ற அவாவைக் கைக்கொண்டான். அவன் இங்கிலண்டில் கொஞ்சகாலங் கூடத் தங்கியிருக்கவில்லை. என்றாலும், ஆங்கிலேயர் அவனுடைய வீரச்செயல்களுக்காக அவனை மெச்சி அவனுக்குச் சிங்கநேஞ்சன் (Lion-hearted) என்று பெயரிட்டார்கள்.

12. சிலுவை யுத்தம் (Crusade).—ரிச்சர்ட் அரசனை வுடன் சிலுவை யுத்தம் செய்வதற்காகக் கிளம்பினான். முகம்மதியருடன் கிறிஸ்தவர்கள்செய்த மதச்சண்டைக்குச் சிலுவை யுத்தம் என்று பெயர். இப்பெயர் வந்ததற்குக்காரணம்யாதெனில், இந்தயுத்தத்திற்சம்பந்தப்பட்ட

போர்வீரரெல்லாம் தங்களுடைய உடுப்புகளின்மீது சிலுவை அடையாளத்தைத் தைத்துவைத்துக்கொண்டார்கள். **முதற் சிலுவை யுத்தம்** இரண்டாம் வில்லியம் காலத்தில் நடைபெற்றது. இந்த ரிச்சர்ட் மூன்றாம் சிலுவை யுத்தத்திற் சம்பந்தப்பட்டான். ஜெருஸலெம் (Jerusalem) ஊரைவிட்டுத் துருக்கர்களைத் துரத்துவதற்காகவும் ஏசுகிறிஸ்து பூமியில் வசித்த புண்ணியஸ்தலங்களில் ஒரு கிறிஸ்தவ ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவும் ஏற்பட்ட யுத்தங்கள் இவை.

13. **மூன்றாம் சிலுவை யுத்தம்.**—முதல் யுத்தத்தினர் துருக்கரை ஜெருஸலெத்தைவிட்டு யுத்தத்தின்முடிவில் துரத்திவிட்டு, அங்கு ஒருகிறிஸ்தவ ராஜ்யத்தை ஸ்தாபித்தனர். சுமார் நூறு வருஷங்களுக்குப் பின்னர் **சலதீன்** (Saladin) என்று பெயர்கொண்ட மகாவீரனான துருக்கி சுல்தானொருவன் கிளம்பிக் கிறிஸ்தவர்களை ஜெருஸலெத்திலிருந்து துரத்திவிட்டான். அந்தப் புண்ணிய நகரத்தில் கிறிஸ்தவ ஆட்சியை மறுபடியும் ஸ்தாபிப்பதற்காக இந்த மூன்றாம் யுத்தம் ஏற்பட்டது.

14. **ரிச்சர்ட் ஜெர்மனியிற் சிறையுண்டது.** — ரிச்சர்ட் கடுமையாய்ப் போர்புரிந்து ஜெருஸலெம் மதிலடிவரைக்குஞ் சென்றும் அவ்வூரை அவன் பிடிக்கமுடியவில்லை. என்றாலும், சலதீனுடன் அவனொரு உடன்படிக்கைச்செய்துகொண்டான். அதனால் கிறிஸ்துவின் கல்லறையமைந்துள்ள புண்ணிய பூமிக்குக் கிறிஸ்தவர்கள் தடையின்றி யாத்திரைசெய்ய அநுமதிபெற்றார்கள். ரிச்சர்ட் திரும்புகாலையில் அவனை ஒரு ஜெர்மன் பிரபுவாகிய **ஆஸ்ட்ரியா-ட்யூக்** சிறைப்பிடித்தான். 1194 இல் தான் அவன் இங்கிலண்டிற்குத் திரும்பிவந்தான்.

15. **ரிச்சர்டின் கடைசிக்காலமும் மரணமும்.**—ஏராளமான திரவியத்தைச் சேகரித்தவுடன் ரிச்சர்ட் இங்கிலண்டைவிட்டு ப்ரெஞ்சு அரசனுடன் போர்செய்யப்போனான். ரிச்சர்ட் சிறையிலிருந்த காலத்தில் ப்ரெஞ்சு அரசன் அவனுக்குச் சொந்தமான நாடுகளைக் கைப்பற்றிக்கொள்ள முயன்றதே இப்போருக்குக்காரணம். ஐந்து வருஷங்களுக்குப்பின் ரிச்சர்ட் ஒரு கோட்டையை முற்



றுகைபோட்டுப் பிடிக்குஞ் சமயத்தில் ஒரு பாணம்பட்டு இறந்தான்.

16. **ஜான் அரசன்.**—ரிச்சர்டுக்குக் குழந்தைகளில்லை. அவனுடைய தம்பி **ஜான்** என்பவன் அவனுக்குப் பிறகு அரசனானான். ஆங்கிலவரசருள் இவனைக்காட்டிலும் கெட்டவனில்லை. கன்னெஞ்சும், துராசையும், பிடிவாதமும், முன்கோபமுமுள்ள இவன் எந்தக்காரியத்திலும் அபஜயமடைந்து தன்னுடைய குடிகள் தன்னை வெறுக்கும்படியாகச் செய்துகொண்டான்.

17. **நார்மண்டியையும், ஆஞ்சௌவையும் இழந்தவிதம்.**—ப்ரெஞ்சு நாடுகளிலிருந்த ஜானின் பிரபுக்கள் கலகஞ் செய்ய அவர்களுக்கு உதவிசெய்த ப்ரெஞ்சு அரசன் நார்மண்டி, ஆஞ்சௌ நாடுகளைக் கைவசமாக்கிக்கொண்டான். ஜானுடைய தாய் அக்விடேன் எலியனாருக்குக்கிடைத்த சீதனசொத்தில் ஒருபாகந்தான் மிஞ்சியது. இப்பாகத்திற்கு **காஸ்க்கனி** (Gascony) என்று பெயர். **போர்டோ** (Bordeaux) இதற்குத் தலைநகரம். இந்தப்பாகம் 250 வருஷகாலம் ஆங்கில அரசர்களின் ஆட்சிக்குளிருந்தது.

18. **ஜானுக்கும், போப்புக்கும் நடந்த விவகாரம்.**—ஜான் காலத்தில் **மூன்றாம் இன்னொஸென்ட்** (Innocent III.) என்ற புகழ்பெற்ற போப் ஒருவரிருந்தார். அவர் அக்காலத்தில் மிகுந்த புத்தியும், படிப்பும் நிறைந்திருந்த **ஸ்டீபன் லாங்டன்** என்பவனைக் கான்டெர்பெரி பிரதான மதத்தலைவனாகச்செய்ய விரும்பினார். ஜான் ஆக்ஷேபித்தான். இருவருக்கும் கொடிய விவாதமுண்டாயிற்று. கடைசியில், இன்னொஸென்ட் ஜானுக்கு அரசுபுரியும் பாத்தியமில்லையென்றுசொல்லி, ஜானை ராஜ்யத்தினின்றும் துரத்திவிடும்படி ப்ரெஞ்சு தேச மன்னனுக்குக் கட்டளையிட்டார். ஜான் பயந்து போப்புக்குக் கீழ்ப்படிந்தான். லாங்டனைப் பிரதான மதத்தலைவனாக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தான். இனிமேல் போப்பைத் தனக்கு இறைவனாக (Overlord) பாவிப்பதாகவும், ஒவ்வொரு வருஷமும் அவருக்குத் தான் கப்பம் செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டான்.

**19. ஜானுக்கும் பாரன்களுக்குமுண்டான விரோதம்.**— இந்தக்காலமெல்லாம் ஜான் வெகுகொடுமையாய் ஆண்டு வந்தான். பிரபுக்களுக்கு வெகுகாலமாய் அவனிடத்தில் வெறுப்பு. இப்பொழுது ஏழை ஜனங்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ஜானுக்கு விரோதமாய் எல்லாக் கட்சிக்காரர்களையும் லாங்ட்டன் கிளப்பிவிட முயன்றான். பிரபுக்கள் அரசனுடன் போருக்குச் சென்றார்கள். ஸ்டேன்ஸ் (Staines) பக்கத்தில் டெம்ஸ் (Thames) நதிக்கரைக்குச் சமீபத்தில் ரன்னிமேட் (Runnymede) என்று பெயர்கொண்ட ஒரு மைதானத்தில் அரசன் பாரன்களைச் எதிர்த்தான். அவ்விடத்தில் அவன் அவர்களுடைய நிபந்தனைகளுக்கு இணங்கவேண்டியதாயிற்று.

**20. பெரிய பட்டய சாஸனம் (Magna Carta).** — லத்தீன் பாஷையில் மாக்னா கார்ட்டா என்றும், ஆங்கிலபாஷையில் பெரிய பட்டய சாஸனம் (Great Charter) என்றும் பெயர்கொண்ட பத்திரத்தில் அவர்களுடைய நிபந்தனைகளெல்லாம் எழுதியிருந்தனர். இதுவரையில் நார்மன் அரசர்கள் கொடுங்கோன் மன்னராய் இஷ்டப்படி அரசுசெலுத்திவந்தார்கள். இப்பொழுதோ ஜான் கோவிலாருக்கும், பிரபுக்களுக்கும், சாமானிய ஜனங்களுக்கு மேற்பட்டிருக்கும் பாத்தியங்களை நிராகரிக்கக் கூடாதென்று பலவந்தமாய் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. பிரபுக்களின் சம்மதமின்றி அரசன் வரிவசூலிக்கக் கூடாதென்றும், தேசசட்டத்தை அநுசரிக்காமல் எவனையுமவன் சிறையிலடைக்கக் கூடாதென்றும் நிபந்தனைகள் ஏற்பட்டன. இவ்விதம் ஆங்கிலேயருடைய சுயாதீனத்திற்கும் ஆட்சிமுறைக்கும் ஆரம்பம் இந்தப் பட்டயசாஸனந்தான். இதிற்கண்ட நிபந்தனைகளெல்லாம் வழக்கத்திற்குவர வெகுகாலமாயிற்று. என்றாலும், அவைகட்கு ஆரம்பமுண்டானதே பெரியவிஷயம்.

**21. ஜான் சாஸனத்தை நிராகரித்தலும், அவனுடைய மரணமும்.**—ஜான் தான்செய்த பிரமாணத்தின்படி நடக்காமல் சாஸனத்தை அலட்சியஞ்செய்து பாரன்களுடன் போருக்குச்சென்றான். ப்ரெஞ்சுதேச மன்னனுடைய



மூத்தமகனாகிய லூயி (Louis) என்பவனைத் தங்களுக்குதவி செய்ய பாரன்கள் அழைக்கவேண்டியதாயிற்று. ப்ரெஞ்சு உதவியைக்கொண்டும் ஜானைத் தோற்கடிப்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தது. நல்லகாலமாய் அடுத்த வருஷம் (1216) ஜான் திடீரென்று இறந்துவிட்டான்.

## அதிகாரம் VI
## மூன்றாம் ஹென்றி, 1216–1272

முக்கியமானவர்கள்:

ப்ரான்ஸ் தேசத்திய லூயி; பிரதான மதத்தலைவனான லாங்ட்டன்; பெம்புரோக் இயர்லான வில்லியம் மார்ஷல் (William Marshall, Earl of Pembroke); லிஸ்ட்டர் இயர்லாகிய ஸைமன் மான்ட் போர்ட் (Simon of Montfort, Earl Leicester); அரசன் மகனாகிய எட்வர்ட்.

முக்கிய விஷயங்களும் காலமும்:

**1216.** மூன்றாம் ஹென்றியின் பட்டாபிஷேகம்.
**1217.** ப்ரெஞ்சு லூயி இங்கிலண்டைவிட்டேகுதல்.
**1219.** வில்லியம் மார்ஷலின் மரணம்.
**1258.** ஆக்ஸ்பர்ட் நிபந்தனைகள் (Provisions of Oxford).
**1264.** லூயிஸ் (Lewes) சண்டை.
**1265.** மான்ட்போர்ட் சட்டசபையும் (Parliament), ஈவ்ஷாம் சண்டையும் (Battle of Evesham).
**1272.** மூன்றாம் ஹென்றியின் மரணம்.

1. ஹூயியின் தோல்வி.—ஜான் மரித்தவுடன் ஒன்பது வயதுள்ள அவனுடைய மூத்தமகன் மூன்றாம் ஹென்றி பட்டத்திற்குவந்தான். ப்ரான்ஸிலிருந்து லூயியை அழைத்த பிரபுக்கள் ஹென்றியை அரசனாக ஒப்புக்கொள்ளவில்லை. உள்நாட்டுச்சண்டை இன்னமும் இரண்டுவருஷம் நடந்தது. தகப்பன் மரணத்திற்குப் பிறகு ப்ரான்ஸ்தேச மன்னனாக வரப்போகிறவன் தங்களுக்கும் அரசனாதல் தகாதவிஷயமென்று பலர் நினைத்தார்கள். சிறுபையனாகிய ஹென்றியின் சிநேகிதர்களுக்கு அவன் தன் தகப்பனைப்போல் அரசுசெலுத்துவதற்கு இடங்கொடுக்க மனமில்லை. ஆகையால், அவர்கள் இன்னுமொருமுறை பெரிய

பட்டய சாஸனத்தை அவன் தானே ஒப்புக்கொண்டு அதை வெளியிட்டதுபோற் செய்தார்கள். அவனுக்கு விரோதமாய்ச் சொல்லக்கூடிய சரியான காரணம் அது வொன்றுதான். இப்போது அதற்குக்கூட இடமில்லாமற்போயிற்று. 1217 இல் லூயி இங்கிலண்டைவிட்டு விலகவேண்டியதாயிற்று. ஹென்றியை எல்லோரும் ஒரே மனத்தினராய் அரசனாக்கினார்கள்.

**2. ஸ்டீபன் லாங்ட்டன், வில்லியம் மார்ஷல் இவர்களின் ஆட்சி.**—லூயியுடன் நடந்தபோரில் ஹென்றி கட்சியை ஆதரித்தவர்கள் காண்டர்பெரி பிரதான மதத்தலைவன் ஸ்டீபன் லாங்ட்டனும், பெம்புரோக் இயர்ல் வில்லியம் மார்ஷலும் இந்த இரண்டு அறிவாளிகளும் இங்கிலண்டில் சமாதானத்தையும் செழிப்பையு முண்டுபண்ணினார்கள். உள்நாட்டுச் சண்டையில் ஏற்பட்ட கொடுமைகளை ஜனங்கள் வரவர மறந்துவிட்டனர்.



மூன்றாம் ஹென்றி.

**3. மூன்றாம் ஹென்றியின் குணம்.**—ஹென்றிக்கு அரசுசெலுத்தும் வயது வந்தவுடன் நூதனமான சங்கடங்கள் விளைந்தன. அவனிடத்தில் பக்தி, சாந்தம், நற்குணம், சிநேகிதர்களிடத்தில் விசுவாசம், பெண்டுபிள்ளைகளிடத்திலன்பு முதலிய குணங்களெல்லாமிருந்தன. அவனுக்குப் படிப்பில் தேர்ச்சியுண்டு. அவனழகிய கோவில்களைக்கட்டப் பிரியப்பட்டான். பக்தசீலனான எட்வர்ட் கட்டிய வெஸ்ட்மின்ஸ்ட்டர் மடத்தினுடைய ஸ்தானத்தில் தற்காலம் காணக்கூடிய அழகிய கோவில் இவன் கட்டிய கோவில்களில் முக்கியமானது. பக்தசீலனைப்போல் ஹென்றியும் ஆளுந்திறமையற்றவன். ப்ரான்ஸ்தேசத்தின் தென்பாகத்திலிருந்து கூட்டமாய்



வந்த தன் மனைவியின் பேராசைபிடித்த சுற்றத்தார்களுக்குப் பெரிய உத்தியோகங்களையும், மானியங்களையும் கொடுத்தான். சாமர்த்தியமுள்ள ஒவ்வொரு ப்ரெஞ்சு வாலிபனும் இங்கிலண்டுக்கு வருவானாயின் ஹென்றி அவனைத் தப்பாமல் ஆதரிப்பான். இவ்விதம்வந்த வாலிபர்களில் சைமன் மாண்ட்போர்ட் என்பான் ஒருவன். அவன் அரசனுடைய தங்கையை மணந்துகொண்டான். அவன் லிஸ்ட்டர் பிரபு என்ற பட்டம்பெற்றான்.

**4. ஹென்றியின் பலமற்ற ஆட்சி.**—ஹென்றிக்காவது அவனுடைய அந்நியநாட்டு நட்பினர்களுக்காவது நாடாளும் திறமையில்லை. பெரிய பட்டய சாஸன நிபந்தனைப்படி ஆளுவதாக அவன் செய்துகொடுத்த பிரமாணத்திலிருந்து தவறினான். எப்பொழுதும் கடுமையான வரிகளை விதித்து வசூலித்துவந்தான். அந்தப்பொருளைத் தன் நண்பர்கள் விஷயத்தில் வீண்செலவிட்டு ஒழுங்குத் தவறாகநடந்தான். பாரன்களுக்குக் கோபமுண்டாயிற்று. அவர்கள் ஹென்றி தங்களுடைய ஆலோசனையைக் கேட்டுச் சரிவர அரசுபுரியும்படி அவனைப் பலவந்தப்படுத்தவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

**5. சட்டசபை (Parliament) யின் உற்பத்தி.**—பெரிய பட்டயசாஸன மேற்பட்டபிறகு பாரன்களுக்கு அதிகாரம் வலுத்தது. அரசன் இனிக்கொடுங்கோன் மன்னனாகவிருக்கமுடியாது. புதிய வரிகளையாவது, சட்டங்களையாவது பார்லிமென்டாரின் சம்மதத்தைக்கொண்டுதான் ஏற்படுத்தவேண்டும். அக்காலத்திய பார்லிமென்ட் ஜனங்களுடைய பிரதிநிதிகளடங்கிய தற்கால சபைபோலில்லை. அது பொதுஜன சபை (House of Commons) போலில்லாமல் பிரபுக்கள் சபை (House of Lords) போலிருந்தது. இயர்ல்கள், பாரன்கள், பிஷப்புகள், மற்றுமுள்ள பிரபுக்களும், குருமார்களுமாத்திரமடங்கிய சபையாகவிருந்தது. என்றாலும், ஹென்றியைப்போலொத்த பலமற்றவரசனை அடக்குவதற்குப் போதுமானதாயிருந்தது.

**6. ஆக்ஸ்பர்ட் நிபந்தனைச் சட்டம்.**—அரசனுடைய தங்கை புருஷன் சைமன் மாண்ட்போர்ட் நல்ல ஆங்கிலே

யனை மாறிவிட்டான். பார்லிமென்ட் கட்சியை நடத்துவதற்குத் தக்க தலைவனானான். அவன் ஹென்றியைவிடப் புத்திமானாகையால் ஹென்றி அலட்சியமாய்ச் செய்த காரியங்களில் அவனுக்கு வெறுப்புண்டாயிற்று. 1258 இல் ஆக்ஸ்பர்டில் பார்லிமென்ட் சபை கூடியது. ஆக்ஸ்பர்ட் நிபந்தனைகள் என்று பெயர்கொண்ட ஒரு சட்டத்தை சைமன் உதவியைக்கொண்டு பார்லிமென்டார் ஏற்படுத்தினர். இச்சட்டப்படி அன்னியர்களை தேசத்தைவிட்டுத் துரத்தினர். ஆட்சியதிகாரமும் அரசனிடமிருந்து பிரபுக்களிடம் மாறியது.

7. **பாரன்களின் யுத்தம் (The Barons' War).** —— இந்தப் புதிய ஏற்பாடு சிலவருஷங்கள் சரியாய்நடந்தது. ஆனால், சைமனுக்கும் மற்றப் பிரபுக்களுக்கும் மனவருத்தமுண்டாகிவிட்டது. இதனால் ஹென்றிக்கும், அவனுடைய புத்திசாலியான மகன் எட்வர்டுக்கும் நல்ல சமயம் வாய்த்தது. அவர்கள் பாரன்களுடன் யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். இந்த உள்நாட்டுச் சண்டைக்குத்தான் **பாரன்கள் யுத்தம்** என்று பெயர்.

8. **லூயிஸ் சண்டை** ——சைமன் மான்ட்போர்ட் இப்பொழுது தலைமைவகித்தான். அரசன் கட்சியைச் சேர்ந்தவர்களை 1264 இல் லூயிஸ் சண்டையில் தோற்க அடித்தான். அரசனும் அவனுடைய மகன் எட்வர்டும் சிறையுண்டனர்.

9. **1265வருஷத்திய பார்லிமென்ட் சபை.**—இப்பொழுது உண்மையில் இங்கிலண்டை ஆண்டவன் சைமன்தான். 1265 இல் தனக்குதவிசெய்ய ஒரு பார்லிமென்ட் சபை கூட்டினான். இதுவரையில் தேசத்திலுள்ள பிரபுக்கள் மாத்திரம் கூட்டங்கூடிச் சபை நடத்திவந்தார்கள். 1265 இல் நடைபெற்ற சைமன் பார்லிமென்டில் சில விசேஷங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு ஜில்லா (County) விலிருந்தும் பட்டணத்திலிருந்தும் இரண்டிரண்டுபேர்களைப் பொது ஜனங்களுடைய பிரதிநிதிகளாக அவன் இப்பார்லிமென்டுக்கு அழைத்தான். பட்டணங்களிலிருந்து பிரதிநிதிகளை பார்லிமென்டுக்கு முதல்முதலில்



வரவேற்றியது இப்பொழுதுதான். தேசஆட்சி சம்பந்தமான விஷயங்களில் எல்லா வகுப்பினருக்கும் பேசும் பாத்தியமிருக்க வேண்டுமென்று சைமன் மான்ட்போர்ட் நினைத்தபடியால் அவர்களை வரவேண்டுமென்று அவன் கேட்டுக்கொண்டான்.

10. **ஈவ்ஷாம் சண்டை.**—சைமனுடைய அதிகாரம் ஒரு வருஷங்கூடச் செல்லவில்லை. அவன் பெரிய புத்தியுள்ளவனாயினும், கர்வமும், சண்டைபோடும் சுபாவமுமுடையவன். அவன் பொதுஜனங்களை நம்பினதற்காகச் சில பிரபுக்களுக்கு அவனிடத்தில் விரோதமுண்டாயிற்று. வேறுசிலர் அவனுக்குப் பேராசை அதிகரித்துவிட்டதென்று நினைத்து அவனை வெறுத்தார்கள். ஹென்றிக்கு வயதுமுதிர்ந்துவிட்டபடியால் அரசன் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு உண்மையில் எட்வர்ட்தான் தலைவனாயிருந்தான். அவன் தந்திரமாய்ச் சிறையினின்றும் தப்பி, சைமனின் விரோதிகளுடன் சேர்ந்துகொண்டான். 1265 இல் வூர்ஸ்ட்டர்ஷயரில் (Worcestershire) உள்ள ஈவ்ஷாம் என்ற விடத்தில் நடந்த சண்டையில் அவன் சைமனைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டான்.

11. **ஹென்றி மறுபடியும் அரசனானது, அவனுடைய மரணமும்.**——எட்வர்ட் தன்னுடைய தகப்பனை மறுபடியும் சிங்காதனத்தில் ஏற்றினான். இதற்குப்பிறகு கிழவரசன் மரணம்வரைக்கும் எல்லாம் ஒழுங்காய் நடந்துவந்தது. இரண்டொருவருஷம் சென்றபின் எட்வர்ட் சிலுவையுத்தஞ்செய்யக் கிழக்குத்திக்குக்குச் சென்றான். அவன் வெளிநாட்டில் இருந்து வரும்முன்னரே 1272 இல் மூன்றாம் ஹென்றி இறந்துவிட்டான்.

## அதிகாரம் VII

## எட்வர்ட் I., 1272-1307; எட்வர்ட் II., 1307-1327

முக்கியமானவர்கள்:

வேல்ஸ் தேசாதிபதியாகிய லெவ்லின் (Llywelyn, Prince of Wales); ஸ்காட் அரசனான ஜான் பாலியல் (John Baliol, King of Scots); வில்லியம் வாலெஸ் (William Wallace); ஸ்காட் அரசனான ராபர்ட் ப்ரூஸ் (Robert Bruce, King of Scots); வேல்ஸ் இளவரசனான எட்வர்ட் (Edward, Prince of Wales); பியர்ஸ் காவெஸ்ட்டன் (Piers Gaveston); இரண்டாம் எட்வர்டின் மனைவி ப்ரான்ஸ் இஸாபெலா (Isabella of France, wife of Edward II.).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1272. முதல் எட்வர்ட் பட்டத்திற்கு வந்தது.
1282. லெவ்லின் மரணமும், வேல்ஸை ஜயித்ததும்.
1292. எட்வர்ட் ஜான் பாலியலை ஸ்காட் அரசனாக்குதல்.
1296. எட்வர்ட் பாலியலை அரசைவிட்டு நீக்குதல்.
1297. பட்டய சாஸனங்களை உறுதிசெய்தது.
1298. பால்கர்க் (Falkirk) சண்டை.
1307. முதல் எட்வர்டின் மரணம். இரண்டாம் எட்வர்ட் அரசனாதல்.
1314. பானக்பர்ன் சண்டை (Battle of Bannockburn).
1327. இரண்டாம் எட்வர்டை அரசைவிட்டு நீக்குதல்.

1. முதல் எட்வர்டின் குணம்.——முதல் எட்வர்ட் திரும்பி வருவதற்கு இரண்டு வருஷகாலமாயிற்றாலும் அவன் இல்லாத சமயத்தில், எல்லாம் ஒழுங்காய் நடந்துவந்தது. சைமன் பிரபுவின் அநுபவங்களை நன்றாய் உணர்ந்த எட்வர்ட் மூன்றாம் ஹென்றியைவிட நன்றாய் அரசுபுரிந்தான். அவனுக்கு அதிகாரம் செலுத்துவதில் பிரியமுண்டு. என்றாலும், ஜனங்களை ஒருவாறு தன் [illegible] கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டால் தன் ம[illegible] போனபடி எதையும் சுலபமாய்ச் செய்துகொள்ளலா




மென்று கண்டுகொண்டான். வீரம், சக்தி, கபடமின்மை,
கௌரவம் முதலிய குணங்கள் அவனிடமிருந்தன. தான்
சொன்னசொல் தவறாதவன் என்று அவன் பெருமை
பேசிக்கொள்வான். சிலசமயம் சொன்னசொற்படி
நடப்பதுபோல் வெளிக்குக்காட்டுவான். உண்மையில்,
அதன் உட்கருத்திற்கு விரோதமாய்ச் செய்வான். சில
சமயம் இரக்கமில்லாத கொடிய மனமுள்ளவனாயிருப்
பான். என்றாலும், இவனைவிட இங்கிலண்டுக்கு அதிக
நன்மை செய்த அரசர்களில்லையென்றே சொல்லலாம்.

2. வேல்ஸை ஜயித்தது. — இவன் காலத்தில் நடந்த
முக்கியமான விஷயங்களில் ஒன்று வேல்ஸை ஜயித்தது
தான். பழைய ப்ரிட்டானியர் ஒடிப்பதுங்கியிருந்த இந்த
வேல்ஸ்நாட்டை இன்னமுமொரு தனி அரசனாண்டுவந்
தான். முன்னிருந்த வேல்ஸ் மன்னர்களெல்லாம் ஆங்
கில அரசனுக்குத் தொண்டரென்று பிரமாணஞ்செய்து
கொடுப்பதுண்டு. இப்பொழுது லெவ்லின் என்ற அரசன்
அவ்விதப் பிரமாணத்தைச்செய்ய மறுத்தான். கடைசி
யில் எட்வர்ட் அவனுடைய நாடுமுழுவதையும் ஜயித்து
அவனையும் 1282 இல் சண்டையிற் கொன்றுவிட்டான்.
சிலவருஷங்கள் சென்றபிறகு எட்வர்ட் தன்னுடைய
மூத்தமகன் எட்வர்டை வேல்ஸ் இளவரசனாக முடிசூட்டி
னான். பிற்காலங்களிலும் நாளதுவரையில் அரசனுடைய
மூத்தமகன் வேல்ஸ் இளவரசனென்ற பட்டத்தை வைத்
துக்கொள்வது வழக்கமாயிற்று.

3. எட்வர்ட் ஜான் பாலியலை ஸ்காட் அரசனாக்குதல்.——
இப்பொழுது ப்ரிட்டன் தீவின் ஒருபாகமாகிய ஸ்காட்
லண்டு தேசம் மாத்திரந்தான் ஆங்கிலவரசன் ஆட்சிக்குள்
ளடங்காமலிருந்தது. ஸ்காட்லண்டு வேல்ஸைக்காட்டி
லும் பெரியநாடு. அதற்கு ஒரு தனியரசனிருந்தான்.
சில ஸ்காட்மன்னர்கள் ஆங்கில அரசர்களுக்குத் தாங்
கள் தொண்டர்களே என்று ஒப்புக்கொண்டிருந்தாலும்,
அவர்கள் வேல்ஸ் இறைவர்களைக்காட்டிலும் பலமுள்ள
வர்கள். வேல்ஸை ஜயித்த சிலவருஷங்களுக்குப் பிறகு
ஸ்காட்லண்டில் தன்னுடைய பலத்தைக்காட்டுவதற்கு
எட்வர்டுக்குச் சமயம் வந்தது. ஸ்காட்லண்டு அரசுக்

பின் மத்திய காலத்தில் தென் ஸ்காட்லண்டின் நிலைமை.




குப் பலபேர் பாத்தியங்கொண்டாடினார்கள். அவர்களுள் ஏற்பட்ட விவாதத்தை முடிவுசெய்ய அவனை மத்தியஸ்தனாக அழைத்தார்கள். அவன் முதலில் எல்லோருக்கும் தான் இறைவனென்று அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி கேட்டான். அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள். பிறகு ஜான் பாலியலுக்குத்தான் அதிக பாத்தியமிருக்கிறதென்று தீர்மானித்தான். பாலியல் எட்வர்டுக்குத் தொண்டு செய்வதாக ஒப்புக்கொண்டு அரசனானான்.

4. **எட்வர்டுக்கும், பாலியலுக்குஞ் சண்டை; எட்வர்ட் ஸ்காட்லண்டை ஜயித்தல்** — உடனே எட்வர்டுக்கும் பாலியலுக்கும் மனஸ்தாபமுண்டாயிற்று. சில வருஷத்திற்குள் யுத்தம்வந்துவிட்டது. 1296 இல் எட்வர்ட் ஸ்காட்லண்டின்மீது படையெடுத்து, பாலியலைச் சிறைப்படுத்தி அரசை விட்டுவிடும்படி அவனைப் பலவந்தப்படுத்தினான்.



பிறகு, ஸ்காட் ஜனங்களை ஆளும்படி ஆங்கிலேய அதிபதிகளை நியமித்தான்.

5. **வாலெஸ் கிளம்பியது; எட்வர்ட் இரண்டாம் முறை ஸ்காட்லண்டை ஜயித்தல்.** — சிலமாதத்திற்குள் ஸ்காட் ஜனங்கள் கலகஞ்செய்தார்கள். அவர்கள் **வில்லியம் வாலெஸ்** என்ற முரட்டுவீரன் ஒருவனைத் தலைவனாக ஏற்படுத்திக்கொண்டு ஆங்கிலேயரை ஸ்காட்லண்டை விட்டுத் துரத்தினார்கள். அடுத்தவருஷம் ஒரு திரண்ட சேனையுடன் எட்வர்ட் ஸ்காட்லண்டிற்கு வந்தான். 1298 இல் நடந்த **பால்கர்க்** சண்டையில் அவன் வாலெஸைத் தோற்க அடித்தான். இச்சண்டையில் எட்வர்ட் வெற்றியடைந்தும் அவன் தேசத்தை ஜயித்ததாக ஏற்படவில்லை. ஏழுவருஷங்கள் கடுமையாய்ப் போர்புரிந்து, வாலெஸைச் சிறைப்படுத்திக் கொன்றபிறகுதான் எட்வர்ட் நாடுமுழுவதையும் அடக்கினான்.

6. **ராபர்ட் ப்ரூஸ் ஸ்காட் அரசனாதல்.** — கொஞ்சகாலத்திற்குள் ஸ்காட் ஜனங்கள் மறுபடியும் கலகஞ்செய்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு ராபர்ட் ப்ரூஸ் என்ற ஒரு புதிய தலைவன் கிளம்பினான். இவனுடைய பாட்டன் ஜான் பாலியலுக்கு விரோதமாய்ப் பட்டத்திற்கு வாது செய்தவன். எழுபதுவயதுள்ள எட்வர்ட் மூன்றாம் முறை ஸ்காட்லண்டை ஜயிக்க முயன்றான். கார்லைல் (Carlisle) என்ற ஊருக்கு ஒரு பெரிய சேனையுடன் எட்வர்ட் சென்றான். ஆனால், ஸ்காட்லண்டினுள் நுழையுமுன்னரே இறந்துவிட்டான். ஸ்காட் ஜனங்கள் எட்வர்டைக் கொடுங்கோன் மன்னனென்று நினைப்பது இயற்கைதான். என்றாலும், அவனுக்குத் தான் சரியாய் நடப்பதாகத்தான் எண்ணம். ப்ரிட்டன் முழுவதற்கும் ஒரே அரசனிருப்பதுதான் நலமென்று நினைத்தான். ஸ்காட் ஜனங்களுக்குச் சுயஆட்சியைவிடத் தன்னுடைய ஆட்சி அவர்களுக்கு மேலாகவிருக்குமென்றும் நினைத்தான்.

7. **எட்வர்ட் சட்ட நிரூபணஞ்செய்து, ஆங்கிலப் பார்லிமென்ட் சபையை ஏற்படுத்தல்.** — ஸ்காட் ஜனங்களுடன் எட்வர்ட்செய்த யுத்தங்களைவிட்டு அவன் இங்கிலண்டிற் செய்த நல்லகாரியத்தைக் கவனிப்போம். அவன் அரச

நல்ல சட்டங்களைச்செய்து இதுவரையில் இங்கிலண்டில் ஏற்படாத சமாதானத்தையும் ஆட்சிமுறையையும் உண்டுபண்ணின கீர்த்திபெற்றான். 1265 இல் சைமன் மான்ட்போர்ட் கூட்டிய பார்லிமென்ட் சபைக்கு பிரபுக்களும், மதத்தலைவர்களும், பொது ஜனங்களுடைய பிரதிநிதிகளும் எப்படி வந்தார்களோ அப்படியே இனிமேல் பார்லிமென்ட் சபை கூட்டவேண்டுமென்று எட்வர்ட் தீர்மானம் செய்ததுதான் அவன் இங்கிலண்டிற்குச் செய்த பேருதவி. அவ்வித சபை 1295 இல் கூடியது. அதற்கு மாதிரிப் பார்லிமேண்ட் (Model Parliament) என்று பெயர். ஏனெனில், பிறகு கூடிய பார்லிமென்ட் சபைகளெல்லாம் இதைப்போலவே நடந்தேறின. முடிவில், வெகுகாலஞ் சென்றபிறகு பார்லிமென்ட் இருபாகமாகப் பிரிந்தது. பிரபுக்களும், மதத்தலைவர்களுஞ் சேர்ந்து பிரபுக்கள் சபையை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஜில்லாக்கள், பட்டணங்களிலிருந்து வந்த சாமானிய ஜனப்பிரதிநிதிகள் பொதுஜன சபையை ஏற்படுத்தினார்கள். இவ்விதம் ஆங்கில ராஜமுறையை உண்டுபண்ணின சைமன் மான்ட்போர்டைக்காட்டிலும் முதல் எட்வர்ட் சிறந்தவன்தான்.

8. பட்டய சாஸனங்களை உறுதிசெய்தல். — எட்வர்ட் தனக்கு எவ்வளவு இஷ்டமோ அதற்கு அதிகமாகவே ஜனங்களுக்கு அதிகாரங்களைக் கொடுக்கும்படியாக நேர்ந்துவிட்டது. 1297 இல் பழைய பட்டய சாஸனங்களைப் புதிதாக தான் உறுதிசெய்துகொடுத்தாலொழிய ஸ்காட் ஜனங்களுக்கு விரோதமாய்த் தனக்கு உதவிசெய்ய ஜனங்கள் மறுப்பார்களென்று எட்வர்ட் கண்டுகொண்டான். ஆகையால், சாஸனங்களில் குறித்திருக்கிறபடி பார்லிமென்டாரின் சம்மதமின்றிப் புதிய வரிகளை விதித்து வசூலிப்பதில்லையென்று பிரமாணஞ்செய்துகொடுத்தான்.

9. இரண்டாம் எட்வர்டும், பியர்ஸ் காவெஸ்ட்டனும். — வேல்ஸ் இளவரசனான எட்வர்ட் என்ற இரண்டாம் எட்வர்ட் தனக்குப்பதில் தன் கேவலமான நண்பர்களை நாடாளும்படி செய்துவிட்டுத் தன்னுடைய சுகானுபவத்



தையே நினைத்துக்கொண்டிருந்தான். ஆங்கில அரசர்களுடைய ஆட்சியில் இன்னமுமிருந்துவந்த ப்ரான்ஸ் தேசத்தின் தென்பாகமாகிய காஸ்க்கனியிலிருந்துவந்த பியர்ஸ் காவெஸ்ட்டன் என்ற ஒரு வாலிபன் எட்வர்டின் நண்பர்களில் முதல்வன். அரசனிடத்தில் தங்களைக் காட்டிலும் காவெஸ்ட்டனுக்கு அதிக செல்வாக்கிருப்பதைக்கண்டு, கொஞ்சகாலத்திற்குள் பிரபுக்களுக்குக் கோபமுண்டாகிவிட்டது. அவர்கள் அவனைச் சிறைப்படுத்திக்கொன்றுவிட்டார்கள்.

10. பானக்பர்ன் சண்டை; ப்ரூஸ் அரசனாதல். — காவெஸ்ட்டன் விஷயமாய் எட்வர்ட் தன்னுடைய பிரபுக்கூட்டத்தாருடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கும்போது, ராபர்ட் ப்ரூஸ் ஸ்காட்லண்டு முழுமையும் ஜயித்துக்கொண்டிருந்தான். எட்வர்டுக்கும், பிரபுக்களுக்கும் இதுவரையிலுமில்லாத சிநேகம் ஏற்பட்டு 1314 இல் ஸ்காட்லண்டுக்குள் ஒரு சேனையுடன் சண்டைக்குப்போக சம்மதித்தார்கள். இரண்டு சேனைகளும் 'பானக்பர்ன்' என்றவிடத்திற் கைகலந்தன. ஸ்காட் ஜனங்களுக்கு ஒப்பற்ற வெற்றிகிடைத்தது.



இரண்டாவது எட்வர்ட்.

சிலவருஷங்கள் சென்றபிறகு ராபர்ட் ப்ரூஸை ஸ்காட்லண்டுதேச மன்னனாக ஆங்கிலேயர் ஒப்புக்கொண்டு ஆங்கிலவரசர்களுக்கு ஸ்காட்லண்டு ஆதிபத்தியத்திற்கு ஒரு வித பாத்தியமுமில்லையென்றும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், ஒரு சிறிய தீவிலேயே இரண்டு சுவாதீனமுள்ள அரசர்களிருப்பதில் பல சங்கடங்கள் ஏற்பட்டன. 200 வருஷகாலம் வரையில் ஆங்கிலேயரும், ஸ்காட் ஜனங்களும் அடிக்கடி சண்டைசெய்துகொண்டேயிருந்தார்கள்.

11. இரண்டாம் எட்வர்டை அரசைவிட்டு விலக்குதல். — பானக்பர்ன் சண்டைக்குப்பிறகு இங்கிலண்டு விஷயங்கள்

வரவர கேவலமாகிக்கொண்டேவந்தன. கடைசியில், எட்வர்டின் மனைவி ப்ரான்ஸ் இஸாபெலாகூட அவனுக்கு விரோதியாகி அவனுடைய சத்துருக்கள் கட்சியில் சேர்ந்துகொண்டாள். துர்ப்பாக்கியமுள்ள எட்வர்டை சிங்காதனத்தைவிட்டுத் துரத்தி அவனுடைய மூத்த மகனை மூன்றும் எட்வர்டாக முடிசூட்டினர். அடுத்த வருஷம் இரண்டாம் எட்வர்டை கொடுமையாய் வதைத்துக்கொன்றனர்.

## அதிகாரம் VIII

## மூன்றும் எட்வர்ட், 1327-1377; இரண்டாம் ரிச்சர்ட், 1377-1399

முக்கியமானவர்கள்:

ப்ரான்ஸ்தேச மன்னனை ஆறும் வல்வா பிலிப் (Philip VI. of Valois, King of France); மூன்றும் எட்வர்டின் தாய் இஸாபெலா (Isabella, mother of Edward III.); கரிய இளவரசனென்னும் எட்வர்ட் (Edward the Black Prince); ப்ரான்ஸ் மன்னனை ஜான்; லங்காஸ்ட்டர் - ட்யூக் ஜான் (John of Gaunt, Duke of Lancaster); வாட் டைலர் (Wat Tyler); ஜான் விக்லிப் (John Wycliffe); க்ளஸ்ட்டர்-ட்யூக், லங்காஸ்ட்டர் ஹென்றி.

முக்கிய விஷயங்களும் காலமும்:

1327. மூன்றும் எட்வர்ட் முடிசூடல்.
1346. க்ரெஸ்ஸி சண்டை (Battle of Crecy).
1349. கறுப்புக் கொள்ளைநோய் (The Black Death).
1356. ப்வாட்யா சண்டை (Battle of Poitiers).
1376. உத்தமப் பார்லிமெண்ட் (The Good Parliament).
1377. மூன்றும் எட்வர்டின் மரணம்; இரண்டாம் ரிச்சர்ட் பட்டத்திற்கு வருதல்.
1381. பண்ணையாட்களின் கலகம் (The Peasants' Revolt).
1384. விக்லிபின் மரணம்.
1399. இரண்டாம் ரிச்சர்டை அரசைவிட்டு நீக்குதல்.

1. மூன்றும் எட்வர்டும் நூறண்டுப்போரும்.—மூன்றும் எட்வர்ட் டம்பத்தில் ஆசையுள்ளவன். பார்வைக்கு வெகு



விநோதமாய்த் தனது ராஜசபையை அலங்கரித்தான்.
சண்டைகளில்ஜயமடைந்து ஒருபெரியபோர்வீரனென்ற
பெயர் தனக்கு வரவேண்டுமென்று இச்சித்தான். நூறண்
டுப்போர் (The Hundred Years' War) என்று பெயர்கொண்ட
ஒரு பெரிய யுத்தம் ப்ரான்ஸுக்கும் இங்கிலண்டுக்குமுண்
டாயிற்று. நூறுவருஷகாலம் இடைவிடாமல் இந்த
இரண்டுதேசங்களும் போர்செய்தனவென்பது கருத்
தல்ல. அவ்வளவு காலத்திற்குமேலுங்கூட இந்த இரண்டு
தேசத்தாரும் விரோதம் பாராட்டி அடிக்கடி போர்செய்
துவந்தார்கள்.

2. போருக்குக் காரணம்.—இந்த வலுத்தசண்டைக்கு
அநேக காரணங்களுண்டு. ப்ரான்ஸின் ஒரு பாகமாகிய
காஸ்க்கனிக்கு ஆங்கில அரசன் அதிபதியாயிருந்தவரைக்
கும் அவன் ப்ரான்ஸ் மன்னனுக்குக் கீழ்ப்பட்டவனுகை
யால் அவ்விருவருக்கும் அடிக்கடி விவாதம் ஏற்பட்டுக்
கொண்டிருந்தது. மேலும், ப்ரெஞ்சுக்காரர்கள் ஸ்காட்
ஜனங்களுக்கு உதவிசெய்தபடியால் ஆங்கிலேயருக்கு
அவர்களிடத்தில் வெறுப்பு இருந்தது. என்றாலும், விரோ
தம் பலத்துச் சண்டையுண்டாவதற்குக் காரணம்யா
தெனில், எட்வர்ட் ப்ரான்ஸ்தேசத்தரசு தனக்குக்
கிடைக்கவேண்டுமென்று ஒரு பாத்தியம் கொண்டுவந்
தான். ப்ரெஞ்சு மன்னனுடைய மகள் இஸாபெலா தனக்
குத் தாயானபடியால் அவள்மூலமாய் எட்வர்ட் தனக்
குப் பட்டங் கிடைக்கவேண்டுமென்று வாதாடினன்.
ஆனால், ப்ரெஞ்சு தேசாசாரப்படி பெண்ணுக்கு அரசா
ளும் பாத்தியமில்லை. அவள்மூலமாய் ஓர் ஆண்மகனுக்
கும் பாத்தியம் ஏற்படமாட்டாது. ஆகையால், அவனை
விலக்கி அடுத்த ஆண் வார்சான ஆறும் பிலிப்பை அரச
னுக ப்ரெஞ்சுக்காரர்கள் நியமித்துக்கொண்டார்கள்.
சுமார் பத்து வருஷங்கள்வரைக்கும் எட்வர்டும் சும்மா
விருந்து விட்டான்.

3. சண்டையின் தோடக்கம்.—இவ்வளவுகாலஞ் சென்ற
பிறகு ஆறும் பிலிப்புடன் எட்வர்ட் பலகாரணங்களைக்
கொண்டு சண்டைக்கு அடியிட்டான். அவன் தான் முன்
சொல்லிக்கொண்டிருந்த பாத்தியத்தை இப்போதுகொண்

டாடினான். தானே ப்ரெஞ்சுதேச மன்னன் என்ற பட்டத்தைத் தரித்துக்கொண்டு, பாத்தியமில்லாத பிலிப்பைத் துரத்தப் போர்செய்வது தன்னுடைய கடமையென்று வெளியிட்டான். இவன் கொண்டுவந்த பாத்தியம் நியாயமானதன்று. என்றாலும், போரில் ப்ரெஞ்சுக்காரர்களை வென்று பலவிடங்களில் ஜயமடைந்தான். ஐரோப்பாவில் ஆங்கிலேயர் சிறந்த போர்வீரர்களென்ற புகழ் அவர்களுக்கு உண்டாகும்படி செய்துவிட்டான்.

ப்ரான்ஸ் அரசுக்கு மூன்றாம் எட்வர்ட் பாத்தியம்
கொண்டாடியதற்குக் காரணமான வம்சாவளி.

பிலிப் III., ப்ரெஞ்சு மன்னன்
- பிலிப் IV., ப்ரெஞ்சு மன்னன்.
  - இஸாபெலா + எட்வர்ட் II.
    - எட்வர்ட் III.
- வல்வா அதிபதி சார்ல்ஸ்.
  - பிலிப் VI., ப்ரெஞ்சு மன்னன்.
    - ஜான், ப்ரெஞ்சு மன்னன்.

**4. க்ரேஸ்ஸி சண்டை.**—ப்ரெஞ்சுக்காரர்கள்மீது எட்வர்ட் அடைந்த வெற்றிகளுள் 1346 இல் கிடைத்தது ஒன்று. அந்த வருஷம் எட்வர்டும் அவனுடைய மகன் கரிய இளவரசனும் நார்மண்டிக்குச் சென்று, ப்ரான்ஸ் தேசத்தின் தலைநகராகிய பாரிஸ்மீது படையெடுத்துப் ப்ரெஞ்சுக்காரர்களை வடக்கில் ஓடும்படிச் செய்தான். கறுத்த கவசத்தை யணிந்துகொண்டிருந்தபடியால் எட்வர்ட் வேல்ஸ் இளவரசனுக்கு கரிய இளவரசன் என்ற பெயர்வந்தது. கடைசியில், ஆங்கிலேயர் திரும்பி க்ரேஸ்ஸி என்றவிடத்தில் ப்ரெஞ்சுக்காரர்களுடன் சண்டையிட்டார்கள். ப்ரெஞ்சுசேனை ஆங்கிலேய சேனையைவிட ஜனக்கூட்டமுள்ளதாயிருந்தும் அது கேவலமான தோல்வியையடைந்தது. கரிய இளவரசன் சிறுபையனாயிருந்தபோதிலும் வீரத்துடன் போர்செய்து மிகுந்த கீர்த்தியையடைந்தான். கொஞ்சகாலத்திற்குள் ப்ரெஞ்சுக்கா




ரர்களுக்குச் சொந்தமான கலேயை ஆங்கிலேயர் நீடித்து முற்றுகைப் போட்டுப் பிடித்துக்கொண்டார்கள். இவ்வூர் இருநூறு வருஷங்களுக்குமேல் ஆங்கிலேயர் வசத்திலிருந்தது.

**5. ப்வாட்யா சண்டை.**—க்ரெஸ்ஸி சண்டை நடந்த பத்துவருஷங்களுக்குப் பிறகு கரிய இளவரசன் இன்னமொரு புகழ்பெற்ற வெற்றியையடைந்தான். இந்தச் சமயம் மூன்றாம் எட்வர்ட் இங்கிலண்டிலிருந்தான். எட்வர்ட் தன் மகனை காஸ்க்கனிக்கதிபதியாகச் செய்துவிட்டான். அதின் தலைநகராகிய போர்டோவில் இளவரசன் வசித்தான். 1356 இல் ப்ரெஞ்சுக்காரர்களுக்கு விரோதமாய் ஒரு சிறந்த சேனையைத் திரட்டிக்கொண்டு வடக்கே சென்றான். பிலிப் அரசன் இறந்துவிட்டான். அவனுடைய மகன் ஜான் அரசன் கரிய இளவரசனை போர்டோவுக்குத் திரும்பிவர முடியாமற்றடுத்து ப்வாட்யா என்றவிடத்திற்குச் சமீபத்தில் தன்னுடன் சண்டைபோடும்படி கட்டாயப்படுத்தினான். ப்ரெஞ்சுசேனை ஆங்கிலச்சேனையைக்காட்டிலும் பலமடங்கு அதிகமாயிருந்தது. என்றாலும், கரிய இளவரசனும் காஸ்க்கன் போர்வீரர்களும் சுலபமாய்ப் ப்ரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்துவிட்டு ஜானரசனையும் சிறைப்படுத்தினார்கள்.

**6. கலே சமாதானம்.**—ப்ரான்ஸ் மகாகொடிய நிலைமைக்கு வந்துவிட்டது. 1360 இல் ப்ரெஞ்சு அரசன் கலே உடன்படிக்கை (Treaty of Calais) யின்படி வெகு சந்தோஷத்துடன் சமாதானஞ்செய்துகொண்டான். அதன்படி எட்வர்ட் ப்ரெஞ்சு அரசுக்குத் தனக்குண்டான பாத்தியத்தை விட்டுவிட்டான். அதற்குப்பதிலாக எலியநார் இரண்டாம் ஹென்றியை மணந்துகொண்டகாலத்தில் சீதனமாகக்கொண்டுவந்த ல்வார் நதிக்கும் (R. Loire) பிரனீஸ் (Pyrenees) மலைக்கும் மத்தியிலுள்ள நாடுகளனைத்தையும் கலே கோட்டையையும் ஏற்றுக்கொண்டான்.

**7. யுத்தம் திரும்பி, ப்ரான்ஸை இழந்தது.**—இந்தச் சமாதானம் அதிக காலம் நீடிக்கவில்லை. எட்வர்டுக்குக் கிடைத்த நாடுகளில் [illegible]யிற்று. ப்ரெஞ்சுக்




1860 இல் நடந்த கலே சமாதானத்தின் பிறகு ப்ரான்ஸில் இருந்த ஆங்கில ராஜ்யங்கள்.

காரர்கள் அதற்கு உதவிசெய்தார்கள். கரிய இளவரச னுக்கு நோயுண்டாயிற்று. அவன் போர்டோவிலிருந்து சுதேசம் வந்து இறந்துவிட்டான். மூன்றும் எட்வர்டின்



ஆட்சி முடிவுக்குள் ஆங்கிலேயர் தாங்கள் ஜயித்திருந்த நாடுகளையெல்லாம் இழந்துவிட்டனர். கடற்கரையோர மாயுள்ள போர்டோ, கலே முதலிய சில பட்டினங்கள் தாம் அவர்கள் வசத்திலிருந்தன.

8. ஆங்கிலேயர் தங்களுடைய நாட்டைப்பற்றியும், பாஷையைப்பற்றியும் கர்வமடைதல்.—ஆங்கிலேயர் இந்த யுத்தங்களில் மிகுந்த கீர்த்தியையடைந்தார்கள். அதனால் தங்களைக்குறித்தும் தங்களுடைய தேசத்தைக்குறித்தும் வெகு கர்வங்கொண்டார்கள். இதனாலுண்டான பெரிய முடிவுயாதெனில், ஆங்கில அரசனும், பிரபுக்களும் மறு படியும் ஆங்கில பாஷையையே பேச ஆரம்பித்தார்கள். நார்மன் வெற்றிக்குப்பிறகு இங்கிலண்டில் மேன்மக்கள் ப்ரெஞ்சு பாஷையையே சாதாரணமாகப் பேசிவந்தார்கள். ஆனால், இப்பொழுது உயர்வகுப்பினர், தாழ்வகுப்பினர் எல்லோரும் ஆங்கில பாஷையைப் பேசத் தலைப்பட்டார்கள். அந்த பாஷையில் அநேக புகழ்பெற்ற புத்தகங்களையும் எழுதினார்கள்.

9. கறுப்புக் கொள்ளைநோய்.—இந்த யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு எவ்வளவு லாபம் கிடைத்ததோ அவ்வளவு நஷ்டமுமுண்டாயிற்று. அவர்கள் முரட்டு ஜனங்களாகவும் கொடியவர்களாகவும் பேராசைகொண்டவர்களாகவுமாகிவிட்டனர். கரிய இளவரசனைப்போன்ற இரக்கமுள்ள கனவானும் சாமானிய ஜனங்களைக் கொடுமையுடன் நடத்தினான். ப்ரெஞ்சு யுத்தத்தினால் வரி அதிகப்படுகிறதென்று ஆங்கிலேயர் அறிந்துகொண்டார்கள். பிறகு கறுப்பு மரணம் என்று பெயர்கொண்ட ஒருபெரிய கொடிய கொள்ளைநோயுண்டாகித் தேசமுழுவதையும் அழித்துவிட்டது. அதனால் மூன்றிலொருவன் மடிந்தானென்று கணக்கிட்டிருக்கின்றனர். இக்கொள்ளைநோய் பலமாய்ப் பரவியது 1349 இல்தான்.

10. உத்தமப் பார்லிமென்டும், மூன்றும் எட்வர்டின் மரணமும்.—மூன்றும் எட்வர்டுக்குக் கிழத்தனமும், புத்தியீனமும் வந்தவுடன் விஷயங்கள் இன்னமும் கேவலமாகிவிட்டன. கடைசியில் அரசன் சரியாய் ஆளும்படிசெய்யப் பார்லிமென்டார் தகுந்த முயற்சிசெய்தார்கள். 1376


இல் ஒரு பார்லிமென்ட் சபை கூடியது. அச்சபையால் ஜனங்களுக்கேற்பட்ட நன்மைகளைக்கொண்டு அதற்கு **உத்தமப்பார்லிமேன்ட்** என்றுபெயர்வந்தது. கடைசியாகக் கரிய இளவரசன் தன் தேசத்திற்குச்செய்த நன்மையா தெனில், அவன் தன்னுடைய தகப்பனுக்கு விரோதமாய் உத்தமப்பார்லிமென்டுக்குத் தன்னலியன்ற உதவிசெய்த தே. இவ்விதம் வேல்ஸ் இளவரசன் ஜனங்கள் கட்சியிற் சேர்ந்திருக்க அவனுடைய தம்பியாகிய **லங்காஸ்ட்டர்-ட்யூக், கேன்ட்-ஜான்** என்பவன் கிழவரசனுக்கும், அவனுடைய மந்திரிகளுக்கு முதவிசெய்தான். பார்லிமென்ட் சபை நடந்துகொண்டிருக்கும்போதே கரிய இளவரசன் இறந்துவிட்டான். பிறகு கென்ட்-ஜானுக்கும் மந்திரிகளுக்கும் பார்லிமென்டாரை வீட்டிற்கனுப்பிவிடச் சக்தியுண்டாகிவிட்டது. வேலையைவிட்டுப் பார்லிமென்டார் விலக்கின கெட்ட மந்திரிகளை மறுபடியும் அவர்கள் நியமித்துக்கொண்டார்கள். கொஞ்சநாளில் மூன்றும் எட்வர்ட் இறந்தான். இவனுடைய ஆட்சிகாலத்தில் இங்கிலண்டிற்குச் சௌக்கியத்தைக்காட்டிலும் கீர்த்தி தான் அதிகமாய்க் கிடைத்தது.

11. **இரண்டாம் ரிச்சர்டின் இளமைப்பருவம்.**—அடுத்த அரசன் இரண்டாம் ரிச்சர்ட். அவன் கரிய இளவரசனுடைய மூத்தகுமாரன். அவனுடைய பாட்டன் மரிக்கும்போது அவன் சிறுகுழந்தையாயிருந்தான். அவனுடைய ஆட்சி ஆரம்பகாலத்தில் அவனுடைய சிற்றப்பன் கென்ட்-ஜான் அவனுக்காக நாட்டையாண்டுவந்தான். அரசு சீர்குலைந்து ஜனங்கள் அதிருப்தியடைந்தார்கள். கடைசியாக, 1381 இல் தேசமுழுவதிலும் கலகமுண்டாய் விட்டது.

12. **பண்ணையாட்கள் கலகம்.**—வாட் டைலர் (Wat Tyler) நடத்திய கலகத்திற்குப் பண்ணையாட்கள் கலகமென்று பெயர். மதியீனமும், முரட்டுத்தன்மையுமுள்ள பண்ணையாட்கள் பல கொடியகாரியங்களைச் செய்தார்கள். கலகம் அடங்குமுன் பலமான சண்டை நடந்தது. கலகக்காரர்கள் தாங்கள் வெற்றியடைந்தபோது எவ்வளவு கொடிய காரியங்களைச் செய்தார்களோ அவ்வளவு கொ



### மூன்றும் எட்வர்டின் சந்ததியாரின் வம்சாவளி.




டிய காரியங்களை அரசனின் நண்பர்களும் செய்தார்கள். பண்ணையாட்கள் கலகம் பார்வைக்குத் தோற்றுப்போனதாகத் தோற்றினாலும் அதனால் கொஞ்சம் நன்மையுண்டாயிற்று. எளிய கூலியாட்களுடைய பாத்தியங்களுக்குக்கூட மரியாதை செய்யவேண்டுமென்று ஒவ்வொருவ

னுக்கும் புலப்பட்டது. இல்லாவிடில், அவர்களும் கத்தியையெடுத்து ராஜாங்கத்திற்கு ஆபத்தை யுண்டுபண்ணக் கூடும்.

**13. கோவிலின் நிலைமை.**—பண்ணையாட்கள்போல் அதிருப்தியடைந்தவர்கள் வேறு சிலருமிருந்தார்கள். பூர்வத்தில் அகஸ்ட்டின் கிறிஸ்தவமதத்தை ஆங்கிலேயருக்குப்போதித்த காலமுதல் கோவில் முறையை எல்லாரும் நம்பினார்கள். ஆனால், அது ஒருகாலத்திலிருந்ததுபோல் அவ்வளவு களங்கமற்று ஊக்கத்துடன் நடைபெறவில்லை. அதற்கு ஏராளமான சொத்துச்சேர்ந்துவிட்டபடியால் உலகவாழ்க்கையி லிச்சைப்பட்டவரனேகர் திரவியத்திற்கும், அதிகாரத்திற்கும் ஆசைப்பட்டு போதகர்க் கூட்டத்திற்சேர்ந்து கொண்டார்கள். அக்காலத்தில் படிப்பும் தைரியமும் நிறைந்த ஜான் விக்லிப் என்ற போதகனொருவன் கோவிலொழுங்கை முற்றிலும் சீர்திருத்தவேண்டியது அவசியமென்று பிரசங்கஞ்செய்தான். அவனைப் பின்பற்றினவர்களுக்கு லாலர்டுகள் (Lollards) என்று பெயர். இந்தப்பதத்திற்கு வீணான விஷயங்களைப்பற்றிப் பிதற்றுகிறவர்களென்பது பொருள்.

**14. கோவில் முறையைத்திருத்த விக்லிப் முயலுதல்.**—ரோமாபுரியிலிருக்கும் போப்புக்கு இங்கிலண்டு கோவிலதிகாரத்தின் தலைமையைவகிக்கப் பாத்தியமில்லையென்று விக்லிப் பிரசங்கித்தான். கோவிலுக்குரிய சொத்தையெல்லாம் பிடுங்கிக்கொள்ளும்படி பிரபுக்களுக்குப் போதித்தான். அப்படிச்செய்தால்தான் குருமார்கள் கிறிஸ்துவைப்போல் எளியவராகவிருந்து உத்தமவழியில் காலங்கழிப்பார்களென்றான். பைபில் (Bible) புஸ்தகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதை ஆங்கிலேயர் தாங்களே வாசிக்கக் கூடியதாய்ச்செய்தான். விக்லிப்பின் எளிய குருமார் என்ற பெயர்கொண்ட பலசீடர்களை பலவிடங்களுக்கு அனுப்பினான். இவர்கள் தங்கள் குருவின் உபதேசத்தை ஜனங்களுக்கு வெளியிட்டார்கள். கடைசியில், கோவிலார் உபதேசித்த சில முக்கியமான கற்பனைகளைத் தைரியத்துடன் மறுத்தான். மதத்தலைவர்கள்



அவனுடைய உபதேசத்தை நிறுத்தினார்கள். கொஞ்ச நாளில் 1384 இல் அவனிறந்தான். அவன் மரித்த பிறகும் லாலர்டு கூட்டத்தார் அநேகரிருந்தனர்.

**15. ரிச்சர்ட் தன்னைச் சுயேச்சை யரசனாகச்செய்துகொள்ளல்.**—இரண்டாம் ரிச்சர்ட் இரண்டாம் எட்வர்டைப் போல் சோம்பேறியல்ல. அவனிடத்தில் கர்வம், பெருமை, மனத்திற்குத் தோன்றினபடியெல்லாம் வினைத்தல், தன்னிஷ்டப்படி ஆளவேண்டுமென்ற இச்சை முதலிய குணங்களிருந்தன. கென்ட் ஜான் ஆட்சிவேலையை விட்டபிறகு அவனுடைய வேறொரு சிற்றப்பன் க்ளஸ்ட்டர்-டியூக் மந்திரிகளின் தலைமைப்பதவியையேற்றுக்கொண்டான்; ஒருநாள் ரிச்சர்ட் தன் சிற்றப்பனைப்பார்த்து, "எனக்கு வயதென்ன?" என்று கேட்டான். க்ளஸ்ட்டர் அவனுடைய வயது இருபத்திரெண்டு என்றான். "அப்படியானல் என்னுடைய விஷயங்களை நானே பார்த்துக்கொள்ளும் வயது எனக்கு வந்துவிட்டது" என்றுரைத்தான். ரிச்சர்ட் பிறகு தன்னுடைய விரோதிகளின் மீது பழிவாங்க ஆரம்பித்து அவர்களிற் பலரைக் கொன்றுவிட்டான். அவ்விதம் மடிந்தவரில் அவனுடைய சிற்றப்பன் க்ளஸ்ட்டரொருவன். அவன் இனி தன் இஷ்டப்படி ஆளலாமென்றும் பார்லிமென்டையும், பிரபுக்களையும் நிராகரித்து விடலாமென்றும் நினைத்தான்.

**16. லங்காஸ்ட்டர்-ஹென்றி இரண்டாம் ரிச்சர்டை அரசைவிட்டு நீக்குதல்.**—கென்ட்-ஜானின் மூத்தகுமாரனை லங்காஸ்ட்டர்-ஹென்றி இவனுடைய பழைய விரோதிகளிலொருவன். ஹென்றி க்ளஸ்ட்டர் கட்சியைவிட்டு விலகினபடியால் ரிச்சர்ட் அவனை மன்னித்துவிட்டான். சில வருஷங்களுக்குப்பிறகு ஹென்றியை ஒரு காரணத்தைக் கற்பித்துத் தேசத்தைவிட்டுத் துரத்தினான். ஹென்றி பிறநாட்டிலிருக்கும்போது கென்ட்-ஜான் இறந்தான். உடனே ரிச்சர்ட் லங்காஸ்ட்டர் சிற்றரசைச் சேர்ந்த பெரிய மானியசொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டான். உடனே ஹென்றிக்குக் கோபம் பிறந்தது. 1399 இல் தன்னுடைய தகப்பன் சொத்தைக் கைவசமாக்கிக்கொள்ள வந்திருப்பதாகச் சொல்லிக்

கொண்டு இங்கிலண்டிற்கு ஹென்றி திரும்பிவந்தான். ரிச்சர்டினுடைய கொடிய ஆட்சியில் வெறுப்படைந்த அநேகர் அவனுடைய கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். உடனே ஹென்றி தன் தகப்பன் சொத்திற்கும், பெரியப்பன் மகனுடைய அரசிற்கும் பாத்தியம் கொண்டாடினான். ரிச்சர்ட் தன்னுடைய அரசை நிலைக்கச் செய்த முயற்சி வெகுகேவலமாயிற்று. பார்லிமெண்டார் ஹென்றியை அரசனாக ஒப்புக்கொண்டு ரிச்சர்டை அரசிலிருந்து விலக்கிவிட்டார்கள். கொஞ்சகாலம் சென்றபின் இரண்டாம் எட்வர்டைப்போல் ரிச்சர்ட் சிறையில் கொலையுண்டான்.

## அதிகாரம் IX

## லங்காஸ்ட்டரரசர்கள், 1399–1461; யார்க் அரசர்கள், 1461–1485

முக்கியமானவர்கள்:

நாலாம் ஹென்றி; ஐந்தாம் ஹென்றி; ஆறாம் ஹென்றி; மார்ச்-இயர்ல்; நார்த்தம்பர்லண்டு-இயர்லும் அவனுடைய மகன் ஹென்றி பெர்ஸியும் (Percy); ஓவன் க்ளெண்டோவர் (Owen Glendower); ப்ரெஞ்சு ஆறாம் சார்ல்ஸும் ஏழாம் சார்ல்ஸும்; ப்ரான்ஸ் காதரீன்; பர்கண்டி-ட்யூக்குகளான ஜானும் பிலிப்பும்; ஆர்க்-ஜோன்; பெட்போர்ட்-ட்யூக் ஜான்; ஆஞ்செள மார்கரெட்; வாரிக் அரசனாக்குவோன்; க்ளஸ்ட்டர்-ட்யூக் ரிச்சர்ட் (பிறகு மூன்றாம் ரிச்சர்ட்); வேல்ஸ் இளவரசன் எட்வர்ட் (பிறகு ஐந்தாம் எட்வர்ட்); யார்க்-ட்யூக் ரிச்சர்ட்; மார்கரெட் போபர்ட் சீமாட்டி; ரிச்மண்ட்-இயர்ல், ஹென்றி ட்யூடர்.

முக்கிய விஷயங்களும் காலமும்:

**1399–1413.** நாலாம் ஹென்றியினாட்சி.
**1413–1422.** ஐந்தாம் ஹென்றியினாட்சி.
**1415.** அஜின்கூர்ச் சண்டை.
**1422–1461.** ஆறாம் ஹென்றியினாட்சி.
**1429.** ஆர்க்-ஜோன் ஆர்லியன்ஸ் (Orleans) நகரத்தைக் காப்பாற்றுதல்.



**1453.** ஆங்கிலேயர் ப்ரான்ஸைவிட்டு ஓடுதல்.
**1455.** ஸெண்ட் ஆல்பன்ஸ் சண்டை.
**1461.** டௌட்டன் சண்டை.
**1461–1483.** நாலாம் எட்வர்டினாட்சி.
**1470–1471.** ஆறாம் ஹென்றி மறுபடியும் அரசுக்கு வருதல்.
**1483.** ஐந்தாம் எட்வர்டினாட்சி.
**1483–1485.** மூன்றாம் ரிச்சர்டினாட்சி.

1. ஏன் நாலாம் ஹென்றி அரசனானான்? — பார்லிமென்டார் லங்காஸ்ட்டர் ஹென்றியை அரசனாக்கினார்கள். அப்படிச்செய்வதற்கு அவர்களுக்குப் பாத்தியமுண்டு. ஆனால் ஓரரசனிறந்தாலும், அரசையிழந்தாலும், அடுத்த சமீபவார்சுதான் அரசைப் பெறவேண்டுமென்பது சிலருடைய கட்சி. இப்பொழுது அரசிற்குச் சமீபபாத்தியமுள்ளவன் லங்காஸ்ட்டர் ஹென்றியல்லன். மார்ச்-இயர்ல்தான். மார்ச்-இயர்லை பார்லிமென்டார் அரசனாக்க வேண்டியது அவசியமில்லை. ரிச்சர்ட் சுயேச்சையரசனாவதற்குச்செய்த முயற்சியைக்கண்டு திகிலடைந்த ஜனங்கள் அவனைவிலக்கி அவனுக்கு முக்கியமான விரோதியை அவனுடைய ஸ்தானத்தில் வைப்பதுதான் உசிதமென்று நினைத்தார்கள். நாலாம் ஹென்றிக்குப் பார்லிமென்டாரிடமிருந்து அரசு கிடைத்தபடியால் அவன் பட்டத்திற்குவந்தது பார்லிமென்டிற்கும், ஆங்கில ராஜாங்கமுறைக்கும் ஒருபெரிய வெற்றி. ஆகையால், லங்காஸ்ட்டர் வம்சத்தரசர்கள் ராஜாங்கமுறைக்கு ஒத்த அரசர்களே. அவர்கள் பார்லிமென்டின் இச்சைக்கு இணங்கியே நடந்தார்கள்.

2. ஹென்றி லாலர்டுகளை அடக்குதல்; கலகங்கள்.— நாலாம் ஹென்றி கோவிலார்கட்சியைச் சேர்ந்தவனாகையால் விக்லிப்பின் சீடர்களான லாலர்டுகள் பொய்யான மதக்கோட்பாடுகளை உபதேசிக்கிறார்கள் என்றுசொல்லி அவர்களைத் தலையெடுக்கவிடாமலடக்கினான். பல கலகங்களாலவனுக்குத் துன்பமுண்டாயிற்று. அவன் அரசுக்கு வருவதற்கு உதவிசெய்த பிரபுக்களே இப்பொழுதவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள். நார்த்தம்பர்லண்டு-இயர்ல் ஹென்றி பெர்ஸியும், அவனு


டைய மகனும் இக்கலகத்திற்கு தலைவர்கள். மகனுக்கும் ஹென்றிபேர்ஸி யென்றுபெயர். அவன் முன்பின் ஆலோசனையின்றி முரட்டுத்தனமாய்ச் சண்டை செய்யும் தீரனானபடியால் அவனுக்கு ஹாட்ஸ்பர் (முரட்டுத்தனமாய்ச் சவாரிசெய்பவன்) என்ற பெயர் வந்தது. ஓவன் க்ளெண்டோவர் (Owen Glendower) என்ற புத்திமானும், வீரனுமான ஒரு வெல்ஷ் கனவானை அவர்கள் தங்களுடைய கட்சியில் சேர்த்துக்கொண்டார்கள். இவனுக்கு வேல்ஸில் சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது கருத்து. வேல்ஸ் ஜனங்களில் அநேகர் அவனை அந்நாட்டு அதிபதியாக ஒப்புக்கொண்டார்கள். என்றாலும், ஓவனும் மற்றிருவர்களும் நன்றாக ஒத்து வேலைசெய்யவில்லை. ஆகையால் நாளடைவில் ஹென்றி அவர்கள் எல்லோரையும் தொலைத்துவிட்டான்.

**3. ஹென்றியின் மரணம்.**—ஹென்றியின் கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாயின. ஆயினும், இந்தக்கஷ்டத்திலடிபட்டு அவனுக்குத் தேகம் மெலிந்து நோயுண்டாகி 1413 இல் அவன் இறந்தான். உடனே அவனுடைய மூத்தமகன் ஐந்தாம் ஹென்றி பட்டத்திற்குவந்தான்.

**4. ஐந்தாம் ஹென்றியின் குணம்.**—வாலிபப்பருவத்தில் ஐந்தாம் ஹென்றி மூர்க்கனாகவிருந்தானென்று தெரிய வருகிறது. ஆயினும், அரசனானபிறகு விளையாட்டுப் புத்தியையொழித்து வெகு யோக்கியனாகிவிட்டான். அவன் நல்ல போர்வீரன்; கீர்த்தி சம்பாதிப்பதில் அவாவுடையவன். அவனை எல்லோரும் நேசித்தார்கள். அவனுடைய அரசும் வெகு ஒழுங்காய் நடந்தது. அவனுடைய ஆட்சிக்காலத்தில் நடந்த முக்கியமான விஷயம் ப்ரான்ஸ் தேசத்துடன் நடந்த யுத்தந்தான்.

**5. அஜின்கூர் சண்டை.**—ஐந்தாம் ஹென்றி மூன்றும் எட்வர்டைப்போல் ப்ரான்ஸ் தேசவரசுக்கு உரிமை கொண்டாடினான். அவனுடைய கட்சிக்குச் சிறிதும் ஆதாரமில்லை. ஆயினும் 1415 இல் நன்றாய்ப்பழகிய ஒரு சேனையைப் ப்ரான்ஸுக்கு நடத்திச்சென்று அஜின்கூர் சண்டையில் வெற்றியடைந்தான். அவ்வூருக்கும் க்ரெஸ்ஸிக்கும் அதிகதூரமில்லை. பழைய வெற்றியைப்போல் இதுவும்






சுமார் 1429 இல் ஆறாம் ஹென்றிக்கும் ஏழாம் சார்லஸுக்கும் ப்ரான்ஸில் சொந்தமான நாடுகள்.

நேர்த்தியும், கம்பீரமுமுள்ளதாகத்தானிருந்தது. வெற்றி
பெற்ற சேனையில் போர்வீரர்கள் கொஞ்சம் பேர்கள்தா
னிருந்தார்கள். ஆகையால், ஹென்றி கலேபோய்ச்சேருவ
தற்குமட்டுந்தான் முடிந்தது.

6. ட்ரவா (Troyes) உடன்படிக்கை. — இரண்டு வரு
ஷங்களுக்குப்பிறகு ஹென்றிநார்மண்டியின்மீதுபடையெ
டுத்து அதைக் கொஞ்சம்கொஞ்சமாய் ஜயித்தான். ஆறும்
சார்ல்ஸ் அரசன் பயித்தியம் பிடித்தவன். ப்ரெஞ்சு
பிரபுக்கள் ஆங்கிலேயரை எதிர்ப்பதைவிட்டு ஒருவருக்
கொருவர் சண்டைபோடுவதில் மனத்தைச்செலுத்தி
னார்கள். பலத்தகட்சிகள் இரண்டு இருந்தன. சார்ல்ஸ்
என்று பெயர்கொண்ட அரசனுடைய மகன் ஒரு கட்சிக்
குத்தலைவன். மற்றொருகட்சிக்கு அவனுடைய சுற்றத்
தானும், விசேஷமான பலமுள்ளவனுமான பர்கண்டி-
ட்யூக் ஜான் தலைவன். கடைசியில் சார்ல்ஸின் நண்பர்கள்
பர்கண்டி-ட்யூக்கைக் கொடுமையாய்க் கொலைசெய்துவிட்
டார்கள். பர்கண்டியைச் சேர்ந்தவர்களுக்கு வெறுப்பு
அதிகரித்தது. அவர்கள் இங்கிலண்டு மன்னன் ஹென்
றியுடன் ஓர் உடன்படிக்கைசெய்துகொண்டார்கள். இந்த
உடன்படிக்கைக்கு ட்ரவா சமாதானம் என்றுபெயர்.
இதன்படி பயித்தியவரசன் உயிருள்ளமட்டும் அரசனா
யிருக்கவேண்டும். அவனுடைய மகளாகிய காதரீனை
(Catherine) ஐந்தாம் ஹென்றிக்கு மணஞ்செய்து கொடுக்க
வேண்டும். மேலும், ஆறும்சார்ல்ஸுக்குப்பதிலாக ஹென்றி
ராஜகாரியத்தை நடத்தி அவனுடைய மரணத்திற்குப்
பிறகு ப்ரான்ஸ்தேச மன்னனாக முடிசூட்டிக்கொண்டு
இரண்டு தேசாதிபத்தியத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து
விடவேண்டும்.

7. ஆறம் ஹென்றியின் ஆட்சியை பெட்போர்ட் ஆதரித்
தல். — 1422 இல் ஐந்தாம் ஹென்றியிறந்தான். ப்ரான்ஸ்
மன்னன் ஆறும் சார்ல்ஸும் கொஞ்சநாளில் இறந்து
போனான். ஹென்றிக்கும், காதரீனுக்கும் பிறந்த
குழந்தை இங்கிலண்டு, ப்ரான்ஸ் தேசங்களுக்கு ஒரே
அரசனென்று விளம்பரஞ்செய்தனர். இதற்கு விரோத
மாய்ப் பயித்தியவாசனுடைய மகன் சார்ல்ஸைச் சிலர்



ஏழாம் சார்ல்ஸ் அரசன் என்று நியமித்தார்கள். ஹென்றி
யின் சிற்றப்பனும், ஐந்தாம் ஹென்றியின் தம்பியும்,
புத்திமானுமான பெட்போர்ட்-ட்யூக் ஜான் இந்தக் குழந்
தைக்கு போஷகனானன். இவன் தன் அண்ணன் மக
னுக்கு ஆங்கிலவரசுடன் ப்ரான்ஸ்தேச அரசும் கிடைக்
கும்படி வேண்டியமட்டும் முயற்சிசெய்தான்.

8. ஆர்க்-ஜோனின் தூது. — பர்கண்டி கட்சியைச்
சேர்ந்த அநேக ப்ரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர் கட்சி
யில் இன்னமும் சேர்ந்துகொண்டு சண்டைசெய்தார்
கள். கடைசியில் எத்தேசசரித்திரத்திலும் கேள்விப்
படாத ஓர் அற்புதகாரியம் நடந்தது. 1429 இல் ஆர்க்-
ஜோன் என்று பெயர்கொண்ட கிராமவாசியான பெண்
ணொருத்தி ஏழாம் சார்ல்ஸிடம் வந்து அன்னிய நாட்
டார்களைப் ப்ரான்ஸ் தேசத்திலிருந்து துரத்திவிட்டு
அவனை அரசனாக்கும்படி சுவாமி தன்னை நியமித்திருக்
கிறதென்று சொன்னாள். அந்தச்சமயத்தில் ஆங்கிலேயர்
ஆர்லியன்ஸ் (Orleans) நகரத்தை முற்றுகைபோட்டிருந்
தார்கள். ப்ரெஞ்சுக்காரர்களுமதை விட்டுவிட வேண்
டிய நிலைமையிலிருந்தார்கள். ஆயினும், ஆர்க்-ஜோன்
ஓர் ஆண்மகனைப்போல் கவசம்பூண்டு, ஒரு சேனையின்
தலைமை அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு ஆர்லியன்ஸ் நக
ரத்திலுள் பிரவேசித்துவிட்டாள். அவளுடைய பக்தியும்
வீரமும் உள்ளிருந்தவர்களுக்கு ஒரு நூதனமான உற்சா

**நூறுண்டுப் போரில் ப்ரெஞ்சு அரசர்களும்**
**பர்கண்டி-ட்யூக்குகளும்.**

வல்வா-ஆறும் பிலிப்.
|
ஜான்.
|
- ஐந்தாம் சார்ல்ஸ்.
  - ஆறும் சார்ல்ஸ்.
    - ஏழாம் சார்ல்ஸ்.
- பர்கண்டி-ட்யூக்.
  - ஜான், பர்கண்டி-ட்யூக்.
    - பிலிப், பர்கண்டி-ட்யூக்.

கத்தை உண்டுபண்ணின. ஆகவே, கொஞ்சநாளைக்குள் ஆங்கிலேயரை முற்றுகையினின்றும் துரத்தியடித்தாள். பிறகு சார்லஸை ரீம்ஸ் (Rheims) நகரத்திற்கு அழைத்துச்சென்று அவனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்தாள்.

9. **ஜோனின் மரணம்.**—ஜோன் உத்தேசித்த வேலை இன்னும்முடிவடையவில்லை. ஈசுவரன் ஆங்கிலேயரை நாட்டைவிட்டுத் துரத்தும்படியாய்த் தனக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியால் அவர்கள் சுதேசம் போய்விடவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாள். கடைசியில், அவள் அவளுடைய விரோதிகள் கையில் சிக்கிக்கொண்டாள். அவர்கள் அவளை ரூஆனில் எரித்துக் கொன்றுவிட்டார்கள். அவள் வெகு கம்பீரத்துடன் பிராணனை விட்டாள். அதைப்பார்த்துக்கொண்டிருந்த ஆங்கிலப் போர்வீரர்கள் திகிலடைந்தார்கள். "நமக்கு நாசம் வந்துவிட்டது. நாமிப்போது சுட்டெரித்த கன்னி உண்மையில் ஒருபெரிய மகாத்மாதான்" என்று பேசிக் கொண்டார்கள்.

10. **ப்ரான்ஸில் ஆங்கில ஆட்சியின் முடிவு.**—ஆர்க்-ஜோன் என்பவள் தனது நிஜபக்தியினால் ப்ரான்ஸை நாசமடையாமற் காப்பாற்றினாள். தவிர, ஆங்கிலேயர் கட்சியிற்சேர்ந்து சண்டையிட்ட ப்ரெஞ்சுக்காரர்கள் வெட்கமடையும்படி செய்துவிட்டாள். அவளிறந்த கொஞ்ச காலத்திற்குள் பர்கண்டி-ட்யூக் ஆங்கிலேயர் கட்சியை விட்டு விலகி ஏழாம் சார்ல்ஸ் ப்ரான்ஸ் தேசத்துக்குக் கிரமமான அரசன்தானென்று ஒப்புக்கொண்டான். ஆங்கிலக்கட்சி தாழ்வடையாமலிருக்கும்பொருட்டு தன்னாலியன்றமட்டும் பெட்போர்ட்-ட்யூக் கஷ்டப்பட்டான். ப்ரான்ஸுக்கும் பர்கண்டிக்கும் சமாதானம் ஏற்பட்ட வருஷத்திலேயே அவனுமிறந்தான். கடைசியில், 1453 இல் ஆங்கிலேயர் நார்மண்டியையும், காஸ்க்கனியையும் விட்டோடவேண்டி நேர்ந்தது. காஸ்க்கனி நாடோ இரண்டாம் ஹென்றி காலமுதல் ஆங்கில ட்யூக்குகள் ஆட்சியில் இதுவரையில் இருந்துவந்தது. ப்ரான்ஸ் தேசத்தில் ஆங்கில அரசர்கள் வசமிருந்த நாடுகளில் கலே ஒன்றுதான் மிகுந்தது.



11. **ஆறும் ஹென்றியின் பலமற்ற ஆட்சி.**—ஆறும் ஹென்
றிக்குப் போதுமான வயது வந்துவிட்டது. அவன்
குணத்திலும், பக்தியிலும் சிறந்தவனே. ஆயினும், நாட்
டையாளுவதற்கு வேண்டிய சரீரபலமாவது, மனவுறுதி
யாவது அவனிடத்திலில்லை. அவனிடத்திலில்லாத வீர
மும், சக்தியும் அவனுடைய மனைவி ஆஞ்சௌ மார்க
ரெட்டிடமிருந்தன. அவள் ப்ரெஞ்சுப் பெண்பிள்ளையா
னதால் ஜனங்களுக்கு அவளிடத்தில் வெறுப்பு. அவளுக்
கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு உதவிசெய்வதிலேயே
எண்ணம். இப்பேர்ப்பட்ட அரசன் காலத்தில் பிரபுக்
கள் நினைத்தபடியெல்லாம் செய்யக்கூடும். சீக்கிரத்தில்
ப்ரான்ஸைப்போல் இங்கிலண்டிலும் வதை, கொலை முத
லிய கொடுமைகள் ஏற்பட்டன. ஆங்கிலேயர் இந்த
ஹென்றி ஆளும்வரையில் விஷயங்கள் ஒழுங்காக மாட்
டாவென்று வரவரத் தெரிந்துகொண்டார்கள். 1453 இல்
ஹென்றிக்கும் திடீரென்று பயித்தியம் பிடித்துவிட்டது.

12. **யார்க்-ட்யூக் ரிச்சர்ட்.**—அரசன் உபயோகமற்றவ
னாய்த் தோன்றியபடியால் அவனுடைய சுற்றத்தாரு
க்கிய யார்க்-ட்யூக் ரிச்சர்டை ஜனங்கள் அரசனுக்க நினைத்
தார்கள். மூன்றும் எட்வர்டின் இரண்டாவது மகனான
க்ளாரென்ஸ்-ட்யூக் லயொனெல் என்பவனுடைய சந்த
தியிற் பிறந்தவன் மார்ச்-இயர்ல். இந்த மார்ச்-இயர்லின்
போனை யார்க்-ட்யூக்ரிச்சர்ட்தான் வார்சு. ஆகையால்,
சந்ததிக் கிரமத்தில் அரசனைக்காட்டிலும் இவனுக்குப்
பட்டத்திற்கு அதிக பாத்தியமுண்டு. ஆயினும், அவனை
அரசனுக்க இன்னமும் ஒருவரும் நினைக்கவில்லை. ஹென்
றிக்கு பயித்தியம் பிடித்தவுடன் யார்க்-ட்யூக்கை ரட்ச
கனாக (Protector) நியமித்தார்கள். கொஞ்சகாலத்தில்
ஹென்றி தனக்குப் பயித்தியந்தெளிந்ததும் யார்க்-ட்யூக்
கை அதிகாரத்திலிருந்து விலக்கிவிட்டான். ஆகவே
ஒழுங்கான அரசு ஏற்படுவதற்கு இடமில்லாமல் போ
யிற்று.

13. **ரோஜாச்சண்டையும் ஹென்றியின் தாழ்ச்சியும்.**—
யாதொரு முயற்சியுஞ்செய்யாமல் விலகிவிட யார்க்-
ட்யூக்குக்கு மனமில்லை. 1455 இல் அரசனுடைய மந்திரி

களுடன் அவன் போருக்குச்சென்று ஸென்ட் ஆல்பன்ஸ்
(St. Albans) என்றவிடத்தில் அவர்களைத் தோற்க அடித்
தான். முப்பதுவருஷப்போருக்கு இதுதான் ஆரம்பம்.
தங்களுக்கு அறிகுறியாக யார்க் கட்சிக்காரர்கள்
வெள்ளை ரோஜாமலரைத் தரித்தனர். லங்காஸ்ட்டர் கட்
சியார் சிவந்தரோஜாவை யணிந்தனர். ஆகையால், இச்
சண்டைக்கு ரோஜாச்சண்டையென்ற பெயர்வந்துவிட்
டது. இந்தப்போர் 1485 இல் தான் முடிந்தது. யார்க்-
ட்யூக் இந்த வெற்றியின் பலனையடையாமல் ஏமார்ந்து
போனான். மறுபடியும் சண்டைக்குக் கிளம்பினான். கடை
சியில் தானே பட்டம்பெறுவதற்குச் சரியான பாத்திய
முள்ளவனென்றும், லங்காஸ்ட்டர் கட்சியார் அக்கிரமமா
கப் பிரவேசித்துவிட்டனரென்றும் வாதுசெய்தான்.
இந்த வாதத்தை எதிர்ப்பதற்கு ஹென்றிக்குப் போது
மான தைரியமில்லை. ஆயினுமவனுடைய மனைவி மார்க
ரெட் தன்னாலியன்றமட்டும் போராடி யார்க்-ட்யூக்கைத்
தோல்வியடையும்படிச் செய்தாள். ஆனால் யார்க்கின்
மகன் எட்வர்ட் ஒரு பயங்கர விரோதியானான். அவன்
லண்டன் நகரஞ்சென்று தன்னை நான்காம் எட்வர்ட் என்ற
பட்டத்துடன் அரசனாகச்செய்துகொண்டான். மேலும்,
1461 இல் யார்க்குக்குச்சமீபத்தில் நடந்த டௌட்டன்
(Towton) சண்டையில் வெற்றியடைந்தான். இச்சண்டை
யால் அவனுக்கு அரசும் நிலைத்துவிட்டது. மார்கரெட்
ப்ரான்ஸ்தேசம் ஓடிவிட்டாள். லண்டன் கோபுரத்தில்
ஹென்றியுஞ் சிறையுண்டான்.

14. எட்வர்டின் பாத்தியம்.— நான்காம் எட்வர்ட் மூன்
றாம் எட்வர்டின் சமீபவார்சு என்ற பாத்தியத்தை முன்
னிட்டு அரசுரிமையை வேண்டினான் என்றாலும், ஆறாம்
ஹென்றியைவிட அறிவிலும், வீரத்திலும் இவன் சிறந்த
வன் என்ற தகைமையே ஆதாரவாய் நின்றது.

15. எட்வர்டுக்கும், வாரிக்குக்கும் சண்டை.—அரசைச்
சம்பாதிப்பதைவிட அதைக் காப்பாற்றுவது அதிகக்கடி
னமென்று நான்காம் ஹென்றியைப்போல்நான்காம் எட்
வர்டுந் தெரிந்துகொண்டான். ஆங்கிலப் பிரபுக்களுக்குள்
மிக்க செல்வாக்கு நிறைந்திருந்த வாரிக்-இயர்ல், ரிச்சர்ட்



நேவில் எட்வர்டுக்குத்தக்க உதவிபுரிந்திருந்தான். அவ
னுக்கிருந்த அதிகாரத்தைக்கொண்டு அவனை அரசனாக்கு
வோன் (King-maker) என்று எல்லோரும் அழைத்தார்கள்.
ஆனால், வாரிக் பிரபுவுக்கும் எட்வர்டுக்கும் சண்டையுண்
டாயிற்று. விரைவில் எட்வர்டின் கை ஓங்கிற்று. 1470
இல் வாரிக் ப்ரான்ஸுக்கு பலவந்தமாய் ஓடும்படியா
யிற்று.

16. ஆறாம் ஹென்றி மறுபடியும் அரசனாதல்.—அஞ்செள
மார்கரெட்டுடன் சிநேகம்செய்துகொண்டு, அவளுடைய
புருஷனை மறுபடியும் அரசனாக்கத் தான் உதவிசெய்வதாக
வாரிக் ஒப்புக்கொண்டான். சிலமாதங்களில் அவன் இங்கி
லண்டுக்குத் திரும்பிவந்தான். இந்தச்சமயம் எட்வர்ட்
ஓடவேண்டியதாயிற்று. லண்டன் கோபுரத்தில் சிறை
யிலிருந்த ஆறாம் ஹென்றியை வாரிக் மீட்டு அவனை
மறுபடியும் அரசனாக்கினான். இவ்விதம் இரண்டாம்
முறை வாரிக்குக்கு 'அரசனாக்குவோன்' என்ற பெயர்
வந்தது. உண்மையில் அரசனென்ற பேர்மாத்திரமில்லா
மல் ராஜ அதிகாரத்தை முற்றிலும் வகித்தவன் வாரிக்கு
தான். ஏனெனில், ஹென்றி பட்டகஷ்டங்களினால் அவ
னுக்கு மறுபடியும் பயித்தியம் பிடித்தது. ப்ரான்ஸிலி
ருந்து மார்கரெட்டும் இன்னமும்வந்து சேரவில்லை.

17. எட்வர்ட் IV. மறுபடியும் அரசனாதல்.— இங்கிலண்
டை ஜயிப்பதைக்காட்டிலும் ஆளுவது கஷ்டமாகத்தான்
இன்னமுமிருந்தது. 1471 இல் தன்னுடைய அரசை
மீட்டுக்கொள்ள நான்காம் எட்வர்ட் மறுபடியும் வந்
தான். பார்னெட் (Barnet) சண்டையில் வாரிக்கை தோற்க
அடித்துக் கொன்றுவிட்டான், கொஞ்சநாளில் அஞ்செள
மார்கரெட்டும் வந்துசேர்ந்தாள். ட்யூக்ஸ்பேரியில் அவளை
எதிர்த்து இன்னமொரு வெற்றியையடைந்து, அவளை
ப்ரான்ஸுக்குத் துரத்தினான். இந்த இரண்டு சண்டை
களின் வெற்றியால் நான்காம் எட்வர்ட் மறுபடியும்
அரசனானான். துர்ப்பாக்கியமுள்ள ஆறாம்ஹென்றி மறு
படியும்சிறையுண்டான். கொஞ்சநாளில் அவனை இரகசிய
மாய்க் கொன்றுவிட்டனர். பிறகு பன்னிரண்டுவருஷம்
வரைக்கும் நான்காம் எட்வர்டின் ஆட்சி கலகமில்லாமல்

நடைபெற்றது. பார்லிமெண்ட் சபை கூட்டாமலே அவன் தன்னுடைய அரசை ஒழுங்காய் நடத்திக் காலங்கழித்தான். அவன் வாலிபப்பருவம் மாறுமுன்னமே 1483 இல் இறந்துவிட்டான்.


18. ஐந்தாம் எட்வர்ட். — நான்காம் எட்வர்டுக்கு வேல்ஸ் இளவரசனான எட்வர்ட் என்றும், யார்க்-ட்யூக் ரிச்சர்ட் என்றும் இரண்டுபிள்ளைகள். இவர்களில் மூத்தவன் ஐந்தாம் எட்வர்ட் என்ற பட்டத்துடன் அரசனானான். அவனுக்கு அரசாளும் பிராயம் வராமையால் அவனுடைய சிற்றப்பனும், நான்காம் எட்வர்டின் தம்பியுமான க்ளஸ்ட்டர் - ட்யூக் ரிச்சர்ட் ரட்சகனாக நியமனம் பெற்றான். இவனோ தந்திரம், கொடுமை, பேராசை முதலிய குணங்களுள்ளவன்; சொற்பகாலத்திற்குள் தன்னையே அரசனாக்கிக்கொண்டான். ஐந்தாம் எட்வர்டையும் அவனுடைய தம்பி யார்க்-ட்யூக் ரிச்சர்டையும் லண்டன் கோபுரத்தில் அடைத்தான். அவர்கள் அநேகமாய்க் கொலையுண்டு இறந்திருக்கவேண்டும்.

19. மூன்றாம் ரிச்சர்ட்.—இவ்விதம் க்ளஸ்ட்டர் மூன்றாம் ரிச்சர்ட் அரசனானான். அவன் தன்னுடைய தீச்செயல்களால் விசேஷ லாபமொன்றும் அடையவில்லை. யார்க் கட்சியைச் சேர்ந்தவர்களாவது, லங்காஸ்ட்டர் கட்சியைச் சேர்ந்தவர்களாவது அவனை ஆதரிக்கவில்லை. இப்பொழுது லங்காஸ்ட்டர் வம்சத்திற்கு வாரசு ரிச்மண்ட்—இயர்லாகிய ஹென்றி ட்யூடர். கெண்ட்—ஜான் வம்சத்திற்பிறந்த மார்கரெட் போபர்ட் சீமாட்டி ஹென்றியின் தாய். அவனுடைய தகப்பன் ட்யூடர் என்ற பெயருள்ள ஒரு வெல்ஷ்கனவான். ரிச்மண்ட் வெகுகாலம் தேசப்பிரஷ்டனாயிருந்தான். 1485 இல் அவன் வேல்ஸில் வந்திறங்கினான். அவன் மூன்றாம் ரிச்சர்டுடன் போர்செய்ய முடியுமான உதவியை அவனுடைய சுதேசத்தாரிடமிருந்து பெற்றான். லிஸ்ட்டர்ஷயரிலுள்ள பாஸ்வர்த் (Bosworth in Leicestershire) என்ற இடத்தில் நடந்த சண்டையில் ரிச்மண்ட் வென்றான். ரிச்சர்ட் அரசையும், உயிரையும் இழந்தான். இவ்விதம் கடைசியில் லங்காஸ்ட்டர் வம்சம் மறுபடியும் அரசுக்குவந்தது. ஹென்றி ட்யூடர்



என்ற வேல்ஸ்தேசவாசி ஏழாம் ஹென்றி என்ற பெயருடன் பட்டத்திற்குவந்தான்.

ட்யூடர் அரசர்களின் வம்சாவளி.




## அதிகாரம் X

## ஏழாம் ஹென்றி, 1485–1509; எட்டாம் ஹென்றி, 1509–1547

முக்கியமானவர்கள்:

யார்க்-எலிஜபெத் (Elizabeth of York); பெர்க்கின் வார்பெக்
(Perkin Warbeck); வேல்ஸ் இளவரசர்கள் ஆர்தரும், ஹென்
றியும் (Arthur and Henry, Princes of Wales); ஸ்பெயின்
அரசன் பெர்டினெண்டு (Ferdinand, King of Spain); ஸ்காட்
லண்டு அரசன் நான்காம் ஜேம்ஸ-ும், அவனுடைய மனைவி
மார்கரெட் ட்யூடரும் (James IV. of Scotland and his wife,
Margaret Tudor); எட்டாம் ஹென்றியின் ஆறு மனைவிமார்
கள்:-ஆரகான் காதரீன் (Catharine of Aragon), ஆன் பொ
லீன் (Anne Boleyn), ஜேன் ஸீமோர் (Jane Seymour),
க்ளீவ்ஸ் ஆன் (Anne of Cleves), காதரீன் ஹோவர்ட் (Ca-
tharine Howard), காதரீன் பார் (Catharine Parr); ஹென்
றியின் மூன்று மக்கள்:-மேரி (Mary), எலிஜபெத் (Elizabeth),

எட்வர்ட் (Edward); கார்டினல் ஊல்ஸி (Cardinal Wolsey); ஸர் டாமஸ் மூர் (Sir Thomas More); டாமஸ் க்ராம்வெல் (Thomas Cromwell); க்ரான்மர், பிரதான மதத்தலைவன் (Archbishop Cranmer); ஸ்காட்லண்டு நான்காம் ஜேம்ஸ்; ஏழாம் போப் க்ளெமெண்ட் (Pope Clement VII.); மார்ட்டின் லூதர் (Martin Luther).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1485. ஏழாம் ஹென்றி பட்டங்கட்டிக்கொண்டது.
1492. அமெரிக்காவைக் கண்டுபிடித்தல்.
1509. ஏழாம் ஹென்றியின் மரணம்
1509. எட்டாம் ஹென்றி பட்டங்கட்டிக்கொண்டது.
1513. ப்ளாடன் பீல்ட் சண்டை (Battle of Flodden Field).
1517. லூதர் மதச்சீர்திருத்தத்தை ஆரம்பித்தல்.
1529. ஊல்ஸியின் தாழ்ச்சி.
1534. இங்கிலண்டில் போப்பின் அதிகாரத்தின் முடிவு.
1535. ஸர் டாமஸ் மூர் கொலையுண்டது.
1540. க்ராம்வெல் கொலையுண்டது.
1547. எட்டாம் ஹென்றியின் மரணம்.

1. யார்க்கும் லங்காஸ்ட்டரும் ஐக்கியமானது.—ஏழாம் ஹென்றி இரக்கமில்லாதவன்; சுயநலத்தையே பாராட்டுபவன். ஆனால், அவனுக்கு முன்யோசனை, ஜாக்கிரதை, செட்டு முதலிய குணங்களுண்டு. நாட்டிலுள்ள எல்லா ஜனங்களும் தன்னை அரசனாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற கருத்துடையவன். நான்காம் எட்வர்டின் மகள் எலிஜபெத்தை மணஞ்செய்துகொண்டான். இந்த விவாகத்தால் லங்காஸ்ட்டர், யார்க் விவாதங்கள் ஒருவிதமாய்க் கடைசியில் ஒழிந்துவிட்டன.

2. பேர்க்கின் வார்பெக்கின் ஆள்மாருட்டம்.— இந்த மணத்திற்குப்பிறகுகூட யார்க் கட்சியார் ஹென்றியிடம் நல்ல எண்ணங்கொள்ளவில்லை. அவனுக்கு விரோதமாக இரகசியமாய்ப் பல கலகங்களைச் செய்தார்கள். ஆனால், அவர்களுக்குத்தக்க தலைவர்களில்லை. ஆகையால், உண்மையில் யாதொரு சம்பந்தமுமில்லாமல் யார்க் வம்சத்தைச் சேர்ந்தவர்களென்று ஆள்மாருட்டம்நடித்தவர்களைத் தலைவர்களாக ஏற்படுத்திக்கொண்டு



கலகஞ்செய்தார்கள். இவர்களில் முக்கியமானவன்
'பெர்க்கின்வார்பெக்' என்ற அன்னியநாட்டானொருவன்.
இவன் நான்காம் எட்வர்டின் இரண்டாவது மகன்
யார்க்-ட்யூக் நான்தான் என்றுசொல்லிக்கொண்டு பாத்
தியுங்கொண்டாடினான். அந்த ரிச்சர்டும் அவனுடைய
அண்ணன் ஐந்தாம் எட்வர்டும் ஏற்கனவே கொலையுண்
டனர் என்று பலபேருடைய அபிப்பிராயம். [illegible]பெக்
வெகு சாமர்த்தியத்துடன் நடித்தபடியால் அநேகர்
அவன் உண்மையில்யார்க்-ட்யூக்குத்தானென்று நம்பினார்
கள். அநேக வருஷங்கள்வரைக்கும் ஹென்றிக்கு அவன்
ஆபத்தை விளைவிக்கும் விரோதியாகவிருந்தான். 1497
இல் அவனைச் சிறைபிடித்து லண்டன் கோபுரத்தில்[illegible]
தனர். கொஞ்சகாலஞ் சென்றபின் அவன் தப்பி[illegible]
தற்கு முயற்சிசெய்தபடியால் கொலையுண்டான். அவ
னுடைய தோல்விதான் ரோஜாச் சண்டையின் முடிவு.
இனிமேல் ஹென்றியின் அரசு பாத்தியத்தை மறுப்பவர்
ஒருவருமில்லை.

3. ஹென்றியின் மக்கள் மணம்.—ஹென்றி தன் பெண்
மக்களை அன்னியநாட்டுமன்னரின்குமாரர்களுக்குமணஞ்
செய்வித்துத் தன்னுடைய பலத்தை அதிகப்படுத்திக்
கொள்ள முயன்றான். அக்காலத்தில் ஐரோப்பிய அரசர்
களுள் ஸ்பெயின்தேச மன்னன் பெர்டினெண்டுதான் மிக
வும் பலத்தவன். தன்னுடைய மூத்தமகன் வேல்ஸ் இள
வரசனான ஆர்தருக்கு இந்தப் பெர்டினெண்டின் மகள் ஆர
கான்-காதரீனை மணஞ்செய்வித்தான். கொஞ்சநாளில்
ஆர்தர் இளவரசன் இறந்தான். அவனுடைய தம்பி
ஹென்றி வேல்ஸ் இளவரசனானான். ஏழாம் ஹென்றி
ஸ்பானியர் சம்பந்தத்தை முக்கியமாக நினைத்துத் தன்
னுடைய இரண்டாவது மகனும் அவளுடைய கணவ
னின் தம்பியுமாகிய புதிய வேல்ஸ் இளவரசனே காத
ரீனை விவாகஞ்செய்துகொள்ளும்படி ஏற்பாடுசெய்தான்.
ஸ்பெயின் தேசத்திலிருந்து காதரீன் கொண்டுவந்த ஏரா
ளமான சீதனத்தை ஹென்றி இவ்விதம் தன் கையை
விட்டுப்போகாமற் செய்துகொண்டதுடன் அவளுடைய
தகப்பன் நட்பையும் இழக்காமற் செய்துகொண்டான்.

ஹென்றி தன்னுடைய மூத்தமகள் மார்கரேட்டை ஸ்காட் அரசன் நான்காம் ஜேம்ஸுக்குக் கல்யாணம் செய்துகொடுத்தான். இந்த விவாகத்தினால் ஆங்கிலேயருக்கும் ஸ்காட் ஜனங்களுக்கும் அதிக நட்பு உண்டாகுமென்று அவன் நினைத்தான். தொடக்கத்தில் இந்த நம்பிக்கைக்குப் பலன் ஏற்படவில்லை. ஆனால் நூறு வருஷங்களுக்குப்பிறகு ஜேம்ஸுக்கும், மார்கரெட்டுக்கும் பிறந்த மகனுடைய பேரன் இங்கிலண்டு, ஸ்காட்லண்டு தேசங்களுக்கு ஒரே அரசனானான்.

4. அரசன் அதிகாரத்தை ஹென்றி பலக்கச்செய்தது.—ஹென்றி பண ஆசைகொண்டவன். அவன் குடிகளைக் கடுமையான வரிகளைச்செலுத்தும்படி கட்டாயப்படுத்தினான். அதனால், அவர்களுக்கு அதிருப்தியுண்டாயிற்று. ஆனால், அவன் தனக்கு இவ்விதம் கிடைத்தபொருளைப் புத்தியுடன் உபயோகித்து அரசு ஒழுங்காய் நடைபெறும்படி செய்தான். இதுவரையில் பிரபுக்கள் தங்களுடைய இஷ்டப்படி செய்துவந்தார்கள். அவர்கள் அடிக்கடி தங்களுள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததே ரோஜாச்சண்டைக்குக் காரணம். நக்ஷத்திர மாளிகை (The Star Chamber) என்று பெயர்கொண்ட ஒரு நியாயசபைக்கு ஹென்றி மிக்க அதிகாரத்தைக்கொடுத்தான். இந்தச்சபை கூடுமிடம் வெகு அழகாய் அலங்கரித்திருந்தபடியால் இந்தப் பெயர் அதற்குவந்தது. பிரபுக்களைச் சட்ட ஒழுங்குக்குக் கட்டுப்படுத்தவே இந்தச்சபை யேற்பட்டது. இவ்வித ஏற்பாடுகளால் ஹென்றி முன்னிருந்த அரசர்களைவிட அதிக பலவானானான்.

5. எட்டாம் ஹென்றியின் குணம்.—1509 இல் ஏழாம் ஹென்றி இறந்தான். பிறகு வேல்ஸ் இளவரசனான எட்டாம் ஹென்றி அரசனானான். ஆங்கிலேயர் எல்லோரும் அவனை உரிமையுள்ள அரசனென்று ஒப்புக்கொண்டார்கள். அதனால், அவன் தன் தகப்பனைவிட அதிக தைரியத்துடன் வேலைசெய்தான். அவன் அழகிய மேனியுள்ளவன். விலையுயர்ந்த ஆடைகளையணிந்து மிகுந்த டம்பத்துடன் ஆனந்தமாய்க் காலங்கழித்தான். அவன் தன்னுடைய உற்சாகச்செயல்களால் ஜனங்களைச் சந்தோஷப்படுத்தி



னான். பிற்காலத்தில் அவன் கொடிய கன்னெஞ்சமுள்ளவனாக மாறிவிட்டான். கடைசியில், ஒரு கொடுங்கோலரசனானான். அவனிடத்தில் எவ்வளவு குற்றமிருப்பினும் அவன் ஒரு உத்தமமான வேலையைச் செய்திருக்கிறான்.

6. கார்டினல் ஊல்ஸி. — மற்ற எதையுங்காட்டிலும் அதிகாரம் செலுத்துவதில் ஹென்றிக்கு மிகுந்த அவாவிருந்தது. நாடாளும் காரியத்தை வெகு ஒழுங்காய்ச் செய்துவந்தான். அவன் உத்தேசங்கொண்ட ஏற்பாடுகளை நிறைவேற்றச் சாமர்த்தியமுள்ளவர்களின் உதவி அவனுக்கு வேண்டியிருந்தது. கடைசியில், டாமஸ் ஊல்ஸி என்ற ஒரு புரோகிதன் அவனுடைய மனத்திற்கு இசைந்த மந்திரியாக அமைந்தான். அவன் அரசனுடைய தயையால் ராஜாங்கத்திலும், கோவிலதிகாரத்திலும் பெரிய பதவியையடைந்தான். அவன் யார்க்-பிரதான மதத்தலைவர் பதவியையும், ரோமன் கோயில் கார்டினல் பட்டத்தையும், இங்கிலண்டில் போப்பினுடைய பிரதிநிதிஸ்தானத்தையும் அடைந்தான். இத்துடன் அவன் லார்டு சான்ஸெலர் (Lord Chancellor) பட்டம் பெற்றுப் பிரதான மந்திரியாகவுமிருந்தான். பிரபுக்களில் மிகவும் உயர்ந்தவர்களைவிட மிக்க ஆடம்பரத்துடன் வாழ்ந்துவந்தான். பாடசாலைகளையும், கல்லூரிகளையும் கட்டுவதில் அதிக பணஞ்செலவிட்டான். பிறநாட்டார் ஆங்கிலேயர் வலிமையை உணரும்படி செய்வதற்குப் பிரயாசைப்பட்டான். அவன் மந்திரியாயிருந்தகாலத்தில் ஹென்றி இரண்டுமுறை ப்ரான்ஸுடன் சண்டைக்குப் போனான். ஆயினும், அதிக கீர்த்தியைச் சம்பாதிக்கவில்லை. தன்னுடைய தங்கை புருஷனான ஸ்காட்லண்டு நான்காம் ஜேம்ஸுடனும் போர்புரிந்தான். 1513-இல் ப்ளாடன் பீல்ட் சண்டையில் ஜேம்ஸ் அடிபட்டு உயிரிழந்தான். இதற்குப் பிறகு நெடுங்காலம்வரையில் ஸ்காட் ஜனங்களால் ஹென்றிக்கு இம்சை ஏற்படவில்லை.

7. காதரீனை விலக்குதல். — தன்னுடைய அண்ணன் மனைவி ஆரகான்-காதரீனை ஹென்றி மணந்துகொண்டானென்று முன்னரே கூறியுள்ளோம். ஆனால் ஆன் போலீன் என்ற ஒரு சீமாட்டியின்மீது காதல்கொண்டு தன் மனை



எட்டாவது ஹென்றி.
(From a Picture belonging to the Earl of Warwick.)

வியை விலக்கிவிட ஆவல்கொண்டான். அண்ணன் மனைவியாகிய அந்தக் கைம்பெண்ணை மணந்தவிஷயத்தில் தன்



மனச்சாட்சி இடங்கொடாமல் வருத்தத்தையுண்டுபண்ணுவதால் இப்படிச் செய்வதுதான் சரியென்று ஒரு பொய்க்காரணத்தைக் கூறினான். இப்படிப்பட்ட விவாகம் மதாசாரச்சட்டத்திற்கு விரோதந்தான் ஆயினும், ஹென்றி காதரீனை மணக்கும் விஷயத்தில் அந்தச் சட்டத்திற்கு விலக்கையுண்டுபண்ணிப் போப் அனுமதியளித்திருந்தார். இப்பொழுது போப்புக்குக்கூட அவ்வித விலக்கையுண்டுபண்ண அதிகாரமில்லையென்று வாதாடினான். ஏழாம் க்ளேமேன்ட் என்ற வேறொரு போப்பிடஞ் சென்று தான் காதரீனை மணந்தது சட்டவிரோதந்தானென்று தீர்ப்பளிக்கும்படி வேண்டினான். போப்பிடம் சிபார்சு செய்வதற்கு ஊல்ஸியின் உதவியை நாடினான். ஆயினும், போப் இடங்கொடுக்கவில்லை.

8 ஊல்ஸியின் தாழ்ச்சி.—ஹென்றிக்கு ஊல்ஸியிடத்திலும், போப்பிடத்திலும் கோபம்பிறந்தது. போப்புக்கு இவனொரு தீங்குமிழைக்க முடியாது. ஊல்ஸியையோ சகல அதிகாரத்திலிருந்தும் விலக்கினான். அடுத்த வருஷம் அவன் ஊல்ஸியை ராஜத்துரோகமென்ற குற்றத்துக்கு உத்தரவாதஞ்செய்ய லண்டனுக்கு வரச்சொன்னான். அதிர்ஷ்டவசமாய் ஊல்ஸி வரும்வழியில் உயிர்துறந்தான்.

9. மதச் சீர்திருத்தம்.—தான் செய்துகொண்ட மணம் சட்டவிரோதமானதுதான் என்ற தீர்மானத்தை வேறு வழியில் சம்பாதித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. கிறிஸ்தவ மதாசாரத்திற்குப் போப்தான் தலைமை அதிகாரம் வகிக்கவேண்டியவரென்று அநேக நூற்றாண்டுகளாக ஐரோப்பாமுழுவதிலும் ஒரு கொள்கையிருந்தது. 1517 இல் மார்ட்டின் லூதர் போப்பின் அதிகாரத்துக்கு விரோதமாய்ப் பிரசங்கம்செய்து மதாசாரத்தில் பலவித மாறுதல்களைச் செய்யத்தொடங்கினான். இதற்குத்தான் மதச்சீர்திருத்தக் கிளர்ச்சி (Reformation) என்று பெயர். இது ஐரோப்பாவில் பலகோவில்களில் கிளம்பிற்று. லூதருக்கும் அவனுடைய சீடர்களுக்குப் மறுப்போர் (Protestants) என்ற பெயர் வந்ததுவிட்டது. ஏனெனில், அவர்கள் போப்பின் சர்வாதிகாரத்தை மறுத்தார்கள். மேலும்,

போப்பின் அதிகாரத்திற்குட்பட்டவர்களுக்கு ரோமன் கத்தோலிக்கர் (Roman Catholics) என்ற பெயரும் வந்தது. ஐரோப்பாவின் வடபாகத்தில் புதிய மதவாதிகள் அதிகரித்துவிட்டார்கள். அந்தக்காலமுதல் ஐரோப்பாவிலும், இங்கிலண்டிலும் புதியமதவாதிகள், பழைய மதவாதிகளென்ற இருகட்சிக்காரர்களுக்குமுள்ள விவாதம் நடந்துகொண்டே வருகிறது.

10. எட்டாம் ஹென்றி இங்கிலண்டில் போப்பினுடைய அதிகாரத்தைத் தொலைத்தது.—இதுவரையில் ஹென்றியும், ஆங்கிலேயரும, லூதருக்கு விரோதமாய்ப் போப் கட்சியையே ஆதரித்தார்கள். ஏழாம் க்ளெமென்ட் காதரீனை விலக்க அனுமதியளிக்கக்கூடாதென்று தீர்மானஞ்செய்தபிறகு, ஹென்றி இங்கிலண்டில் போப்புக்கு ஒருவித அதிகாரமுமில்லையென்று வற்புறுத்தும் சட்டங்களைப் பார்லிமென்டார் ஏற்படுத்தும்படி அவர்களைத் தூண்டினன். பிறகு கான்டெர்பெரி பிரதான மதத்தலைவன் டாமஸ் கிரான்மர் ஹென்றிக்கும் காதரீனுக்கும் நடந்த மணம் சட்டவிரோதமானதுதான் என்று தீர்ப்புச் செய்துவிட்டான். உடனே அரசன் ஆன் பொலீனை விவாகஞ்செய்துகொண்டான். கொஞ்சகாலத்திற்குள் 1534 இல் பார்லிமென்டார் ஹென்றிதான் ஆங்கிலக் கோவிலதிகாரத்தில் எல்லாருக்கும் மேற்பட்ட தலைவன் என்று ஒரு சட்டம் ஏற்படுத்தினர்கள். இதற்குத் தலைமைச்சட்டம் (Act of Supremacy) என்று பெயர்.

11. ஸர் டாமஸ் மூரின் கொலை.—ஆன் பொலீன் தனக்குக் கிரமமான மனைவியென்றும், தானே கோவிலதிகாரத்தலைவனென்றும் ஒப்புக்கொள்ளும்படி ஹென்றி தன் குடிஜனங்களுக்குச் சொன்னன். இதை மறுத்தவர்கள் ராஜத்துரோகமென்ற குற்றத்திற்குள்ளாகிக் கொலையுண்டனர். ஆயினும், சில தைரியமுள்ளவர்கள் ஹென்றியினிச்சைக்கு விரோதமாய்ப் பேசினர்கள். அவர்களில் முக்கியமானவன் வுல்ஸிக்குப் பிறகு தலைமை மந்திரி அதிகாரத்திலிருந்த ஸர் டாமஸ் மூர் என்பவன். அவன் மிகவும் நல்லவன். படிப்பிற் சிறந்தவன். அரசனுடைய தீச்செயல்களில் வெறுப்புண்டானவனுய் உத்தியோகத்



திலிருந்து விலகினன். ஹென்றி அவனை ராஜத்துரோகியென்று குற்றஞ்சாட்டிக் கொலைசெய்யும்படி உத்தரவு செய்தான். 1535 இல் லண்டன் கோபுரத்திற்கு வெளியில் 'டவர் ஹில்' (Tower Hill) என்ற இடத்தில் அவனுடைய தலையைச் சேதித்தனர். அவனுடைய கதியைப் பார்த்து, பயந்த சுபாவமுள்ளவர்கள் இந்தக் கொடிய அரசனுக்கு அடங்கிவிட்டார்கள்.

12. மடங்களை அழித்தல்.—ஹென்றி பழைய மதமுறை இன்னமும் தாழ்வடையும்படியான காரியமொன்று செய்தான். அகஸ்டின் காலமுதல் அநேக தெய்வபக்தியுள்ள ஆங்கிலச் சீமான்களும் சீமாட்டிகளும் மதத்திற்காக உலகப்பற்றைவிட்டுத் துறவறம் பூண்டார்கள். அவர்களுக்குத்தான் சந்நியாசிகளென்றும், சந்நியாசினிகள் என்றும் பெயர். அவர்கள் வசித்துக்கொண்டிருந்தவிடங்களுக்கு மடம் என்றும், கன்டாமடம் என்றும் பெயர். இவ்விதம் துறவுபூண்டவர்களுக்குக் கலியாணங்கிடையாது. அவர்களுக்குச் சொந்தமென்று சொல்லக்கூடிய சொத்தில்லை. அவர்கள் மடாதிபதிகளின் உத்தரவிற்கும், அக்கூட்டத்தாருக்கென விதித்துள்ள சட்டத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். மிகவும் சாமானியமான ஆகாரத்தை உண்டு அவர்கள் ஜபத்திலும், தியானத்திலுமே காலத்தைக் கழித்துவந்தார்கள். அவர்களில் அநேகர் மிகவும் உயர்ந்த வேலைகளைச் செய்திருக்கிறார்களென்று ஆங்கிலதேச சரித்திரக்கதையில் கூறியுள்ளது. ஆனால், இப்பொழுது இச்சந்நியாசிகளின் பெருமைக்காலமெல்லாம் சென்றுவிட்டது. அநேக மடங்களுக்குப் பொருள் அதிகமாகச் சேர்ந்துவிட்டது. அவைகளில் வசித்த சந்நியாசிகள் சோம்பேறிகளாகவும், செலவாளிகளாகவும் போய்விட்டார்கள். இந்த மடங்களை அழித்து அவைகளின் நிலத்தையும் பொருளையும் கட்டிக்கொண்டால் தான் எளிதில் திரவியவந்தனுகிவிடலாமென்று ஹென்றி நினைத்தான். இந்த விஷயத்தில் தனக்கு உதவிசெய்ய, டாமஸ் வுல்ஸியின் பழைய வேலைக்காரனுன டாமஸ் க்ராம்வெல் என்பவனை அமைத்தான். க்ராம்வெல் கெட்டிக்காரன். சுயநலத்தைத் தேடுபவன். எதையும்

துணிந்து செய்யக்கூடியவன். 1536 இல் சிறிய மடங்களை முதலில் அழிக்கத்தொடங்கினான். 1539 க்குள் அவைகள் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டான். அந்தச் சந்நியாசிகளின் சொத்தில் கொஞ்சபாகம் கோவிலுக்கும் பெரும்பாகம் அரசனுக்குஞ் சேர்ந்துவிட்டன. அந்தத் திரவியத்தின் சிலபாகத்தை அரசன் கப்பல்கள் கட்டுவதிலும், தேசத்தைக்காக்கும் விஷயத்திலும் செலவிட்டான். மிகுந்த எல்லாவற்றையும் தன்னுடைய நண்பர்களுக்குப் பாகித்துக்கொடுத்து முன்போல் ஏழையானான்.

13. **ஆங்கில வேதபுத்தகம் (The Bible).**—மதவிஷயத்தில் வேறுசில மாறுதல்களைச் செய்யும்படி க்ராம்வெல் அரசனைத் தூண்டினான். அரசனும் லூதரைப்போல் மறுப்போர் கட்சியில் சேர்ந்தவனாகிவிடுவான்போலிருந்தான். விக்லிபைப்போல் புதியவாதிகள் வேதபுத்தகத்தை ஆங்கிலபாஷையில் மொழிபெயர்த்தார்கள். இந்த ஆங்கில வேதபுத்தகத்தின் ஒவ்வொரு பிரதி ஒவ்வொரு கிராமக் கோவிலிலும் வாங்கிவைக்கவேண்டுமென்றும், அங்கே அதை எவரும் வாசிக்கக்கூடிய நிலைமையில் அதைத் திறந்துவைக்கவேண்டுமென்றும் அரசன் கட்டளையிட்டான்.

14. **ச்ளீவ்ஸ்–ஆனும் க்ராம்வெலின் தாழ்ச்சியும்.**—உவல்ஸியைப்போல் க்ராம்வெலும் அரசன் தயையை நெடுங்காலம் அனுபவிக்கவில்லை. கோவில் முறையில் செய்த மாறுதல்களில் அரசனுக்கு அலுப்பு உண்டாகிவிட்டது. க்ராம்வெல் புதியவாதிகளை அதிகமாய் ஆதரிக்கிறான் என்று அவன்மீதில் அரசன் குற்றஞ்சாட்டினான். ஆரகான்–காதரீனை அரசன் விலக்கியபின்னர் பல மனைவிகளை மணந்துகொண்டான். ஆன் பொலீனிடத்தில் வெறுப்பு உண்டாகி அவளுடைய தலையைச் சேதித்துவிட்டான். அவனுடைய மூன்றாம் மனைவி ஜேன்–ஸீமோர். இந்தச் சீமாட்டிதான் ஹென்றியின் ஒரே குமாரனான ஆறாம் எட்வர்டின் தாய். அவள் குழந்தை பிறந்தவுடன் இறந்துவிட்டாள். ஜெர்மனி தேசத்துப் புதியமதவாதிகளின் நட்பையடையலாமென்ற நம்பிக்கையுடன் க்ளீவ்ஸ்–



ஆன் (Anne of Cleves) என்ற ஒரு ஜெர்மன் ராஜகுமாரியை மணஞ்செய்துகொள்ளும்படி க்ராம்வெல் ஹென்றியைத் தூண்டினான். ஆன் விகாரரூபமும் மூடபுத்தியுமுள்ளவளென்று கண்டுகொண்டு ஹென்றி அவளை உடனே விலக்கிவிட்டான். அவனுடைய கோபம் க்ராம்வெல் தலையைப்பற்றியது. 1540 இல் அவனுடைய தலையை வெட்டும்படி செய்தான்.

15. **எட்டாம் ஹென்றியின் ஆட்சி முடிவு.**—ஆன் பொலீனுக்கு நெருங்கிய சுற்றத்தாளாகிய **காதரீன்-ஹோவர்ட்** என்பவளை ஐந்தாவது மனைவியாய் ஹென்றி மணந்தான். கொஞ்சநாளில், ஆனைப்போல் அவளும் தலையையிழந்தாள். **காதரீன்-பார்** என்ற ஒரு வாலிபக் கைம்பெண்ணை ஹென்றி ஆறாம் மனைவியாய் விவாகஞ்செய்துகொண்டான். மற்றவர்களைவிட அதிர்ஷ்டத்தாலோ, புத்திநுட்பத்தாலோ இவள் புருஷனுக்குப் பிறகு உயிருள்ளவளாய்த் தப்பினாள். ஹென்றிக்கு வயது முதிரமுதிர மூர்க்ககுணமும் அதிகரித்துவிட்டது. புதியமதவாதிகளுக்கும், பழைய ரோமன்கத்தோலிக் வாதிகளுக்கும் நடுநிலைமையுள்ள முறையைத் தான் கண்டுவிட்டதாக நம்பி, ஒவ்வொருவனும் தன்னுடைய கொள்கைகளையே நம்பவேண்டுமென்று வற்புறுத்தினான். பொய்க்கோட்பாடுகளை ஆதரிக்கும் **மதத்துரோகிகள்** என்று புதியமதவாதிகளைச் சுட்டெரித்தான். பழையமதவாதிகளை ராஜத்துரோகிகள் என்று கொலைசெய்தான். அவன் எவ்வளவு இரக்கமற்றவனாயினும் இங்கிலண்டின் ஆட்சிமுறையில் சமாதானமும் ஒழுங்குமிருக்கும்படியாய் அரசுபுரிந்தான்.

16. **ஹென்றியின் மக்கள்.**—ஹென்றிக்கு மூன்று மக்கள். மூத்த இருவரும் பெண்மக்கள். காதரீனுடைய மகள் மேரி. ஆன் பொலீனின் மகள் எலிஜபெத். மூன்றாவது, வேல்ஸ் இளவரசனான எட்வர்ட். இவன் ஜேன் ஸீமோரின் மகன். தகப்பன் மரித்தபிறகு இவ்விளவரசன் பட்டத்திற்குவந்தான்.

## அதிகாரம் XI

# ஆரும் எட்வர்ட், 1547–1553; மேரி, 1553–1558; எலிஜபேத், 1558–1603

முக்கியமானவர்கள்:

ஸாமர்ஸெட், தேசரட்சகன் (Protector Somerset); நார்த்தம்பர்லண்டு-ட்யூக் (The Duke of Northumberland); ஜேன்-க்ரே சீமாட்டி (Lady Jane Grey); கில்ட்போர்ட் டட்லி பிரபு (Lord Guildford Dudley); ஸ்பெயின் அரசன், இரண்டாம் பிலிப் (Philip II. King of Spain); க்ரான்மர், பிரதான மதத்தலைவன் (Archbishop Cranmer); ஸ்காட் அரசி மேரி ஸ்டேவர்ட், (Mary Stewart, Queen of Scots); டார்ன்லி பிரபு (Lord Darnley); ஸ்பெயினரசன் இரண்டாம் பிலிப் (Philip II. of Spain); ஸ்காட் அரசன், ஆரும் ஜேம்ஸ் (James VI. King of Scots); க்ரிஸ்தோபர் கொலம்பஸ் (Christopher Columbus); எப்பிங்ஹாம்-ஹோவர்ட் பிரபு (Lord Howard of Effingham); ஸர் ப்ரான்ஸிஸ் ட்ரேக் (Sir Francis Drake); வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Shakespeare).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1547. ஆரும் எட்வர்ட் அரசனாதல்.
1549. ஆங்கில ஜபபுத்தகம் வரைதல் (English Prayer-book drawn up).
1549. நார்த்தம்பர்லண்டு ஸாமர்ஸெட்டை அதிகாரத்திலிருந்து விலக்குதல்.
1553. மேரி பட்டங்கட்டிக்கொண்டது.
1558. மேரியின் மரணம்.
1558. எலிஜபெத் பட்டங்கட்டிக்கொண்டது.
1568. மேரி ஸ்டேவர்ட் இங்கிலண்டுக்குத் தப்பிஓடுதல்.
1577–1580. ட்ரேக் உலகத்தைச் சுற்றிவருதல்.
1587. ஸ்காட் அரசி மேரியின் கொலை.
1588. ஆர்மேடா தோல்வியடைந்தது.
1600. கிழக்கு இந்தியக் கம்பெனி ஸ்தாபனம் (East India Company founded).
1603. எலிஜபெத்தின் மரணம்.



1. ஸாமர் ஸெட்டும், ஆங்கில ஜபபுத்தகமும். — ஆரும்
எட்வர்ட் பத்துவயதுப் பாலன். தானே அரசுசெலுத்த
அவனுக்குத் திறமையில்லை. ஆகையால், அவனுடைய
மாமன் ஸாமர்ஸெட்-ட்யூக் எட்வர்ட் ஸீமோர் ரட்சகனாக
நியமனம் பெற்றான். அவன் மருமகன் ஸ்தானத்தில்
அரசுசெய்யவேண்டியவன். ஸாமர்ஸெட் புதிய மதச்
சார்புள்ளவன். கோவில்முறையில் இன்னமும் அதிக
மாறுதல்களைச் செய்தான். ஜனங்கள் தெரிந்துகொள்
ளக்கூடிய ஆங்கிலபாஷையில் ஜபங்களை உச்சரிக்க
வேண்டுமென்று நினைத்து, சம்பிரதாய புத்தகங்களை ஆங்
கிலத்தில் பிரதான மதத்தலைவரான க்ரான்மரைக்
கொண்டு மொழிபெயர்க்கச்செய்து, மதவிஷயத்தில் புதிய
அபிப்பிராயங்களுக்கு ஒத்தபடியும் அவைகளை மாற்றி
னான். 1549 இல் பொதுஜன ஜபபுத்தகம் (Book of Common
Prayer) என்று பெயர்கொண்ட புதிய ஆங்கில சம்பிரதா
யப் புத்தகத்தையே ஒவ்வொரு கோவிலிலும் உபயோ
கிக்கவேண்டுமென்று பார்லிமெண்டார் ஒரு சட்டத்தை
ஏற்படுத்தினார்கள்.

2. நார்த்தம்பர்லண்டு-ட்யூக் ஸாமர்ஸெட்டை அதிகாரத்தி
னின்று நீக்கியது.—மந்திரிகளிலநேகர் சுயநலம் பாராட்டு
பவர். அவர்கள் நாட்டைக் கேவலமாக ஆண்டார்கள்.
ஸாமர்ஸெட்டுக்காவது, க்ரான்மருக்காவது அவர்களை
அடக்கச் சக்தியில்லை. கடைசியாக 1549 இல் ஜனங்கள்
கலகஞ்செய்தார்கள். அதை அடக்குவதற்கு ஸாமர்
ஸெட்டுக்குப் பலமில்லை. ஆகையால், அவன் அதிகா
ரத்தை இழக்கநேர்ந்தது: அவனுடைய ஸ்தானத்தில்
நார்த்தம்பர்லண்டு-ட்யூக் ஜான்-டட்லி இங்கிலண்டை
ஆளும் அதிகாரத்தையடைந்தான். அவன் ஸாமர்
ஸெட்டைவிட அழுத்த நெஞ்சும், தைரியமுமுள்ளவன்.
ஆயினும், பேராசையால் எந்தக் கெட்டகாரியத்தை
யும் துணிந்துசெய்வான். புதியமதத்தில் அதிக பக்க
முள்ளவன்போல் பாசாங்குசெய்து மதத்தில் இன்ன
மும் பலமாறுதல்களைச் செய்தான். கொஞ்சநாளில்
ஸாமர்ஸெட்டைக் கொலைசெய்துவிட்டான்.

3. ஆரும் எட்வர்டின் மரணமும், ஜேன்-க்ரே சீமாட்
டியை அரசியாக்க முயற்சிசெய்ததும். — ஆரும் எட்வர்ட்
ஆழ்ந்தபுத்தியும் யோசனையுமுள்ள பையன். புதியமதத்
தைச் சேர்ந்தவன். ஆயினும், தேகசௌக்கியமில்லாத
வன். வெகுகாலம் தான் ஜீவித்திருக்க முடியாதென்றும்
அவனுக்கு நன்றாய்த்தெரியும். புதியமதத்திற்கு விரோதி
யான தன்னுடைய மூத்த தமக்கை மேரி இங்கிலண்டுச்கு
அரசியாய் விடுவாளென்று நினைக்க அவனுடைய மனம்
நொந்தது. எட்வர்ட் 1553 இல் இறந்தான். நார்த்
தம்பர்லண்டு-ட்யூக், ஜேன்-க்ரே சீமாட்டியை அரசி
யாக்க முயன்றான். அவள் ஆரும் எட்வர்டுக்கு அத்தை
மகள். அவனுக்கு மருமகள். புதியமதத்தினர்கள் எல்
லோரும் அவளை ஆதரிக்கவில்லை. அந்த ஜேன்-க்ரே பக்
தியும் சீலமுமுள்ள பெண். அவளுக்கு நேரிட்ட கதி
விசனிக்கத்தக்கதே. அவள் பத்துநாட்களே அரசு
செலுத்தினாள்.

4. மேரி ட்யூடர் அரசியானது. — எட்வர்டின் மூத்த
தமக்கை மேரி பிறகு அரசியானாள். அக்காலத்துக்
கொடியவழக்கப்படி நார்த்தம்பர்லண்டையும், ஜேன்
க்ரேயையும், அவளுடைய புருஷனையும் அவள் கொலை
செய்வித்தனள். மேரி புதியமத போதகர்களிற் சிலரைத்
துரத்தினாள்; சிலரைச் சிறையிலடைத்தாள். கொஞ்ச
நாளில் பொதுஜபபுத்தகத்தைத் தொலைத்துவிட்டு,
பழைய லத்தீன் சம்பிரதாயங்களைத் திருப்பிக்கொண்டு
வந்தாள். இதிலும் திருப்தியடையாமல் போப்பின்
அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி பார்லிமென்டா
ரைச் சம்மதிக்கச்செய்தாள். மடங்கள் விஷயத்தைத்
தவிர மற்றெல்லாவிஷயங்களிலும் பழையமதக் கோட்
பாட்டையே அநுசரித்தாள். மடத்து நிலங்கள் பிரபுக்
களைச் சேர்ந்திருந்தன. அவைகளை விட்டுவிடும்படி
பிரபுக்களைப் பலவந்தப்படுத்த மேரிக்குத் தைரிய
மில்லை.

5. ஸ்பானிய விவாக சம்பந்தம்.— மதவிஷயங்களில்
மாத்திரந்தான் மேரி பழைய வழிகளில் திரும்பினாள்
என்பதில்லை. தன்னுடைய தாயின் சுதேசமாகிய ஸ்பெயி



னுடன் சிநேகஞ்செய்துகொண்டாள். அந்தக்காலத்தில்
ஐரோப்பாவில் மிகுந்த பலமுள்ளவனும், போப்பின்
அதிகாரத்தை ஆதரித்தவனும், சுற்றத்தானுமான ஸ்பெ
யின் அரசன் இரண்டாம் பிலிப்பை மணந்துகொண்டாள்.
தன் கணவனை திருப்திசெய்வதற்காக ப்ரெஞ்சுக்காரர்க
ளுடன் போருக்குச்சென்றாள். மூன்றும் எட்வர்ட்கால
முதல் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்த கலே கோட்
டையை இந்த யுத்தத்தில் ப்ரெஞ்சுக்காரர்கள் பிடுங்கிக்
கொண்டார்கள். கலேயை இழந்த விஷயத்தில் மேரிக்கு
அடங்காத் துக்கமுண்டாகிவிட்டது. "நானிறந்தபிறகு
கலே என்ற பெயர் என்னுடைய இருதயத்தில் எழுதியி
ருப்பதை நீங்கள் காண்பீர்கள்" என்று சொல்லுவாள்.

6. புதிய மதத்திற்காக பிராணனையிழந்தவர்கள் — தற்கா
லத்தில் இங்கிலண்டில் மதவிஷயத்தில் ஒவ்வொருவனும்
தன்னிஷ்டப்படி நம்பலாம்; தனக்குத் தோன்றியபடி
தெய்வத்தை வணங்கலாம். அக்காலத்திலோ அப்படி
யல்ல. புதிய மதத்தை அழித்துவிடுவதினால் தான்
தெய்வகாரியத்தைச் செய்வதாக வெகு ஊக்கத்துடன்
மேரி நம்பினாள். அவளுடைய ஆட்சிகாலத்தில் புதிய
மதத்தினர் முந்நூறுபேரைச் சுட்டெரித்தனள். அவர்க
ளில் பிரதானமதத்தலைவன் க்ரான்மரும் ஒருவன். புதிய
மதத்தில் தமக்கு இருக்கும் விசுவாசத்தை வெளியிட்டு
க்ரான்மர் பிராணனைவிட்டான். மேரி புதிய மதத்தி
னரை அதிகமாய்க் கொல்லக்கொல்ல ஆங்கிலேயர்கள்
அவர்களுடைய உறுதியைக்கண்டு மேலுக்குமேல் வியப்
பையடைந்தார்கள். உண்மைக்குச் சாட்சியாக இவர்
கள் பிராணனை விட்டபடியால் இவர்களை ஜனங்கள்
பிராணத்தியாகிகள் (Martyrs) என்று சொல்லிக் கொண்
டாடினார்கள்.

7. மேரியின் கடைசிக்காலம்.— தான் என்னசெய்தா
லும் தன் மரணத்திற்குப் பிறகு தன்னுடைய தங்கையா
கிய எலிஜபெத், தான்செய்த எல்லாவற்றையும் அழித்து
விடுவாள் என்ற எண்ணத்தால் கடைசிக்காலத்தில் மேரி
வெகு துக்கமடைந்தாள். புதிய மதத்தினர் விஷயத்தில்
மிகக் கொடியவளாயிருந்தாலும் அவள் நல்ல எண்ண

மும், யோக்கியமுமுள்ளவள் தான். அவள்மீது குற்றஞ் சாட்டுவதைவிடப் பரிதாபத்தைக்காட்டுவதே நலம்.



எலிஜபெத் ராணி.

8. எலிஜபெத்தும், அவளுடைய மந்திரிகளும், நண்பர்களும்.—இப்போது புதிதாகப் பட்டத்திற்குவந்த எலிஜபெத் மகாராணி அழகிய ரூபமுள்ளவள். நன்றாய்ப்



படித்தவள். வேலையிலும் தகுந்த உழைப்பாளி. அநேக விஷயங்களில் எட்டாம் ஹென்றியைப் போலவே இவளுமிருந்தாள். ஆனால், அவனைப்போல் அவ்வளவு கன்னெஞ்சமுள்ளவளல்லள். ஜனங்கள் கண்டு சந்தோஷிக்கக்கூடிய குணங்கள் ஹென்றியிடம் எவை இருந்தனவோ அவைகளெல்லா மிவளிடத்திலுமிருந்தன. சுயநலத்தையே கருதினவளும், வீண்டம்பத்திலும், மற்றவர்கள் தன்னைப் புகழ்வதிலும் ஆசையுள்ளவளுமாயிருந்தாள். பல விஷயங்களில் அற்பபுத்தியுள்ளவளாயினும் விளையாட்டிலும், உடைவாங்குவதிலும், தன்னுடைய நண்பர்களுக்கு வெகுமதி கொடுப்பதிலும் தன் திரவியத்தை ஏராளமாய் வீண்செலவுசெய்தாள். ஆயினும், அவள் பெரிய விஷயங்களில் புத்திநுட்பத்தைக்காட்டித் தன் மந்திரிகள் சொற்படி நடந்துவந்தாள். உலகத்தில் மற்றெல்லாவற்றிலும் விட தானே அதிகாரஞ்செலுத்துவதிலும், அரசுபுரிவதிலும் அவளுக்கு அதிகமான ஆசையுண்டு. ஆகவே, அவள் ஒருவனை மணந்துகொண்டால் தன் அதிகாரத்திலவனுக்குப் பாகம்கொடுக்கவேண்டியதாகவரும் என்று நினைத்து ஒருவனையும் மணப்பதில்லையென்று தீர்மானித்தாள்.

9. கோவில்முறைகளை முடிவாகச் சீர்திருத்தியது.—இனிக் கோவிலில் நடக்கவேண்டிய முறையைத் தீர்மானிக்க வேண்டியது எலிஜபெத்துக்கு முதல்வேலையாயிற்று. இங்கிலண்டில் போப்புக்குண்டான அதிகாரத்தை இன்னொருமுறை தொலைத்து லத்தீன் சம்பிரதாயங்களையெல்லாம் விலக்கினாள். ஆறாம் எட்வர்டின் ஆங்கில ஜபபுத்தகத்தை மறுபடியும் கொண்டுவந்து மேரிகாலத்தின் மதக்கோட்பாடுகளுக்கு உறுதியாயிருந்த மதத்தலைவர்கள் எல்லோரையும் அவர்களுடைய உத்தியோகங்களிலிருந்து அவள் நீக்கினாள். ஆயினும், அதிக மாறுதல்களுக்கு இடங்கொடாமல் தன் தகப்பனைப்போல அதிக ஜாக்கிரதையாயிருந்தாள்.

10. எலிஜபெத்தும், சுத்தமதவாதிகளும் (Puritans), ரோமன் கத்தோலிக் மதத்தினரும்.—கொஞ்சகாலில், மூன்[illegible] வும் மாறுதல்களைச் செய்யவிரும்பிய புதிய மதத்தினர் தங்களுக்கு அரசி வேண்டியமட்டும் செய்யவில்லையென்று

முறையிட்டார்கள். இவ்விதம் அடியோடு மாறுதல்களைச் செய்ய விரும்பினவர்களுக்குச் சுத்தமதவாதிகள் என்று பெயர். மதவிஷயத்தில் சுத்தமான மாறுதல்களைச்செய்ய விரும்பினதால் இவர்களுக்கு இப்பெயர் வந்தது. இவர்கள் எலிஜபெத்துக்கு அதிக கஷ்டமுண்டாக்கினபோதிலும், ரோமன் கத்தோலிக் கட்சியை எதிர்ப்பதில் இவர்கள் அவளுடன் ஒத்திருந்தார்கள். சுத்தமதவாதிகளிலநேகரை எலிஜபெத் சிறையிலடைத்தாள். ரோமன் கத்தோலிக் மதத்தினர் விஷயத்தில் இவள் இன்னும் வெகு கொடுமையாயிருந்தாள். சில வருஷங்களுக்குப்பிறகு பழைய கோட்பாடுகளை ஜனங்கள் ஆதரிப்பதற்காக இங்கிலண்டுக்கு அநேக ரோமன் கத்தோலிக் போதகர்களைப் பிரசங்கஞ்செய்யும்படி போப் அனுப்பினார். இதுமாத்திரமல்ல; இங்கிலண்டில் அரசியாயிருப்பதற்கு எலிஜபெத்துக்கு யாதொரு பாத்தியமுமில்லையென்றும் வெளியிட்டார். இதனால் ஒரு உண்மையான ரோமன் கத்தோலிக் எலிஜபெத்தினிடத்தில் ராஜவிசுவாசமுள்ளவனாயிருக்கமுடியாது. எட்டாம் ஹென்றி ரோமன் கத்தோலிக் ஜனங்களை ராஜத்துரோகிகள் என்று சொல்லி கொலைசெய்தவழியில் தானும் செல்லுவதற்கு எலிஜபெத்துக்கு இடமுண்டாயிற்று. புதிய மதத்தினரில் எவ்வளவுபேர்களை மேரி சுட்டெரித்தாளோ அவ்வளவு கத்தோலிக் ஜனங்களை எலிஜபெத்தும் கொலைசெய்வித்தாள்.

11. மேரி ஸ்டேவர்ட்டும், ஸகாட்லண்டில் மதச்சீர்திருத்தமும்.--வெளிநாடுகளில் எலிஜபெத்துக்குத் துன்பங்கள் ஏற்பட்டன. ப்ரான்ஸ், ஸ்பெயின் இரண்டு தேசத்தாருக்கும் அவள் பயந்தாள். ப்ரான்ஸ்மன்னன் அவளுக்கு முதல் விரோதி. மார்கரெட் ட்யூடர், நான்காம் ஜேம்ஸ் இவர்களின் பேர்த்தியாகிய ஸ்காட் அரசி மேரியை அவன் மணந்துகொண்டான். மேரி குழந்தைப்பருவமுதல் ஸ்காட்லண்டு அரசிதான். அவள் அழகும் சாமர்த்தியமுமுள்ளவள். ஆனால், பேராசைபிடித்தவள். மனம்போனபடியெல்லாம் செய்யக்கூடியவள். அவள் ப்ரான்ஸ் தேச ராணியாயிருந்தவரையில் எலிஜபெத்துக்கு ஆபத்



துத்தான். கொஞ்சநாளில் மேரியின் புருஷன் இறந்து
விட்டான். அவளும் ஸ்காட்லண்டுக்குத் திரும்பிவந்து
விட்டாள். அவளொரு ரோமன் கத்தோலிக். ஸ்காட்லண்
டர் சமீபகாலத்தில்தான் புதிய மதத்தில் சேர்ந்து
கொண்டார்கள். அவர்கள் எலிஜபெத்தைப்போல் சாமா
னியமாய்ப் புதிய மதத்தைக் கைக்கொண்டவர்களல்லர்.
பலமான சுத்தமதவாதிகள். ஸ்காட்லண்டு புதிய மதக்
கோவில்முறைக்கு ப்ரேஸ்பிட்டீரியன் (Presbyterian) என்று
பெயர். அதாவது, அதற்கு 'பிஷப் என்ற மதத்தலைவர்
கள் இல்லை; 'ப்ரெஸ்பிட்டர்' என்ற பெயருள்ள சம
அதிகாரம்பெற்ற போதகர்களின் சின்னஞ்சிறிய கூட்
டத்தார் அதை நிர்வகித்து வந்தனர். ஆனதுபற்றி,
ப்ரெஸ்பிட்டீரியன் கட்சியாருக்கும் மேரிக்கும் ஒற்று
மை ஏற்படவில்லை.

12. ஸ்சாட்லண்டில் மேரி ஸ்டேவர்ட் செய்தது.—மேரிக்
குச் சுதேசத்திலேயே துன்பமுண்டாகிவிட்டது. புத்தியீ
னமும், பொறுமையுமுள்ள டார்ன்லி பிரபு (Lord Darnley)
என்று பெயர்கொண்ட ஒரு சுற்றத்தானை இரண்டாவது
கணவனாக மேரி மணஞ்செய்துகொண்டாள். கொஞ்ச
நாளில் அவனிடத்தில் மேரிக்கு வெறுப்பு உண்டாகிவிட்
டது. திடீரென்று டார்ன்லி கொலையுண்டான். கொலை
செய்தவர்களைத் தூண்டியது மேரிதான் என்று எல்லோ
ரும் நினைத்தார்கள். இதனால் ஸ்காட்லண்டர் கலகம்
செய்து மேரியை ஒரு தனிமையான கோட்டையில்
அடைத்தார்கள். அவளுடைய கைக்குழந்தையாகிய
ஆறும் ஜேம்ஸை அவளுடைய ஸ்தானத்தில நியமித்தார்
கள். அவள் கொஞ்சநாளில் வெளியே தப்பியோடித்
தன்னுடைய அரசை மீட்டுக்கொள்ள முயன்றாள். ஆயி
னும், அவள் சண்டையில் தோல்வியடைந்து இங்கிலண்
டுக்குத் தப்பி ஓடினாள்.

13. இங்கிலண்டில் மேரியின் கதி.—மேரி, எலிஜபெத்
தின் உதவியை வேண்டினாள். உதவியைச் செய்யாமல் எலி
ஜபெத் அவளைச் சிறையிலடைத்தாள். ப்ரான்ஸ், ஸ்காட்
லண்டு தேசங்களில் மேரி ராணியாயிருந்ததைவிட இப்
பொழுதுதான் அவள் எலிஜபெத்துக்கு அதிக ஆபத்தை

விளைவிக்கக்கூடிய சத்துருவானாள். ஏனென்றால், இங்கில
ண்டுதேச சிங்காதனத்தில் அவளை ஏற்றவேண்டிக் கத்தோ
லிக் ஜனங்கள் கலகஞ்செய்யத் தொடங்கினார்கள். இந்தக்
கலகத்தை எலிஜபெத் அடக்கிய பிறகுங்கூட அவர்கள்



ஸ்காட் – ராணி மேரி.

மேரியின் சார்பில் பல சதியாலோசனைகளைச் செய்தார்
கள். மேரி உயிருடனிருக்கும் வரையில் எலிஜபெத்துக்கு
ஆபத்துத்தான் என்று அவளுடைய மந்திரிகளின் அபிப்
பிராயம். கடைசியில், எலிஜபெத்தைக் கொல்வதற்குச்



செய்த ஓர் முயற்சியில் மேரியும் சம்பந்தப்பட்டவ
ளென்று அவள்மீது குற்றஞ்சாட்டி அவர்கள் அவளை
விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். 1587 இல் அவளைக்
கொலை தண்டனைக்குள்ளாக்கி அவளுடைய தலையைச்
சேதித்தார்கள்.

14. இங்கிலண்டுக்கும், ஸ்காட்லண்டுக்கும் சிநேகமதி
கரித்தல்.—மேரியின் மரணத்துடன் எலிஜபெத்துக்கு
வந்த பலமான ஆபத்துக்கள் தொலைந்தன. மேரியின்
மகன் ஸ்காட்லண்டு மன்னனான ஆறும் ஜேம்ஸ் புதிய மதத்
தைச் சேர்ந்தவன். எலிஜபெத்துக்கு ஒரு நண்பன்.
ப்ரான்ஸ் தேசம் இன்னமும் கத்தோலிக் நாடாகவிருந்த
படியால் அத்தேசத்திற்கும் இப்பொழுது புதிய மதத்
தைச் சேர்ந்த ஸ்காட்லண்டு தேசத்திற்கும் முன்னிருந்த
சிநேகம் இப்பொழுது போய்விட்டது. மற்ற எவரையும்
விட ஸ்காட்லண்டினருக்குக் கத்தோலிக் ஜனங்களிடத்தி
லதிக வெறுப்பு. முதல் எட்வர்ட் காலத்திற்குப் பிறகு
முதல்முதல் இப்பொழுதுதான் இங்கிலண்டுக்கும்
ஸ்காட்லண்டுக்கும் சிநேகமுண்டாயிற்று. எலிஜபெத்தின்
மரணத்திற்குப் பிறகு ஆங்கிலதேச ஆட்சிக்கு அடுத்த
வார்சு ஆறும் ஜேம்ஸ்தான். ஆகையால், இந்தச் சிநேகம்
மிகவும் முக்கியமானவிஷயம். எலிஜபெத்தைக் கொல்லு
வதிற் பிரயோஜனமில்லை. ஏனெனில், அடுத்தவார்சான
ஸ்காட்லண்டு தேசவாசனும் புதிய மதத்தைச் சேர்ந்த
வனே.

15. எலிஜபெத்தும், ஸ்பெயின்–பிலிப்பும்.—தன்னுடைய
ஆட்சிதொடங்கிய காலத்தில் எலிஜபெத், தன் தமக்கை
யின் புருஷனும் ஸ்பெயினரசனுமான இரண்டாம் பிலிப்பு
டன் சிநேகமாகவே இருந்தாள். பிலிப்புக்கு எலிஜபெத்
தின் மதத்தில் வெறுப்பு. என்றாலும், ப்ரெஞ்சுக்காரர்க
ளுக்கு விரோதமாய் அவளுடைய உதவி அவனுக்கு
வேண்டியிருந்தது. மதசம்பந்தமாக இங்கிலண்டுக்கும்
ஸ்பெயினுக்கும் சீக்கிரத்தில் சண்டையுண்டாயிற்று. நெ
தர்லண்ட் (Netherlands) என்றொரு தேசமுண்டு. அது
பிலிப்பின் ஆட்சிக்குள்ளடங்கியது. அந்த தேசத்தில்
முக்கியமாய் ஹாலண்டு என்று பெயர்கொண்ட அதன்

வடபாகத்தில் அநேக புதிய மதத்தினர் இருந்தார்கள்.
இவர்களை, பிலிப் கொடுமையாய்த் துன்பப்படுத்தினான்.
கடைசியில் அத்தேசத்தவர்களான டச்சுக்காரர்கள் அவ
னுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள். பிலிப்பின்
அதிகாரத்தைத் தொலைத்து, டச்சுக்காரர்கள் தங்களு
டைய சுயஆட்சியை ஸ்தாபித்துக்கொள்வதற்கு ஆங்கி
லேயர் அவர்களுக்கு உதவிசெய்தார்கள். அதனால் பிலிப்
புக்குக் கோபமுண்டாகி அவன் மேரி ஸ்டுவர்ட்டின் சார்
பில் உண்டான கலகங்களிலெல்லாம் உதவிசெய்து எலிஜ
பெத்தின்மீது பழிக்குப் பழிவாங்க முயன்றான். டச்சுக்
காரர்களை அவன் அடக்கமுடியாமற்போனதினால் அவனு
டைய கோபமதிகரித்தது. அவர்கள் அத்தேசத்தின்
வடபாகமுழுவது மடங்கியுள்ள நாட்டில். ஐக்கிய நெதர்
லண்ட் (United Netherlands) என்று பெயருள்ள ஒரு குடி
யரசை ஏற்படுத்திக்கொண்டார்கள். கத்தோலிக் மதச்
சார்புள்ள தென்னாட்டுவாசிகள் மாத்திரம் பிலிப்பின் ஆட்
சிக்குள் அடங்கியிருந்தார்கள்.

16. அமெரிக்காவைக் கண்டுபிடித்தது.—ஆங்கிலேயரும்,
ஸ்பானியரும் மதத்திலன்றி மற்ற விஷயங்களிலுங்கூடச்
சண்டை இட்டார்கள். ஏழாம் ஹென்றி காலத்தில் க்ரிஸ்
தோபர் கொலம்பஸ் என்பவன் அமெரிக்காவைக் கண்டு
பிடித்தான். கொலம்பஸ் இட்டலி தேசவாசியாயினும்
ஸ்பெயின் அரசன் பெர்டினெண்டுக்கு வேலைக்காரன்.
ஆகவே, அவன் கண்டுபிடித்த தேசத்தை ஸ்பானியர் கட்
டிக்கொள்வதற்கு இடமுண்டாயிற்று. இரண்டாம் பிலிப்
பின் காலத்தில் அமெரிக்காவில் ஸ்பானியர் வசத்தில்
அநேக நாடுகளிருந்தன. அங்கே வெள்ளிச் சுரங்கங்கள்
அநேகமிருந்தன. அக்கனிகளிலிருந்து வெட்டி எடுக்கும்
திரவியத்தை ஏற்றிக்கொண்டு வருஷந்தோறும் அநேக்
ஸ்பானியக் கப்பல்கள் வந்துகொண்டிருந்தன.

17. ஆங்கில கப்பற்படைக்கும், ஸ்பானிய கப்பற்படைக்
கும் நடந்த சண்டைகள்.—எலிஜபெத் காலத்திற்கு முன்னால்
கப்பற்பிரயாணஞ் செய்வதில் ஆங்கிலேயருக்கு ஆசை
இல்லை என்றே சொல்லலாம். தூரதேசங்களிற் கண்டு
பிடித்த அற்புதங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு அவர்க



ளுக்கும் யாத்திரைசெய்து கீர்த்தியும் பணமும் சம்பா
திக்கவேண்டுமென்ற அவா வந்துவிட்டது. இவ்விதம்
ஆங்கிலக் கப்பற்காரர்கள் தூரதேசங்களுக்குப் போகத்
தலைப்பட்டார்கள். அவர்கள் போனவிடமெல்லாம் ஸ்பா
னியர் வசத்திலிருந்தன. ஸ்பானியர் குடியேறின நாடு
களில் இவர்கள் சமாதானத்துடன் வியாபாரம் செய்
வதை ஸ்பானியர் தடுத்தனர். அதைத்தெரிந்துகொண்ட
ஆங்கிலேயருக்குக் கோபம்பிறந்தது. அந்நாடுகள் ஸ்பா
னியர் எளிதில் காப்பாற்றுவதற்குமுடியாத பெரிய
தேசங்களென்றும், அவைகளில் சுலபமாய்த் தாங்கள்
கொள்ளையடிக்கலாமென்றும் ஆங்கிலேயர் கண்டுகொண்
டார்கள். கொஞ்சகாலத்திற்குள் ஆங்கிலக் கப்பற்காரர்
கள் நுழையாத ஸ்பானிய நாடேயில்லை. இவர்களில் அநே
கர் ஊக்கமுள்ள புதிய மதத்தினர். கத்தோலிக் ஸ்பானிய
ரைக் கொள்ளையடிப்பதனால் தங்களுடைய மதத்திற்குத்
தாங்கள் உதவிசெய்வதாக இவர்களுடைய எண்ணம்.

18. ட்ரேக் உலகத்தைச் சுற்றிச்சென்றது.—இந்த ஆங்கி
லக் கப்பற்காரர்களில் அதிக கீர்த்திபெற்றவன் ஸர் ப்ரான்
ஸிஸ் ட்ரேக். 1577ஆம் முதல் 1580ஆம் வரையில் அவன்
உலகத்தைச்சுற்றிக் கப்பல்யாத்திரைசெய்தான். வழி
யில் ஸ்பானியரிடமிருந்து கொள்ளையடித்த திரவியத்தை
நிரப்பிக்கொண்டு தன் கப்பலுடன் சுகமாய் இங்கிலண்டு
வந்து சேர்ந்தான். உலகத்தைச்சுற்றி யாத்திரைசெய்த
முதல் ஆங்கிலேயன் இவன்தான்.

19. ஜயிக்கமுடியாத ஆர்மேடா.—இக்காரணங்களால்
ஆங்கிலேயருக்கும் ஸ்பானியர்களுக்கும் விரோதம் அதி
கரித்தது. கடைசியில், இங்கிலண்டை ஜயிக்க எண்ணங்
கொண்டு ஒரு பெரிய கப்பற்படையை அனுப்பவேண்டு
மென்று இரண்டாம் பிலிப் தீர்மானஞ்செய்தான். இப்
படைக்கு ஜயிக்கமுடியாத ஆர்மேடாவென்று ஸ்பானியர்
பெயரிட்டார்கள். 1588 இல் கோடைகாலத்தில் ஆங்
கிலக் கால்வாயில் இந்த ஆர்மேடா தென்பட்டது. முன்
னால் பலதடவைகளில் ஆங்கிலேயர்கள் ஸ்பானியரைக்
கப்பற்சண்டையில் தோற்க அடித்திருக்கிறபடியால்
இப்பொழுது அவர்களிடத்தில் இவர்களுக்குப் பய

மிதுதான். இந்தக் கீர்த்திபொருந்திய சீமாட்டியின் ஆட்சிகாலத்தில் ஜனங்களுக்கு எவ்வளவு சக்தியும், வீரமும், இயக்கமுமிருந்தனவென்பது அவருடைய பாடல்களாலும் நாடகங்களாலும் வெளியாகின்றன. தற்காலத்தில் ஆங்கிலேயர்கள் இருந்துவரும் மாதிரி ஆரம்பித்த காலமிதுதான். அவர்கள் முற்காலத்தில் இருந்ததைவிட

## ஸ்டூவர்ட் அரசர்களின் வம்சாவளி.

வால்ட்டர், ஸ்காட்லண்டுஸ்டூவர்ட் + ராபர்ட் ப்ரூஸின் மகள், மார்கரெட்
|
ஸ்காட்லண்டு தேசத்து முதல் ஸ்டூவர்ட் மன்னனும், நான்காம் ஜேம்ஸின் முன்னேனுகிய ராபர்ட் II.

ஹென்றி VII.
|
மார்கரெட் ட்யூடர் + ஜேம்ஸ் IV., ஸ்காட்லண்டு அரசன்.
|
ஜேம்ஸ் V., ஸ்காட்லண்டு அரசன்.
|
ஸ்காட்-அரசி, மேரி + டார்ன்லி பிரபு.
|
ஸ்காட்லண்டு அரசன், ஜேம்ஸ் VI., இங்கிலண்டுக்கு I.
|
சார்லஸ் I.
|
சார்லஸ் II. — மேரி. — ஜேம்ஸ் II.

மேரி.
|
வில்லியம் III. + மேரி.

ஜேம்ஸ் II.
|
வில்லியம் III. + மேரி. — ஆன். — ஜேம்ஸ், மூத்த போலி பாத்தியஸ்தன்.
|
சார்லஸ் எட்வர்ட், இளைய போலி பாத்தியஸ்தன்.



இப்பொழுது அதிகமாய் ஓய்வற்றவர்களாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாகவும், முயற்சியுள்ளவர்களாகவும், அறிவை வளர்ப்பதில் அவாவுள்ளவர்களாகவும் ஆகிவிட்டார்கள். இந்தக் காரணத்தைக்கொண்டே தேசத்தின் தற்காலநிலைமை இந்த மகாராணியின் காலத்தில்தான் ஆரம்பித்ததென்று பலபேர் சொல்லுவதை அடிக்கடி கேட்கிறோம்.

# அதிகாரம் XII

## ஜேம்ஸ் I., 1603–1625; சார்லஸ் I. முதல் உள்நாட்டுப் போர்வரைக்கும், 1625–1642

**முக்கியமானவர்கள்:**


கய் பாக்ஸ் (Guy Fawkes); பக்கிங்ஹாம்-ட்யூக் (The Duke of Buckingham); சார்லஸ் இளவரசன் (Prince Charles); ஸ்பெயின் இளவரசி (The Spanish Infanta); ஹென்ரீட்டா மேரியா ராணி (Queen Henrietta Maria); ஜான் ஹாம்ப்டன் (John Hampden); லாட் பிரதான மதத்தலைவன் (Archbishop Laud); ஸ்ட்ராபோர்ட்-பிரபு (Lord Strafford).

**முக்கிய விஷயங்களும் காலமும்:**

**1603.** முதல் ஜேம்ஸ் பட்டத்திற்குவந்தது.
**1605.** வெடிமருந்து சூழ்ச்சி (The Gunpowder Plot).
**1607.** வர்ஜீனியா ஸ்தாபனம் (The Foundation of Virginia).
**1623.** சார்லஸ் மாட்ரிட்டுக்குச் செல்லுதல் (Charles's Voyage to Madrid).
**1625.** முதல் ஜேம்ஸின் மரணம்
**1625.** முதல் சார்லஸ் பட்டத்திற்குவந்தது.
**1628.** பாத்தியமனு (The Petition of Rights).
**1640.** நீடித்த பார்லிமெண்ட் கூடியது (Long Parliament meets).
**1642.** உள்நாட்டுப்போர் ஆரம்பம்.

1. **ப்ரிட்டன் தேசத்திற்கு முதல் ஜேம்ஸ் அரசனுதல்.** — நூறு வருஷங்களுக்கதிகமாகவே வெல்ஷ்தேச ட்யூடர் வம்

சத்தரசர்கள் இங்கிலண்டை ஆண்டுவந்தார்கள். (ப. 69 இல்
வம்சாவளி காண்க). ஏழாம் ஹென்றி காலத்தில் நடந்த
விவாக சம்பந்தத்தால் ட்யூடர்களுடன் கலந்த ஸ்காட்




முதல் ஜேம்ஸ் செய்த குடியேற்றத்தினால் ஐர்லண்டில் ஏற்பட்ட
ப்ராடஸ்டென்ட் மதத்தினர் வசிக்குமிடங்களை கறுத்தபாகம் குறிக்கிறது.

ஸ்டுவேர்ட் வம்சத்தவர் இப்பொழுது அரசுக்கு வந்தனர்.
அநேக நூறு வருஷங்களாய் ஆங்கிலேயரும், ஸ்காட்லண்
டரும் சண்டையிட்டுக்கொண்டே இருந்தார்கள். இப்பொ
ழுது இவ்விருநாட்டாரும் ஒரேவரசன் ஆட்சிக்குள்ளமர்ந்
தார்கள். இரண்டு தேசங்களுக்கும் தான் அரசனாயிருப்
பதில் ஜேம்ஸ் கர்வங்கொண்டான். இங்கிலண்டுக்கும்,
ஸ்காட்லண்டுக்கும் அரசனென்று சொல்லிக்கொள்வதை
விட்டு க்ரேட் பிரிட்டன் அரசனென்று பெயர் வைத்துக்
கொண்டான்.

2. முதல் ஜேம்ஸ் ஐர்லண்டுக்கும் அரசனாதல்.—க்ரேட்
ப்ரிட்டனுக்கெப்படியோ அப்படியே ஐர்லண்டுக்கும்



ஜேம்ஸ் அரசன்தான். தன்னிடத்தில் விசுவாசமுள்ள
ஆங்கில, ஸ்காட் புதிய மதத்தினரனேகரை ஐர்லண்டில்
குடியேறச்செய்வது நல்ல உபாயமென்று இவன் நினைத்
தான். கிழக்கு அல்ஸ்டரிலிருந்த ஐரிஷ் ஜனங்களை
அடித்துத் துரத்திவிட்டு அவர்களுடைய நிலங்களை ஆங்
கிலேயருக்கும், ஸ்காட்லண்டருக்கும் கொடுத்தான். இத
னால்தான் இப்பவும் ஐர்லண்டு வடகிழக்குப்பாகம் புதிய
மதத்தைச்சேர்ந்த ஆங்கிலேயருடையதாயிருக்கிறது.

3. ப்ரிட்டனின் அன்னிய நாட்டுக் குடியேற்றமும், வியாபார
மும்.—எலிஜபெத்காலத்து மாலுமிகளும், அன்னியதேச
ஆராய்ச்சி செய்பவர்களும் வட அமெரிக்காவில் புதிய
நாடுகளுக்குச் செல்லும்வழியை காண்பித்திருந்தார்கள்.
ஜேம்ஸ் அரசனுடன் புதிய கண்டத்தில் ஆங்கிலேயக்
குடியேற்ற நாடுகள் உண்டாயின. கன்னியாகிய ராணி
எலிஜபெத்தின் பேராலேற்பட்ட வர்ஜீனியா (Virginia)
1607 இல் ஸ்தாபனமாயிற்று. இந்த புதிய நாட்டிற்கு
புதிய இங்கிலண்டு என்று பெயரிட்டனர். அதில் முதற்
குடியேறினவர்களுக்கு யாத்திரீகப் பெரியோர் (Pilgrim
Fathers) என்று பெயர். எலிஜபெத்தைப்போல ஜேம்ஸும்
மதவிஷயத்தில் அவர்களிஷ்டப்படி செய்வதற்கு அவர்க
ளுக்கு இடங்கொடுக்காமையால் அவர்கள் இங்கிலண்டா
கிய சுதேசத்தில் வாழ்வதை ஒழித்துவிட்டார்கள்.
அவர்கள் விடாமுயற்சியும், உழைப்பும், செட்டுமுள்ள
ஜனங்கள். கொஞ்சகாலத்திற்குள் புதிய இங்கிலண்டு,
வர்ஜீனியாவென்ற இரண்டு நாடுகளும் செழிப்பாகிவிட்
டன. வேறு நாடுகளிலும் குடியேறினார்கள். தற்கா
லத்தில் அமெரிக்காவில் ஐக்கிய ராஜ்யங்கள் (The United
States of America) என்ற பெயருள்ள நாடுகள் இவை
தான். கிழக்குதிக்கிலுள்ள தூரதேசங்களுக்கு, முக்கிய
மாய் இந்தியாவிற்கும் சாமான்களை கப்பல்களிலேற்றி
ஆங்கிலேய வியாபாரிகள் அனுப்பினார்கள். இந்தியா
வில் வியாபாரம் நடத்துவதற்காக கிழக்கு இந்தியச்
சங்கம் (The East India Company) என்ற ஒரு வியாபா
ரக்கூட்டம் எலிஜபெத்தின் ஆட்சி முடிவுகாலத்தில் உளம்
பிற்று. இச்சங்கத்தார் கொஞ்சகாலத்திற்குள் ஏராளமாய்

வியாபாரம் நடைபெறும்படி செய்துவிட்டார்கள். பிற்
காலத்தில் இச்சங்கத்தார் இந்தியாவில் உள்நாட்டு ராஜ
காரியங்களில் தலையிட்டுக்கொண்டார்கள். இவர்கள்
மூலமாகத்தான் இந்தியாமுழுவதிலும் ஆங்கிலேயரு
டைய செல்வாக்கு பரவிற்று. இக்காலமுதல் ப்ரிட்டிஷ்
சரித்திரமென்றால் இரண்டொரு தீவுகளின் சரித்திரமாத்
திரமல்ல. உலகமெங்கும் பரவியிருக்கும் ஆங்கிலேயரு
டைய சம்பவங்களைப்பற்றி நாம் சொல்லவேண்டிவரும்.

4. ஸ்டுவர்ட் அரசர்கள் பார்லிமெண்டுடன் சண்டையிட்
டுக்கொள்ளுதல்.—இக்காலத்தில இங்கிலண்டிலும் விசேஷ
மான மாறுதல்கள் ஆரம்பித்துவிட்டன. ட்யூடர் மன்
னர்களெல்லாம் தங்கள் இஷ்டப்படியே தேசத்தை ஆண்
டுவந்தார்கள். ட்யூடர்கள் செய்தபிரகாரம் தாங்களும்
செய்வது முடியாதகாரியமென்று ஸ்டுவர்ட் மன்னர்கள்
தெரிந்துகொண்டார்கள். எட்டாம் ஹென்றியைப்போ
லாவது எலிஜபெத்தைப்போலாவது அறிவுந்திறமையும்
இவர்களுக்கில்லை. மேலும், இப்பொழுது ஆங்கிலேயர்கள்
சுயபுத்தியை உபயோகித்து எக்காரியத்தையுஞ் செய்து
வந்தார்கள். ஆகையால், நாடாளும் விஷயத்தில் அரசன்
தங்களையும் கலந்துகொள்ளவேண்டுமென்று நினைத்தார்
கள். இதன் முடிவுயாதெனில், ட்யூடர்களை ஆதரித்த
பார்லிமெண்ட் ஸ்டுவர்ட்டுகளை எதிர்க்கவாரம்பித்தது.
முதல் ஜேம்ஸ் காலத்தில் அரசனுக்கும் பார்லிமெண்டுக்
கும் விரோதமுண்டாகி இங்கிலண்டில் ஸ்டுவர்ட் மன்னர்
கள் ஆட்சியுள்ளவரைக்கும் அந்தப்பகை நீடித்தது.

5. முதல் ஜேம்ஸின் குணம். — ஆங்கிலேயருடைய
தன்மையை முதல் ஜேம்ஸ் ஒருபொழுதும் தெரிந்து
கொள்ளவில்லை. எலிஜபெத்தைப்போல் இவன் மித
மாய்ச் செலவு செய்கிறவனல்ல. எப்பொழுது மிவனுக்
குப் பணக்குறைவு இருந்துகொண்டேயிருந்தது. புதிய
வரிகளை ஏற்படுத்தும்படி அடிக்கடி பார்லிமெண்டைக்
கேட்பதே இவனுக்கு பணம் சம்பாதிக்கும்வழி. என்
றாலும், பார்லிமெண்டாரை திருப்திசெய்யும் மார்க்கத்
தைத்தேடாமல் அவர்களுடன் அடிக்கடி சண்டையிட்
டுக்கொண்டிருந்தான்.



6. வெடிமருந்தால் கொல்ல நினைத்த சூழ்ச்சி — மத
விஷயங்களில் ஜேம்ஸ் சுத்தமதவாதிகளையும், கத்தோலிக்
ஜனங்களையும் மிகக் கொடுமையாய் நடத்தினான். ஆயி
னும், அவனுடைய தாய் கத்தோலிக்மதத்தைச் சேர்ந்த
வள். எலிஜபெத்துக்கு விரோதமாய்ச் செய்ததுபோல்
இவனுக்கு விரோதமாயும் கத்தோலிக் ஜனங்கள் இவனைத்
தொலைப்பதற்கு இரகசியத்திற் பல சூழ்ச்சிகளைச் செய்
தார்கள். இவைகளில் முக்கியமானது 1605 இல் நடை
பெற்றதுதான். இதை வெடிமருந்து சூழ்ச்சி யென்று
சொல்லுவார்கள். அரசனையும், பார்லிமெண்டாரையும்
இரகசியமாய் வெடிமருந்திட்டுக் கொன்றுவிடுவதற்குச்
செய்த உபாயமிது. அதிர்ஷ்டவசமாய் மந்திரிகள் இந்த
இரகசியத்தைக் கண்டுகொண்டார்கள். புதிய மதத்தின
ருக்குத் திகில் உண்டாகிவிட்டது. பழைய மதத்தின
ருக்கு விரோதமாய் ஏற்பட்டிருந்த சட்டங்களை கடுமை
யாய் அமலுக்குக் கொண்டுவந்தார்கள். ஆயினும், பழைய
மதத்தினரில் சிலபேர்கள்தான் இந்த சூழ்ச்சியில் சம்
பந்தப்பட்டவர்கள்.

7. பக்கிங்ஹாம்-ட்யூக்.—முதல் ஜேம்ஸ் சுலபமாய் நண்
பர்கள்வலையிற் சிக்கிக்கொண்டான். அவனுக்கு முக்கிய
மாய் வேண்டியவன் ஜார்ஜ் வில்லியர்ஸ் (George Villiers).
அவனுக்கு பக்கிங்ஹாம்-ட்யூக் பட்டங்கிடைத்தது. அர
சனுடைய மூத்த குமாரன் வேல்ஸ் இளவரசனான
சார்ல்ஸுக்கு இவன் நெருங்கிய துணைவன். கிழவரசன்
பக்கிங்ஹாமுக்கு 'ஸ்டீனி' (Steenie) என்றும் தன்னுடைய
மகனுக்கு 'பேபி சார்ல்ஸ்' என்றும் செல்வப் பெயரிட்
டிருந்தான். இவர்கள்விஷயத்தில் அவன் மதியில்லா
மற்காட்டிய அன்பைக் கண்டு எல்லோரும் நகைத்தார்
கள்.

8. ஸ்பானிய மணம்.—ஜேம்ஸ் சமாதானத்தில் விருப்
பமுள்ளவன். அவன் அரசுக்கு வந்தவுடன் ஸ்பெயின் தே
சத்துடன் நீண்டகாலமாய் நடந்துகொண்டிருந்த சண்
டையை நிறுத்தினான். ஸ்பெயின் அரசன் மகளைத் தன்
மகன் சார்ல்ஸ் மணக்கவேண்டுமென்று இச்சைகொண்
டான். நினைத்தகாரியம் பலிக்கவில்லை. சார்ல்ஸுக்கு

அடங்காக்கோபம் வந்தது. ஸ்பெயின் தேசத்துடன் போருக்குச் செல்லும்படி அவன் தன் தந்தையைத் தூண்டினான். கொஞ்சநாளைக்குப் பிறகு 1625 இல் முதல் ஜேம்ஸ் இறந்தான்.

9. முதல் சார்ல்ஸும் பக்கிங்ஹாமும்.—சார்ல்ஸ் இளவரசன் முதல் சார்ல்ஸ் என்ற பட்டத்துடன் அரசனானான்.



முதல் சார்ல்ஸ்.

அழகான உருவமுடையவன்; கடுமையும், கம்பீரமுமான பார்வையுடையவன். ஆனால், தெளிவான அறிவும் நேர் வழியிற்செல்லும் மனமுமில்லாதவன். ஜனங்களுக்கு பக்கிங்ஹாமிடத்தில் வெறுப்பு. ஆகையால், அவர்களுக்கு சார்ல்ஸ்மீதில் பிரியம் வருவதற்கு வழியில்லாமற் போயிற்று. தன் தகப்பனைவிட அதிகமாய்ப் பார்லிமென்டின் உதவியை சார்ல்ஸ் நாடவேண்டியவன். ஆயினும், அவன் தகப்பனைவிட அதிகக் கடுமையாய் பார்லிமென்டு



டன் விரோதஞ்செய்துகொண்டா[illegible] ஜேம்ஸ்[illegible]தில் யுத்தமில்லை. இவனே ஸ்பெய[illegible]டன் போர்செய்தான். ஆகையால், தரைப்படைக்கும் [illegible]ப்படைக்கும் சம்பளங்கொடுப்பதற்கு ஏராளமான [illegible] வேண்டியிருந்தது. அவன் பார்லிமென்டா[illegible] ப[illegible] கேட்டால், அவர்கள் இவன் பக்கிங்ஹாமை விலக்கினாலொழிய புதிய வரிகளை வசூலிப்பதற்கு இணங்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். சார்ல்ஸ் இதற்குச் சம்மதியாமல் பார்லிமென்ட் சபையைக் கலைத்து அதன் அங்கத்தினர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

10. ப்ரான்ஸுடனும், ஸ்பெயினுடனும் யுத்தம்.—சார்ல்ஸ் இப்பொழுது ப்ரான்ஸ் அரசனுடைய உதவியை நாடினான். ப்ரெஞ்சு மன்னனுடைய சகோதரி ஹென்றீட்டா மேரியா (Henrietta Maria) என்பவளை மணந்துகொண்டான். இந்தப் புதியராணி கத்தோலிக்மதத்தைச் சேர்ந்தவளாகையால் ஆங்கிலேயருக்கு இந்த விவாகத்திற் பிரியமில்லை.

மேலும், அரசன் ஸ்பெயினுடன் விரோதஞ்செய்துகொண்டதுபோல் ப்ரான்ஸுடனும் சண்டைக்குப் போனான். முன்னிருந்ததைவிட அதிகமாய் அரசன் பார்லிமென்டின் உதவியைக் கோரும்படி இந்தப் புதிய யுத்தஞ் செய்துவிட்டது.

11. பாத்திய மனு.—1628 இல் புதிதாய் ஒரு பார்லிமென்ட் சபைகூடி பாத்தியமனு என்ற ஒரு சாஸனத்தை எழுதினார்கள். பார்லிமென்டின் சம்மதமின்றி அரசன் வரிகளையாவது, கடனையாவது வசூலிக்கக்கூடாதென்றும், சட்டமுறைப்படியல்லாமல் ஜனங்களை சிறையிலடைக்கக்கூடாதென்றும், அப்பத்திரத்தி லெழுதியிருந்தன. ப்ரான்ஸுடனும், ஸ்பெயினுடனும் யுத்தஞ் செய்வதற்குப் போதுமான பொருள் கிடைப்பதற்கு வேறு வழியில்லாததினால் சார்ல்ஸ் இதற்கு இணங்கவேண்டியதாயிற்று. இரண்டாம் ரிச்சர்டை சிங்காதனத்திலிருந்து துரத்தியதற்குப் பிறகு அரசன்மீது பார்லிமென்ட் அடைந்த வெற்றியில் இதுதான் மிகவும் சிறந்தது.

12. சார்ல்ஸ் பார்லிமென்டை கலைத்துவிட்டது.—ப்ரெஞ்
சுக்காரர்களுடன் போர்புரிய ஒரு தரைப்படையையும்,
கப்பற்படையையும் சார்ல்ஸ் சித்தஞ்செய்தான். அவ
னுடைய முயற்சியெல்லாம் வீணாயிற்று. அந்தச் சண்டை
யை நடத்துவதற்கு சேனைத்தலைவனாகப் போகவேண்
டிய பக்கிங்ஹாம் கொலையுண்டான். பிறகு ப்ரான்ஸுட
னும் ஸ்பெயினுடனும் சார்ல்ஸ் சமாதானஞ்செய்துகொள்



ஜான் ஹாம்ப்டன்.

ளவேண்டியதாயிற்று. பார்லிமென்ட் கொஞ்சநாளில்
மறுபடியும் கூடிற்று. சார்ல்ஸ் பாத்தியமனு நிபந்தனைப்
படி நடக்கவில்லை என்று முறையிட்டது. இந்த பார்லி
மென்ட் சார்ல்ஸின்மீது கடுமையான குற்றஞ்சாட்டிய
படியால் அரசன் அதைக் கலைத்துவிட்டான். பிறகு, பதி
னொரு வருஷகாலம் பார்லிமென்ட் உதவியின்றி அவன்
அரசு செலுத்திவந்தான்.



13. ஜான் ஹாம்ப்டன் (John Hampden) கப்பல் வரியை
மறுத்தது.—இக்காலமுழுவதும் சார்ல்ஸ் தன்னுலியன்ற
மட்டும் பணஞ்சேகரிக்க வேண்டியவனானன். சட்ட
விரோதமில்லாத வழிகளில் எவ்வளவோ தந்திரஞ்
செய்து பணஞ்சேகரிக்க முயன்றான். பார்லிமென்டின்
அநுமதியில்லாமல் பழையகாலத்தில் சண்டைக் கப்பல்
களை கட்டுவதற்கு அரசர்கள் ஒரு வரியை விதிப்பதுண்
டென்று சார்ல்ஸ் கண்டுகொண்டான். இதற்குக் கப்பல்
வரி (Ship Money) என்று பெயர். இப்பொழுது சார்ல்ஸ்
இந்த வரியைக் குடிகளெல்லோருஞ் செலுத்தவேண்டு
மென்று கட்டளையிட்டான். ஜான் ஹாம்ப்டன் என்ற
ஒரு கனவான் இந்த வரியைக்கொடுக்க மறுத்தான்.
பார்லிமென்ட் சம்மதமிருந்தாலொழிய எந்த வரியும்
சட்ட விரோதந்தான் என்றான். நியாயாதிபதிகள இவ
னுக்கு விரோதமாய்த் தீர்ப்புசெய்து, இந்த வரியை
வசூலிக்க அரசனுக்கு பாத்தியமுண்டென்று தீர்மானம்
செய்தார்கள்.

14. லாடும் சுத்தமதவாதிகளும்.—சார்ல்ஸ் பணம் சம்
பாதிப்பதற்குச் செய்த முயற்சிகளில் ஜனங்களுக்கு எவ்
வளவு வெறுப்புண்டாயிற்றோ, அதற்கு அதிகமாகவே
மதவிஷயங்களிலவன் செய்த காரியங்களும் அதிருப்தி
யை உண்டுபண்ணின. எலிஜபெத்தையும், முதல் ஜேம்
ஸையுங் காட்டிலும் அதிகமாய் இவன் சுத்தமதவாதிகளை
எதிர்த்தான். கோவில்முறை சம்பந்தமான விஷயங்க
ளில் இவனுக்கு ஆலோசனை சொன்னவன் கான்டர்பெரி
பிரதான மதத்தலைவன் வில்லியம் லாட். தலையிடவேண்டாத
விஷயங்களிலெல்லாம் பிரவேசிப்பதில் லாட் பிரியமுள்
ளவன். அவன் சுத்தமதவாதிகளிடத்தில் காட்டிய
விரோதத்தைக்கொண்டு அவர்கள் இவனை ஒரு ரோமன்
கத்தோலிக்கைவிட அதிக வித்தியாசப்பட்டவனல்ல
வென்று நினைத்தார்கள்.

15. ஸ்காட்லண்டர் சார்ல்ஸை எதிர்த்தல்.—ஆங்கிலச்
கோயில் ஒழுக்கத்தைப்போலவே, ஸ்காட்லண்டு சுத்த
மதக்கோயில் ஒழுக்கத்தையும் அமைத்துவிடவேண்டு
மென்று லாடும் அரசனும் இச்சைகொண்டார்கள்.

ஸ்காட் ப்ரெஸ்பிட்டீரியன் ஜனங்களை பிஷப்பின் ஆட்சிக்கு
உள்ளடங்கும்படி கட்டாயப்படுத்தினன். கடைசியில்,
ஒரு ஜபபுத்தகத்தை லாட் வரைந்தான். அதை உபயோ
கிக்கும்படி ஸ்காட் ஜனங்களுக்கு சார்ல்ஸ் கட்டளையிட்
டான். அவர்கள் அந்த உத்திரவிற்கு கீழ்ப்படிய மறுத்து
விட்டுக் கலகஞ்செய்தார்கள். ஆங்கிலேயருக்காவது ஸ்கா
ட்லண்டருக்காவது தன் சார்பில் சண்டைசெய்யப் பிரிய
மில்லையென்று கண்டுகொண்டு அவன் அவர்களுடன் சமா
தானம் செய்துகொள்ளவேண்டியதாயிற்று. இவ்விதம்
ஸ்காட் கோயில் ப்ரெஸ்பிட்டீரியன் முறைக்கு மறுபடியும்
திரும்பிற்று. ஸ்காட்லண்டருக்குக் கிடைத்த வெற்றி
யைக்கொண்டு ஆங்கிலேயருக்கும் அரசனை எதிர்ப்பதில்
தைரியமுண்டாயிற்று.

16. வெண்ட்வோர்த்தும் அவனுடைய சூழ்ச்சியும் (Went-
worth and 'thorough').—லாடுக்கு அடுத்தபடி சார்ல்ஸுக்கு
முக்கியமான மந்திரி ஸ்டாபோர்ட்-இயர்ல் டாமஸ் வெண்ட
வோர்த். லாடும் இவனும் ஆட்சி சம்பந்தமாய்ச் செய்த
சூழ்ச்சிக்கு 'சம்பூர்ணமானது' (thorough) என்று பெயர்
இட்டார்கள். வெண்ட் வொர்த் ஐர்லண்டுக்கு அதிபதி
யானன். அங்கே அவனுடைய கொடியசெய்கைகளால்
ஜனங்கள் அவனை முற்றிலும் வெறுத்தார்கள். இவனையும்
லாடையும் நாடெங்கும் நிந்தித்தது.

17. நீடித்த பர்லிமேண்ட் கூடுதல்.—மறுபடியும் சார்ல்
ஸுக்கு பணக்கஷ்டம் வந்தபடியால், இன்னுமொருமுறை
1640 இல் பார்லிமெண்ட் சபையைக்கூட்டினன். இந்தப்
பார்லிமெண்ட் அநேக வருஷங்கள் நீடித்து நடைபெற்ற
படியால் இதற்கு நீடித்த பார்லிமேண்ட் என்று பெயர் வந்
தது. பார்லிமெண்ட் சொன்னபடியெல்லாம் சார்ல்ஸ்
செய்யவேண்டியதாயிற்று. கப்பல் வரியை வசூலிப்ப
தற்கு அரசனுக்கு பாத்தியமில்லையென்று வாதாடின
ஜான் ஹாம்ப்டனைத் தலைவனாகப் பார்லிமெண்டார் நிய
மித்துக்கொண்டு அரசனையும் அவனுடைய மந்திரிகளையு
மெதிர்த்தார்கள்.

18. ஸ்டாபோர்ட், லாட் இவர்களின் தாழ்வு.—நீடித்த
பார்லிமெண்டாருக்கு மற்றவர்களைவிட ஸ்டாபோர்டி



னிடம் வெறுப்பும் பயமும் அதிகமாயிருந்தது. அரசன்
சார்பில் தேசத்திற்குக் கொடியதீங்கைச் செய்தபடி
யால் ஸ்டாபோர்ட் மரணதண்டனையை யடையவேண்டு
மென்று தீர்மானஞ்செய்தார்கள். பார்லிமெண்டிடத்தில்
அரசனுக்கு அதிக பயமுண்டாகிவிட்டபடியால் அதனு
டைய தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாமல் மறுக்க அவ
னுக்குத் தைரியமில்லை. 'டவர் ஹில்' என்ற விடத்தில்
ஸ்டாபோர்ட் கொலையுண்டான். பார்லிமெண்டார் லாட்
பிரதான மதத்தலைவனை கோபுரக்கோட்டையிலடைத்
தார்கள். பல வருஷங்கள் சென்றபிறகு அவனும் ஸ்டா
போர்டைப்போல் கொலையுண்டான். அவனை அவ்வளவு
கடுமையாய் நடத்தியது ஒரு கொடியகாரியமே.

19. ஆங்கிலக் கோவிற் கட்சியாரை சார்ல்ஸ் தன் பக்கத்திற்
சேர்த்துக்கொள்ளுதல். — பார்லிமெண்டின் உதவியின்றி
சார்ல்ஸ் செய்ததுபோல், ஒருவரசனும் ஆளமுடியாவண்
ணம் பல சட்டங்களை நீடித்த பார்லிமெண்டார் ஏற்படுத்
தினர்கள். ஹாம்ப்டனும் அநேகத் தலைவர்களும் சுத்த
மதத்தினர் கட்சியை ஆதரித்தார்கள். ஸ்காட்லண்டு கோ
யிலைப்போல் ஆங்கிலக்கோயில்களையும் ப்ரெஸ்பிட்டீரியன்
முறையில் மாற்றிவிடவேண்டுமென்று நினைத்தார்கள்.
ஸ்டாபோர்ட், லாட் இருவரைத் தண்டிப்பதிலும், அரச
னுடைய அதிகாரத்தைக் குறைப்பதிலும் சுத்த மதத்தி
னருடன் ஒத்திருந்தவர்கள் மதவிஷயத்தில் இப்படிச்
செய்வது அளவுக்குமிஞ்சின காரியமென்று நினைத்தார்
கள். கோயில் ஒழுக்கத்தில் இந்த மாறுதல்களை சார்ல்ஸ்
ஆதரிக்கவில்லை. ஆகையால், பிஷப்புகளையும், ஜப புத்தகத்
தையும் ஆதரிக்கும் நண்பர்கள் இவனுக்கு உதவிசெய்ய
ஆரம்பித்தார்கள்.

20. பெரிய உள்நாட்டுப்போரின் ஆரம்பம். — கோவில்
[illegible]சியாரைத் தன் பக்கவில் சேர்த்துக்கொண்டபடியால்
[illegible]ல்ஸ் பக்கத்திலனேகர் சேர்ந்துகொண்டார்கள். எல்
[illegible]ரும் ஒருங்கே அவனுக்கு விரோதிகளாயில்லை. இப்பொழு
யில் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. [illegible]
பார்லிமெண்டுடன் யுத்தஞ் செய்யவேமென்ற எண்ணம்
அவனுக்கு வந்தது. இன்னமும் பல [illegible]

அவன் நேர்வழியிற் செல்லாமலிருந்ததைப் பார்த்து அவனுடைய நண்பர்களின் மனஞ்சலித்துவிட்டது. ஆயினும், தான் போர்செய்வதற்கு வேண்டிய பலம் தனக்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு சார்ல்ஸ் 1642 இல் பார்லிமென்டுடன் போருக்குச் சென்றான்.

## அதிகாரம் XIII

## முதல் சார்ல்ஸூம் உள்நாட்டுப் போரும், 1642–1649; குடியரசு, 1649–1660

முக்கியமானவர்கள்:

ஆலிவர் க்ராம்வெல் (Oliver Cromwell); ஸ்காட் அரசனான இரண்டாம் சார்ல்ஸ் (Charles II., King of Scots); ரிச்சர்ட் க்ராம்வெல் (Richard Cromwell); சேனைத் தலைவனான மாங்க் (General Monk); ப்ரான்ஸ் அரசனான லூயி XIV. (Louis XIV., King of France).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1642. எட்ஜ்ஹில் சண்டை (Battle of Edgehill).
1644. மார்ஸ்டன்மூர் சண்டை (Battle of Marston Moor).
1645. நேஸ்பி சண்டை (Battle of Naseby).
1649-1653. ரம்ப் பார்லிமென்டின் ஆட்சி (Rule of the Rump).
1653-1658. தேசாட்சகனான ஆலிவர் க்ராம்வெல் (Lord Protector)
1660. இரண்டாம் சார்ல்ஸின் வரவு (Restoration of Charles II.).

1. கவலியரும், ரௌண்ட் ஹெட்களும்.—இந்தப் பெரிய உள்நாட்டுப்போர் 1642 இல் ஆரம்பித்து நான்கு [illegible]ங்களுக்குமேல் நடந்தது. அரசன் கட்சியில் பா[illegible]யும், பார்லிமெண்ட் [illegible]சியில் பாதியும் ஆங்கிலேயர் பிரிந்தார்கள். அரசன் சார்பில் சண்டைசெய்தவர்களுக்கு கவலியர் என்று பெயர். இந்தப் பதத்திற்குக்




குதிரைவீரர் அல்லது கனவான்கள் என்றுபொருள். பார்லிமெண்ட் கட்சியில் சண்டைசெய்தவர்களுக்கு ரௌண்ட் ஹெட்கள் அதாவது உருண்டைத்தலையர் என்ற பழிப்புப்பெயர் வந்தது. இவர்கள் தலைமயிரை முற்றிலும் கத்தரித்துவிட்டபடியால் இவர்களுக்கு அப்பெயர் வந்தது.

2. சார்ல்ஸின் ஆரம்ப ஜயமும், அபஜயமும்.—ஆரம்பத்தில் அரசன்கை ஓங்கியிருந்தது. 1642 இல் எட்ஜ்ஹில் என்றவிடத்தில் நடந்த முதற்சண்டையில் சார்ல்ஸ் வெற்றியடைந்தான். பார்லிமென்டார் மிகத்துன்பமடைந்து, ஸ்காட்லண்டர் உதவியை நாடினார்கள். 1644 இல் யார்க்குக்குச் சமீபத்தில் மார்ஸ்டன் மூர் சண்டையில் ஆங்கிலேயரும், ஸ்காட் ஜனங்களுமடைந்த வெற்றிதான் அவர்களுக்கு முதல் ஜயம். இதற்குப்பிறகும் அரசனுக்கு சில வெற்றிகள் கிடைத்தன. அரசனை முற்றிலும் தோற்கடிப்பது அசாத்தியமென்று சில பார்லிமெண்ட் சேனைத்தலைவர்கள் நினைக்கும்படியாயிற்று.

3. க்ராம்வெலும் புதுமாதிரிச் சேனையும்.—பார்லிமெண்ட் சேனைத்தலைவரில் ஆலிவர் க்ராம்வெல்தான் சிறந்தவன். எட்டாம் ஹென்றியின் மந்திரி டாமஸ் க்ராம்வெல் வம்சத்தைச்சேர்ந்தவனிவன். பார்லிமெண்ட் சேனைத்தலைவரின் தாமதச்செயல்களைக்கண்டு இவனுக்குக் கோபமுண்டாயிற்று. போருக்குச்செல்லும் வீரர்களைச் சண்டைசெய்வதில் தேர்ச்சியுள்ளவர்களாகச்செய்யவும் அவர்களுக்குத் தக்கசம்பளம் கொடுக்கும்படியாகவும், ஒரு ஏற்பாட்டை க்ராம்வெல் செய்தான். இவர்களுக்குத்தான் புதுமாதிரிச்சேனை என்றுபெயர். 1645 இல் இந்தப் புதுமாதிரிச்சேனை நார்த்தாம்ப்டன்ஷயரில் நேஸ்பி (Naseby) சண்டையில் சார்ல்ஸை முற்றிலும் தோற்கடித்தது. அடுத்தவருஷம் சார்ல்ஸ் தன்னுடைய விரோதிகளிடத்திலேயே அடைக்கலம் புகுந்தான்.

4. பார்லிமென்டுக்கும், சேனைக்குஞ் சண்டை.—யுத்தம் நடந்துகொண்டிருந்தபோதுங்கூட சார்ல்ஸின் விரோதிகள் எல்லோரும் ஒத்துவேலைசெய்யவில்லை. ராஜாங்க முறையையும், கோவில்முறையையும் எப்படி நடத்த

வேண்டுமென்ற விஷயத்தில் அவர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதமும், சண்டையுமுண்டாகிவிட்டது.




பெரிய உள்நாட்டுப் போர்காலத்தில் இங்கிலண்டு [illegible] இருந்த விதம்.



நீடித்த பார்லிமென்ட் ஒருசார்பிலும், சேனை மற்றொரு சார்பிலும் சேர்ந்துகொண்டன. இருகட்சிக்காரர்களும் அரசனுதரவை நாடினார்கள். சார்ல்ஸ் இருவர் சொல் வதையுங் கேட்டுக்கொண்டு இருகட்சியையும் ஏமாற்ற முயன்றான். அரசனுடைய வார்த்தை நம்பத்தகாத தென்று இன்னுமொருமுறை யாவருந்தெரிந்துகொண் டார்கள்.

5. முதல் சார்ல்ஸின் கொலை.—பார்லிமென்ட் கட்சி தாழ்வடைந்து, சேனையின்கை ஓங்கிற்று. நாட்டில் எல்லோரையும்விட க்ராம்வெல் அதிக மேன்மையுள்ளவ னானான். அவன் அரசனுடைய துரோகபுத்தியையும், வஞ்சகச் செயலையும் கண்டித்து, அரசனை தேசத்துரோ கம் என்ற குற்றம் சாட்டி விசாரணைசெய்து தண்டிக்க வேண்டுமென்று கூறினான். தன்னிஷ்டத்திற்கிணங்காத அங்கத்தினரை பார்லிமென்டைவிட்டுத் துரத்தினான். மிருந்தவரின் கூட்டத்திற்கு ரம்ப் (Rump) என்று பெயர் வந்தது. இவர்கள் பெரிய நியாயசபை யொன்றைப் புதி தாய் ஏற்படுத்தினார்கள். இந்தச்சபையார் சார்லஸை கொலைசெய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்கள். 1649 ஆம் வருஷம் ஜனவரிமாதம் 30 ஆம் தேதியில் லண் டனில் அவனுடைய அரண்மனை வாயிலிலேயே அரசன் கொலையுண்டான். வெகு பக்தியுடனும், பெருந்தன்மையு டனும் சார்ல்ஸ் பிராணனைவிட்டான். அவனை நம்பாதவர் களனேகர்கூட அவனுக்கு நேரிட்ட கொடியகதியை நினைத்து இரக்கமும், துக்கமும் காட்டினார்கள்.

6. ரம்ப் பார்லிமேன்டின் ஆட்சி.—இந்தக் கழிவடைப் பார்லிமென்ட் இனிமேல் இங்கிலண்டை ஆளுவதற்கு தனி அரசர்கள் கூடாதென்றும், குடியரசு தானிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தது. ஏகாதிபத்தியமுறை யும், பிரபுக்கள் சபையும் ஒழிந்துபோயின. ராஜாங்கத் தில் மிருந்தது பொதுஜனக் கூட்டமொன்றே.

7. ஐர்லண்டை ஜயித்தது.—இன்னமும் போர் முடி விற்குவரவில்லை. இங்கிலண்டு முழுவதும் ரம்ப் சபை வசத்திலிருந்தபோதிலும், ஸ்காட்லண்டர் இறந்து போன முதல் சார்ல்ஸின் மூத்தமகனை வேல்ஸ் இள

வரசன் சார்ல்ஸை இரண்டாம் சார்ல்ஸ் என்ற பட்டத்துடன், தங்கள் நாட்டையாளும்படி கேட்டுக்கொண்டார்கள். ஐர்லண்டு முழுவதும் அநேகமாய் இந்த இளவரசன் சார்பிலேயே சேர்ந்தது. ஐரிஷ் கத்தோலிக் ஜனங்களுக்கு ஆங்கிலக்கோவில் முறையில் விருப்பமில்லாததுடன் சுத்தமதத்தினரைக்கண்டு நடுங்கினார்கள். ஆகையால், இப்புதுமாதிரிச்சேனை ஸ்காட்லண்டு, ஐர்லண்டு இரண்டு நாட்டையும் ஜயித்தால்தான் அதனுடைய காரியம் நிறைவேறிற்று என்று எண்ணலாம். 1649 இல் க்ராம்வெல் ஐர்லண்டின்மீது படையெடுத்து அத்தீவு முழுவதும் தன்னுடைய வசத்திற்குள்ளாக்கினான்.

8. ஸ்காட்லண்டை ஜயித்தது.—1650 இல் க்ராம்வெல் ஸ்காட்லண்டின்மீதிற் பாய்ந்தான். அந்த வாலிபவரசனை டன்பார் (Dunbar) சண்டையில் தோற்கவடித்தான். அடுத்தவருஷம் சார்ல்ஸ் இங்கிலண்டின்மீது படையெடுத்து வரவேண்டி முயற்சிசெய்தான். ஆனால், க்ராம்வெல் அவனை நெருங்கத்தொடர்ந்துசென்று 1651 இல் வூர்ஸ்ட்டர் (Worcester) சண்டையில் தோற்கடித்தான். கடைசியிற் செய்யவேண்டிய யுத்தமிதுதான். சார்ல்ஸ் ப்ரான்ஸுக்கு ஓடித்தப்பினான். பிறகு மூன்று ராஜ்யங்களும் க்ராம்வெலின் அதிகாரத்திற்குள்ளாயின.

9. க்ராம்வெல் தேசரட்சகனானது.—க்ராம்வெல் 'ரம்ப்' பார்லிமெண்டுடன் கொஞ்சநாளில் சண்டையிட்டுக்கொண்டான். 1653 இல் பார்லிமெண்டுக்கு நேரிற்சென்று அங்கத்தினரெல்லாரையும் துரத்தினான். இவ்விதம் சேனையும், அதன் தலைவனும், பொதுஜன சபையையும் அன்றி அரசனையும், பிரபுக்கள் சபையையும், பழைய கோயில் முறையையும் ஒழித்தனர். ஆயினும், இந்த மூன்று ராஜ்யங்களையும் கேவலம் போர்வீரர்களே ஆண்டுவருவதாக எல்லோரும் நினைக்கக்கூடாதென்று மட்டும் விரும்பினார்கள். ஆகவே, இங்கிலண்டு ராஜாங்க முறையைப்பற்றி ஒரு புதுமாதிரியான ஏற்பாட்டை சேனைத் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து செய்து முடித்தனர். அதன்படி தேசம் குடியரசு நாடாகத்தானிருக்க



வேண்டும். ஆனால், ஆட்சிக்காரியங்களைப் பார்ப்பதற்கு ஒருபிரதான அதிபதியிருக்கவேண்டும். அவனுக்கு தேசரட்சகப் பிரபு என்று பெயர். அவ்வாறே க்ராம்வெல் இத்தப்பதவியையடைந்து ஆயுள்பரியந்தம் இங்கிலண்டை ஆண்டுவந்தான்.



ஆலிவர் க்ராம்வெல்.

10. க்ராம்வெலின் உள்நாட்டு ஆட்சி. — க்ராம்வெல் சேனைத்தலைமையை வகிப்பதில் எவ்வளவு சாமர்த்தியமுள்ளவனோ, அவ்வளவு சாமர்த்தியத்துடன் ராஜதந்திரக் காரியங்களையும் நடத்தினான். அவன் நாட்டை நீதியுடன் பரிபாலனஞ்செய்தான். தனக்கு அடங்காதவர்களெனவரையும் அவன் வெகு கொடுமையுடன் நடத்திவர

தான். முதல் சார்ல்ஸ் எப்படி பார்லிமென்டுடன் சண்
டையிட்டானே, அப்படியே இவனும் தான்கூட்டிய பார்
லிமென்டுடன் சண்டையிட்டான். ஆனல், அந்த பலமற்
றவரசனைப்போலில்லாமல் இவன் பார்லிமென்டின் எதிர்
வாதத்தை வெகுகடுமையா யடக்கிவந்தான். தேசத்தின்
அபிவிருத்திக்காக பலவித உபாயங்களைத்தேடினன். தன்
னுடைய பார்லிமென்டில் ஆங்கில, வேல்ஸ் பிர்திநிதி
கள் மாத்திரமல்லாமல் ஐரிஷ், ஸ்காட் அங்கத்தினரை
யும் வரவழைத்தான்.. கோவில் முறைவிஷயத்தில் சுத்த
மதவாதிகளின் பல வகுப்பினரும் தங்கள் இஷ்டப்படி
நடக்கக்கூடுமான ஓர் ஏற்பாட்டைச்செய்தான். ஆயி
னும், கத்தோலிக் ஜனங்களுக்காவது, ஆங்கிலக் கோவில்
முறையைச் சேர்ந்தவர்களுக்காவது அதேவிதமான
சுவாதீனத்தை அவன் அளிக்கவில்லை. பொதுவாக ஜனங்
களுக்கு க்ராம்வெலின் ஆட்சியில் திருப்தியில்லை. ஆங்கி
லேய ராஜ கட்சியைச்சேர்ந்தவர்களும், ஸ்காட், ஐரிஷ்
ஜனங்களில் பெரும்பான்மையோரும், ஆங்கிலேயக் கோ
வில்முறையைச் சேர்ந்தவர்களும், ரோமன் கத்தோலிக்
பழைய மதத்தினரும் இவனுடைய ஆட்சியை வெறுத்த
னர். சுத்தமதத்தைச்சேர்ந்த க்ராம்வெலின் நண்பர்களிற்
கூட அநேகர் இவனை ஆதரிப்பதை விட்டொழித்தனர்.
ஏனெனில், அவர்கள் இவனுமொரு அரசனைப்போல் நடப்
பதாக நினைத்தனர். ஒரே அரசனாட்சிமுறையை அவர்
கள் மிகவும் வெறுத்தனர். உண்மையில் க்ராம்வெல்
மரிப்பதற்குமுன் அவனுடைய பார்லிமென்டாரே அவ
னுக்கு அரசனென்ற பட்டத்தைக்கூட அளிக்கவிரும்
பினார்கள். ஆயினும், அதை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை.
ஏனெனில், அவன் அப்படிச் செய்வானாகில் சேனையின்
விரோதம் தனக்கு வந்துவிடுமென்று அவனுக்கு நன்
ருய்த்தெரியும்.

11. **க்ராம்வெலும், அன்னிய ராஜ்யங்களும்.**—வெளிநாடு
களில் க்ராம்வெல் செய்த காரியங்கள்தான் அவனது
ஆட்சிமுறையிற் சிறந்தவையாகும். எலிஜபெத் ஆட்சி
யில் ஏற்பட்டிருந்த பழைய கீர்த்தியை இவன் திரும்ப
வும் உயிர்ப்பித்தான். அவளைப்போல இவனும் ஸ்பெயி



னுக்கு விரோதமாய் ப்ரான்ஸுடன் சேர்ந்துகொண்
டான். ப்ரான்ஸின் பிற்கால மன்னருள் மிகச்சிறந்தவ
னான லூயி XIV. அக்காலத்தில் ப்ரான்ஸை ஆண்டுவந்
தான். க்ராம்வெலும், லூயியும் ஸ்பானியரைக் கடலிலும்,
தரையிலும் தோற்கடித்து வெற்றியடைந்தார்கள்.

12. **ரிச்சர்ட் க்ராம்வெலின் தாழ்வு.**—ஆலிவர் 1658 இல்
இறந்தான். அவனுடைய ஸ்தானத்தில் அவன் மகன்
ரிச்சர்ட் க்ராம்வெல் ரட்சகனானான். இவனொருபெரியசோம்
பேறி. புத்தியற்றவன். கொஞ்சநாளில் அதிகாரத்தி
னின்று சேனை இவனை விலக்கிற்று. பிறகு நீடித்த பார்
லிமென்டின் சேஷமான 'ரம்ப்' மறுபடியும் கூடிற்று.
ஆனல், சீக்கிரத்தில் இதற்கும் சேனைக்கும் விரோதம்
வந்துவிட்டது.

13. **மாங்க் இரண்டாம் சார்ல்ஸை அரசனாக்குதல்.**—எவ
ருக்கும் ராஜ்யவிஷயத்தில் அதிருப்தி யுண்டாகிவிட்டது.
மாங்க் சேனைத்தலைவன்கீழ் ஒரு புதிய பார்லிமென்ட்
1660 இல் கூடிற்று. இந்தப் பார்லிமென்டார் முதல்
சார்ல்ஸின் மகனை இங்கிலண்டுக்குவந்து அரசை ஒப்புக்
கொள்ளும்படி வழைத்தார்கள். தான் பிறந்த நாளான
1660 ஆம் வருஷம் மே மாதம் 29-ம் தேதியில் இரண்டாம்
சார்ல்ஸ் லண்டனுக்கு வந்தான். இவ்விதம் ரெஸ்டோரே
ஷன் என்ற திருத்தம் முடிவுபெற்றது. சுத்தமதத்தின
ரும், போர்வீரர்களும் நடத்திய ஆட்சி முடிவுக்கு வந்த
தைப்பற்றியும், அரசன் ஆட்சி முன்னிருந்த நிலைமையை
மறுபடியுமடைந்ததைப்பற்றியும் எல்லோரும் சந்தோ
ஷமடைந்தார்கள்.

## அதிகாரம் XIV

## இரண்டாம் சார்ல்ஸ், 1660–1685; இரண்டாம் ஜேம்ஸ், 1685–1688

**முக்கியமானவர்கள்:**
ப்ரான்ஸ் மன்னனான லூயி XIV. (Louis XIV. of France); யார்க்
ட்யூக் ஜேம்ஸ் (James, Duke of York); ஷாப்ட்ஸ்பெரி–இயர்ல்
(The Earl of Shaftesbury).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1660. இரண்டாம் சார்ல்ஸ் பட்டத்திற்குவந்தது.
1661. பம்பாய் ப்ரிட்டனுக்குக் கிடைத்தது.
1665. லண்டன் பெரிய கொள்ளைநோய் (The Great Plague).
1666. லண்டனில் பெரிய தீ (The Great fire of London).
1673. பரீக்ஷைசட்டம் ஏற்பட்டது (The Test Act passed).
1678. கத்தோலிக் இரகஸியக்கலகம் (The Popish plot).
1685. இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்திற்குவந்தது.
1688. இரண்டாம் ஜேம்ஸின் தாழ்ச்சி.

1. இரண்டாம் சார்ல்ஸின் குணம்.—ஸ்டூவர்ட் அரசர்களில் இரண்டாம் சார்ல்ஸ்தான் மிகுந்த சாமர்த்திய முள்ளவன்; தன்னுடைய தகப்பனைவிட ஆங்கிலேயருடைய குணத்தை நன்றாய் அறிந்தவன். அவர்கள் தன்னை அரசனாக ஒப்புக்கொள்ளும்வரையில் சில விஷயங்களில் அவர்களிஷ்டப்படி நடப்பதில் அவனுக்குச் சம்மதந்தான். ஆயினும், அவன் சுயநலத்தையே கருதி, இன்பானுபவத்தில் இச்சைகொண்டவன். மேலும், தன் குடிஜனங்கள் கெட்ட மார்க்கத்தில் செல்லுவதற்கு வழி காட்டிவந்தான். அநேகர் அவனைப் பின்பற்றினார்கள். கொஞ்சகாலத்திற்குள் நாட்டில் அதிருப்தியுண்டாகி விட்டது. ஆயினும், சார்ல்ஸ் கூர்மையான புத்தியும், நற்குணமும், சாதுரியமாய்ப்பேசும் திறமையுமுள்ளவனாகையால் ஜனங்களுக்கு அவனிடத்தில் உண்டான அன்பு மாறவில்லை.

2. திருத்தத்தின் பலன்கள்.—உள்நாட்டுப்போர் வருவதற்கு முந்தியிருந்த நிலைமையை மறுபடியும் உண்டு பண்ண அரசனும், பார்லிமெண்டாரும் முயற்சிசெய்தார்கள். க்ராம்வெலின் சேனையைக் கலைத்துவிட்டார்கள். சில பட்டாளங்களை மாத்திரம் வைத்துக்கொண்டார்கள். இதுதான் தற்கால 'ஸ்திரமான சேனை'க்கு (The Standing Army) ஆரம்பம். க்ராம்வெல் ஸ்காட்லண்டு, ஐர்லண்டு இரண்டையும் இங்கிலண்டுடன்சேர்த்த ஐக்கியம் தொலைந்துபோய், அந்த இரண்டு நாடுகளுக்கும் தனித்தனியே பார்லிமெண்ட் சபைகள் முன்போல் உண்டாயின. ஸ்காட்லண்டில் பிஷப்புகள் மறுபடியும் கோவி



லதிகாரத்தை யடைந்தனர். ப்ரெஸ்பிட்டீரியன் கட்சியாரைக் கொடுமையாய் நடத்தினார்கள். யுத்தத்திற்கு முன்னால் ஆங்கிலக்கோவில் ஒழுக்கம் எப்படியிருந்த



இரண்டாவது சார்ல்ஸ்.
(From a Portrait by Sir Peter Lely in Christ's Hospital.)

தோ அப்படியே மறுபடியும் ஏற்பட்டது. பழைய ஜபபுத்தகத்துடன் பிஷப்புகள் திரும்பிவந்தார்கள். சுத்த மதவாதிகளை ஜனங்கள் வெறுத்தார்கள். அவர்களுக்கு

நேரிடும் கதியைப்பற்றி ஒருவரும் கவனிக்கவில்லை. அவர்களிலனேகர் தங்களுக்கென்று தனிக்கோயில்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் ஏற்கனவே ஏற்பட்ட கோவிலொழுக்கத்தினின்றும் விலகினவர்கள் ஆகையால், அவர்களுக்குப் பிரிந்தோர் (Dissenters) என்ற பெயர் வந்தது. அவர்கள் தங்களுக்கென்று கோவில்களை கட்டிக்கொள்வதையும், தொழுவதற்கு • கூட்டங்கூடுவதையும் பார்லிமென்டார் தடுத்தார்கள். யுத்தத்திற்கு முன்னால் சுத்த மதத்தினருக்கு அநுகூலமாயிருந்த பார்லிமென்ட் இப்போது பிரிந்தோர் விஷயத்திற் கொடுமையான சட்டங்களை ஏற்படுத்தியது.

3. ப்ரான்ஸுடன் உடன்படிக்கை.—சில விஷயங்களில் இரண்டாம் சார்ல்ஸ் க்ராம்வெல்லைப் பின்பற்ற முயன்றான். க்ராம்வெல் ப்ரான்ஸுடன்செய்துகொண்ட சிநேகத்தை நீடிக்கச்செய்தான். ஆயினும், க்ராம்வெல்லைப் போல் லூயி XIV. க்கு விரோதமாய்த் தன் காரியத்தை சாதித்துக்கொள்ள சக்தியுள்ளவனல்லன். கொஞ்சநாளில் ப்ரெஞ்சு மன்னனிடமிருந்து லஞ்சம்வாங்க வாரம்பித்தான். மேலும், லூயி XIV. வரவர அதிக வலிமையுள்ளவனாகிவிட்டபடியால், ஆங்கிலேயருக்கு அவனிடத்தில் பயமுண்டாயிற்று. இந்தக் காரணங்களைக்கொண்டு ப்ரான்ஸுடன் சார்ல்ஸ் செய்துகொண்ட உடன்படிக்கையை ஜனங்கள் வெறுத்தார்கள்.

4. வியாபாரமும், குடியேற்ற நாடுகளும்.—க்ராம்வெல்லைப் போல் சார்ல்ஸும் ஆங்கில வியாபாரத்தையும், குடியேற்ற நாடுகளையும் காப்பதில் கவலையுள்ளவனாகவிருந்தான். கடலில் ஆங்கிலேயருடன் முக்கியமாய் போட்டி போடக்கூடிய டச்சுக்காரர்களுடன் இரண்டுதரம் போர் புரிந்தான். நாளடைவில் டச்சுக்காரர்களுடைய வியாபாரத்தை ஆங்கிலேயர் கைப்பற்றி விட்டார்கள். ஆயினும், லூயி XIV. க்கு விரோதமாய் இருவருஞ்சேரவேண்டியிருந்ததால், ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் சிநேகிதர்களாகிவிட்டார்கள். டச்சுக்காரர்களுடன் ஆங்கிலேயர்செய்த போரொன்றில் வடஅமெரிக்காவில் அவர்களுக்குச் சொந்தமான பிரதான குடியேற்ற நாட்டை



ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டார்கள். அரசன் தம்பி யார்க்-ட்யூக்கின் கௌரவார்த்தத்திற்காக இதற்கு ஆங்கிலேயர் ந்யூயார்க் (New York), 'புதிய யார்க்' பட்டினமென்று பெயரிட்டார்கள். வேறுசில குடியேற்ற நாடுகளும் அமெரிக்காவில் ஏற்பட்டன.

5. இந்தியாவில் ஆங்கிலேயர்செய்த காரியம். — மற்றவிடங்களுக்குப்போனதுபோல்ஐரோப்பியவியாபாரிகள் இந்தியாவிற்கும் வந்தார்கள். இதர ஐரோப்பிய வியாபாரக் கூட்டத்தாராகிய டச்சுக்காரர்கள், போர்ச்சுகீஸியர்கள்,ப்ரெஞ்சுக்காரர்கள் முதலானவர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் வியாபார விஷயத்தில் போட்டி உண்டாகிவிட்டது. அப்பொழுது இந்தியாவில் டில்லி மொகலாய சக்ரவர்த்திதான் சர்வாதிகாரம்பெற்றவன். அவன் அன்னிய நாட்டு வியாபாரிகள் இங்கேவந்து வியாபாரஞ்செய்வதற்கு கோட்டைகள் கட்டிக்கொள்ள அனுமதி கொடுத்தான். கிழக்கு இந்திய வியாபாரக் கூட்டத்தார் 1639 இல் மதராஸ் என்ற சென்னப்பட்டணத்தில் முதல் முதல் கோட்டையைக் கட்டினார்கள். போர்ச்சுகல் தேசத்திலிருந்துவந்த தன்னுடைய ராணிக்குச் சீதனமாய்க்கிடைத்த பம்பாய்த்தீவை 1661 இல் இரண்டாம் சார்ல்ஸிடமிருந்து கம்பெனியார் பெற்றுக்கொண்டார்கள். பிறகு 1690 இல் கல்கத்தாவில் கோட்டை கட்டினார்கள். இந்த விடங்களிலிருந்து கம்பெனியார் விசேஷ வியாபாரஞ்செய்து மற்றவர்களைக்காட்டிலும் வலுத்தவர்களாகிவிட்டார்கள்.

6. லண்டன் கொள்ளைநோயும், பெரிய தீ விபத்தும்.—இரண்டாம் சார்ல்ஸ் காலத்தில் லண்டன் நகரத்திற்கு இரண்டு பெரிய ஆபத்துகள் உண்டாயின. 1665 இல் லண்டன் பெருங்கொள்ளைநோய் என்ற ஒருபெரிய தொத்துவியாதி கிளம்பிற்று. இந்த நோய் ஊரெங்கும்பரவி, நூற்றுக்கணக்கான பிணங்களை ஒரேகுழியில் புதைக்கும்படி அவ்வளவு ஜனங்கள் மடியும்படி செய்தது. அடுத்த வருஷம் 1666 இல் ஒரு பெரிய தீ பற்றிக்கொண்டது. லண்டன் நகரத்தின் பெரும்பாகம் இத்தீயால் அழிந்தது. இதுவும் ஒரு நன்மைக்கே உண்டானதுபோலும்.

அழிந்த நகரம் தேகசௌக்கியத்திற்குத்தக்கபடி புதிதாய் உண்டாயிற்று. தெருக்களை அகலமாயும், வீடுகளை மரமின்றி செங்கற் கற்களாலும் உண்டுபண்ணினார்கள்.

7. **பரீக்ஷை சட்டம் (The Test Act).** — சார்ல்ஸ் பட்டத்திற்குவந்த கிருத்தத்திற்குப்பிறகு கத்தோலிக்ஜனங்களுக்கு விரோதமாய் ஏற்பட்ட சட்டங்களை முன்போல் அவ்வளவு கடுமையாய் அமலுக்குக் கொண்டுவரவில்லை. ஆகையால், அநேகர் கத்தோலிக்மதத்திற்சேர்ந்துகொண்டார்கள். சார்ல்ஸின் தம்பியும், பட்டத்திற்கு அடுத்த வார்சுமான **யார்க்-ட்யூக் ஜேம்ஸ்** இவ்விதம் சேர்ந்தவர்களிலொருவன். சார்ல்ஸ் மதத்தைப்பற்றி நினைப்பவனல்ல. கத்தோலிக் ஜனங்களுக்கும், சுத்தமதவாதிகளுக்கும் மதவிஷயத்தில் சமமான சுயேச்சையைக்கொடுக்க சார்ல்ஸ் முயன்றான். அப்படிச்செய்வதில் பார்லிமென்டாருக்கு இஷ்டமில்லை. 1673 இல் 'பரீக்ஷை சட்டம்' என்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அச்சட்டப்படி ரோமன் கத்தோலிக் ஜனங்களுக்கு ராஜாங்கத்தில் உத்தியோகத்திலிருக்க விடமில்லை. அநேக வருஷங்கள் வரைக்கும் கத்தோலிக் ஜனங்கள் விஷயத்தில் சந்தேகமும், பொறாமையும் ஜனங்களுக்கிருந்தது. ஆகையால், அவர்களுக்கு விரோதமாய் யார் எதைச்சொன்னபோதிலும் ஜனங்கள் நம்பினார்கள்.

8. **ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டமும், விலக்க மசோதாவும் (The Habeas Corpus Act and the Exclusion Bill).** அந்தக் காலத்தில் ராஜ தந்திரத்தை நன்றாயுணர்ந்தவர்களில் ஷாப்ட்ஸ்பெரி - இயர்ல் முதல்வன். அவனொருசமயம் அரசனுடைய மந்திரிகளிலொருவனாக விருந்தான்; உத்தியோகத்தையிழந்து மறுபடியும் அதிகாரத்திற்குவர இச்சித்தான். அவன் எதையும் செய்யத்துணிந்தவன். நினைத்த காரியத்தை சாதிப்பதில் தான் உபயோகிக்கும் உபாயம் எவ்வளவு கெட்டதாயிருந்தாலும் அதை சட்டைசெய்யமாட்டான். சில சிறந்த சட்டங்களை ஏற்படுத்தும்படி பார்லிமென்டாரைத் தூண்டினான். 1679 இல் ஏற்பட்ட ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டந்தான் மிகச் சிறந்தது. இந்தச் சட்டப்படி குற்றமில்லாதவர்களை



சிறையிலடைப்பது அசாத்தியமாகிவிட்டது. யார்க்-ட்யூக் கத்தோலிக்கானபடியால் அவனைப் பட்டத்திற்கு வராமல் தடுத்துவிட பார்லிமென்டார் ஒரு தீர்மானஞ் செய்யும்படி இவன் முயற்சிசெய்தான். ஆனால், பிரபுக்கள் சபையோர் இத்தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

9. **விக் கட்சியும், டோரி கட்சியும் (Whigs and Tories).**— இங்கிலண்டில் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. ஒரு கட்சியார் ஷாப்ட்ஸ்பெரியை ஆதரித்தார்கள். மற்றொரு கட்சியார் அவனை எதிர்த்தனர். ஷாப்ட்ஸ்பெரியின் நண்பர்களுக்கு விக் கட்சியென்றும், அவனுடைய விரோதிகளுக்கு டோரி கட்சியென்றும் பெயர்வந்தது. கடைசியில் ஷாப்ட்ஸ்பெரி ஹாலண்டுதேசத்திற்கு ஓடி, அங்கே இறந்துவிட்டான். பிறகு இரண்டாம் சார்ல்ஸின் ஆயுள்வரையில் டோரி கட்சியார் அதிகாரஞ்செலுத்தினார்கள்.

10. **இரண்டாம் ஜேம்ஸின் ஆட்சி ஆரம்பகாலம்.**—இரண்டாம் சார்ல்ஸ் 1685 இல் இறந்தான். யார்க்-ட்யூக் **இரண்டாம் ஜேம்ஸ்** என்ற பட்டத்துடன் அரசனானான். ஜேம்ஸ் தன்னுடைய அண்ணனைவிட புத்திக்குறைவுள்ளவன். தகப்பனுடைய கெட்ட குணங்களில் அநேகம் அவனிடத்திலிருந்தன. ரோமன் கத்தோலிக் மதத்தில் அவன்கொண்ட பக்திதான் அவனுடைய நற்குணங்களிற் சிறந்தது. தான் உண்மையென்று நினைத்த மதத்தைவிடமனமில்லாமல், அரசைக்கூட இழக்கும் நிலைமையிலிருந்தான். இப்பொழுது அரசனானபிறகு புதியமதத்தைச்சேர்ந்த டோரிகளின் உதவியைக்கொண்டு தனக்கு சிங்காதனங் கிடைத்ததென்று அவன் நன்றாய்த் தெரிந்துகொண்டான். தன்னிஷ்டப்படித் தன் தெய்வத்தை தொழக்கூடுமானால், புதியமதக் கோயில்முறை முன்னிருந்ததுபோல் நடைபெற அவனுக்கு இஷ்டந்தான். சார்ல்ஸின் கொஞ்சகாலம் எல்லாம் சரிவர நடந்தது. டோரி மந்திரிகளே மீண்டும் அதிகாரஞ் செலுத்தினார்கள். அவர்கள் சொற்படியே ஜேம்ஸும் அரசுசெலுத்தினான். பார்லிமென்ட்சபை கூடினவுடன் அங்கத்தினர் இப்புதிய அரசனை ஆதரித்தார்கள்.

**11. மான்மத் கலகம் (Monmouth's rebellion).**—அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேறு வழியில்லாமல் விக் கட்சியாரில் சிலர் ஜேம்ஸுக்கு விரோதமாய் ஒரு கலகத்தை யுண்டுபண்ணினார்கள். இதற்குத் தலைவன் அரசனுடைய அண்ணன் மகன் மான்மத்-ட்யூக். ஸாமர்ஸெட் மாகாணத்தில் ஸெட்ஜிமூர் (Sedgemoor) என்ற விடத்தில் 1685 இல் நடந்த சண்டையில் ஜேம்ஸ் அவனை வென்று இந்தக் கலகத்தை அடக்கிவிட்டான். இந்தச் சண்டைதான் இங்கிலண்டில் கடைசியில் நடந்த கிரமமான சண்டை. மான்மத் கொலையுண்டான். அவனைப் பின்பற்றினவர்கள் வெகு கொடுமையான வதைக்குள்ளானார்கள்.

12. சட்டவிலக்கு அதிகாரம் (The Suspending Power).–பிறகு, ஜேம்ஸ் துணிவுடன் வேலை செய்யவாரம்பித்தான். பரீக்ஷை சட்டப்படி ரோமன் கத்தோலிக் ஜனங்கள் உத்தியோகங்களுக்கு வரமுடியாமற் செய்வது நியாயமல்லவென்று நினைத்தான். ஆகையால், அந்தச் சட்டத்தை மாற்றவேண்டிய வேலையைச் செய்யவாரம்பித்தான். அரசனுக்கு சட்டவிலக்குச் செய்யவதிகாரமுண்டென்று ஒரு பாத்தியத்தைக் கொண்டாடினான். அதன்படி தனக்கு இஷ்டமிருந்தால் தான் எந்தச் சட்டத்தையும் நடைபெறாதபடி விலக்கிவிடலாமென்றான். பிறகு, தரைப்படை, கப்பற்படைகளில் கத்தோலிக் உத்தியோகஸ்தர்களை நியமித்தான். கடைசியில், இடங்கொடுத்தல் விளம்பரம் (The Declaration of Indulgence) என்ற ஒரு நிருபத்தை வெளியிட்டான். அதன்படி தெய்வத்தைத் தங்களிஷ்டப்படி தொழுவதைத் தடுத்த சட்டங்களையெல்லாம் தான்விலக்கிவைத்திருப்பதாக விளம்பரஞ்செய்தான்.

13. பொதுஜனங்கள் ஜேம்ஸை எதிர்த்தல்.—இப்படிச் செய்வதில் கத்தோலிக் ஜனங்களும், சுத்தமதத்தினருஞ் சேர்ந்து ஆங்கிலக் கோயில்முறையை எதிர்ப்பார்களென்று நினைத்தான். ஆனால், சுத்தமதவாதிகளுக்கு இவனிடத்தில் நம்பிக்கையில்லை. ஆகையால், கொஞ்சகாலத்திற்குள் புதியமதத்தினர் எல்லோரும் இங்கிலண்டுக்கும் புதிய மதத்திற்கும் ஏற்பட்ட சுவாதீனங்களை காப்பாற்றும் விஷயத்தில் ஒன்றுசேர்ந்துவிட்டார்கள்.



14. 1688 இல் நடந்த புரட்சி (Revolution).–ஜேம்ஸ் கிழவனாகிவிட்டான். இதுவரையில் அவனுடைய மகளாகிய மேரி இளவரசி அவனுக்குப்பிறகு பட்டத்திற்கு வரவேண்டியவள். அவள் புதிய மதத்தைச்சேர்ந்தவள். டச்சுக்குடியரசு நாட்டு அதிபதியும், ஐரோப்பாவில் புதிய மதத்தை ஆதரிப்பவரில் முதல்வனுமான ஆரஞ்சு-வில்லியம் (William of Orange) என்ற தன் அத்தை மகனை இவள் மணஞ்செய்திருந்தாள். ஆனால், இப்பொழுது ஜேம்ஸுக்கு ஒருமகன் பிறந்துவிட்டான். இக்குழந்தை கத்தோலிக்காகவே வளரவேண்டியாயிற்று. ஆகவே, இங்கிலண்டில் கத்தோலிக்மத அரசவம்சத்தொடர்ச்சியேற்படும்போலிருந்தது. இது ஆங்கிலேயர் சகித்துக்கொள்ளக் கூடியதன்று. விக், டோரி இரண்டு கட்சியாருள் முக்கியமானவர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து ஜேம்ஸ் அரசனுடைய ஒழுங்கற்ற ஆட்சியினின்றும் ராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்கு, ஆரஞ்சு-வில்லியத்தை இங்கிலண்டுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார்கள். வில்லியமும் அதற்குச் சம்மதித்தான். அவன் டெவன்ஷயர் (Devonshire) மாகாணத்தில் வந்திறங்கினான். ஜேம்ஸ் கட்சியில் சண்டைபோட ஒருவருக்கு இஷ்டமில்லை. ஆகையால், ஜேம்ஸ் ப்ரான்ஸுக்கு ஓடிவிட்டான். ஒரு பார்லிமென்ட் சபைகூடி வில்லியத்திற்கும் மேரிக்கும் அரசையளிக்க விரும்பினார்கள். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். 1688-ம் வருஷத்திய கீர்த்தியுள்ள புரட்சி என்று ஆங்கிலேயர் சொல்லும்விஷயம் இதுதான். முதல் ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தகாலத்தில் அரசனுக்கும் பார்லிமென்டாருக்கும் ஏற்பட்ட விரோதம் இப்பொழுதுதான் முடிவுபெற்றது. தன்னுடைய குடிகளுக்கு விரோதமாய்க்கிளம்பி முரண்டுகொண்டிருந்த ஒரு அரசனை நீக்கி, பார்லிமென்ட் தீர்மானப்படி வேறொரு அரசனை நியமிக்கும்படியான முடிவு கடைசியில் வந்தது. இவ்விதம் ஆங்கில ராஜரிகத்தில் பார்லிமென்டின் அதிகாரந்தான் அரசனுடையதைக் காட்டிலும் வலுத்ததென்று ஏற்பட்டுவிட்டது.

# அதிகாரம் XV

## மூன்றும் வில்லியம், 1689–1702; இரண்டாம் மேரி, 1689–1694; ஆன், 1702–1714

முக்கியமானவர்கள்:

ஆன் இளவரசி (Princess Anne); மூத்த போலியாத்தியஸ்தனை ஜேம்ஸ் (James, the Old Pretender); ஹனோவர் தேசாதிபதியான ஸோபியா (Sophia, Electress of Hanover); பதினான்காம் லூயி (Louis XIV.); மார்ல்பரோ-ட்யூக் (The Duke of Marlborough); ஸ்பெயினரசனை பிலிப் (Philip of Spain).

முக்கிய விஷயங்களும் காலமும்:

**1690.** பாயின்நதிச் சண்டை (Battle of the Boyne).
**1694.** மேரியின் மரணம்.
**1702.** மூன்றும் வில்லியத்தின் மரணம்.
**1702.** ஆன் பட்டத்திற்கு வந்தது.
**1704.** ப்ளென்ஹிம் சண்டை (Battle of Blenheim).
**1707.** ஸ்காட்லண்டுடன் ஐக்கியம்.
**1713.** யூட்ரெக்ட் சமாதானம்.
**1714.** ஆனின் மரணம்.

1. பார்லிமெண்ட் வில்லியத்தையும், மேரியையும் கூட்டரசர்களாகச் செய்தது.—மூன்றும் வில்லியம் முதல் சார்ல்ஸின் பேரன். இரண்டாம் மேரிராணி இரண்டாம் ஜேம்ஸின் மகள். பார்லிமெண்ட் கேட்டுக்கொண்டதின்பேரில் இவ்விருவர்களும் அரசை யேற்றுக்கொண்டார்கள். ஆயினும், கூடியவரையிலும் கிரமமான வம்ச பரம்பரையைப் பார்லிமெண்ட் கெடுக்கவில்லை. அதனால்தான் மேரியும் தன் கணவனுடன் கூட்டரசியானாள். அரசன்மனைவிக்கு ராணி என்ற பெயர் கொடுப்பது வழக்கம். ஆயினும், மேரி விஷயத்தில்தான் அரசன்பேரிலும், அவனுடைய மனைவியின்பேரிலும் கூட்டரசு என்ற பெயர் வந்தது. காரணம் யாதெனில், எலிஜபெத், விக்டோரியா இவர்களைப்போல் மேரியும் ஆட்சியதிகாரம் செலுத்தி வந்தனள்.



2. பாத்திய உறுதிச்சட்டமும், மதசுயேச்சைக்கு இடங்கொடுத்த சட்டமும்.—இனிவரும் அரசன் இரண்டாம் ஜேம்ஸைப்போல் செய்வதைத் தடுப்பதற்கு பார்லிமெண்ட் சில சட்டங்களை ஏற்படுத்தினார்கள். இவைகளில் முக்கியமானது பாத்திய உறுதிச் சட்டம். இதன்படி, இரண்டாம் ஜேம்ஸைப்போல் சட்டவிலக்கைச் செய்ய ஒருவரசனுக்கும் பாத்தியமில்லை. ரோமன் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்தவர்கள் இங்கிலண்டு அரசர்களாயிருக்கக்கூடாது. வேறு சில சட்டங்கள் மூலமாய், வில்லியம், மேரி இருவரும் சந்ததியில்லாமலிருந்தார்களாயின், மேரியின் தங்கை ஆன் அடுத்த வாரிசாவாள். ஆனுக்கும் சந்ததியில்லாமற்போனால் ஹனோவர் தேசாதிபதியான ஸோபியாவும் (Sophia, Electress of Hanover), அவளுடைய புதிய மதத்தினரான சந்ததியாரும் பட்டத்திற்கு வரவேண்டும். ஸோபியா முதல் ஜேம்ஸின் மகள்



மூன்றும் வில்லியம்.

வயிற்றுப் பேர்த்தி. அரசன், அரசியிருவருக்கும் அடுத்த நெருங்கிய புதியமதப் பந்து இவளாகையால் இவள் அடுத்த வார்சானாள். இதே சமயத்தில் மதசுயேச்சைக்கு இடங்கொடுத்தல் என்ற சட்டமுமேற்பட்டது. இந்தச் சட்டத்தின்படி ஆங்கிலக் கோவிலொழுக்கத்தினின்றும் பிரிந்த புதிய மதவாதிகள் தங்களிஷ்டப்படி கோவிலைக் கட்டிக்கொண்டு தொழும் முறையை ஏற்படுத்திக் கொள்ள ஓர் பாத்தியம் ஏற்பட்டது.

3. **கட்சிமுறை ராஜாங்கத்தின் ஆரம்பம் (Beginning of Party Government).**—ஸ்டூவர்ட் மன்னர்களைப்போலில்லாமல் மூன்றாம் வில்லியம் ஒழுங்காய்ச் சட்டப்படி நடந்துவந்தான். பார்லிமென்ட் திருப்தியடையும் வண்ணம் அவன் அரசுபுரியவேண்டியவனானான். வருஷாவருஷம் ஆட்சிக்குவேண்டிய போதுமான பணம்மாத்திரந்தான் அவர்கள் அவனுக்குக் கொடுத்துவந்தார்கள். ஆகையால், அதிகாரமுழுவதும் அவர்கள் கையிற்றானிருந்தது. பார்லிமென்டில் வலுத்த கட்சிக்கூட்டத்திலிருந்துதான் மந்திரிகளை அரசன் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. முதலில் வில்லியம் சில டோரி கட்சியாரையும், சில விக் கட்சியாரையும் கலந்து நியமித்துப்பார்த்தான். பார்லிமென்டில் விக் கட்சி வலுத்தபடியால் டோரி மந்திரிகளை விலக்கி, விக் மந்திரிகளிடத்திலேயே சகல அதிகாரத்தையும் ஒப்புவிக்கவேண்டியதாயிற்று. சில வருஷங்கள் சென்றபிறகு பார்லிமென்டில் டோரி கட்சி வலுத்தவுடன் வில்லியம் டோரி மந்திரிகளையே நியமிக்கவேண்டியதாயிற்று. இவ்விதம் இங்கிலண்டில் கட்சிமுறை ஆட்சி ஏற்பட்டது. அம்முறை இன்னமும் நடந்துவருகிறது. இதனுடைய முடிவுயாதெனில், இதுவரையில் அரசர்கள் செலுத்திய அதிகாரத்தின் பெரும்பாகம் பார்லிமென்டார் கைவசமாயிற்று.

4. **ஐர்லண்டில் புரட்சி.**—ஐர்லண்டையும், ஸ்காட்லண்டையும் கைவசமாக்கிக் கொள்வதற்கு மூன்றாம் வில்லியம் கடுமையாய்ப் போர்செய்ய வேண்டியதாயிற்று. ஐரிஷ் ரோமன் கத்தோலிக் ஜனங்கள் ஜேம்ஸை ஆதரித்தார்கள். அவன் அந்நாடுசென்று அங்கே கொஞ்சகா



லம் அரசுபுரிந்தான். 1690 இல் வில்லியம் பாயின் நதிக்கரைச்சண்டையில் (The Battle of the Boyne) ஜேம்ஸைத் தோற்கடித்து, அவனை அத்தீவினின்றும் துரத்தினான். ஜேம்ஸை ஆதரித்ததற்காக கத்தோலிக் ஜனங்கள் மிகுந்த துன்பத்தையடைந்தார்கள். அந்த நாட்டை யாளுமதிகாரம் புதியமதத்தினரே யடைந்தார்கள். இந்த ஏற்பாடு நூறுவருஷங்களுக்குமேலேயே நடைபெற்றுவந்தது.

5. **ஸ்காட்லண்டில்புரட்சி.** — ஸ்காட்லண்டார் ஆங்கிலேயருடைய செய்கையைப் பின்பற்றினர். வில்லியம், மேரி இருவரையும் கூட்டரசர்களாகச் செய்துகொண்டு ஸ்காட்லண்டு கோவிலதிகாரத்திலிருந்த பிஷப்புகளை துரத்தினார்கள். அக்காலமுதல் ஸ்காட்லண்டு கோவில் ஒழுக்கம் ப்ரெஸ்பிட்டீரியன் முறையை அநுசரித்ததாகவே யிருந்துவருகிறது. கொஞ்சநாளில், ஸ்காட்லண்டு வடபாகத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் வசிக்கும் ஹைலண்டர்கள் என்ற மேல்நாட்டார் இரண்டாம் ஜேம்ஸ் சார்பில் கலகஞ்செய்தார்கள். ஒரு சண்டையில் வெற்றியடைந்ததும் ஹைலண்டர் சும்மாய் வீடுபோய்ச்சேர்ந்தார்கள். வில்லியம் கட்சி ஓங்கிற்று.

6. **ப்ரான்ஸுடன் யுத்தம்.**—இங்கிலண்டிலிருந்து ஜேம்ஸைத் துரத்திவிட்டபிறகு அவனுக்கு ப்ரெஞ்சு லூயி XIV. உதவி புரிந்தான். நெடுங்காலமாய் மூன்றாம் வில்லியம் ப்ரான்ஸின் வலிமையைக்குறைக்க கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். இப்போது லூயியுடன் போருக்குச் செல்ல ஆங்கிலேயரைத் தூண்டினான். எட்டுவருஷகாலம் ஆங்கிலேயரும் ப்ரெஞ்சுக்காரர்களும் போர்செய்தார்கள். தரைச்சண்டையில் ஆங்கிலேயர் விசேஷ வெற்றியை யடையவில்லை. ஆயினும், கடற்சண்டையில் முற்றிலும் வெற்றியடைந்தார்கள். கடைசியில், சமாதானம் நடந்தது. வருஷா வருஷமிந்த யுத்தத்திலுண்டான செலவிற்கு வில்லியம் கையில் போதுமான பணமில்லை. அதற்காக அவன் வட்டிக்குக் கடன்வாங்கவேண்டியதாயிற்று. **இதனால்தான் தேசப் பொதுக்கடன் (The National Debt) ஆரம்பம்.**

7. **மூன்றும் வில்லியமும் ஜேம்ஸ் கட்சியாரும்.**— மேரி
ராணி 1694 இல் இறந்தாள். அவளுக்கு ஆங்கில சம்ப
தமதிகமாக விருந்தபடியால் வில்லியத்தைக்காட்டிலும்



ஆன் ராணி.
(From a Portrait by Sir Godfrey Kneller.)

அவளிடத்தில் ஆங்கிலேயருக்கதிக அபிமானமிருந்தது.
வில்லியம் கெட்டிக்காரன்தான். ஆயினும், ஆங்கிலேயர்
தன்மையை யறிந்துகொள்ள அவன் முயலவில்லை. ஆனை




யால், அவனுடைய மாமன் ஜேம்ஸை மறுபடியும் அரச
னாக்க வெகு முயற்சிகள் செய்தார்கள். ஜேம்ஸ் கட்சி
யாருக்கு ஜாகோபைட்ஸ் (Jacobites) என்றபெயர் வந்
தது. லத்தீன் பாஷையில் 'ஜாகோபஸ்' என்ற வார்த்
தைதான் ஆங்கிலத்தில் ஜேம்ஸ் என்று மருவிற்று. இன்
னமும் லூயி XIV. இரண்டாம் ஜேம்ஸுக்கு உதவிசெய்து
கொண்டிருந்தான். ஜேம்ஸ் இறந்தவுடன் அவனுடைய
மகனை மூன்றும் ஜேம்ஸ் என்று லூயி ஒப்புக்கொண்
டான். இதனால் வில்லியத்திற்கும் ஆங்கிலேயருக்கும்
கோபமுண்டாகி, அவர்கள் லூயியுடன் போருக்குச்
சென்றார்கள். போருக்குவேண்டிய முயற்சி ஆரம்பிப்ப
தற்கு முன்னரே வில்லியம் இறந்துவிட்டான்.

8. **ஆனும், மார்ல்பரோவும் (Marlborough).**—வில்லியத்
திற்குப்பிறகு **ஆன்** பட்டத்திற்குவந்தாள். அவள் அன்
பும், நல்ல சுபாவமும் உள்ளவளாயினும், அதிகத் திறமை
யுள்ளவளல்ல. அநேக வருஷங்கள்வரைக்கும் இங்கிலண்
டில் விசேஷ அதிகாரஞ்செலுத்தியவன் மார்ல்பரோ-
ட்யூக். இவன் சேனைத்தலைவனாயும், பிரதான மந்திரியாயு
மிருந்தான்.

9. **ஸ்பெயின் பட்டத்து வார்சுரிமைச் சண்டை.**—இப்
பொழுது ஏற்பட்ட யுத்தத்திற்கு **ஸ்பெயின் பட்டத்து
வார்சுரிமைச்சண்டை** யென்று பெயர். லூயி XIV. தன்னு
டையபேரன் பிலிப்பை ஸ்பெயின் அரசனாகச்செய்வதற்கு
இச்சித்தான். இதைத் தடுப்பதற்கு இங்கிலண்டும், ஹா
லண்டும், ஆஸ்ட்ரியாவும் வேறுசில ராஜ்யங்களும் ஒன்று
சேர்ந்து **ஒரு பெரிய கூட்டுறவு உடன்பாட்டை** (The Grand
Alliance) செய்துகொண்டார்கள். ப்ரான்ஸின் வலிமை
யைக்கண்டு இவர்களுக்குண்டான பயந்தானிதற்குக்
காரணம். ப்ரான்ஸும், ஸ்பெயினும் ஒன்றுசேரக்கூடா
தென்றுதான் இவர்கள் கருத்து.

10. **மார்ல்பரோவின் வெற்றிகள்.**— இந்தப் போரில்
மார்ல்பரோ ப்ரெஞ்சுக்காரர்கள் மீது பலவெற்றிகளை
யடைந்தான். அவைகளில் 1704 இல் ஜெர்மனியில் **ப்ளென்
ஹீம் (Blenheim)**, நெதர்லண்டில் **ரமீயீ (Ramillies)**, **ஊட்
னார்ட் (Oudenarde)**, **மால்ப்ளாக்கே (Malplaquet)** முதலிய

சண்டைகள் முக்கியமானவை. ஸ்பெயினுக்குத் தெற்கேயுள்ள ஜிப்ரால்ட்டர் (Gibraltar) என்ற பாறைக்கோட்டையை ஆங்கிலேயரிந்தப்போரில் கைவசமாக்கிக்கொண்டார்கள். இன்னமும் அது அவர்கள் வசத்தில்தானிருக்கிறது. ஆயினும், ஸ்பெயினிலிருந்து பிலிப்பைத்துரத்த




மார்ல்பரோவின் யுத்தங்களைக்குறிக்கும் நெதர்லண்டு தேசபடம்.

ஆங்கிலேயரால் முடியவில்லை. ஏனெனில், ஸ்பானியரனைவரும் அவனை ஆதரித்தார்கள்.

11. டோரி கட்சியார் மந்திரிகளானதும், யூட்ரெக்ட் (Utrecht) சமாதானமும்.--இந்தப்போரில் அதிகச்செலவும், கொடுமையும் ஏற்பட்டது. கொஞ்சநாளில் ஏன் சமாதானம் ஏற்படவில்லையென்று அநேகர் கேட்க வாரம்பித்தார்கள். டோரி கட்சியாருக்கு இந்த யுத்தத்தை முடித்துவிடவேண்டுமென்ற எண்ணம் வந்துவிட்டது. மார்ல்பரோ டோரி கட்சியைச் சேர்ந்தவன்தான்; ஆயி



னும், சண்டைசெய்வதிற் பிரியமுள்ளவனாதலால் அவன் விக் கட்சியிற் சேர்ந்துகொண்டான். ஆகையால், டோரியாயிருந்த அவனுடைய மந்திரிக்கூட்டம்விக்கட்சியாக



முதல் மார்ல்பரோ-ட்யூக், ஜான் சர்ச்சில்.
(From a Portrait belonging to Earl Spencer, K.G.)

மாறிற்று. அனுவசியமாய்ப் போர் நீடிக்கும்படியான நிலைமையை விக் கட்சியார் உண்டாக்கினர். கொஞ்சநாளில் சமாதானம் செய்துவிடவேண்டுமென்று தேசத்தா

ரெல்லோரும் சொல்ல வாரம்பித்தார்கள். பிறகு டோரி கட்சி பார்லிமெண்டில் வலுத்துவிட்டது. ஆகையால், விக் கட்சியார் ஓடிவிட்டனர். இப்பொழுது டோரி கட்சியார் ப்ரான்ஸுடன் 1713 இல் யூட்ரெக்ட் சமாதானத்தைச் செய்து முடித்தனர்.

12. ஸ்காட்லண்டுடன் ஐக்கியம் (The Union with Scotland).—இங்கிலண்டுக்கும், ஸ்காட்லண்டுக்கும் ஐக்கியமுண்டானதுதான் ஆன் ஆட்சியில் நடந்த விஷயங்களிற் சிறந்தது. 1603-ம் வருஷம் முதல் இரண்டுதேசங்களுக்கும் ஒரே வரசன் ஏற்பட்டுவிட்டபோதிலும், ஒவ்வொரு தேச ஆட்சியும் தனித்தனியாகத்தானிருந்தது. க்ராம்வெல் காலமொழிய மற்றைக்காலமெல்லாம் ஒவ்வொரு தேசத்திற்கும் தனித்தனி பார்லிமெண்டிருந்தது. இது சரியாய் நடைபெறவில்லை. இந்த இருதேசத்தாருக்கும் அடிக்கடி ஒற்றுமைக்குறைவு உண்டாகி ஒரே அரசனாட்சியும் தொலைந்துவிடும்போலிருந்தது. இவ்விதச் சச்சரவுகளை ஒழிப்பதற்கு இரண்டுதேசத்தார்களின் சம்மதத்தின்பேரில் 1707 இல் ஐக்கிய சட்டம் (Act of Union) ஏற்பட்டது. இக்காலமுதல் வெஸ்ட்மின்ஸ்ட்டரில் ஒரேபார்லிமெண்ட் சபை கூடிற்று. பிரபுக்கள் சபைக்கும், பொதுஜன சபைக்கும் ஸ்காட்லண்டிலிருந்து பிரதிநிதிகள் வந்தார்கள். ப்ரெஸ்பிட்டீரியன் மதவொழுக்கம் மாத்திரம் ஸ்காட்லண்டைவிட்டு மாறவில்லை. இருதேசத்திலும் ஆரம்பகாலத்தில் ஜனங்களுக்கு இந்த ஐக்கியத்தில் பிடிப்பு ஏற்படவில்லை. ஆயினும், இது அறிவுடன்செய்த சிறந்த வேலை. கடைசியில், இதனால் இருதேசத்திற்கும் நன்மையுண்டாயிற்று.

13. ஆன் ராணியின் கடைசிக்காலம்.—ஆன் அரசி 1714 இல் இறந்தாள். டென்மார்க் தேச இளவரசன் ஜார்ஜை இவள் மணந்திருந்தாள். இவளுக்குப்பிறந்த குழந்தைகளெல்லாம் இவளுக்கு முன்னாலேயே மரித்துவிட்டன. ஆகையால், இவளுக்குப்பிறகு ஹனோவர் தேசாதிபதியும், முதல் ஜேம்ஸின் பேரனுமான முதல் ஜார்ஜ் அரசனானான். இவ்விதம் ஸ்டூவர்ட் வம்சத்தை ஹனோவர் வம்சம் பின்பற்றியது.



ஹனோவர் வம்சாவளி.

ஜேம்ஸ் I.
|
(பேர்த்தி)
ஹனோவர் தேசாதிபதியான ஸோபியா.
|
ஜார்ஜ் I.
|
ஜார்ஜ் II.
|
(பேரன்)
ஜார்ஜ் III.
|
ஜார்ஜ் IV. | வில்லியம் IV. | கெண்ட்-ட்யூக்.

கெண்ட்-ட்யூக்.
|
விக்டோரியா.
|
எட்வர்ட் VII.
|
ஜார்ஜ் V.

## அதிகாரம் XVI
## முதல் ஜார்ஜ், 1714–1727;
## இரண்டாம் ஜார்ஜ், 1727–1760

முக்கியமானவர்கள்:

மூத்த போலி பாத்தியஸ்தன்; ஸர் ராபர்ட் வால்ப்போல்; மேரியா தெரீஸா; இளைய போலி பாத்தியஸ்தன்; கம்பர்லண்ட்-ட்யூக்; ந்யூகாஸல்-ட்யூக்; வில்லியம் பிட்; ஜெனரல் வுல்ப்; ராபர்ட் க்ளைவ்; டூப்ளே.

முக்கிய விஷயங்களும் காலமும்:

1714. முதல் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தது.
1715. ஜாகோபைட் கலகம்.
1720. தென்கடல் வியாபாரக்குமிழி. (The South Sea Bubble).

**1727.** முதல் ஜார்ஜின் மரணம்.
**1727.** இரண்டாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தது.
**1742.** வால்ப்போலின் தாழ்வு.
**1745.** ஜாகோபைட் கலகம்.
**1757.** ப்ளாஸி சண்டை.
**1759.** க்யூபெக்கை பிடித்தது.
**1760.** இரண்டாம் ஜார்ஜின் மரணம்.


1. விக் கட்சியின் நீடித்த ஆட்சி.—முதல் ஜார்ஜ் பட்டத்திற்கு வரும்போது அவனுக்கு ஐம்பது வயதுக்குமேலாகிவிட்டது. இங்கிலண்டைப்பற்றி அவனுக்கொன்றும் தெரியாது. அவன் ஆங்கில பாஷையையும் கற்கவேயில்லை. அவனை ஒருவரும் கவனிக்கவேயில்லை. 'போலி பாத்தியஸ்தன்' என்று வழங்கிவந்த இரண்டாம் ஜேம்ஸின் மகன் பட்டத்திற்கு வாரதபடி தடுப்பதற்காக ஆங்கிலேயர்கள் அவனை அரசனாக்கிக்கொண்டார்கள். அவனாட்சியில் மந்திரிகளிஷ்டப்படி செய்ய முடிந்தது. ஆகையால், மூன்றாம் வில்லியம் காலத்தில் ஆரம்பித்த கட்சிமுறை ஆட்சி இப்பொழுது பூர்ணமாய் நிலைபெற்றது. இப்போது டோரி கட்சியாருக்கு அதிகாரமும், ஜனங்களுடைய அன்பும் போய்விட்டது. முதல் ஜார்ஜ் காலத்திலும் இரண்டாம் ஜார்ஜ் காலத்திலும் விக் கட்சியாரே மந்திரிகளானார்கள்.

2. 1715 ஆம் வருஷத்திய ஜாகோபைட் கலகம்.—1715 இல் போலி பாத்தியஸ்தனுடைய சிநேகிதர்கள் ஸ்காட்லண்டிலுள்ள ஹைலண்டில் ஜார்ஜுக்கு விரோதமாய் ஒரு கலகத்தை கிளப்பிவிட்டார்கள். அவனே நேரில் ஸ்காட்லண்டுக்கும் போனான். அவனுடைய மந்தபுத்தியும், மனத்தளர்ச்சியும் அவனுடைய கட்சியாரின் ஊக்கத்தைக் குறைத்துவிட்டன. ஹைலண்டர் வெறுப்படைந்து வீடுபோய்ச் சேர்ந்தனர். போலிபாத்தியஸ்தனும் ப்ரான்ஸ் போய்ச்சேர்ந்தான்.

3. தேன்கடல் வியாபாரக் குமிழி.— யூட்ரெக்ட் சமாதானத்திற்குப் பிறகு இங்கிலண்டு வெகு செழிப்பாயிருந்தது. ஜனங்கள் வியாபாரத்தில் மிகுந்த லாபம் சம்பாதித்தார்கள். தாங்கள் சேமித்துவைக்கக்கூடிய பணத்திற்



குத்தக்க வட்டி கிடைக்கும்படியான வழிகளைத் தேடி
னார்கள். தேன்கடல் வியாபாரக் கம்பேனி (The South Sea
Company) என்ற ஒரு சங்கத்திற்குத் தங்களுடைய



ஸர் ராபர்ட் வால்ப்போல்.
(From the Picture by Van Loo in the National Portrait Gallery.)

பணத்தை வட்டிக்குக் கொடுத்தார்கள். இந்தச் சங்கம் தென் அமெரிக்காவில் வியாபாரம் செய்வதற்காக ஏற்

பட்டது. இன்னும் வேறுசில சங்கங்களிலும் தங்களுடைய பணத்தைச் செலவிட்டார்கள். இவைகளெல்லாம் மோசக்கூட்டங்களாயின. அநேகஜனங்கள் தங்களுடைய சொத்தை யிழந்து கதியற்றவர்களானார்கள். நாடெங்கும் துக்கக்கடலில் மூழ்கிவிட்டது. நீர்க்குமிழிபோல் தென்கடல் வியாபாரம் வெடித்ததால் அதற்குத் தேன் கடற்குமிழி என்றுபெயர்வந்தது. இது 1720 இல் நடைபெற்றது. கிழக்கு இந்தியக் கம்பெனி பலமாய் ஏற்பட்டிருந்தபடியால் அது ஒன்றுதான் தப்பிற்று.

4. **வால்ப்போல் மந்திரியானது.**—தென்கடல் வியாபாரச் சங்கத்தால் பொருளிழந்தவர்கள் அந்தச் சங்கத்தாரிடமிருந்து மந்திரிகள் லஞ்சம் வாங்கியிருந்ததாகக் கண்டுகொண்டார்கள். அவர்களுக்கு விரோதமாக எல்லோரும் கூக்குரலிடவாரம்பித்தார்கள். அவர்களை பார்லிமெண்டார் மந்திரி ஸ்தானத்திலிருந்து விலக்கினார்கள். இப்பொழுது ஸர் ராடர்ட் வால்ப்போல் பிரதான மந்திரியானான். தேசத்திலிவனைப்போன்ற கணக்காளி வேறு ஒருவருமில்லை. இவன்செய்த நல்ல ஏற்பாடுகளால் கஷ்டமடைந்தவர்களுக்குக் கொஞ்சம் பரிகாரம் ஏற்பட்டது. இவன் இருபது வருஷங்களுக்கதிகமாகவே வேலைபார்த்தான். அவனுடைய ஆட்சி முடிவடைவதற்கு முந்தியே முதல் ஜார்ஜ 1727 இல் இறந்துவிட்டான்.

5. **வால்ப்போல் பிரதான மந்திரி.**—இரண்டாம் ஜார்ஜ் சரியான ஜெர்மனியான். ஆயினும், தன் தகப்பனைக்காட்டிலும் அதிகமாய் இங்கிலண்டைப்பற்றி தெரிந்திருந்தான். அவன் புத்திசாலியாய் வால்ப்போலை உத்தியோகத்தில் நீடித்துவைத்திருந்தான். வால்ப்போல்ஸ்தானம்வலுத்து மற்ற மந்திரிகள் அவனுக்குக் கீழ்ப்படியும் வண்ணமாயிற்று. பிரதான மந்திரி (Prime Minister) என்ற பட்டம் அவனுக்குத்தான் முதலிற் கிடைத்தது. அவன் அதிகாரம் செய்தவரையில் இங்கிலண்டில் சமாதானமே யிருந்தது. அவன் முன்யோசனையுள்ள ராஜதந்திரி. அவன்காலத்தில் ஜனங்கள் வெகு திருப்தியுடன் ஹனோவர் வம்சத்தை ஆதரித்தபடியால், ஜாகோபைட்டார் போலிபாத்தியஸ்தனைக் கொண்டுவருவதற்கு இடமில்லாமற் போ





இரண்டாம் ஜார்ஜ்.

(From the Portrait by Thomas Hudson in the National Portrait Gallery.)

யிற்று. வால்ப்போலுக்கு வயது அதிகரிக்கவே, ஸ்பெயினுடன் போருக்குப் போகவேண்டுமென்ற கூச்சல் நாட்டிலேற்பட்டுவிட்டது. தென் அமெரிக்காவிலுள்ள ஸ்பானிய குடியேற்ற நாடுகளில் வியாபாரஞ்செய்ய ஆங்கிலேயருக்கு ஸ்பானியர் இடங்கொடுக்கவில்லையென்று வியாபாரிகள் முறையிட்டனர். கொஞ்சங்கூட மனமில்லாமல் வால்ப்போல் சண்டைக்கிணங்கினான். 1739இல் யுத்த விளம்பரஞ் செய்தனர். ஆயினும், அச்சண்டையை வால்ப்போல் ஊக்கத்துடன் நடத்தவில்லை. 1742 இல் அவனை மந்திரி ஸ்தானத்திலிருந்து துரத்திவிட்டனர்.

6. **ஆஸ்ட்ரியா தேசபட்டத்து வார்சுரிமைச் சண்டை** (War of the Austrian Succession).—வால்ப்போல் விலகுவதற்கு முன்பே ஸ்பெயின் சண்டையோடு ப்ரான்ஸுடனும் சண்டை ஏற்பட்டது. இந்த யுத்தத்திற்கு **ஆஸ்ட்ரியா பட்டத்து வார்சுரிமைச் சண்டை**யென்று பெயர். ஆஸ்ட்ரியா தேச பட்டத்திற்கு ஒரு வாலிபப்பெண் **மேரியா தேரீஸா** என்பவளுடைய பாத்தியத்தை ஆங்கிலேயர் ஆதரித்தனர். ப்ரான்ஸும், மற்ற ராஜயங்களும் அந்நாட்டைத் தாங்கள் பாகித்துக் கொள்ளவேண்டுமென்று நினைத்தார்கள்.

7. **1745 ஆம் வருஷத்திய ஜாகோபைட் கலகம்.**—இந்த யுத்தத்தின்முடிவினால் ஹனோவர் வம்சத்திற்கு விரோதமாய் ஜாகோபைட்டர் இன்னொருமுறை கலகஞ்செய்தனர். மூத்த போலிபாத்தியஸ்தன் ஜேம்ஸ் இன்னமும் உயிருடனிருந்தான்; ஆயினும், ஜாகோபைட்டருக்குத் தலைவன் இப்போது அவனுடைய மகன் **இளைய போலி பாத்தியஸ்தன்** என்ற **சார்ல்ஸ் எட்வர்ட்**. சார்ல்ஸ் எட்வர்ட் பார்ப்பதற்கு அழகாயிருப்பான். குளிர்ந்தமுகமும், ஊக்கமுமுள்ளவன்; ஆகையால், அவன் உற்சாகமின்றி ஏங்கிக்கிடந்த தன் தகப்பனைவிடத் தலைவனாயிருப்பதற்குத் தக்கவன். 1745 இல் ஹைலண்டில் அவன்வந்து இறங்கினான். ஹைலண்டர் அவனுடைய வரவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். ஸ்காட்லண்டின் பெரும்பாகம் அவனுக்குக் கீழ்ப்படிந்தது.




8. **டார்பிக்குச் செல்லுதலும் கல்லோடன்சண்டையும்.**—இளைய போலிபாத்தியஸ்தன் இப்பொழுது இங்கிலண்டின் மீதிற் படையெடுத்தான். அவன் தெற்கில் **டார்பி** (Derby) வரைக்கும் முன்னேக்கிச்சென்றான். ஆயினும், ஆங்கிலேயரொருவரும் அவனுடைய கட்சியிற் சேராததினால் அவன் ஸ்காட்லண்டுக்கு வேகமாய்த் திரும்பிவிடவேண்டியதாயிற்று. 1746 இல் இன்வர்னெஸ் என்ற ஊருக்குச் சமீபத்திலுள்ள **கல்லோடன் மைதானத்தில்** இரண்டாம் ஜார்ஜின் இரண்டாவது மகன் **கம்பர்லண்டு-ட்யூக்** அவனைத் தோற்கடித்தான். ஹைலண்டரின் கலகத்தை கம்பர்லண்டு மிகக்கொடுமையுடன் அடக்கினான். சார்ல்ஸ் எட்வர்ட் ப்ரான்ஸுக்குத்தப்பி ஓடினான். அவன் வெகுகாலம் உயிருடனிருந்தானாயினும், அவனுடைய செல்வாக்கெல்லாம் தொலைந்துபோய்விட்டது. அது முதல் ஹனோவர் வம்சத்தாரின் ஆட்சி நிலைத்தது.

9. **ந்யூகாஸலும் விக் பிரபுக்களும்.**—வால்ப்போல் தாழ்வடைந்தபிறகு நாட்டில் யாதொரு விசேஷமும் நடைபெறவில்லை. தேசம் விக் கட்சியாராட்சியில் தானிருந்தது. அக்கட்சித் தலைவர்களிலநேகர் பெரிய பிரபுக்களாகவாவது, சொத்துக்காரர்களாகவாவது இருந்தபடியால், அவர்கள் சாமானிய ஜனங்களைப்பற்றி கவனிக்கவேயில்லை. லஞ்சங்கொடுத்துத் தங்களுடைய ஸ்தானங்களை காத்துக்கொண்டார்கள். அவர்கள்மீது எவ்வளவு குற்றங்களிருப்பினும், அவர்கள் ஒழுங்கீனமாய் நாட்டையாளவில்லை. அவர்கள் தெளிந்த அறிவாளர்; புத்தி நுட்பத்துடன் வேலைசெய்வோர்; ஆயினும், அவர்களிடத்தில் யாதொரு சிறப்பாவது, பிறருக்கு உற்சாகத்தை யுண்டுபண்ணக்கூடிய குணமாவதில்லை. இந்தச்சமயம் அவர்களுக்குத் தலைவனாயிருந்தவன் **ந்யூகாஸல்-ட்யூக்**. இவனோ வேலைசெய்யச் சக்தியற்றவன்.

10. **வில்லியம் பிட்.**—அதிர்ஷ்டவசமாய், அக்காலத்தில் **வில்லியம் பிட்** என்று பெயர்கொண்ட ஒரு பெரிய ராஜதந்திர அறிவாளியிருந்தான். இவன் பெரிய விக் குடும்பங்களைச் சேர்ந்தவனல்ல. வியாபாரத்தில் சாமர்த்தியமுள்ளவனுமல்ல. ஆயினும், இவனொரு

பெரிய சொல்வன்மையுள்ளவன். பெரியமனதும் தேசாபிமானமுமுள்ளவன். லஞ்சங்கொடுப்போரையும், இரகசி



வில்லியம் பிட், சாட்டாம் இயர்ல்.

(From a Painting by Hoare.)

யத்திற் சதிசெய்வோரையும், வெகு வெறுப்புடன் அவன் அவமதித்தான். ஆங்கிலப் பொதுஜனங்களிலநேகர் இவனிடத்திற் பிரியமுள்ளவராயிருந்தார்கள். இவனுக்கு க்ரேட் காமனர் அல்லது 'பெரிய பொதுஜன கட்சியான்' என்ற பெயர்வந்தது. அதிர்ஷ்டக் குறைவால், இவனை சாமானிய ஜனங்கள் அபிமானித்ததுபோல், பொதுஜன சபையார் மதிக்கவில்லை. அக்காலத்தில் பொதுஜன சபையின் அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் சிலருக்குத்தானிருந்தது. பிட்டுக்கு ஜனங்களிடத்திலதிகச் செல்வாக்கிருந்தது. ந்யூகாஸலுக்கு பார்லிமென்டின் மேலதிகாரமிருந்தது.



**11. அமெரிக்காவில் ஆங்கிலேயருக்கும், ப்ரேஞ்சுக்காரர்களுக்குஞ் சண்டை.**—இக்காலத்தில் ப்ரான்ஸூக்கும் இங்கிலண்டுக்கும் யுத்தம் நேர்ந்தது. அமெரிக்காவிலும், இந்தியாவிலும் எற்பட்ட அதிகாரசம்பந்தமான போட்டிதான் இந்த யுத்தத்திற்குக்காரணம். வடஅமெரிக்காவின் கீழ்சமுத்திரக்கரையில் முதல் ஜேம்ஸ் காலமுதல் குடியேறிய நாடுகள் பதின்மூன்று; இவை வரவரவிசேஷ செழிப்படைந்து வந்தன. வடஅமெரிக்காவில் ப்ரெஞ்சுக்காரர்களுக்கும் குடியேற்ற நாடுகளிருந்தன. ஸெண்ட் லாரென்ஸ் (St. Lawrence) நதிக்கரையோரமாயிருக்கும்கானடா (Canada) தேசமிவைகளில் முக்கியமானது. அதற்கடுத்தது மிஸிஸிப்பி (Mississippi) நதியின் கீழ்பாகத்திலிருக்கும் லூஸியானா (Louisiana). ப்ரெஞ்சுக்காரர்கள் இந்த இரண்டு நாடுகளையும் ஒன்றாக்கி, ஆங்கிலேயரைக் கிழக்குக்கரைக்கப்பால் வரவொட்டாமற் செய்ய விரும்பினார்கள். அமெரிக்காவின் பின்புறக்காடுகளிற் சண்டை நடந்தது. முதலில் ப்ரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரைத் தோற்கடித்தார்கள்.

**12. இந்தியாவில் யுத்தம்.**—இந்தியாவிலும் ஆங்கிலேயருக்கும் ப்ரெஞ்சுக்காரர்களுக்கும் யுத்தம் நடந்தது. இதுவரையில் இந்தியாவில் மொகலாய சக்ரவர்த்திகள் அரசுபுரிந்தனர். ஆங்கிலேயரும், ப்ரெஞ்சுக்காரர்களும் வியாபாரிகளாக இத்தேசம் வந்தார்கள். மொகலாய ராஜ்யம் சிதறுண்டு, பல சிற்றரசர்கள் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றுவந்தார்கள். சில கடற்கரைப் பட்டினங்களில் வசித்துக்கொண்டிருந்த இந்த ஐரோப்பிய வியாபாரிகளுக்கு வியாபாரஞ் செய்வதுடன் ராஜதந்திர விஷயங்களிலும் தலையிட்டுக்கொள்ள இந்தக் கலகங்கள் இடங்கொடுத்துவிட்டன. இந்தியாவின் சிற்றரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டைசெய்யும்போது அவர்களுக்குதவிசெய்ய சில போர்வீரர்களை யனுப்பித் தங்களுடைய செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்ளலாமென்று முதலிற்கண்டுகொண்டவன் ஒரு ப்ரெஞ்சுக்காரன். இந்த அறிவாளனுக்கு டூப்ளே (Dupleix) என்று பெயர். இவனுடைய சூழ்ச்சி முதலில் இவனுக்கு அதிக

பலத்தையுண்டுபண்ணிற்று. தென்னிந்தியா முழுவதிலும் ப்ரெஞ்சுக்காரரதிகாரம் பரவிற்று. மதராஸிலிருந்த ஆங்



ராபர்ட் க்ளைவ்.

(From the Original Painting by Nathaniel Dance, R. A., at Walcot.)

கிலேயரை இவன் மிகவும் நெருக்கினான். இந்த சமயத்தில் வங்காள நவாபு கல்கத்தாவிலுள்ள ஆங்கிலேயருடைய கோட்டையைக் கைவசமாக்கிக்கொண்டான்.

13. ஏழாண்டுப்போர்.—மேற்கூறிய கலகங்களை முன்னிட்டு ஐரோப்பாவில் இங்கிலண்டுக்கும், ப்ரான்ஸுக்



கும், 1756 இல் யுத்தம் நேர்ந்தது. அப்பொழுது ந்யூகாஸல் பிரதான மந்திரியாயிருந்தான். இந்த யுத்தத்தை நடத்த அவனுக்கு சக்தியில்லை. உலகத்தில் எவ்விடத்திலும் ஆங்கிலேயருக்கு ஆபத்துக்கள் விளைந்தன. பிறகு ந்யூகாஸல் பிட்டுடன் சமாதானஞ்செய்துகொண்டான். 1757 இல் பிட் மந்திரிக்கூட்டத்திற் சேர்ந்துகொண்டான். பிட்டின் நம்பிக்கை, தைரியம், ஊக்கம் முதலிய குணங்களால் எவ்விடத்திலும் ஆங்கிலேயர் கை ஓங்கிற்று. கப்பற்படையையும், தரைப்படையையும் நடத்துவதற்கு தக்க மனிதர்களை நியமிக்கும் ஆச்சரியமான சாமர்த்தியம் அவனிடத்திலிருந்தது. இங்கிலண்டு தேசத்தின்பெருமையை அவர்களுணரும்படிசெய்யும்வல்லமையும் அவனுக்குண்டு. ப்ரெஞ்சுக்காரர்களிடமிருந்து கானடா தேசத்தை ஜயிப்பதற்கு வுல்ப் (Wolfe) என்ற சேனைத்தலைவனை அனுப்பினான். 1759 இல் கானடாவின் தலைநகராகிய க்யூபெக் (Quebec) என்றவிடத்தில் ஒரு சண்டை நடந்தது. இந்தச்சண்டையில் வுல்ப் இறந்துவிட்டான். ஆயினும், ப்ரெஞ்சுக்காரர்கள் முற்றிலும் தோல்வியடைந்தார்கள். கனடா முழுவதும் ஆங்கிலேயர் கைவசமாயிற்று. இந்தியாவிலும் ஆங்கிலேயருக்கு இவ்வித ஜயம் கிடைத்தது. கிழக்கு இந்தியக் கம்பெனியில் வேலைபார்த்துவந்த ராபர்ட் க்ளைவ் (Robert Clive) என்பவன் டூப்ளேயையொத்த அறிவாளி. க்ளைவ் அவனுடைய வழியைப் பின்பற்றி டூப்ளேயினால் அழிந்துவிடும்போலிருந்த ஆங்கிலேயரின் செல்வாக்கைத் தென்னிந்தியாவில் ஓங்கும்படி செய்துவிட்டான். ஆங்கிலேயர் கல்கத்தாவை யிழந்தபிறகு க்ளைவ் வடநாடு சென்று வங்காள நவாபை 1757 இல் ப்ளாஸிச்சண்டையில் தோற்கடித்தான். சிலவருஷங்களுக்குப் பிறகு பணம் வசூலிக்கும் திவானி பாத்தியம் நவாபிடமிருந்து கம்பெனியாருக்குக் கிடைத்தது. இவ்விதம் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலேயர் மிக்க கேவலமாய் அபஜயமடைந்து வந்த ஏழாண்டுப் போரில் வில்லியம் பிட்டின் சாமர்த்தியத்தினால், ப்ரிட்டனுக்கு விசேஷ ஜயமும் கீர்த்தியுமுண்டாயின மார்ல்ப

ரோ காலத்திற்குப்பிறகு இவ்வித கீர்த்தி இப்பொழுது தான் இங்கிலண்டுக்கு வந்தது. இப்போர் நடந்துகொண்டிருக்கும்போதே 1760 இல் இரண்டாம் ஜார்ஜ மரித்தான். அவனுக்குப்பிறகு அவனுடைய பேரன் மூன்றும் ஜார்ஜ பட்டத்திற்குவந்தான்.

# அதிகாரம் XVII
## மூன்றும் ஜார்ஜ, 1760–1820

முக்கியமானவர்கள்:


சாட்டாம்-இயர்ல், வில்லியம் பிட் (William Pitt, Earl of Chatham); ந்யூகாஸல்-ட்யூக் (Duke of Newcastle); நார்த்-பிரபு (Lord North); கப்பற் சேனைத்தலைவனுன ராட்நே (Admiral Rodney); இளைய வில்லியம் பிட் (William Pitt, the Younger); சார்ல்ஸ் ஜேம்ஸ் பாக்ஸ் (Charles James Fox); கப்பற் சேனைத்தலைவனுன நெல்ஸன் (Admiral Nelson); நெப்போலியன் போனபார்ட் (Napoleon Bonaparte); ஜோஸெப் போனபார்ட் (Joseph Bonaparte); வெலிங்ட்டன்-ட்யூக், ஆர்தர் வெல்லெஸ்லி (Arthur Wellesley, Duke ot Wellington); ராஜ பிரதிநிதியான ஜார்ஜ் இளவரசன் (George, Prince Regent); வாரென் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings); மார்க்விஸ் வெல்லெஸ்லி (The Marquis Wellesley). (அதி. 18 இல் பார்க்க)

முக்கிய விஷயங்களும் காலமும்:

1760. மூன்றும ஜாரஜ் பட்டத்திற்குவந்தது.
1763. ஏழாண்டுப்போர் முடிவடைந்தது.
1770. நார்த் பிரபு பிரதான மந்திரியானது.
1773. நார்த்தின் சீர்திருத்தச் சட்டம் (North's Regulating Act).
1783. அமெரிக்கா சுயராஜ்யமடைந்தது.
1783. பிட் பிரதான மந்திரியானது.
1784. பிட் இந்தியச்சட்டம்.
1789. ப்ரெஞ்சுப் புரட்சி ஆரம்பித்தது.
1800. ப்ரிட்டனும் ஐர்லண்டும் ஐக்கியமானது.
1805. ட்ரபால்கர் சண்டை (Battle of Trafalgar).
1815. வாட்டர்லூ சண்டை (Battle of Waterloo).
1820. மூன்றும ஜார்ஜின் மரணம்.



1. மூன்றும் ஜார்ஜும் விக் கட்சியாரும்.—மூன்றும் ஜார்ஜ் இங்கிலண்டிற் பிறந்தவன். அதை தனக்கொரு பெருமையாக நினைத்தான். அவன் கூர்மையான புத்தியுள்ள



மூன்றும் ஜார்ஜ்–1767 ஆம் வருஷத்தில் இருந்தவிதம்.
(From a Painting by Allan Ramsay in the National Portrait Gallery.)

வனல்ல. ஆயினும், விடாமுயற்சியுள்ளவன். சட்டப்படித் தனக்குள்ள அதிகாரத்தை செலுத்தவிரும்பினன். ஒரு

காலத்தில் அரசனுக்கிருந்த அதிகாரங்களில் பலவற்றை முதல் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் காலங்களில் விக் கட்சியார் பிடுங்கிவிட்டார்களென்று தெரிந்து கொண்டான். ஆகையால், அவர்களிடத்திலிவனுக்கு வெறுப்புண்டாயிற்று. சமயம் வந்தவுடன் அவர்களை மந்திரி ஸ்தானங்களிலிருந்து விலக்கினான். 1763 இல் ப்ரான்ஸுடன் நடந்த சண்டையை ஒழித்தான். சமாதானஞ் செய்து கொள்ள அவசரப்பட்டபடியால் இந்த யுத்தத்தில் இங்கிலண்டுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தை இழந்தான். ஆயினும், ப்ரிட்டனுக்கு இந்தச் சமாதானத்தால் நன்மையுண்டாயிற்று. கானடா, வங்காளம் இவை இரண்டும் கிடைத்தன.

**2. ஜார்ஜ் மந்திரிகளைத் தானே நியமிக்கமுயலுதல்.**—மந்திரிகளைத் தன்னிஷ்டப்படி தாராளமாய்த்தானே நியமிக்கவேண்டுமென்பது ஜார்ஜினுடைய முக்கியமான கருத்து. 1688 ஆம் வருஷத்திய புரட்சிக்குப் பிறகு பொதுஜன சபையில் பலத்த கட்சியாருடைய தலைவர்களை மந்திரிகளாக நியமிப்பது அரசர்களுக்கு அவசியமாயிற்று. பழைய வழக்கத்தின்படி தகுந்தவர்கள் என்று தான் நினைத்தவர்களை மந்திரிகளாக நியமிக்க விரும்பினான். ஆன் அரசிகாலத்திற்குப் பிறகு முதல்முதலில் டோரிகட்சிப் பிரதான மந்திரியாக நார்த்-பிரபு இவனுடைய மனதிற்குத்தக்க மந்திரியானான். 1770ஆம் முதல் 1782ஆம்வரைக்கும் அவன் வேலைபார்த்தான்.

**3. அமெரிக்கா குடியேற்ற நாடுகளிற் கலகம்.**—நார்த்-பிரபு மந்திரிவேலை பார்த்தகாலத்தில் அமெரிக்கா குடியேற்ற நாடுகள் கலகம் செய்ததுதான் முக்கியமானவிஷயம். ஏழாண்டுப் போரில் இங்கிலண்டுக்கு அதிகச்செலவு ஏற்பட்டுவிட்டது; அச்செலவிற்காக அமெரிக்கர் வரிகொடுக்கவேண்டுமென்று ஜார்ஜ் நினைத்தான். ஆகையால், பார்லிமென்டைக்கொண்டு முத்திரைக்காகிதச் சட்டம் (The Stamp Act) என்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தினான். அச்சட்டப்படி அமெரிக்கர் வரிசெலுத்தி முத்திரைக்காகிதங்களை வாங்கி அவைகளிற்றான் தங்களுடைய பத்திரங்களை எழுதவேண்டியதாயிற்று. அமெரிக்கருக்குக் கோபம் வந்தது.



ஆங்கிலப் பார்லிமென்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்புமதி
காரம் தங்களுக்கில்லாதபடியால் எவ்வித வரியையும்
தாங்கள் செலுத்த வேண்டியவர்களல்ல ரென்றார்கள்.
அவர்கள் பலமாய் கூக்குரலிட்டு வாதாடினபடியால் அச்
சட்டத்தை ரத்துசெய்ய வேண்டியதாயிற்று. ஆயினும்,
இப்படிச் செய்வதற்கு முன்னரே துன்பங்கள் ஏற்பட்டு
விட்டன. அமெரிக்கர் ஒரு பெரிய சேனையைத்திரட்டி
ஜார்ஜ் அரசனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தார்கள்.
1775 இல் யுத்தம் நடந்தது. உடனே சுவாதீன விளம்பரம்
(Declaration of Independence) என்ற ஒரு பத்திரத்தை
எழுதி அதை அமெரிக்கர் வெளியிட்டனர். இதன்படி,
அமெரிக்கர் ஜார்ஜ் அரசனுடைய குடிகளல்லரென்று பிர
சுரஞ்செய்தார்கள். பதின்மூன்று குடியேற்றநாடுகளும்
ஒன்றுசேர்ந்து அவைகட்கு அமெரிக்கா ஐக்கிய ராஜ்யம்
(The United States of America) என்று பெயர் ஏற்பட்
டது.

**4. அமெரிக்காவும், சாட்டாம் பிரபுவும்.**—அமெரிக்கர்
புதிய வரிகளை கொடுக்கமாட்டோமென்று மறுத்தவிஷ
யம் அநேக ஆங்கிலேயருக்குச் சம்மதந்தான். அவர்
களில் வில்லியம் பிட் ஒருவன். இவனுக்கு சாட்டாம் பிரபு
என்ற பட்டம் இப்பொழுது கிடைத்தது. அமெரிக்கர்
மூன்றும் ஜார்ஜை எதிர்த்த விஷயத்திலிவனுக்குத் திருப்
திதான். ஆனால், இந்த யுத்தத்திற்கு ஜார்ஜதான் முற்
றிலும் உத்தரவாதியென்று பழிசுமத்துவது சரியல்ல.
ப்ரிட்டன் சம்பந்தமில்லாமல் தாங்கள் சுயராஜ்யத்தை
நடத்தவேண்டுமென்ற எண்ணம் அமெரிக்காத் தலைவர்
அநேகருக்கு ஆரம்பத்திலேயே உண்டாகிவிட்டது.
இந்த யுத்தத்தால் ஆங்கிலராஜ்யம் சிதறிவிடுமென்று
நினைத்தபடியால், சாட்டாமுக்கு அதிகக் கோபமுண்
டாயிற்று. இங்கிலண்டுக்குப் பழைய விரோதிகளான
ப்ரான்ஸ், ஸ்பெயின் முதலியநாடுகள் அமெரிக்கர் கட்
சியிற் சேர்ந்துகொண்டு யுத்தஞ்செய்ய வாரம்பித்ததில்
அவனுடைய கோபமதிகரித்தது. தான் வெகு கஷ்டப்
பட்டு உண்டுபண்ணின ப்ரிட்டிஷ் சக்ராதிபத்தியம் சிதை
வுறக்கூடாதென்று தான் இறக்கும் சமயத்திலும் உரக்

கப்பேசினான். அவன் இறந்துவிட்டபிறகு, அமெரிக்கரும், ப்ரிட்டிஷரும் சேர்ந்திருப்பார்களென்ற நம்பிக்கை அடியோடே தொலைந்துபோயிற்று. இந்தப் பதின்மூன்று மாகாணங்களிலுமுள்ள ப்ரிட்டிஷ் குடியேற்ற நாட்டார் தங்களுடைய பழைய தேசத்தின் சம்பந்தத்தை தொலைத்துக்கொண்டிருந்தபொழுது, கானடாவிலிருந்த ப்ரெஞ்சுக்காரர் ஜார்ஜ் அரசனுக்கு விசுவாசமுள்ள குடிகளாயிருந்தனர். ஆகையால், கானடா தேசமாத்திரம் ப்ரிட்டிஷ் ராஜ்யத்திற்குள் அடங்கினதாகவே யிருந்தது.

5. அமெரிக்கா சுயராஜ்யம் பெற்றது.—இப்பொழுது அமெரிக்கரும், ஐரோப்பாவிலிருந்த பாதிப்பேர்களும் ப்ரிட்டனுக்கு விரோதிகளானார்கள். மூன்றும் ஜார்ஜும், நார்த்-பிரபுவும் தங்களாலியன்ற மட்டும் முயற்சிசெய்தார்கள். ஆயினும், ஏழாண்டுப்போரில் சாட்டாம் பிரபு ஊக்கத்துடன் செய்த வேலையைப்போல் இவர்கள் இந்த யுத்தத்தில் செய்யமுடியவில்லை. கொஞ்சகாலம் இங்கிலண்டு கடலிலுள்ள அதிகாரத்தைக்கூட இழந்திருந்தது. ராட்நே என்ற ஒருபெரிய கப்பற்படைத்தலைவன் ப்ரெஞ்சுக்காரர்களை அநேக கப்பற்சண்டைகளில் தோற்க அடித்து, சமுத்திரத்தில் ஆங்கிலேயருடைய அதிகாரத்தை மறுபடியும் நிலைநாட்டினான். அமெரிக்காவில் நடக்கும்யுத்தம் இங்கிலண்டுக்குதோல்வியை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது. இரண்டுப்ரிட்டிஷ்சேனைகள் அமெரிக்கருக்குத் தலைவணங்க வேண்டியதாயிற்று. 1773 இல் சமாதானம் ஏற்பட்டது. அதன்படி அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் சுயராஜ்ய வதிகாரத்தை ப்ரிட்டிஷார் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

6. இளைய பிட் மந்திரியானது.—யுத்தம் முடிவதற்குள் நார்த்-பிரபு வேலையைவிட்டு நீங்கினான். அநேக காலம் கஷ்டப்பட்டுக் கடைசியில் 1783 இல் தன் மனதிற்கிசைந்த ஓர் மந்திரி அரசனுக்கு வாய்த்தான். இவன் சாட்டாம்-பிரபுவின் இரண்டாவது மகன் வில்லியம் பிட். ஜார்ஜ் அரசன் அவனைத்தன் பிரதான மந்திரியாக்கும்போது பிட்டுக்கு வயது இருபத்திநான்குதான். தகப்



பனைப்போல் அவன் அவ்வளவு அறிவாளியல்ல. ஆயினும், வாசாலத்தனமும், தெளிந்த அறிவும், காரியத்திலேயே நோக்கமுமுள்ளவன். தன் தகப்பனைவிட அதிகமாய் இவன் மற்றவர்களுடன் ஒத்துவேலைசெய்யக்கூடியவன். அவன் தன்னை அரசனுக்கும், ஜனங்களுக்கும் நம்பிக்கையுள்ளவனாகச் செய்துகொண்டான். 1783௵ முதல் 1801௵வரைக்கும் அவன் தொடர்ந்து வேலை பார்த்தான். பிறகு, அவனுக்கும் அரசனுக்கும் அபிப்பிராயபேதமுண்டாகி அவன் வேலையைவிட்டு விலகினான்.



இளைய வில்லியம் பிட்.

பிட் டோரிகட்சியைச்சேர்ந்தவனென்பார்கள். ஆயினும், அவனுடைய கொள்கை அவனுடைய தகப்பனுடையதை ஒத்திருந்தது. அவன் தகப்பனையோ விக் கட்சியானென்பார்கள். நார்த், பிட் இருவரும் டோரி கட்சியில் வெகுகாலம் அதிகாரம் செலுத்தினார்கள். மூன்றும் ஜார்ஜ் இறந்த பிறகுங்கூட இவர்கள் மந்திரிகளாக விருந்தனர்.

விக் கட்சியில் பிட்டுக்கு முக்கிய சதிரி சார்ல்ஸ் ஜேம்ஸ் பாக்ஸ். பாக்ஸ் நன்றாய்ப் பேசுந்திறமையுள்ளவன்; நல்ல சுபாவமும், தயாளகுணமும் வாய்ந்தவன். ஜார்ஜுக்கு அவனிடத்தில் விசேஷ வெறுப்பிருந்தபடியால் அவன் மந்திரியாவதற்கு வழியில்லை.

7. **இங்கிலண்டு கைத்தொழிலிற் சிறந்த நாடானது.**—பிட் மந்திரியாயிருந்த காலத்தில் இங்கிலண்டில் விசேஷ மாறுதல்கள் ஏற்பட்டன. முதல்முதலில் இங்கிலண்டு ஒரு பெரிய கைத்தொழில் நாடானது இக்காலத்தில்தான். இதுவரையில், இங்கிலண்டு குடியானவர்களும், வியாபாரிகளும் நிறைந்த நாடாகவிருந்தது. கையினால் நூலை நூற்று துணியை நெய்யுங்காலம் மாறிவிட்டது. சில அற்புதமான இயந்திரங்களைச் செய்ய ஜனங்கள் கற்றனர். இவைகளைக்கொண்டு நெசவுச்சரக்குகளை ஏராளமாயும், விலைகுறைவாயும், சீக்கிரத்திலுண்டுபண்ணும் திறமையும் வந்துவிட்டது. மேலும், எல்லாவித இயந்திரங்களையும் வேலைசெய்விக்க முதல்முதல் நீராவி இயந்திரம் உபயோகத்திற்கு வந்தது. நாடெங்கும் கெட்டியான நல்ல ரஸ்தாக்கள் ஏற்பட்டன. ஆழமான கால்வாய்களும் உண்டாயின. இவைகளின் வழியாய் கைத்தொழிற் சாமான்களை, அவைகள் உற்பத்தியாகு மிடங்களிலிருந்து, விலைபோகுமிடங்களுக்குச் சுலபமாய்க் குறைந்த செலவில் கொண்டுபோவதற்கு இடமுண்டாயிற்று. நிலக்கரியாவது, இரும்பாவது அகப்படக்கூடிய விடங்களில் பெரிய பட்டணங்கள் உண்டாயின. இங்கிலண்டில் பணவரும்படியும், ஜனக்கூட்டமும் அதிகரித்தது. ஆயினும், இவ்விதமாறுதல்களால் விசேஷமான துன்பமும் விளைந்தது. அநேகர் ஏழைகளானார்கள். அவர்களைச் சரிவர ரட்சிப்பாருமில்லை. கூலி குறைந்துவிட்டது. வேலை அகப்படாமல் அநேகர் வருந்தினார்கள். பார்லிமென்ட் அங்கத்தினரை தேர்ந்தெடுப்பதில் கைத்தொழில் வேலை நடக்கும் ஜில்லாக்களிலுள்ள எஜமானர்களுக்காவது, வேலைக்காரர்களுக்காவது யாதொரு செல்வாக்குமில்லை. கைத்தொழிற்சாலையில் வேலைசெய்த கூலியாட்கள் மிகுந்த கேவலமான நிலைமையிலிருந்தார்கள். ஆகையால், தேசத்



திற்குத் துன்பம் வந்தகாலத்தில் அதற்கு இவர்கள் உதவி செய்வார்களென்று நினைக்கவிடமில்லை. ஆயினும், பல வருஷங்கள்வரைக்கும் நாடு செழிப்பாகவே யிருந்தது. ராஜதந்திர மறிந்தவர்களி லநேகரைவிட அதிக நன்றாய் பிட்டுக்கு வியாபாரவிஷயந் தெரியும். ஆகையால், இம்மாறுதல்கள் முன்னுக்குவரும் விஷயத்தில் அவன் அதிகமாய் வேலைசெய்தான்.

8. **ப்ரெஞ்சுப் புரட்சி.**—1789 இல் ப்ரான்ஸ் தேசத்தில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. இக்காலம்வரையில் ப்ரான்ஸ் தேசத்தில் தங்கள் இஷ்டப்படிச் செய்யும் கொடுங்கோன் மன்னர் ஆண்டுவந்தார்கள். அவர்களுடைய குடிகள் மிகுந்த துன்பத்தை அனுபவித்து வந்தார்கள். இப்பொழுது தன் ஜனங்களுக்குரிய ஒருவித மந்திராலோசனைசபையை ப்ரெஞ்சு அரசன் கூட்டவேண்டியதாயிற்று. ஆங்கிலதேசத்து நீடித்த பார்லிமென்டைப்போல் இந்தச்சபையார் சகல அதிகாரங்களையுங் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆங்கில தேசத்திலிருப்பதுபோல் தங்களுடைய நாட்டிலும் ஒருவித ராஜாங்கத்தை ஸ்தாபித்தார்கள். ஆயினுமிந்தப் புதிய ஏற்பாடு சரிவர நடைபெறவில்லை. கொஞ்சகாலத்திற்குள் முழுவேறுபாட்டைக் கருதியவர்கள் காரிய நிர்வாகத்தலைவர்களானார்கள். அவர்கள் அரசனையும், அரசியையும் கொன்று ஒரு குடியரசை ஸ்தாபித்தார்கள். ஆயிரக்கணக்கான ப்ரெஞ்சுக்காரர்கள் கொலையுண்டனர். சகிக்கமுடியாத கொடுமைகள் இக்காலத்திலேற்பட்டன. ஆகையால், இக்காலத்தில் நடந்தேறிய ஆட்சிக்கு திகில் ஆட்சி (The Reign of Terror) என்று பெயர். இப்பொழுது ப்ரான்ஸை ஆண்டுவந்த மூர்க்கர்கள் ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் அவரவர்களுடைய அரசர்களையும் தொலைக்க விரும்பும் எல்லா தேசத்தார்களுக்கும் தாங்கள் உதவிசெய்வதாகவும் வெளிவந்தார்கள்.

9. **ப்ரான்ஸுடன் யுத்தம்.**—இந்த ப்ரெஞ்சுப் புரட்சிக்கு விரோதமாய் ஆங்கிலேயர் யுத்தத்திற்குச் சென்றார்கள். நடுவிற்கொஞ்ச மாதங்கள் தவிர மற்றக் காலமெல்லாம் இருபது வருஷங்களுக்குமேல் இங்கிலண்டுக்கும் ப்ரான்

ஸுக்கும் சண்டை நடந்துகொண்டே யிருந்தது. இது மிகக் கடுமையான யுத்தம். யுத்தத்தை நடத்துவதில் தன் தகப்பனைப்போல் பிட் அவ்வளவு சாமர்த்தியமுள்ள மந்திரியல்ல; ஆகையால், ப்ரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலே



நெல்ஸன் பிரபு.

யரையும், அவர்களுடன் சேர்ந்தவர்களையும் அநேகத் தரைச்சண்டையில் தோற்கடித்தார்கள். அதிர்ஷ்ட வசத்தால், ப்ரிட்டன்தேசத்திற்குக் கப்பற்சண்டைக



ளில் உண்டான வெற்றிகளால் ப்ரெஞ்சுக்காரர்கள் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து ஆங்கில தேசத்திற் படையெடுக்க முடியாமற்போயிற்று. ஆனால், வரவர ஆங்கிலேயருக்கு ஆபத்து அதிகமாய்க்கொண்டே யிருந்தது. கடைசியில், ப்ரெஞ்சுசேனைத் தலைவர்களிற் சிறந்தவனான நெப்போலியன் போனபார்ட் என்றவன், ப்ரான்ஸில் புரட்சியாட்சியைத் தொலைத்து ப்ரெஞ்சுதேச சக்ரவர்த்தியானான். ப்ரான்ஸ் மாத்திரமல்லாமல் ஐரோப்பாவில் அநேகமாய் மற்றெல்லாநாடுகளும் தனக்குக் கீழ்ப்படியும்படியாய்ச் செய்துவிட்டான். பிறகு ப்ரான்ஸின் வடகடற்கரையில் ஒரு பெரிய சேனையைத்திரட்டித் தான் ப்ரிட்டன் தீவிற்குள் சுலபமாய் நுழையும்படி அங்குள்ள ப்ரிட்டிஷ் கப்பற்படையைத் தந்திரமாய் வேறிடஞ்செல்லும்படி ஏமாற்ற முயன்றான். ஆங்கிலக் கப்பற்படைத்தலைவருள் சிறந்தவனான நெல்ஸன் பிரபு கப்பற்படை அதிகாரத்தை வகித்துவந்தான். 1805 இல் நெல்ஸன் ப்ரெஞ்சு கப்பற்படையைத் தாக்கி, ஸ்பெயின் தென்மேற்கு கடற்கரையோரமாய் ட்ரபால்கர் சண்டையில் ப்ரெஞ்சு கப்பற்படையை முற்றிலும் அழித்துவிட்டான். இச்சண்டையில் நெல்ஸன் உயிரிழந்தான். ஆயினும், அவன் மரிக்கு முன்னரே தன்படைக்கு வெற்றியை யுண்டுபண்ணிவிட்டான். அக்காலமுதல் இங்கிலண்டுக்கு கடல்களில் ஒப்பற்றவலிமை யிருந்துவந்தது. ஆகையால், அன்னிய நாட்டார் இங்கிலண்டுமேல் படையெடுப்பார்களென்ற பயம் ஆங்கிலேயருக்கில்லை.

10. நெப்போலியனின் வெற்றிகள்.—1804 இல் பிட் மறுபடியும் மந்திரியானான். ட்ரபால்கர் சண்டை நடக்கும் கொஞ்ச நாளைக்குமுன் ஆஸ்ட்ரியா, ருஷ்யாதேசங்களை நெப்போலியனுடன் போருக்குச்செல்ல பிட் தூண்டினான். ஆயினும், ப்ரெஞ்சு சக்ரவர்த்தி அவர்களை முற்றிலும் தோற்கடித்து விட்டான். கடைசியில், கிழக்கு தேசங்களில் ருஷ்யா சக்ரவர்த்தி தன்னிஷ்டப்படி நடந்து கொள்ளலாமென்றும், மேற்கு நாடுகளில் ப்ரெஞ்சு சக்ரவர்த்தி தன்னிஷ்டம்போல் நடந்துகொள்ளலாமென்றும், நெப்போலியன் ஒரு ஒப்பந்தஞ்செய்து

கொண்டான். இதற்குக் கொஞ்சநாள் முன் 1806 இல் பிட் மிகுந்த விசாரத்தால் மெலிவடைந்து இறந்தான். அவன் எவ்வளவு தவறுகளைச் செய்திருந்தபோதிலும் அவனுக்கு மனத்தளர்ச்சி யேற்படவில்லை.

**11. ப்ரிட்டனில் புரட்சிவராமற் றடுத்தது.**—வெளிநாட்டில் ப்ரெஞ்சுக்காரர்களுடன் யுத்தஞ்செய்வது மாத்திரமே பிட்டினுடைய வேலையல்ல. வடக்கேயுள்ள கைத்தொழிற் பட்டணங்களில் வசித்துவந்த புத்தியில்லாமலும், கஷ்டப்பட்டுக் கொண்டுமிருந்த ஜனங்களுக்கு ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் தாங்களும் செய்யவேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. ப்ரெஞ்சுக்காரர் வழியிற் செல்லமுயன்றோர் அனைவரையும் பிட் திடமான சித்தத்துடன் அடக்கிவிட்டான். புரட்சி என்ற புயற்காற்றால் யாதொருசேதமும் வராதபடி செய்த மாலுமி இவன்தானென்று ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். ஆங்கிலேயர் நன்னிலைமையிலிருந்தபடியால் ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் அவர்கள் செய்வதற்கு யாதொரு காரணமுமில்லை. அதிகாரஞ்செலுத்திய மந்திரிமார்களுக்கு ப்ரெஞ்சு புரட்சியாலுண்டான பயத்தால் எவ்வித மாறுதல்களையுஞ் செய்ய மனமில்லாதிருந்தது விசனிக்கதக்கதே. பார்லிமெண்டுக்கு அங்கத்தினரை தேர்ந்தெடுக்கும் மாதிரியில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று தன் தகப்பனைப்போல் பிட்டும் நினைத்திருந்தான். ஆயினும், அநேக ஜனங்களுக்கு எவ்வித திருத்தமும் புரட்சியையுண்டுபண்ணிவிடுமென்ற பயம் வந்துவிட்டது. ப்ரான்ஸின் புரட்சியை நெப்போலியன் தொலைத்துவிட்ட வெகுகாலத்திற்குப் பிறகுங்கூட இங்கிலண்டின் ஜனங்களுக்கு அதனுடைய கற்பனைகளிலேற்பட்ட பயம் போகவில்லை.

**12. ஐர்லண்டில் 1798 இல் உண்டான கலகம்.**—ஐர்லண்டில் பிட்டுக்கு விசேஷ துன்பம் நேரிட்டது. மூன்றாம் வில்லியம் ஐர்லண்டை ஜயித்ததுமுதல் அந்நாட்டை ஆங்கிலேயர் கொடுமையாய் ஆண்டுவந்தார்கள். ஆயினும், மூன்றாம் ஜார்ஜ் காலத்தில் அவர்களுடைய நிலைமை சற்று திருப்திகரமாகவிருந்தது. புதிய மதத்தினர் தவிர மற்றவர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினராகக்



கூடாது. இராஜாங்க உத்தியோகங்களும் புதிய மதத்தினருக்கே கிடைத்தன. இதனால் கத்தோலிக் ஜனங்களுக்கு வெறுப்புண்டாகி, 1798 இல் கலகஞ்செய்தார்கள். ஆயினும், கலகம் அடங்கி ஐர்லண்டில் சமாதானமேற்பட்டது.

**13. ப்ரிட்டனும் ஐர்லண்டும் ஐக்கியமானது.** — ஐரிஷ் புதிய மதத்தினரை இஷ்டப்படி அந்நாட்டை ஆளவிடுவது இனிமேல் சாத்தியப்படாதென்று பிட் கண்டுகொண்டான். இங்கிலண்டும், ஸ்காட்லண்டும் ஒன்று சேர்ந்ததுபோல், ஐர்லண்டையும், ப்ரிட்டனையும் ஒன்று சேர்க்க அவனொரு ஏற்பாடுசெய்தான். இதுவரையில் பார்லிமெண்ட் அவர்கள் வசத்திலிருந்தபடியால் ஐரிஷ் புதிய மதத்தினருக்குக் கோபமுண்டாயிற்று. ஐரிஷ் கத்தோலிக் ஜனங்கள் அதைப்பற்றி கவனிக்காமலோ அல்லது ஆதரித்தோவிருந்தார்கள். இந்த ஐக்கியமேற்பட்ட பிறகு கத்தோலிக் மதத்தினர் பார்லிமெண்டில் அங்கத்தினராகவும், மந்திரிகளாகவுமிருப்பதற்கு அவர்களுக்கு அனுமதிகொடுப்பதாய் வாக்களித்து, அவர்களைக் கைவசப்படுத்த பிட் முயன்றான். பிறகு 1800 இல் ஐக்கிய சட்டத்தை (The Act of Union) ஏற்படுத்தினான். ஐரிஷ் பார்லிமெண்டாரிதற்குச் சம்மதிக்காவிடினும் பிட் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைச் சம்மதிக்கச் செய்தான். ஐரிஷ் தனிப் பார்லிமெண்ட் தொலைந்தது. வெஸ்ட்மின்ஸ்டரில் மூன்று ராஜ்யங்களுக்கும் சேர்ந்த ஐக்கிய பார்லிமெண்டில் ஐரிஷ் பிரபுக்களும், ஐரிஷ் பொதுஜன பிரதிநிதிகளும் சேர்ந்து உட்கார அனுமதி பெற்றார்கள்.

**14. பிட் விலகுதல்.** — ரோமன் கத்தோலிக் ஜனங்களுக்கு ஏற்பட்ட நிபந்தனைகளை விலக்குவதற்கு பிட் செய்த கத்தோலிக் விமோசனம் என்ற ஏற்பாட்டை மூன்றாம் ஜார்ஜ் தடுத்தது விசனிக்கத்தக்கது. தனக்கு முடிசூட்டிய காலத்தில் புதிய மதவொழுக்கத்தை ஆதரிப்பதாக தான் வாக்களித்திருப்பதாக அரசன் சொன்னான். ஆகையாலிப்பொழுது கத்தோலிக் மதத்தினருக்கு சுயேச்சையைக் கொடுப்பது தான்செய்த பிரமாணத்

திற்கு விரோதமென்றும் கூறினான். பிட் அதிருப்தியடைந்து, 1801 இல் வேலையைவிட்டு விலகினான். கத்தோலிக்கர் தங்களை ஏமாற்றிவிட்டதாக நினைத்து இந்த ஐக்கியத்தில்வெறுப்படைந்தார்கள். நெப்போலியனுக்கு விரோதமாய்ப் பெரிய யுத்தத்தை நடத்துவதற்கு அவன் மறுபடியும் அதிகாரம் பெறும்வரையில் பிட் மந்திரி வேலையைவிட்டு விலகியிருந்தான். இந்தக் கடினமான வேலையை அவன் எவ்வளவு ஊக்கத்துடன் செய்தானென்றும், அதனால் அவன் எப்படி தன் பிராணனை விட்டானென்றும் முன்னரே கூறியுள்ளோம்.

15. நீடித்த டோரி ஆட்சி.—பிட் இறந்தவுடன் அவனுடைய எதிரி பாக்ஸ் பிரதான மந்திரியானான். இவன் நெப்போலியனுக்கு விரோதமான யுத்தத்தை ஏற்கனவே ஆட்சேபித்தவன். ஆயினும், இப்பொழுது அதைத் தன்னாலியன்றமட்டும் பலமாய் நடத்தினான். ஆனால் சீக்கிரத்தில் அவனும் இறந்தான். ஜார்ஜ் மறுபடியும் டோரி கட்சியாரை மந்திரிகளாய் நியமித்துக் கொண்டான். அவர்கள் இவன் ஆயுள் உள்ளவரைக்கும் வேலை பார்த்துவந்தார்கள். ப்ரெஞ்சு சக்ரவர்த்தியுடன் அடிக்கடி சண்டைசெய்வதில் இவர்கள் பலமாய் உழைத்து வந்தார்கள். ஐரோப்பா முழுவதையும் கைவசமாக்கிக் கொண்டு, நெப்போலியன் இங்கிலண்டையும் ஜயிக்க விரும்பினான். ப்ரிட்டானியர் அவனுடன் தனியே யுத்தஞ்செய்யவேண்டியிருந்தது. ஆயினும், தங்களுடைய கப்பற்பலத்தால் இவர்களுக்கு சமாளிக்க முடிந்தது.

16. தீபகல்பத்திற் சண்டை.—1808 ஆம் வருஷத்திற்குப் பிறகு ப்ரிட்டிஷார் நெப்போலியன்மேல் தரைச்சண்டையிலும், கப்பற்சண்டையிலும் வெற்றியடையும்படியான யுத்தத்தை பலமாய் நடத்தினார்கள். ஸ்பெயினில் அவனுடன் யுத்தஞ்செய்வ்தற்கு ஆர்தர் வெல்லெ:ஸ்லி என்பவனை சேனைத்தலைவனாய் நியமித்து ஒரு சேனையை அனுப்பினார்கள். இவன் ஏற்கனவே இந்தியாவில் பலவெற்றிகளையடைந்து கீர்த்திபெற்றிருந்தான். இப்பொழுது ப்ரெஞ்சுக்காரர்களை பலவிடங்களில்தோற்கடித்து வெலிங்டன்-ட்யூக் என்ற பட்டத்தைப் பெற்றான். ப்ரெஞ்சு சக்ரவர்த்



திக்கு விரோதமாய் 1808௵ முதல் 1814௵ வரைக்கும் தீபகல்பயுத்தத்தை இவன் பலமாய் நடத்தினான். ஸ்பெயின், போர்ச்சுகல் அடங்கிய தீபகல்பத்தில் இந்த யுத்தம் நடைபெற்றபடியால் அதற்கு இப்பெயர் வந்தது. ப்ரெஞ்சுக்காரரால்வெலிங்டனுக்கு அடிக்கடி துன்பம் நேரிட்டது. ஒவ்வொரு வெற்றிக்குப்பிறகும் அவன் பின்



வெலிங்டன் ட்யூக்.

னடையவேண்டியதாயிற்று. ஆயினும், சேனையின் வீரத்திற்குக் குறைவு உண்டாகாதபடி செய்துகொண்டான். 1814 இல் ப்ரெஞ்சுக்காரர்களை ஸ்பெயினைவிட்டுத் துரத்தினான். மார்ல்பரோவுக்குப் பிறகு ப்ரிட்டிஷ் சேனைத்தலைவரில் இவனே சிறந்தவன்.

17. நெப்போலியன் தாழ்வடைந்தது—1812 இல் நெப்போலியன் ருஷ்யாவுடன் சண்டையிட்டு, அத்தேசத்தின் மீதுபடையெடுத்தான். ஆனால், குளிர்காலம் வந்தவுடன்

அத்தேசத்தைவிட்டுத் திரும்பி ஓடிவரவேண்டியதாயிற்று. வரும்வழியில் அநேகமாய்த் தன் சேனைமுழுவதையுமிழந்தான். இவ்விதம் ருஷ்யாவில் ஏற்பட்ட அபஜயத்தால் நெப்போலியனுக்குத் தாழ்வுவர ஆரம்பித்தது. இவன் வெகுகாலமாய் அடக்கி ஆண்டுவந்த தேசத்தாரெல்லாம் இப்பொழுது இவனுக்கு விரோதமாய்க் கிளம்பினார்கள். 1814 இல் இவன் தன் ராஜ்யத்தைவிட்டு எல்டா (Elba) வுக்கு தேசப்பிரஷ்டனாய்ப் போகவேண்டியதாயிற்று. எல்பா இட்டலி கடற்கரைக்குச் சமீபமாயுள்ள




இங்கிலண்டின்மேல் படையெடுத்ததற்கு அறிகுறியாக நெப்போலியன் அடித்துவைத்த பதக்கம். இந்த படையெழுச்சி நடைபெறவில்லை.

(From a Cast in the British Museum.)

ஒரு தீவு. ஆயினும், 1815 இல் இவன் ப்ரான்ஸுக்குத் திரும்பிவந்து, தன்னுடைய பழைய அதிகாரத்தை மீண்டும் பெற்றான். இந்தப் பெரிய கொடுங்கோலனை தொலைப்பதற்கு ஐரோப்பாமுழுவதும் ஒன்றுசேர்ந்து, பல சேனைகள் ப்ரான்ஸை சுற்றி வளைந்துகொண்டன. வெலிங்டன் சேனைத்தலைவனாய் நடத்திய ஒரு பெரிய ப்ரிட்டிஷ் போர்வீரர் அடங்கிய ஒரு திரண்டசேனை நெதர்லண்டில் கூடியிருந்தது. அதை நெப்போலியன் திடீரென்று தாக்கினான். பலமான சண்டைநடந்தது. வாடர்லூ என்ற இடத்தில்நெப்போலியனை வெலிங்டன் தோற்கடித்தான். தெற்கு அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலுள்ள ஸெண்ட் ஹெலினா (St. Helena) என்ற ப்ரிட்டிஷ்



தீவில் ப்ரெஞ்சு சக்ரவர்த்தி நெப்போலியன் தான் மரிக்கும் வரையில் சிறையிருந்தான்.

18. மூன்றாம் ஜார்ஜின் மரணம்.—மூன்றாம் ஜார்ஜ அறுபதுவருஷம் ஆண்டபிறகு 1820 இல் இறந்தான். 1810 இல் அவனுக்கு பயித்தியம் பிடித்தது. அவனுடைய மூத்தமகன் ஜார்ஜ, ராஜப்பிரதிநிதி இளவரசன் என்ற பட்டத்துடன் இங்கிலண்டை அரசாட்சி செய்துவந்தான். கிழ அரசனுடைய மரணத்திற்குப் பிறகு அவன் நான்காம் ஜார்ஜ என்ற பட்டம்பெற்று அரசனானான்.

## அதிகாரம் XVIII

## நான்காம் ஜார்ஜ், 1820–1830; நான்காம் வில்லியம், 1830–1837

முக்கியமானவர்கள்:

ஜார்ஜ் கானிங் (George Canning); வெலிங்டன்-ட்யூக் (The Duke of Wellington); டானியல் ஓ-கானெல் (Daniel O'Connell); ஸர் ராபர்ட் பீல் (Sir Robert Peel).

முக்கிய விஷயங்களும் காலமும்:

**1820.** நான்காம் ஜாஜ் பட்டத்திற்கு வந்தது.
**1829.** கத்தோலிக்கருக்கு விமோசனமளித்தது (Catholic Emancipation Granted).
**1830.** நான்காம் ஜார்ஜின் மரணம்.
**1830.** நான்காம் வில்லியம் பட்டத்திற்கு வந்தது.
**1832.** சீர்திருத்தச்சட்டம் ஏற்பட்டது (Reform Bill passed).
**1837.** நான்காம் வில்லியம் இறந்தது.

1. நான்காம் ஜார்ஜின் குணம்.—நான்காம் ஜார்ஜ் கெட்ட சுபாவமுள்ளவன்; பலமற்றவரசன். ஆனால், அவன் துர்ப்பலமாயிருந்தபடியால் தேசத்திற்கு ஒரு நன்மையுண்டாயிற்று. மூன்றாம் ஜார்ஜ் கஷ்டப்பட்டு திருப்பிக்கொண்டுவந்த அரச அதிகாரத்தை இவன் இழந்தான். யாரை மந்திரிகளாக நியமிக்கவேண்டுமென்பதை மறுபடியும் பார்லிமெண்டார் தீர்மானிக்க ஆரம்பித்துவிட்டனர்.

2. ஜார்ஜ் கானிங்.—நான்காம் ஜார்ஜ் ஆட்சிகாலத்திலும் டோரி கட்சியார் அதிகாரம் செலுத்திவந்தனர். ஆயினும், சில டோரியர் வில்லியம் பிட்டின் தாராள கற்பனையை அனுசரித்தனர். அவர்களுக்கு மேதாவியான ஜார்ஜ் கானிங் தலைவன். அவனுடைய அதிகாரம் வரவர வலுத்தது. ஆனால், அவன் கொஞ்சநாளிலிறந்தான். பிறகு வெலிங்டன்-ட்யூக்குக்கு அதிகாரம்வந்தது. இவன் சிறந்த போர்வீரனாயிருந்ததுடன், கீர்த்திவாய்ந்த ராஜதந்திரியாகவுமிருந்தான்.

3. கத்தோலிக் மதத்தினருக்கு விமோசனம் அளித்தல்.—கானிங்கைப்போலில்லாமல் வெலிங்டன் பழைய கொள்கைகளுள்ளவன். அவன் கத்தோலிக்கருக்கு சுவாதீனமளிப்பதில் பிரியமில்லாதவன். பிட்டைப்போல் கானிங் அதை ஆதரித்தான். புதிய மதத்தினருக்கும், தங்களுக்கும் சமமான பாத்தியங்கள் கிடைக்கவேண்டுமென்று ரோமன் கத்தோலிக்கர் ஐர்லண்டில் கூச்சலிட ஆரம்பித்தார்கள். டானியல் ஓ-கானேல் என்ற சிறந்த ஐரிஷ் வக்கீல் ஒருவன் இந்த கிளர்ச்சிக்குத் தலைவனானான். வெலிங்டன் இவனுக்கிணங்குவதே நல்லதென்று நினைத்தான். 1829 இல் ஒரு பார்லிமெண்ட் சட்டம் ஏற்பட்டது. அச்சட்டத்தின்படி ரோமன் கத்தோலிக்கர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினராகவும் மந்திரிகளாகவும் ஆகலாம் என்று அவர்கள் அனுமதிபெற்றார்கள்.

4. நீராவிக்கப்பல்களும், இருப்புப்பாதைகளும் ஆரம்பித்தன.—1830 இல் நான்காம் ஜார்ஜ் இறந்தான். அவனுக்குச் சந்ததியில்லாததினால் அவன் தம்பி நான்காம் வில்லியம் அரசனானான். ஜார்ஜ் மரிப்பதற்கு முன்னால் நீராவியந்திரங்கள் ஓடக்கூடிய இருப்புப்பாதைகள் ஏற்பட்டன. அவைகள் வியாபாரச் சரக்குகள் கொண்டுபோவதற்கு உபயோகமாயிருந்தன. ஜலம் இறைப்பதற்கும், கருவிகள் செய்வதற்கும் நீராவியந்திரங்களை வெகுகாலம் உபயோகித்துவந்தார்கள். காற்றின் உதவியில்லாமலே கப்பல்கள் கடலிற் செல்வதற்கும் இவைகளை உபயோகித்து வந்தார்கள். இப்பொழுதே தரையிற்செல்லும் நீராவியந்தரமும புதிதாய் ஏற்பட்டது. கொஞ்சகாலத்திற்குள் நீரா



விக்கப்பலைப்போலிதுவும் உபயோகத்திற்கு வந்தது.
1830 இல் லிவர்ப்பூலிலிருந்து மான்செஸ்ட்டருக்குமுதல்
முதலில் இருப்புப்பாதை ஏற்பட்டது. கொஞ்சகாலத்திற்
குள் இருப்புப்பாதைகளும்நீராவிக்கப்பல்களும்வழக்கத்
தில் வந்துவிட்டன. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்
திற்கு பிரயாணிகளும், சாமான்களும், சுலபமாயும்,
குறைந்த செலவிலும் போவதற்கிடமுண்டாயிற்று. முத
லில் ப்ரிட்டன் தேசத்திற்றான் இவைகளை விசேஷமாய்
உபயோகித்தார்கள். இளைய பிட்டின் காலத்தைவிட இப்
பொழுது உலகத்தில் நடக்கும் வியாபாரத்தில் அதிக
மாய் தலையிட்டுக்கொள்ளுவதற்கு ப்ரிட்டிஷ்காரர்களுக்கு
இடமுண்டாயிற்று.

5. பார்லிமெண்டை சீர்திருத்தஞ்செய்யவேண்டிய அவசி
யம்.—நான்காம் வில்லியம் நல்ல சுபாவமும், நல்ல எண்
ணமும் உள்ளவன். ஆனால் புத்திகூர்மையுள்ளவனல்ல.
அவன் ஆட்சிசெய்த ஏழுவருஷமாகிய கொஞ்சகாலத்
திற்குள் நடந்த முக்கியமானவிஷயம் பார்லிமெண்ட் சீர்
திருத்தமே. ப்ரிட்டனில் எல்லா விஷயங்களிலும் மாறு
தல் ஏற்பட்டிருந்தும், பொதுஜன சபைமாத்திரம் அநேக
நூறு வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்டிருந்த மாதிரியே
இன்னமும் நடந்துவந்தது. ஒவ்வொரு இங்கிலீஷ் ஜில்
லாவிலிருந்தும் இரண்டு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்
தார்கள். மிகச்சிறியதாயும், ஏழைகள் நிறைந்ததாயு
முள்ள வெஸ்ட்மூர்லண்டு ஜில்லாவிற்கு எப்படி இரண்டு
பிரதிநிதி ஏற்பட்டனரோ அப்படியே யார்க்ஷயர்போன்ற
பெரிதாயும், தனிகர்கள் வசிக்கும் ஜில்லாவிற்கும் இருவர்
தான் ஏற்பட்டிருந்தனர். மான்செஸ்ட்டர், பர்மிங்ஹாம்
முதலிய பெரிய பட்டணங்களிலிருந்து பார்லிமெண்டுக்கு
பிரதிநிதிகள் வரவேயில்லை. ஆயினும், சிறிய இடங்க
ளுக்கு இருவரை அனுப்புமதிகாரமிருந்தது. இவ்வக
ளில் மிகக்கேவலமாகவிருந்த விடங்களுக்கு கழிவடை
யான பட்டணங்கள் (rotten boroughs) என்று பெயர். மே
லும் சிலருக்குத்தான் அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும்
அதிகாரமிருந்தது. முக்கியமாய் ஸ்காட்லண்டில்தான்
இவ்விதமிருந்தது. புதிய கைத்தொழில்நிறைந்த ஜில்லாக்

களுக்குப் பிரதிநிதிகள் ஏற்படவில்லை. ஆகையால், பார்லிமெண்ட் சீர்திருத்தத்தைச் செய்யவேண்டுமென்று வெகு காலமாய்க் கூக்குரல் ஏற்பட்டிருந்தது. பிட், தகப்பன், மகன் இருவரும் இதை ஆதரித்தார்கள். ஆயினும், ப்ரெஞ்சு புரட்சியாலேற்பட்ட பயம் ஜனங்களுக்கு வெகு காலமிருந்தது. ஆகையால், எவ்வித மாறுதல்களைச் செய்யவும் பயந்தனர்.

6. சீர்திருத்தச்சட்டம் ஏற்பட்டது.—நான்காம் ஜார்ஜ் காலத்தில் விக் கட்சியார் பார்லிமெண்ட் சீர்திருத்தத்தைச் செய்யவேண்டுமென்று ஓலமிட்டனர். பிரதான மந்திரியான வெலிங்டன் இதை எதிர்த்தான். வெகு காலமாய் நாடு சீர்கெட்ட நிலைமையிலிருந்தபடியால் அநேகர் இந்த சீர்திருத்தத்தைச் செய்துவிட்டால் எல்லாம் ஒழுங்காய் நடக்குமென்று நம்பினர். வில்லியம் அரசனானபிறகு பொதுஜனசபையில் விக் கட்சியார் செல்வாக்கு மறுபடியும் ஓங்கிற்று. அவர்கள் வெலிங்டனை மந்திரி ஸ்தானத்திலிருந்து துரத்தினர். இவ்விதம் டோரி கட்சியாரின் ஐம்பதுவருஷ ஆட்சி முடிவுபெற்றது. 1832 இல் விக் கட்சியார் முதல் சீர்திருத்தச் சட்டத்தை செய்துமுடித்தனர். இந்தக் கீர்த்திபெற்ற சட்டப்படி கழிவடையான பட்டணங்களுக்கிருந்த அதிகாரம் போய்விட்டது. பெரிய பட்டணங்களுக்கெல்லாம் அங்கத்தினர் ஏற்பட்டார்கள். பெரிய ஜில்லாக்களுக்கு அதிக அங்கத்தினர் ஏற்பட்டனர். அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரமும் இன்னும் அநேகம்பேருக்குக் கிடைத்தது. ஆயினும், கூலிவேலைசெய்யும் அநேகருக்கு இந்த அதிகாரத்தை கொடுக்க சீர்திருத்தக்காரர்களுக்குப் பயமாயிருந்தது. இந்தச் சட்டப்படி மிராசுதார்களின் அதிகாரம் குறைந்து சாமானிய வகுப்பினரின் அதிகாரம் பலத்துவிட்டது.

7. நீக்ரோக்களின் அடிமைத்தொழில் முடிவடைந்தது.—நான்காம் வில்லியம் ஆட்சியில் மிகுந்திருந்த காலமுழுவதிலும் விக் கட்சியாரே அதிகாரம் செலுத்தினர். பார்லிமெண்டார் சீர்திருத்தச்சட்டம் செய்ததுபோல் இன்னும் அநேக உபயோகமுள்ள சீர்திருத்தங்களைச் செய்த



னர். ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்குட்பட்ட நாடுகளிலுள்ள அடிமைகளுக்கு விடுதலை ஏற்பட்டது. மேற்கு இந்தியத் தீவுகளில் ப்ரிட்டிஷ் குடியேற்றநாடுகளில் கரும்புத்தோட்டங்களில் இதுவரையில் நீக்ரோ அடிமைகள் வேலைசெய்து வந்தார்கள். ஆப்ரிக்காவில் இவர்களின் சொந்த ஊரிலிருந்து பலர் இவர்களைத் திருடிவந்து அடிமைகளாய்விற்று வந்தனர். இவர்களை விலைக்குவாங்கினவர்கள் தங்களுக்கு வேலைசெய்யும்படி இவர்களைக் கொடுமையுடன் வதைத்தனர். அடிமை வியாபாரம் என்று பெயர்கொண்ட இந்த நிகழ்ச்சி முப்பது வருஷங்களுக்கு முன்னரே தொலைந்து போய்விட்டது. ஆப்ரிக்காவிலிருந்து புதிதாய் அடிமைகளை பிடித்துவந்தவர்களைக் கடுமையான தண்டனைக்குள்ளாக்கினார்கள். இப்பொழுது இந்த நீக்ரோ ஜனங்கள் எல்லோரும் சுவாதீனமுள்ளவர்களானார்கள்.

8. பீலும், பூர்வாசாரப் பாலனரென்ற பழமைப் பற்றுள்ளோரும்.—நான்காம் வில்லியம் இறப்பதற்கு முன்னரே, விக் கட்சியாருக்கு மாறுதல்கள்செய்து அலுப்புண்டாகிவிட்டது. ஜனங்களுக்கு அவர்களிடத்திலிருந்த நம்பிக்கை வரவர குறைந்துகொண்டேயிருந்தது. பார்லிமெண்ட் சீர்திருத்தத்தை எதிர்த்ததினால் டோரி கட்சியாரிடத்தில் ஜனங்களுக்கு அதிருப்தி உண்டாய்விட்டது. லாங்காஷயர் கைத்தொழில் வேலைக்காரனொருவனின் மகன் யோக்கியதையும், முன்யோசனையும் உள்ள ஸர் ராபர்ட் பீல் அவர்களுக்குத் தலைவனானான். அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை புதிதாய் பெற்றவர்களுடைய ஆதரவை இவன் சுலபமாய் சம்பாதித்துக் கொண்டான். 1832 வருஷத்துக்கு முன்னால் நடந்த விஷயங்களைக்கொண்டு டோரி என்ற பெயருக்கு கெட்ட அர்த்தம் இன்னும் இருந்தபடியால் பீலும் அவனைப் பின்பற்றினவர்களும் அப்பெயரை ஒழித்து பழமைப் பற்றுள்ளோர் (Conservatives) என்ற பெயரை வைத்துக்கொண்டார்கள். விக் கட்சியாரும் தங்களுடைய பெயரை மாற்றி முன்னேற்ற பற்றுள்ளோர் (Liberals) என்ற பெயரை வைத்துக் கொண்டார்கள். 1837 இல் நான்காம் வில்லியம் இறக்குங்காலத்தில் இவர்கள்தான் உத்தியோகத்தில்

அமர்ந்து இருந்தனர். நான்காம் வில்லியத்துக்குப்பின் அவனுடைய தம்பி கென்ட்-ட்யூக்கின் மகளான விக்டோரியா பட்டத்திற்கு வந்தாள்.

9. இந்திய வர்த்தமானங்கள்.—இக்காலத்தில் நடந்த மாறுதல்களில் முக்கியமானது என்னவென்றால், கிழக்கு இந்தியச் சங்கத்தார் வியாபாரத்தொழிலை யொழித்துவிட்டு இந்தியாவில் ஒரு பெரிய விஸ்தீரணமுள்ள பாகத்தை ஆட்சிபுரியும் அதிபதிகளாகிவிட்டனர். க்ளைவ் காலம் முதல் இச்சங்கத்தார் வியாபாரம் செய்வதைவிட, ராஜதந்திரவேலையைச் செய்பவர்களாக மாறிக்கொண்டு வந்தனர். ஆயினும், தங்கள் இஷ்டப்படி அவர்கள் நடப்பதற்கு அனுமதி கிடைக்கவில்லை. 1773 இல் நார்த்-பிரபு ஒழுங்குச்சட்டம் என்ற ஒரு சட்டமேற்படுத்தினான். அதன் மூலமாய் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் மேல்விசாரணைக்கு இச்சங்கம் கட்டுப்படவேண்டியதாயிற்று. இச்சங்கத்தார் ஆட்சிக்குள்ளடங்கிய நாடுகளுக்குப் பிரதான அதிபதியை நியமிக்கும் அதிகாரம் ராஜாங்கத்தார் கைக்குள்வந்தது. அவர்கள் நியமித்த முதற்பிரதான அதிபதி வாரென் ஹேஸ்டிங்ஸ். அவன் 1774௵ முதல் 1785௵ வரையில் அதிகாரஞ்செலுத்தினான். ப்ரிட்டிஷ் இந்தியாவின் ஆட்சிமுறைக்கு அஸ்திவாரத்தை ஏற்படுத்தினவனிவன்தான். அவன் நிலம் பயிரிடுவோர்களின் நலத்தை முக்கியமாய்க் கருதினான். இந்தியாவில் க்ளைவுக்குப் பிறகு அதிக கியாதிபெற்ற ஆங்கிலேயனிவன்தான். 1784 இல் பிட் செய்த இந்தியச்சட்டம் ஏற்பட்டது. அதன் மூலமாய் சங்கத்தார்மீதில் ஆங்கில ராஜாங்கத்தாரின் அதிகாரம் இன்னும் அதிகமாய் வலுத்தது. எப்படியெனில், சங்கநிர்வாகிகளை அடக்கியாளுவதற்கு மேல்விசாரணைசபை (Board of Control) ஒன்று லண்டனில் ஏற்பட்டது. கொஞ்சகாலத்துக்குப் பிறகு இன்னுமொரு சிறந்த பிரதான தேசாதிபதி வேலைக்குவந்தான். அவன் பெயர் மார்க்விஸ் வெல்லெஸ்லி. இவன் 1798௵ முதல் 1805௵ வரையில் அதிகாரம் செலுத்தினான். நெப்போலியனையும், ப்ரெஞ்சுக்காரர்களையும் இந்தியாவிற்குள் நுழையவிடாமல் செய்வதற்கு இந்தியாவின் பெரும்பாகத்தைத் தன்



னுடைய அதிகாரத்துக்குக்கொண்டுவர வெகு பிரயாசைப்பட்டான். அவனுடைய யுத்தமுயற்சிகளில் பின்னால் வெலிங்டன்-ட்யூக் என்ற பட்டம்பெற்ற அவனுடைய தம்பி ஆர்தர் வெல்லெஸ்லி ஒரு பெரிய சேனைத் தலைமைக்குரிய தன் சாமர்த்தியத்தை முதன்மையாகக் காட்டினான்.

## அதிகாரம் XIX
## விக்டோரியா, 1837–1901

முக்கியமானவர்கள்:

ஆல்பர்ட் இளவரசன்; ஸர் ராபர்ட் பீல் (Sir Robert Peel); டானியல் ஓ-கானெல் (Daniel O'Connell), பாமர்ஸ்ட்டன் பிரபு (Lord Palmerston); பெஞ்ஜமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli); வில்லியம் யூவர்ட் க்ளாட்ஸ்ட்டன் (William Ewart Gladstone); ஸாலிஸ்பெரி பிரபு (Marquis of Salisbury); மூன்றாம் நெப்போலியன் (Napoleon III.); ஜெனரல் கார்டன் (General Gordon); ஜோஸெப் சேம்பர்லின் (Joseph Chamberlain); கிச்செனெர்-பிரபு (Lord Kitchener).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1837. விக்டோரியா பட்டத்திற்கு வந்தது.
1841. பீல் பிரதான மந்திரியானது.
1846. தானியச்சட்டத்தை விலக்கினது (The Corn Laws abolished).
1854-56. க்ரிமியா யுத்தம் (The Crimean War).
1857. இந்தியாவில் நடந்த கலகம் (The Indian Mutiny).
1858. கிழக்கு இந்தியச்சங்கம் முடிவடைந்தது (End of the East India Company).
1865. பாமர்ஸ்ட்டனின் மரணம்.
1867. இரண்டாம் சீர்திருத்தச்சட்டம் (The Second Reform Act).
1884. மூன்றாம் சீர்திருத்தச்சட்டம்.
1886. ஐர்லண்டுக்கு சுயராஜ்யம் கொடுப்பதின் சார்பில் க்ளாட்ஸ்ட்டன் பேசியது (Gladstone declares for Home Rule for Ireland).
1899. போயர் யுத்தம் ஆரம்பித்தது (Beginning of the Boer War).
1901. விக்டோரியாவின் மரணம்.

1. மஹாராணியும், ஆல்டர்ட் இளவரசனும்.—விக்டோரியா
மஹாராணிக்கு வயது பதினெட்டுதான். அவளுடைய



விக்டோரியா ராணி.

பாட்டன் மூன்றும் ஜார்ஜின் மனஉறுதி அவளிட
மிருந்தது. தானொரு அரசியென்ற கௌரவத்தை எல்



லாரும் உணரும்படி செய்துகொண்டாள். அவள் தனக்
குச் சுற்றத்தானை ஆல்டர்ட் இளவரசனை மணந்துகொண்
டாள். அவனொரு அறிவிற்சிறந்த மந்திரி. அவள் ஒரு
கட்சியிலும் சேராதிருந்து தன் குடிகளின் நலத்தையே
கருதினவளாயும், சுயநலத்தை பாராட்டாமலுமிருந்த
படியால் அவளுக்கு அதிகவதிகாரஞ் செலுத்தமுடிந்
தது. அவளாட்சிக்காலமுழுவதிலும் நாடாளுமதிகாரம்
ஜனங்களுக்கு வரவர அதிகரித்துக்கொண்டேயிருந்தது.
ஆயினும், ஜனங்களுக்கு அவளிடத்தில் முழுநம்பிக்கை
யிருந்தபடியால் அவர்கள் அவளிடத்தில் அன்புபாராட்
டினார்கள். அவள் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தின் தலைமை
யதிகாரத்தைப் பெற்றிருந்தது அவர்களுக்குத் திருப்தி
கரமாயிருந்தது.

2. ரத்துசெய்வோரும், சார்ட்டிஸ்ட் கட்சியாரும் (Repealers and Chartists).—மகாராணியின் ஆட்சியாரம்பகாலத்
தில் தேசத்திலநேக சங்கடம் ஏற்பட்டிருந்தது. இங்கிலண்
டுடன் செய்துகொண்ட ஐக்கியவிஷயத்தில் ஐர்லண்டு
கூச்சலிட்டது. ஐரிஷ் கட்சியாரின் தலைமையை இன்ன
மும் வகித்துவந்த ஓ-கானெல் ரத்துசெய்வோர் என்ற ஒரு
கட்சியை பார்லிமெண்டில் கிளப்பினான். ஐக்கியத்தை
ரத்துசெய்துவிடவேண்டுமென்பது அவர்களுடைய
கருத்து. இங்கிலண்டிலும், ஸ்காட்லண்டிலும் ஜனங்க
ளுடைய நிலைமை சரியாயில்லை. கைத்தொழிலாளருக்
குக் கூலி அதிகமாய்க்கிடைக்கவில்லை. உணவுப்பொருள்
கள் விலையுமதிகமாகவிருந்தது. இதனால், ஜனங்களுக்கு
அதிக அதிருப்தியுண்டாயிற்று. சீர்திருத்தச்சட்டம்
ஏற்பட்டபிறகு விசேஷ நன்மையுண்டாகுமென்று எல்
லோரும் நினைத்திருந்தார்கள். சார்ட்டிஸ்ட் என்ற புதிய
கட்சியொன்று கிளம்பிற்று. பட்டணங்களில் வேலைசெய்
யும் கூலியாட்களிடத்தில் இக்கட்சியாருக்கதிக செல்
வாக்கிருந்தது. இக்கட்சியார் ஜனங்களின் பட்டய சாஸ
னம் (The People's Charter) என்றபத்திரமொன்றையெழுதி
பார்லிமென்டை முற்றிலும் சீர்திருத்த முயன்றனர்.
ஜனங்களின் பட்டயசாஸனத்தை நிலைநிறுத்த வேண்டு
மென்றபடியால் இக்கட்சியாருக்கு சார்ட்டிஸ்ட்கேள் என்ற

பெயர்வந்தது. ஆயினும், ரத்துசெய்வோர் எண்ணமும் சார்ட்டிஸ்ட் கட்சியார் எண்ணமும் நிறைவேறவில்லை.

3. தானியச்சட்ட விரோதச்சங்கம்.—உணவுப்பொருள்களுக்கு தானியச்சட்டத்தால் (Corn Laws) ஏற்பட்ட அதிக விலை ஜனங்களுக்குண்டான கஷ்டங்களுக்கு முக்கிய காரணங்களிலொன்று. கடுமையான வரிசெலுத்தின பிறகுதான் அன்னிய நாட்டுத் தானியம் உள்நாட்டுக்குக்கொண்டுவரமுடியும். ப்ரிட்டிஷ் குடியானவர்களுக்கு உதவி செய்வதற்காகவே இந்தத் தானியச்சட்டம் ஏற்பட்டது. இதனால் உணவுப்பொருள்களின் விலை அதிகமாகி, ஜனங்களுக்கு நன்மையைவிட அதிகத் தீங்கேயுண்டாயிற்றென்று சிலர் நினைத்தனர். ஆகையால், இச்சட்டத்தை ரத்துசெய்வதற்கு ஒரு சங்கம் ஏற்பட்டது. இதற்கு தானியச்சட்ட விரோதச்சங்கம் (Anti-Corn Law League) என்று பெயர்.

4. பீல் மந்திரியானது.—அதிகாரஞ்செலுத்திய விக் கட்சியாருக்கு இவ்வித நிகழ்ச்சிகளில் பயமுண்டாயிற்று. இக்கட்சியாரின் துர்ப்பலமே இவர்கள் கொஞ்சம்கொஞ்சமாய் தங்கள் அதிகாரத்தை இழப்பதற்குக் காரணமாயிற்று. கடைசியில், 1841 இல் நடந்த ஜனங்களின் நியமனக் கிளர்ச்சியில் விக் கட்சியார் தோல்வியடைந்தனர். பழநடைப்பற்றுள்ளோனான ஸர் ராபர்ட் பீலின் தலைமையின்கீழ் மந்திரி ஆட்சி ஏற்பட்டது.

5. பீலும் தானியச்சட்டமும்.—1841ஆம் முதல் 1846ஆம் வரையில் பீல் மந்திரிவேலை பார்த்தான். இவன் ஆட்சியை சாமர்த்தியத்துடன் நடத்தினான். ராஜாங்க பணவிஷயங்களை ஒழுங்குபடுத்தினான். அவன் நிதானத்துடன்வேலைசெய்பவன். ஆனால், வெகுயோக்கியன். தன்னுடைய அபிப்பிராயங்கள் பிசகென்று காரியவிஷயத்தில் தெரிந்துகொண்டானானால் அவைகளை அவன் மாற்றிவிட எண்ணங்கொள்வான். அவன் எப்பொழுதும் தானியச் சட்டத்தை ஆதரித்தவன். ஆயின், உணவுப்பொருளின் விலை அதிகத்தால் ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகிறதென்று அனுபவத்தில் தெரிந்துகொண்டான். ஆகையால், ஆகாரப்பொருள் வரியை இன்னமும் வசூலிப்பது



முடியாதகாரியமென்று பெரிய பஞ்சமொன்று ஏற்பட்டதைக்கொண்டு தெரிந்துகொண்டான். ஐர்லண்டர் ஐக்கிய சட்டத்தை ரத்துசெய்யவேண்டுமென்று முறையிட்டபோதிலும் ஐர்லண்டில் ஜனங்களின் வறுமையே அவர்களுடைய அதிருப்திக்கு முக்கியகாரணம். நிலத்தை உழுது பயிரிட்டவர் சிறிய குடியானவர். அவர்கள்



ஸர் ராபர்ட் பீல்.
(From the Bust by Noble in the National Portrait Gallery.)

அதிக குத்தகைப்பணம் கொடுத்தபடியால் தங்களுடைய காலக்ஷேபத்திற்கு கொஞ்சந்தான் மிகுதியாயிருந்தது. அவர்களுக்கு முக்கியமான ஆகாரம் உருளைக்கிழங்குதான். அதுதான் அவர்களுக்குச் சொற்பவிலைக்குக்கிடைக்கும். இப்பொழுது உருளைக்கிழங்கினால் ஒரு நோய் உண்டாகி அதை ஆகாரத்திற்கு உபயோகிக்க முடியாமற்போயிற்று. இந்தப் பஞ்சத்தினால் ஐர்லண்டருக்குப் பெரிய கஷ்டம் வந்துவிட்டது.

6. தானியச்சட்டம் ரத்தானது.—லட்சக்கணக்கான
ஜனங்கள் பசியால் வருந்தும்போது ஆகாரப்பொருள்
வரியை வசூலிப்பது முடியாதகாரியமென்று பீல் தெரிந்து
கொண்டான். 1846 இல் தானியச்சட்டம் ரத்தாகிவிட்
டது. வரியில்லா இலவச வியாபாரத்தால் (Free Trade)
உணவுப்பொருள் ஏராளமாய்க் கிடைத்தது. இதுவரை
யில் மிராசுதார்களும், குடியானவர்களும் பீலை ஆதரித்து
வந்தனர். ஏனெனில், அவர்கள் தானியச்சட்டம் நடை
பெற்று வருமென்று நினைத்தார்கள். இப்பொழுது தங்
களை பீல் கைவிட்டுவிட்டானென்று முறையிட்டனர்.
விக் அல்லது முன்னேற்ற கட்சியாரின் உதவியைக்
கொண்டுதான் இச்சட்டத்தை பீல் ஏற்படுத்த சக்தியுள்
ளவனானான். அவனை ஆதரித்தவரில் சிலர் அவனை இப்
பொழுது கடுமையாய் எதிர்த்தனர். அவர்களுக்கு ரட்ச
கர் (Protectionists) என்ற பெயர் உண்டாயிற்று. ஏனெ
னில், அன்னியநாட்டு சரக்குகளுக்கு வரி ஏற்படுத்துவ
தால் ஆங்கில விவசாயத்தையும், கைத்தொழிலையும் காப்
பாற்றலாமென்று நினைத்தார்கள். அவர்களுக்குத் தலை
வன் பென்ஜமின் டிஸ்ரேலி. இவன் பிறவியில் ஓர் யூதன்.
இவன் சாமர்த்தியமுள்ள மேதாவி. ஆயினும், இவனு
டைய நடையுடைகள் விநோதமாயிருந்தன. தானியச்
சட்டம் ரத்தானபிறகு இவன் விக் கட்சியில் சேர்ந்து
கொண்டான். பீலை மந்திரிவேலையிலிருந்தும் தாக்கி
னான்.

7. பீல் கட்சியாரும், ரட்சகர்களும், விக் கட்சியாரும்.—
பழநடைப்பற்றுள்ளோர் பொதுஜன சபையில் தங்களு
டைய கட்சிக்கு பெரும்பாலரின் ஆதரவை அடைவதற்கு
சுமார் முப்பது வருஷங்களாயின. அநேகமாய் இக்கால
மெல்லாம் முன்னேற்றக் கட்சியார் அதிகாரஞ்செலுத்தி
வந்தனர். ரட்சகரின் கிளர்ச்சி யேற்பட்டபிறகு பீலை
ஆதரித்துவந்த நண்பர்கள் அக்கட்சியில் சேர்ந்துகொண்
டனர். இவர்களுக்குத் தனியே பீல் கட்சியார் என்ற
பெயர் வந்தது. அவர்களில் ஒரு லிவர்ப்பூல் வியாபாரி
யின் மகனான வில்லியம் யூவர்ட் க்ளாட்ஸ்டன் என்பவன்
முக்கியமானவன். தன் அதிகாரத்தை யிழந்தபிறகு,




கொஞ்ச நாளைக்குள் பீல் இறந்துவிட்டான். க்ளாட்ஸ்ட்
[illegible] பீலைப்போல் ஒரு கணக்காளி. வரியில்லாத சுதந்தர
[illegible]ாரமே நலமென்று பீலிடமிருந்து இவன் கற்றிருந்
தான். இன்னமும் ரட்சகர் கட்சிக்கு ஆதரவாயிருந்த
அநேக வரிகளை நீக்கும்படியான சட்டங்களை இவன்
ஏற்படுத்தினான். கொஞ்சகாலத்திற்குள் எல்லோருக்கும்
வரியில்லா வியாபாரத்தில் நம்பிக்கைவந்தது. சிலவருஷம்
சென்றபிறகு முன்னேற்றக் கட்சியாருள் கலகம்விளைந்து
அவர்கள் தோல்வியடைந்தனர். டிஸ்ரேலி கொஞ்சகா
லம் மந்திரிவேலை பார்த்தான். அவன் அதிகாரத்திற்கு
வந்தவுடன் ரட்சகக் கட்சியைவிட்டு விலகினான். அவ
னும் அவனைப் பின்பற்றினவரும் இப்பொழுது பழநடைப்
பற்றுள்ள கட்சியாராயினர். பீல் கட்சியார் விக் கட்சியா
ருடன் கலந்து முன்னேற்றக் கட்சியை யுண்டுபண்ணினார்
கள். விக் கட்சியாருள் அதிக செல்வாக்குள்ளவன் பாமர்
ஸ்டன்-பிரபு. பிறநாட்டு விஷயங்களை கவனிக்கும் மந்
திரிஸ்தானத்திலிவன் பலதடவைகள் இருந்திருந்தான்.
பிறநாட்டார் இங்கிலண்டு விஷயத்தில் மரியாதையும்,
அச்சமும் அடையும்படி இவன் செய்தான். உள்நாட்டில்
பல மாறுதல்களைச்செய்ய இவனுக்கு இஷ்டமில்லை.

8. க்ரிமியா யுத்தம்.—1854௵ முதல் 1856௵ வரைக்
கும் ப்ரிட்டனுக்கும் ருஷ்யாவுக்கும் யுத்தம் நடந்தது.
ப்ரிட்டனுக்குப் பழைய விரோதியாயிருந்த ப்ரான்ஸ் இப்
பொழுது இதனுடன் சேர்ந்துகொண்டது. ப்ரான்ஸில்
மூன்றாம் நெப்போலியன் அரசுசெலுத்திவந்தான். இவன்
பெரிய நெப்போலியனின் தம்பிமகன். கிழக்குநாடுகளில்
ருஷ்யாவுக்குஏற்பட்டிருந்த செல்வாக்கைக்கண்டு, ஆங்கி
[illegible]க்கும், ப்ரெஞ்சுக்காரர்களுக்கும் திகில் உண்டா
[illegible] ருஷ்யா துருக்கி தேசத்தை ஜயித்து அதன் தலை
[illegible] கான்ஸ்டான்டிநோபிலை பிடித்துக்கொள்ளும் என்ற
பயம் முக்கியமாய் இவர்களுக்கு இருந்தது. [illegible]
ஐரோப்பாவில் மற்ற நாடுகளைப்போலன்று. [illegible]
டின் குடிகளில் பெரும்பாலர் கிறிஸ்தவர்கள். [illegible],
அதிகாரம்முழுவதும் துருக்கியர் கையிலிருந்தது. [illegible]
கள் ஆசியாவிலிருந்துவந்த முக[illegible]

விசேஷமானயுத்தப்பயிற்சியுள்ளவர்கள். ஆயினும், ஆட்சி விஷயத்தில் இரக்கமும், ஒழுங்குமில்லாதவர்கள். இவர்கள் தங்கள் கிறிஸ்தவக் குடிகளை மிகவும் கொடுமையாய் நடத்தினர். இந்தத் துருக்கியருக்கு விரோதமாய் கிழக்குநாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ருஷ்யா வெகுகாலமாய் உதவிசெய்துவந்தது. இப்பொழுது ருஷ்யர்களுக்கு விரோதமாய் இங்கிலண்டும், ப்ரான்ஸூம் துருக்கியருக்கு உதவிசெய்தன. கருங்கடலின் வடபாகத்திலுள்ள க்ரிமியா தீபகல்பத்தின்மீது படையெடுத்துச்செல்ல ஒரு சேனையை இவர்கள் அனுப்பினார்கள். ஸிபாஸ்டோபோல் (Sebastopol) என்ற ஒரு பெரிய ராணுவக்கோட்டையை ருஷ்யர் அங்கே கட்டியிருந்தார்கள். அதை இச்சேனை முற்றுகையிட்டது. பிறகு ஏற்பட்ட யுத்தத்திற்கு க்ரிமியா யுத்தமென்று பெயர். மகா கொடுமையான குளிர்கால முழுவதும் இம்முற்றுகை நடந்தேறியது. சேனைத் தலைவர்களுக்கு சக்தியில்லை. போர்வீரரின் சௌகரியத்தைப் பற்றியும் ஒருவரும் கவனிக்கவில்லை. ஆகையால், ருஷ்யர் குண்டுகளால் அடைந்த துன்பத்தைவிட அதிகமாய்க் குளிர், பசி, வியாதி இவைகளால் சேனைகள் வருத்தத்தை அடைந்தன. கடைசியில் ஸிபாஸ்டொபோலைப் பிடித்து 1856 இல் சமாதானஞ் செய்துகொண்டனர்.

9. இந்திய சேனைக்கலகமும், கிழக்கு இந்தியச் சங்கத்தின் முடிவும்.—க்ரிமியா யுத்தத்தைவிட அதிகக் கொடுமையான துன்பம் 1857 இல் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்திற்கு ஏற்பட்டது. இந்திய சேனைக்கலகம் என்று இதற்கு பெயர். க்ளைவ் காலமுதல் ப்ரிட்டிஷார் இந்தியாவின் பெரும்பாகத்தை தங்களுடைய ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். சிப்பாய்கள் என்று பெயருள்ள இந்தியர்களாலாய சேனைதான் இவர்களுடைய பலத்தை முக்கியமாய் ஆதரித்தது. 1857 இல் ப்ரிட்டிஷார் இவர்களை பலாத்காரமாய் கிறிஸ்தவராக்குவதற்கு இச்சைகொண்டிருக்கிறரென்ற ஓரபிப்பிராயம் இவர்களுக்கு உண்டாயிற்று. ஆகையால், இந்தியாவின் வடபாகத்திலுள்ள அநேக சிப்பாய்கள் கலகஞ்செய்தனர். ஆயினும், மற்ற சிப்பாய்களும் முக்கியமான இந்திய அரசர்களும் ப்ரிட்டிஷாரிடத்தில் விசுவாசம் வைத்திருந்தனர். ப்ரிட்டிஷ் இந்தியாவை ஆண்டுவந்த சிறுதொகையுள்ள ஆங்கிலேயர் ஆச்சரியப்படத்தக்க தைரியத்தையும், சாமர்த்தியத்தையும் ருஜுப்படுத்தினர். கலகம் அடங்கிவிட்டது. இந்தியாவின் நிலைமையிலும் ஆட்சிமுறையிலும் விசேஷ மாறுதல்கள் உண்டாயின. 1773 ஆம் சீர்திருத்தச் சட்டப்படிக்கும் பிட் இந்தியச் சட்டப்படிக்கும் ப்ரிட்டிஷ் ராஜாங்





வில்லியம் யூவர்ட் க்ளாட்ஸ்டன்.

கத்தாரின் மேல்விசாரணைக்குள் கிழக்கு இந்தியச் சங்கத்தாரின் அதிகாரம் அடங்கியிருந்தும் அவர்களுக்கு இன்னமும் அநேக அதிகாரங்களிருந்தன. அவைகள் முழுவதும் இப்பொழுது ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் கைவசத்திலிருப்பதுதான் நலமென்று எல்லோரும் நினைத்தனர். 1858 இல் விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் சிற்றரசர்களுக்கும், ஜனங்களுக்கும் ஒரு கீர்த்திவாய்ந்த

விளம்பரமூலமாய் இம்மாறுதலை வெளியிட்டனர். இந்தியாவின் மதநம்பிக்கையிலும், ஆசாரங்களிலும் ப்ரிட்டிஷார் எவ்விதத்திலும் பிரவேசிப்பதில்லையென்றும், கவர்ன்மென்ட் உத்தியோகத்தில் பக்ஷபாதமில்லாமல் எந்த ஜாதியரையும் மதத்தினரையும் கூடியவரையில் நியமிப்போமென்றும் இன்னும் வேறுசில விஷயங்களும் அந்த விளம்பரத்தில் கண்டிருந்தன.

10. பாமர்ஸ்ட்டனின் மரணம். — க்ரிமியாவில் போர் வீரரடைந்த துன்பங்களுக்கு மந்திரிகள்தான் காரணம். அவர்களை உத்தியோகத்தினின்று பார்லிமென்டார் துரத்தினர்கள். அவர்களுடைய கீர்த்திக்கு விசேஷக் குறைவு ஏற்பட்டது. பாமர்ஸ்ட்டனுக்கு இந்த யுத்தத்தில் நல்ல பெயர் கிடைத்தது. அவன் பிரதான மந்திரியானான். அவன் மிகவும் கிழவனாகி 1865 இல் இறக்கும்வரையில் அந்த உத்தியோகத்திலிருந்துவந்தான்.

11. க்ளாட்ஸ்ட்டனும், டிஸ்ரேலியும்.—பாமர்ஸ்ட்டன் உயிருடன் இருக்கும்வரையில் அவன் க்ளாட்ஸ்ட்டனை அடக்கிவைத்திருந்தான். இப்பொழுது க்ளாட்ஸ்ட்டன் முன்னேற்ற கட்சிக்குத் தலைவனானான். உடனே பலமாறுதல்களைச்செய்ய வழியேற்படுத்திக்கொண்டான். பழநடைக் கட்சிக்குத் தலைவனான டிஸ்ரேலி, தன்னாலியன்றமட்டும் அவனை எதிர்த்துவந்தான். 1867 ஆம் வருஷம் நீங்கலாக மற்ற எல்லாக்காலத்திலும் க்ளாட்ஸ்ட்டனே மந்திரிவேலை பார்த்துவந்தான். அந்தவருஷம்முன்னேற்றக்கட்சியிலேயே கலகம்வந்தது. ஆகவே பழநடைக்கட்சியாருக்குக் கொஞ்சகாலம் அதிகாரம் வந்தது. ஜனங்களிடத்தில் தனக்குப் பயமில்லையென்றுகாட்ட டிஸ்ரேலி ஊக்கமுள்ளவனாகவிருந்தான். ஆகையாலவன் 1867 இல் இரண்டாம் சீர்திருத்தச்சட்டத்தை ஏற்படுத்தினான். இந்தச் சட்டப்படி பட்டணங்களில் வசித்த கூலிவேலைக்காரரநேகருக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் வந்தது. பிறகு கூடிய பார்லிமென்டில் அவனுடைய அதிகாரம் போய்விட்டது.

12. க்ளாட்ஸ்ட்டன் முதன் மந்திரியானது.—1868 இல் க்ளாட்ஸ்ட்டன் பிரதான மந்திரியானான். முற்றிலும்



வேறுபாடுள்ள சீர்திருத்தங்களைச்செய்யவாரம்பித்தான். ஐர்லண்டருக்குத் திருப்தியுண்டாகும்படி சில புதிய சட்டங்களைச் செய்யமுயன்றான். அவைகளில் முக்கியமானது யாதெனில், ஐரிஷ் குடியானவர்கள் தாங்கள் பயிரிட்டுவந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்களான மிராசுதார்களுடைய இஷ்டப்படி நடக்கவேண்டியவர்களாய் இல்லாமற் செய்ததே. இப்பொழுதுதான் 1870 ஆம் வருஷத்திய கல்விச்சட்டம் (Education Act) ஏற்பட்டது. இதன்படி எல்லாக் குழந்தைகளும் கட்டாயம் பள்ளிக்கூடம்போய் படிக்கவேண்டும். கொஞ்ச வருஷங்களுக்குள் க்ளாட்ஸ்ட்டன் பல மாறுதல்களைச் செய்துவிட்டான். ஜனங்களுக்குக் கொஞ்சகாலம் சும்மாவிருக்கவேண்டுமென்ற எண்ணம் வந்துவிட்டது.

13. டிஸ்ரேலி மந்திரியானது.—டிஸ்ரேலிக்கு இப்பொழுது சமயம் வாய்த்தது. 1874 இல் பார்லிமென்ட் அங்கத்தினரை தேர்ந்தெடுக்கும் கிளர்ச்சி வந்தது. அதில் அவனுக்குபெரும்பாலர் ஆதரவு ஏற்பட்டது. அவன் பிரதான மந்திரியானான். 1880வரை வரையில் அவன் வேலை பார்த்து வந்தான். வெளி நாடுகளில் ஆங்கிலேயர் செல்வாக்கதிகரிக்கக் கடுமையாய் முயன்றான். இக்காலத்தில் ருஷ்யருக்கும், துருக்கியருக்கும் மறுபடியும் சண்டையுண்டாயிற்று. ருஷ்யர்களுக்கு விரோத



பென்ஜமின் டிஸ்ரேலி, பீகன்ஸ்பீல்ட்—பிரபு.

மாய் இவன் துருக்கிக்கு உதவிசெய்ய விருப்பமுள்ளவனென்ற குற்றத்திற்குள்ளானான். இவன் துருக்கருக்கும், ருஷ்யருக்கும் சமாதானம் உண்டுபண்ண முயன்றான். ஆனால், இந்த சமாதானத்தால் துருக்கர்களுடைய நாட்டின் பெரும்பாகம் அவர்களுடைய வசத்திலிருந்து நீங்கியது. ஆயினும், இந்நாடு ருஷ்யர்வசமுமாகவில்லை. அதில் வசித்த கிறிஸ்தவர்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்கு அனுமதிபெற்றனர். கான்ஸ்டான்டிநோபிலும், ஐரோப்பாவில் ஒரு பெரிய நாடும் துருக்கர்வசத்தில் இன்னமும் இருந்தது. கிழக்குநாட்டு விவகாரம் என்னும் இவ்விஷயத்தின் காரணமாக இச்சண்டைக்கால முதல் அடிக்கடி மற்றச்சண்டைகள் வந்துகொண்டிருந்தன. இந்தச் சண்டை நடக்கும் காலத்தில் துருக்கியருக்கு விரோதமாய் க்ளாட்ஸ்ட்டன் வெகு திறமையுடன் உபந்நியாசங்களைச் செய்தான். அவன் துருக்கியரின் கொடிய ஆட்சியை நீடிக்கச்செய்ய டிஸ்ரேலி தன்னாலியன்றமட்டும் பாடுபட்டதாகக் கூறினான். 1880 இல் நடந்த அடுத்த பார்லிமெண்ட் கிளர்ச்சியில் அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்போர் டிஸ்ரேலிக்கு விரோதமாய் மாறி பார்லிமெண்டுக்கு முன்னோக்கக் கட்சியாரை அதிகமாய் அனுப்பினர். க்ளாட்ஸ்ட்டன் மறுபடியும்பிரதான மந்திரியானான். அடுத்த வருஷம் டிஸ்ரேலி இறந்தான். குடிகளை நம்பியே ஆளவேண்டுமென்று பழநடைப்பற்னும்ளோருக்கு அதிகப் பொறுமையுடனும் திறமையுடறுள் அவன் கற்பித்திருந்தான். இதன்றி ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தின் பெருமையையும் ஓங்கச்செய்திருந்தான்.

14. ப்ரிட்டனும், எகிப்த்தும்.—க்ளாட்ஸ்ட்டன் இரண்டாம்முறை மந்திரிவேலை பார்த்தகாலத்தில் அதிகத் துன்பம் உண்டாயிற்று. எகிப்த் தேசத்தில் பல கஷ்டங்களுண்டாகிவிட்டன. அந்நாட்டரசன் அதிகச் செலவாளியாய்ப் போய்விட்டபடியால் அவனைப் பட்டத்தினின்றும் நீக்கவேண்டியதாயிற்று. ஸூயேஸ் பூசந்திவழியாய்க் கப்பல்கள் செல்ல ஒருகால்வாயைக்கொஞ்சகாலத்திற்குமுன் வெட்டினார்கள். ஆகையால், எகிப்த்தேசம் ப்ரிட்டிஷார் முக்கியமாய் கவனிக்கவேண்டிய நாடாயிற்று.



இந்த ஸூயேஸ் கால்வாய் இந்தியாவிற்குச் சீக்கிரத்தில் போகக்கூடிய பாதையாய்விட்டது. ஆகையால், அதைத் தங்கள் வசத்தில் வைத்துக்கொள்ளாதிருப்பது ப்ரிட்டிஷாருக்கு வெகு அபாயத்தை உண்டுபண்ணும். இக்காரணத்தை முன்னிட்டு ப்ரிட்டிஷார் எகிப்த் தேசத்தைக் கைவசமாக்கிக்கொண்டனர். கொஞ்சநாளுக்குள் அப்படிச் செய்ததினால் தங்களுக்கு அநேக கஷ்டங்கள் இருக்கின்றனவென்று தெரிந்துகொண்டனர். நீல நதியின் மேல்பாகத்துக்கு அருகாமையிலுள்ள ஸூடான் (Sudan) என்ற பெரியநாட்டில் கலகமுண்டாயிற்று. அதனால் இவர்களுக்கு வெகுதுன்பம் விளைந்தது. இக்கலகம் மிகுதியான ஆபத்தை உண்டுபண்ணும்போலிருந்தது. ஆகையால், அக்கலகத்தையடக்கப் பெருந்தன்மையும் சக்தியும் பொருந்திய வீரனான கார்டன் (Gordon) சேனைத்தலைவனை ஆங்கில ராஜாங்கத்தார் அனுப்பினார்கள். கலகம்செய்தவர்கள் கார்டனைக் கொன்றுவிட்டனர். ராஜாங்கத்தாரும் அவர்களைத் தண்டிக்க ஒருவித முயற்சியும் செய்யாமல் ஸூடானை முற்றிலும் விட்டுவிட்டனர். ஆயினும், பதின்மூன்று வருஷங்களுக்குப் பிறகு கிச்சேனோர்-பிரபு அந்நாட்டை மறுபடியும் ஜயித்தான். அது இப்பொழுதும் ப்ரிட்டிஷார் வசத்திற்றான் இருந்து வருகிறது. எகிப்த் தேசத்தார் தங்களுடைய உள்நாட்டு விவகாரங்களைத் தாங்களே நடத்திவருகின்றனர். பிறநாட்டு சம்பந்தமும், ஸூயெஸ்கால்வாயும் ப்ரிட்டிஷார் மேல்விசாரணைக்குள்ளடங்கியுள்ளன.

15. ஐர்லண்டு சுயஆட்சியும், மூன்றாம் சீர்திருத்தச்சட்டமும்.—உள்நாட்டில் க்ளாட்ஸ்ட்டன் துரைத்தனத்திற்கு அநேக துன்பங்கள் உண்டாயின. ஒரு புதிய ஐரிஷ் சுயஆட்சி கிளர்ச்சிதான் இவற்றுள் மகாகேவலமானது. டப்ளினில் ஒரு ஐரிஷ் பார்லிமெண்டை மறுபடியும் ஏற்படுத்துவதற்காகத்தான் இக்கிளர்ச்சி யுண்டாயிற்று. சுயராஜ்யக்கட்சியார் பழநடைக்கட்சியாருடன் சேர்ந்து 1885 இல் க்ளாட்ஸ்ட்டனை வேலையிலிருந்து விலக்கினார்கள். 1884 ஆம் வருஷத்திய சீர்திருத்தச்சட்டந்தான் அவன் கடைசியில் செய்த சட்டம். இதன்படி மூன்றாம் தட

வை பார்லிமெண்ட் திருத்தம் உண்டாயிற்று. பட்ட
ணங்களிலும் நாட்டுப்புறங்களிலும் சொந்த வீடுள்ள
ஒவ்வொரு மனிதனுக்கும் தேர்ந்தெடுத்தல் பாத்தியம்
கிடைத்தது. கூடியவரையில் ஜனத்தொகைக்கு சமமாக
நாட்டை ஜில்லாக்களாகப்பிரித்து ஒவ்வொரு ஜில்லா
விற்கும் ஒரு அங்கத்தினரை பார்லிமெண்டுக்கு அனுப்
பும் பாத்தியத்தைக்கொடுத்தார்கள். இந்தச் சட்டப்
படி அரசாங்க மேல்விசாரணை அதிகாரம் முழுவதும்
ஜனங்களுக்கு வந்துவிட்டது. ஆகையால், குடிகளே அதி
காரம் செலுத்தும் குடியரசு நாடாக ப்ரிட்டிஷ் தீவுகளாகி
விட்டன.

16. சுயராஜ்ய கட்சியாரும், ஐக்கிய கட்சியாரும் (Home-
Rulers and Unionists).—பழநடைக்கட்சிக்கு இப்பொழுது
ஸாலிஸ்பெரி-பிரபு தலைவனானன். இந்தக் கட்சியாருக்கா
வது முன்னேற்றக் கட்சியாருக்காவது நீடித்தகாலம்
அதிகாரம் செலுத்தக்கூடிய மந்திரிக்கூட்டத்தை நிய
மிக்க சக்தியில்லை. ஆகையால், அதிகாரம் ஒரு கட்சியா
ரிடமிருந்து மற்றொரு கட்சியாருக்கு அடிக்கடி மாறிக்
கொண்டேயிருந்தது. கடைசியில், தன்னுடைய பழைய
விரோதிகளான ஐரிஷாருடன் 1886 இல் க்ளாட்ஸ்ட்டன்
ஒப்பந்தம் செய்துகொண்டு ஐர்லண்டுக்கு சுயராஜ்ய அதி
காரத்தைக் கொடுப்பதாக ஏற்பாடுசெய்தான். இதனால்
முன்னேற்றக் கட்சியில் அநேகருக்கு வெறுப்புண்டாகி
க்ளாட்ஸ்ட்டனை கைவிட்டு பழநடைக் கட்சியாருடன்
சேர்ந்துகொண்டார்கள். இவர்களுக்கு முன்னேற்றப் பற்
றுள்ள ஐக்கிய கட்சியார் என்று பெயர்வந்தது. பர்மிங்
ஹாம் தொழிலாளியாகிய ஜோஸெப்-சேம்பர்லின் இக்கட்
சிக்குத் தலைவனானன். பழநடைக் கட்சியாரும் முன்
னேற்றப்பற்றுள்ள ஐக்கிய கட்சியாரும் சேர்ந்து ஒரே
கட்சியாராயினர். இதற்கு ஐக்கிய கட்சி என்ற பெயர்
வந்தது. க்ளாட்ஸ்ட்டன் கட்சியில் சேர்ந்தவர்களுக்கு
க்ளாட்ஸ்ட்டோனியர் அல்லது சுயராஜ்யக் கட்சியார் என்ற
பெயர் வந்தது.

17. ஐக்கிய கட்சி மந்திரிகள்.—ஐர்லண்டுக்கு சுயராஜ்ய
வதிகாரத்தைக் கொடுக்க மொத்தத்தில் ஜனங்களுக்கு



இஷ்டமில்லை. ஆகையால், க்ளாட்ஸ்ட்டனுடைய நண்
பர்கள் பார்லிமெண்ட் தேர்தலில் (Election) மிகவும் தோற்
றுவிட்டனர். ஆகவே, ஐக்கிய கட்சியார் ஸாலிஸ்பெரி-
பிரபுவின் தலைமையின்கீழ் மந்திரி ஆட்சியை ஏற்படுத்
தினார்கள். நடுவிற் கொஞ்சகாலம் தவிர விக்டோரியா
வின் மிகுந்த ஆட்சிக்காலமுழுவதும் இக்கட்சியாரே
அதிகாரஞ்செலுத்திவந்தனர். அக்காலத்திற்றான்
முதிர்ந்த வயதில் க்ளாட்ஸ்ட்டன் இறந்தான். ஆங்கிலேய
ருக்கு ஐரிஷ் சுயராஜ்யத்தில் நம்பிக்கைவரும்படிசெய்ய
அவனால் முடியவில்லை. ஆயினும், அவனுடைய சொல்
வன்மை, தைரியம், சிரத்தை, ஊக்கம் முதலிய குணங்க
ளால் தன் தேசத்தாரிடம் அற்புதமான செல்வாக்கு
அவனுக்கிருந்தது.

18. போயர் யுத்தம்.—மஹாராணியின் ஆட்சி கடைசிக்
காலத்தில் விசேஷமாய் அன்னிய நாட்டு விவகாரங்களை
யும் குடியேற்ற நாடுகளின் விவகாரங்களையும் ராஜாங்கத்
தார் கவனிக்கவேண்டிவந்தது. ப்ரிட்டிஷார் உலகத்
தில் பலவிடங்களில் யுத்தஞ்செய்ய வேண்டியிருந்
தது. ஐரோப்பாவிலுள்ள மற்ற ராஜாங்கத்தார்கள்
இவர்களுக்கு விரோதியாயிருந்தனர். இந்த யுத்தங்க
ளில் மிகக்கடுமையானவை இரண்டு. இவைகள் ஆபிரிக்
காவில் நேர்ந்தன. கிச்செனர்-பிரபு மறுபடியும் ஸூ
டானை ஜயித்தது ஒன்று. இதைப்பற்றி முன்னமேயே
கூறியுள்ளோம். தென்ஆபிரிக்கா ஆட்சி விஷயத்தில்
ஆங்கிலேயருடன் வாதுசெய்துவந்த போயர் என்ற பெய
ருள்ள டச்சுக் குடியானவர்களுடன் ஆங்கிலேயர் செய்த
போயர்யுத்தம் இரண்டாவது. குட் ஹோப்-முனைக்குச்
சுற்றிலுமுள்ள நாடுகளில் டச்சுக்காரர்கள் சுமார் இரு
நூறு வருஷங்களுக்கு முன்னரே குடியேறியிருந்தனர்.
ஆனால், நெப்போலியனுடன் நடந்த யுத்தத்தில் ஆங்கி
லேயர் டச்சுக்காரர்களுடைய குடியேற்ற நாடுகளை தங்
கள் கைவசமாக்கிக்கொண்டு அதற்கு கேப்-காலனி (Cape
Colony) என்று பெயர்வைத்தனர். புராதன போ
யரில் அநேகர் கேப்-காலனியை விட்டுவிட்டு இரண்டு
போயர் குடியரசுநாடுகளை ஸ்தாபித்தார்கள். அவை

கட்கு ட்ரான்ஸ்வால் என்றும் ஆரஞ்சுநதி சுயராஜ்யநாடு என்றும் பெயர். ப்ரிட்டிஷாருக்கும், டச்சுக்காரர்களுக்கும் அடிக்கடி சண்டை நடந்துகொண்டிருந்தது. போயர் நாடுகளில் வைரமும், தங்கமும் அகப்படக்கூடிய கனிகளைக் கண்டுபிடித்தவுடன் இவ்விருவருக்கும் சண்டை வலுத்தது. இக்கனிகளில் வெட்டுவதற்கு வந்த ப்ரிட்டிஷ் ஜனங்கள் அநேகரும், வேறுதேசங்களிலிருந்து வந்தவரும் போயருடன் ஒத்திருக்கமுடியாமல் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். கடைசியில், 1899 இல் ஒருபெரிய யுத்தம் நடந்தது. போயர் சிறந்த யுத்தவீரர்கள். அதிக வீரத்துடன் சண்டைசெய்தனர். ப்ரிட்டிஷாருக்குத் தகுந்த சேனைத்தலைவர்களில்லாமல் பலமுறை தோல்வியடைந்தனர். தென் ஆபிரிக்காவில் ஏராளமான ப்ரிட்டிஷ் போர்வீரர்களைக் கொண்டுவந்த பிறகுதான் போயர்களுக்கு அபஜயமுண்டாயிற்று. சண்டை நடந்துகொண்டிருக்கும்போதே மஹாராணியார் 1901 இல் இறந்துவிட்டார். ஆயினும், போயருக்கு ஜயத்தில் நம்பிக்கை போய்விட்டது.

19. **கானடா ராஜ்யமும், ஆஸ்ட்ரேலியா குடியரசுநாடும்.**—விக்டோரியா ஆட்சிகாலத்தில் ஆபிரிக்காவில் மாத்திரமே ப்ரிட்டிஷ் ஆட்சி பரவவில்லை. பூலோகமுழுவதிலும் ப்ரிட்டிஷ் குடியேற்றநாடுகள் ஜனத்தொகையிலும், கௌரவத்திலும் அதிகரித்துக்கொண்டே வந்தன. கானடா இரண்டாம் ஜார்ஜ் காலம்வரைக்கும் ப்ரெஞ்சு நாடாகவிருந்தது. இதன் மேற்பாகத்தில் ப்ரிட்டிஷாரும் குடியேறியபடியால் பாதி ப்ரிட்டிஷ்நாடாக ஆகிவிட்டது. தென் ஆபிரிக்காவில் எப்படி ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் அடிக்கடி சண்டை இருந்துவந்ததோ அப்படியே பழைய ப்ரெஞ்சுக் குடிகளுக்கும் புதிய ஆங்கிலக்குடிகளுக்கும் அடிக்கடி சண்டை இருந்துவந்தது. ஆயினும், விரோதம் ஒருவாறு அடங்கி 1867 இல் ப்ரிட்டிஷ் அமெரிக்கா குடியேற்றநாடுகள் **கானடா ராஜ்யம்** என்ற பெயருடன் ஒன்றுசேர்ந்தன. மேலும், இளைய பிட் காலத்தில் முதலில் குடியேறிய ஆஸ்ட்ரேலியாவில் பொற்கனிகள் கண்டுபிடித்தபிறகு விரைவில்



அந்நாட்டார் தனவான்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவுமாயினர். அதைக்கண்டு அநேக ப்ரிட்டிஷார் அத்தேசத்தில் குடியேறினார்கள். 1901 இல் தனித்தனியே சுவாதீனம் பெற்றிருந்த குடியேற்ற நாடுகளெல்லாம் ஒன்றுசேர்ந்து **ஆஸ்ட்ரேலியா குடியரசுநாடு** என்ற பெயருடன் ஒரே ராஜ்யமாகக் கலந்துவிட்டன. இதற்கு முன்னரே **ந்யூஜிலண்டு** (New Zealand) தேசத்திலும் இவ்வித ஐக்கியம் உண்டாயிற்று. கடலுக்கப்பாலுள்ள ப்ரிட்டிஷ் நாடுகள் பெரிய கூட்டங்களாக ஒன்றுசேர்ந்தது மல்லாமல் ஒவ்வொரு கூட்டத்திலும் சுயராஜ்யமுறை ஏற்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனியே சுவாதீனம்பெற்றிருந்தது. இவ்விதம் குடியேற்ற சாம்ராஜ்யமென்ற பழைய பெயர்போய் சுயராஜ்யாதிகாரம் பெற்ற ப்ரிட்டிஷ் குடியரசுநாடுகள் உண்டாவதற்கு கடைகால் ஏற்பட்டது.

20. **விக்டோரியா மஹாராணியின் மரணம்.**—ப்ரிட்டிஷ் சரித்திரத்தில் விக்டோரியா மகாராணியின் ஆட்சிதான் வெகுகாலம் நீடித்திருந்தது. 1901 இல் அவர் இறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய மூத்தமகன் **ஏழாம் எட்வர்ட்** பட்டத்திற்குவந்தார்.

## அதிகாரம் XX

## ஏழாம் எட்வர்ட், 1901–1910; ஐந்தாம் ஜார்ஜும், மகாயுத்தமும், 1910–1927

**முக்கியமானவர்கள்:**

கிச்செனர்-பிரபு; ஆர்தர் பால்பர் (Arthur Balfour); ஜோஸெப் சேம்பர்லின்; ஹெர்பெர்ட் ஆஸ்க்வித் (Herbert Asquith); டேவிட் லாயிட் ஜார்ஜ் (David Lloyd George); சேனைத்தலைவனை ஹேக் (General Haig); சேனாதிபதியான போஷ் (Marshal Foch); ஜெர்மன் சக்ரவர்த்தியான இரண்டாம் வில்லியம்; ராம்ஸே-மாக்டொனல்ட் (Ramsay Macdonald); ஸ்டான்லி பால்ட்வின் (Stanley Baldwin).

முக்கிய விஷயங்களும் காலமும்:

1901. ஏழாம் எட்வர்ட் பட்டத்திற்குவந்தது.
1902. போயர் யுத்தம் முடிவடைந்தது.
1906. பார்லிமெண்ட் அங்கத்தினர் பொதுத்தேர்தலில் பழைமைக்கட்சியார் தோல்வியடைந்தது.
1910. தென் ஆபிரிக்கா ஐக்கியமானது.
எழாம் எட்வர்டின் மரணம்.
ஐந்தாம் ஜார்ஜ் பட்டத்திற்குவந்தது.
1911. பார்லிமெண்ட் சட்டம் (Parliament Act)
1914-18. ஜெர்மனியோடு யுத்தம்.
1916. லாயிட் ஜார்ஜ் மந்திரியானது.
1918. நான்காம் சீர்திருத்தச்சட்டம்.
1919. ஜெர்மனியுடன் சமாதானஞ்செய்தது.
1919. இந்திய ராஜாங்கமுறைச் சட்டம்.
1926. ப்ரிட்டிஷ் சாம்ராஜ்ய மஹாநாடு கூடுதல் (Imperial Conference).

1. ஏழாம் எட்வர்டின் குணம். — ஏழாம் எட்வர்ட் பட்டத்திற்கு வரும்போது அவருக்கு வயது அறுபது. அவருடைய பாலியத்திலேயே அவருடைய தந்தையார் ஆல்பர்ட் இளவரசர் இறந்துவிட்டார். அக்காலமுதல் பெரிய சந்தர்ப்பங்களில் அவர் தன் தாய்க்குப் பிரதிநிதியாக பலவிடங்களுக்குச்சென்று உதவிசெய்தார். அவர் உலகமெங்கும் சுற்றிச்சென்று சாம்ராஜ்யத்தின் ஒவ்வொருபாகத்தையும் நன்றாய்த் தெரிந்திருந்தார். அவருக்கு நுண்ணிய அறிவும், பிரிய சுபாவமும், பாடுபடுந் தன்மையுமுண்டு. ஐரோப்பாவிலுள்ள பலதேச மன்னர்களையும், அதிபதிகளையும் தானே போய் பார்த்ததுடன் அவர்களையும் இங்கிலண்டுக்கு வரவேற்றிருக்கிறார். ப்ரிட்டன்தேசம் பிறநாடுகளுடன் சிநேகபாவத்துடனிருப்பதில் அவருக்கு அவாவுண்டு.

2. தென் ஆபிரிக்கா ஐக்கியமானது.—இவருடைய ஆட்சியில் போயர்யுத்தம் முடிவடைந்ததே முக்கிய முதல் சம்பவம். இனி எதிர்ப்பதில் பயனில்லையென்று போயர்கள் கண்டுகொண்டார்கள். 1902 இல் ஏழாம் எட்வர்டைத் தங்களுக்கு அரசராக ஒப்புக்கொள்ள சம்மதித்தனர். இதுகாறும் விரோதிகளாகவிருந்த ப்ரிட்டிஷா



ரும், போயரும் இப்பொழுது சமாதானத்துடன் ஒத்து வாழ்வது கஷ்டமாயிருந்தது. ஆனால், நாளடைவில் எல்லாம் சரிவரமுடிந்தது. சமாதானமேற்பட்டு நான்கு



ஏழாம் எட்வர்ட் அரசர்.

வருஷங்களுக்குப் பிறகு போயர் சுயவாட்சி பெற்றனர். விக்டோரியா மஹாராணியார் காலத்தில் கானடாதேசத்

திலும், ஆஸ்ட்ரேலியா தேசத்திலும் எப்படி ஐக்கிய
முண்டாயிற்றோ, அப்படியே 1909 இல் போயர் நாடுக
ளும் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்துகொண்
டன. போயர்யுத்தத்தில் பிரதான சேனைத்தலைவனா
யிருந்தவன் தென்னாபிரிக்கா ஐக்கியநாட்டிற்கு முதல்
பிரதான மந்திரியானான்.

3. **ஐக்கிய கட்சியாரும், வியாபாரவரிமுறைத் திருத்த
மும்.**—ஏழாம் எட்வர்டின் ஆட்சி ஆரம்பத்தில் ஐக்கிய
கட்சியார் இன்னும் நாட்டை ஆண்டுவந்தனர். விக்டோ
ரியா மஹாராணியார்காலத்தில் கடைசியில் பிரதான
மந்திரியாயிருந்த ஸாலிஸ்பெரி - பிரபு வயதுமுதிர்ச்சி
யால் வேலையைவிட்டு நீங்கி கொஞ்சநாளிலிறந்தான்.
அவனுக்குப் பிறகு 1905 ஆம் வருஷம்வரைக்கும் அவ
னுடைய தம்பி மகன் ஆர்தர் பால்பர் பிரதான மந்திரி
வேலைபார்த்தான். அவன் வேலைபார்த்தகாலத்தில் மந்
திரிகளுக்குப் பல கஷ்டங்கள் உண்டாயின. அவர்களுக்
குள்ளேயே மனவொற்றுமையில்லாமற்போயிற்று. அவர்
களுள் மிகவும் சாமர்த்தியவானான ஜோஸெப் சேம்பர்
லின், ஐம்பதுவருஷகாலமாய் நடந்துவந்த வரியில்லா
சுதந்திர வியாபாரமுறை சரிவர நடக்கவில்லையென்று
எங்கும் பிரசங்கம் செய்தான். ஆகையால், வியாபாரச்
சரக்கு வரிமுறைத்திருத்தம் செய்யவேண்டுமென்று சொல்
லத் தலைப்பட்டான். அம்முறைப்படி பிறநாட்டார்
ப்ரிட்டனுக்கு அனுப்பும் சரக்குகளுக்கு வரிகொடுக்க
வேண்டுமென்றான். இதனால் பிறநாட்டாரால் நஷ்ட
மடைந்துவந்த ப்ரிட்டிஷ் தொழிலாளிகளுக்கு உதவி
செய்யலாமென்று எண்ணினான். அன்னியநாடுகளிலி
ருந்து உற்பத்தியாகிவரும் சரக்குகளைவிட, ப்ரிட்டிஷ்
சாம்ராஜ்ய நாடுகளிலுண்டாகும் சரக்குகள் உள்நாட்
டிற்கு மலிவாய் வரச்செய்யவேண்டுமென்றும் சேம்பர்
லின் கோரினான். இம்முறைக்கு குடியேற்றநாட்டுச் சரக்கு
களுக்கு ஏற்றங்கொடுத்தல் (Colonial Preference) என்று
பெயரிட்டான். வியாபாரச் சரக்குவரித் திருத்தத்தினு
டையவும், குடியேற்றநாட்டுச் சரக்கின் ஏற்றத்தினு
டையவும், நன்மையைப்பற்றி எல்லோருக்கும் போதிப்



பதில், அவனுக்கு ஆவல் இருந்தபடியால், அவன் மந்திரி
வேலையை விட்டுவிட்டான். தேசமெங்கும் சென்று தன்
னுடைய கொள்கையின் அனுகூலபட்சமாக எல்லோருக்
கும் எடுத்துரைக்கத் தலைப்பட்டான். கொஞ்சங்கொஞ்
சமாய் ஐக்கிய கட்சியாரைத் தன்னுடைய எண்ணத்
திற்கு இணங்கச்செய்தான். ஆயினும், முன்னேற்றக் கட்
சியார் அவனைப் பலமாய் எதிர்த்தனர்.

4. **ஏழாம் எட்வர்ட் காலத்தில் முன்னேற்றக்கட்சியார் மந்
திரிகளானது.**—1905 இல் பால்பர் வேலையை விட்டுவிலக
வே, முன்னேற்றக்கட்சியார் திரும்பவும் அதிகாரத்துக்கு
வந்தனர். 1906 ஆம் வருஷ ஆரம்பத்தில் புதிய பொதுத்
தேர்தலொன்று ஏற்பட்டது. அதில் முன்னேற்றக்
கட்சியாருக்கு அனுகூலமுண்டாயிற்று. ஆகையால், இக்
கட்சியாரே எட்வர்ட் அரசன் ஆயுள் முடிவுவரைக்கும்
வேலைபார்த்தனர். கொஞ்சகாலத்திற்குப்பிறகு ஹெர்
பெர்ட் ஆஸ்க்வித் பிரதான மந்திரியானான். இவர்கள்
அநேக புதிய சட்ட மசோதாக்களை ஆலோசனைக்கு
கொண்டுவந்தனர். ஆனால், இக்கட்சியாருக்கு சதா
விரோதியாயிருந்த பிரபுக்கள் சபையார் இவைகளில் முக்
கியமான சிலவற்றைத் நிராகரித்தனர். கடைசியாக
1909 இல் பணக்காரர்கள் இதுவரையிலும் கொடுத்து
வந்த வரிகளுடன் இன்னும் அதிக புதிய வரிகளை அவர்
களுக்கு விதிக்க முன்னேற்றக் கட்சியார் தீர்மானித்த
படியால் அவர்களேற்படுத்திய வரவு செலவு மதிப்புத்திட்
டத்தை (Budget) பிரபுக்கள் சபையார் நிராகரித்தனர்.

5. **முன்னேற்றக் கட்சியாரும், பிரபுக்களும்.** — இந்த
விவாதத்தை முடிவுசெய்ய 1910 இல் ஒரு புதிய பொ
துத் தேர்தல் ஏற்பட்டது. முக்கியமாக பிரபு சங்கத்
தாரின் விவகாரத்துடன் வேறு பல விவகாரங்களையும்
தீர்மானிக்கவேண்டியிருந்தது. வியாபாரச்சரக்குவரித்
திருத்தத்தைப்பற்றியும் விவாதமிருந்துவந்தது. 1906
இல் இருந்த அவ்வளவு பலம் முன்னேற்றக் கட்சியா
ருக்கு இப்போது இல்லாவிடினும், தேர்தலானதும் பார்
லிமென்ட் கூடியவுடன் தாங்கள் கொண்டுவந்த வரவு
செலவு மதிப்புக்கணக்கைப் பிரபுக்கள் சங்கத்தார் ஒப்

புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த அவர்களுக்கு முடிந்தது. மேலும், **தடைத்தீர்மானங்கள் (Veto Resolutions)** என்று பெயர்கொண்ட சில தீர்மானங்களைப் பொதுஜன சபையாரின் ஆதரவில் நிறைவேற்றினர். இந்தத் தீர்மானங்களின்படி வரிசம்பந்தமான விஷயங்களில் பிரபு சங்கத்தார் தலையிடக்கூடாதென்றும், பொதுஜனசபையார் தீர்மானிக்கும் சட்டங்களை அவர்கள் தடுக்கக்கூடாதென்றும் ஏற்பட்டது. அதன்மேல் பார்லிமெண்ட் ஒரே சபையா அல்லது இரண்டுசபை யடங்கியதாவென்ற விவகாரம் கிளம்பிற்று. ஆயினும், இந்த விவகாரம் அதிகரிக்கு முன்னரே அரசர் 1910 இல் இறந்தார்.


6 **பொதுஜன பழக்கத்திருத்தமும், சாம்ராஜ்யமும்.** — ஏழாம் எட்வர்ட் காலத்தில் இரண்டு விஷயங்கள் முக்கியமாய் கவனிக்கத்தக்கன. ப்ரிட்டிஷ் ஜனங்களில் சாமானியர்கட்கும் அதிகப் படிப்பையும், சௌகரியத்தையும், சுகஜீவனத்தையும் உண்டுபண்ணக்கூடிய சட்டங்களை ஏற்படுத்தியது முதல்விஷயம். உலகமுழுவதும் வியாபித்திருக்கும் ப்ரிட்டிஷ் ஜனங்கள் குடியேறியும், ஆண்டும்வரும் நாடுகளில் மேன்மையும், சுயராஜ்ய வதிகாரமும் அதிகரித்துவந்தது இரண்டாம்விஷயம். இதனாற்றான் ஏழாம் எட்வர்ட், பட்டத்திற்கு வந்தவுடன் க்ரேட் ப்ரிட்டன், ஐர்லண்டு இவ்விருதேசங்களுக்கு மட்டுமே அரசனென்றில்லாமல் கடலுக்கப்பாலுள்ள ப்ரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் இறைவனென்ற பெயரையும் வைத்துக்கொண்டார். தவிர தன்னுடைய தாயார் முதலில் வைத்துக்கொண்டதுபோல் 'இந்தியா சக்ரவர்த்தி' என்ற பட்டத்தையும் ஏற்றுக்கொண்டார்.

7. **ஐந்தாம் ஜார்ஜ்.** — எட்வர்ட் அரசருக்குப் பிறகு அவருடைய மகன் ஐந்தாம் ஜார்ஜ் பட்டத்திற்குவந்தார். அப்போது அவருக்கு வயது நாற்பத்தைந்து. முன்னால் அவர் கப்பற்படையில் மாலுமிவேலை பார்த்துவந்தார்.

8. **பார்லிமெண்ட் சட்டமும், ஐர்லண்டு சுயராஜ்யமும்.**— பிரபுக்களுக்கும், சாமானிய ஜனசபையோருக்கும் ஏற்பட்டிருந்த பலமான விவாதம் புதுவரசர் ஆட்சி தொடக்கத்திலுங்கூட நடந்தது.



ஆஸ்க்வித் அதிகாரத்தில் 1911 ஆம் வருஷம் பார்லிமெண்ட் சட்டம் ஏற்பட்



ஐந்தாம் ஜார்ஜ்.

டது. அதன்படி தடைத்தீர்மானங்கள் சட்டவொழுங்குக்கு வந்துவிட்டன. ஆகவே பிரபுக்களுக்கிருந்த

அதிகாரம் அதிகமாய்க் குறைந்துவிட்டது. ராஜாங்கக் காரியங்களை நடத்துவதற்காக பணவசூல் செய்யவேண்டிய எவ்விதமான பணமசோதாவையும் பிரபுக்களுக்கு மாற்றவாவது, தள்ளவாவது அதிகாரமில்லையென்று ஏற்பட்டு விட்டது. மற்றைப்படி வேறு தீர்மானங்கள் விஷயத்தில் அவை மூன்று வருஷகாலம்வரை சட்ட அமலுக்கு வரவொட்டாமல் பிரபுக்கள் நிறுத்திவைக்கமுடியும். பொதுஜன சங்கத்தார் மூன்றுதடவை பிரபுக்களுக்கனுப்பும் மசோதாக்கள் அவர்களுடைய சம்மதமின்றியே சட்டமாகிவிடும். இந்தப் பார்லிமெண்ட் சட்டத்தின்பலன் கொஞ்சநாளில் தெரிந்துவிட்டது. பொதுஜன சபையார் ஐர்லண்டுக்குச் சுயராஜ்யம் கொடுக்கவேண்டுமென்று ஒரு மசோதாவைக் கொண்டுவந்தனர். இதையும் வேறுசில மசோதாக்களையும் பிரபு சபையார் இரண்டுதரம் தள்ளிவிட்டனர். 1914 இல் பொதுஜன சபையார் அவைகளை மூன்றும் தடவையும் அனுப்பினார்கள். அவை பார்லிமெண்ட் சட்டநிபந்தனைப்படி முடிவு காலத்தில் சட்ட அமலுக்குவந்துவிட்டன. ஆனால், அல்ஸ்ட்டர் மாகாணத்திலிருந்த புதுமதக்கூட்டத்தார் சுயராஜ்யம் வராதிருக்கச் செய்யவேண்டுமென்று கடுமையாய் பிரமாணம் செய்துகொண்டார்கள். சுயராஜ்யத்தை விரும்பின தேசியவாதிகளும் சண்டைசெய்யத் தயாராயிருந்தனர். அதிக விபரீதம் உண்டாகும் முன்னரே பெரிய யுத்தம் வந்துவிட்டபடியால், ஐரிஷ் விவகாரத்தை கவனிக்கச் சமயமில்லாமற்போயிற்று.

9. **மஹாயுத்தத்தின் காரணம்.**—ஐரோப்பிய மஹாயுத்தம் 1914 ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாயிற்று. ஜெர்மனியார் உலகமுழுவதையும் அடக்கி ஆளவேண்டுமென்று இச்சைகொண்டதும், மற்றதேசத்தார் அதைத் தடுக்கவேண்டுமென்று இயற்கையாகக்கொண்ட எண்ணமே இந்த யுத்தத்திற்குக் காரணம். 1870-71 இல் ஜெர்மனியார் ப்ரெஞ்சுக்காரர்களை ஒரு சிறிய கடும்போரில் வென்று ஆல்ஸாஸ் மாகாணத்தையும் லொரேன் மாகாணத்திளொரு பகுதியையும் ப்ரெஞ்சுக்காரர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். அதேகாலத்தில் ஜெர்



மனிப்ரஷ்யாதேசவரசன் ஆளுகைக்குட்பட்ட ஒரேதேச
மாகிவிட்டது. அவனுக்கு இப்போது ஜெர்மன் சக்ர
வர்த்தி என்று பெயர்வந்தது. தங்களுக்குக் கிடைத்த
வெற்றிகளால் ஜெர்மனியாருக்கு கர்வமுண்டாயிற்று.
உலகத்தில் தங்களுக்குச் சமானமில்லாத போர்வீரர்க
ளாகிவிட்டனர். அவர்கள் ஆஸ்ட்ரியா, இட்டலி தேச
வாசிகளுடன் மூவர்கூட்டு (Triple Alliance) என்ற ஒப்
பந்தமொன்றைச் செய்துகொண்டு, அவர்களுதவியால்
ஐரோப்பா முழுவதையும் தாங்கள் கட்டி ஆளலாமென்று
நினைத்தார்கள். இதைக்கண்டு பயந்த ப்ரெஞ்சுக்காரரும்,
ருஷ்யரும் இருவர்கூட்டு (Dual Alliance) என்ற ஒப்பந்தத்
தைச் செய்துகொண்டனர். இவ்விதம் ஐரோப்பாவில்
இரண்டு விரோதக்கட்சிகள் ஏற்பட்டன. ப்ரிட்டன்
இந்த இரண்டு கட்சியிலும் சம்பந்தப்படவேயில்லை. இரு
கட்சியாரிடமும் சிநேகபான்மையாகவே இருந்துவிடலா
மென்று ப்ரிட்டிஷார் நினைத்தனர்.

10. **ஆங்கில, ப்ரெஞ்சு ஒப்பந்தம்.**—ஜெர்மனியார் கைத்
தொழில்வேலையாலும், வியாபாரத்தாலுங்கூட பிரபலரா
னார்கள். பஸிபிக் மஹாசமுத்திரத் தீவுகளிலும், ஆபிரிக்
காவிலும் குடியேற்றநாடுகளை ஏற்படுத்திக்கொண்டு,
சிறந்த கப்பற்படையொன்றைத் தயாரித்தனர். ஜெர்
மனியார் தங்களுக்கு முக்கியமான விரோதி ப்ரிட்டன்
தானென்று நினைத்தனர்; ஆகவே ப்ரிட்டனுக்குப் போட்
டியாய் இந்த எத்தனங்களைச் செய்யவாரம்பித்தனர்.
நாளடைவில் ப்ரிட்டனுக்குத் திகிலுண்டாயிற்று. சமா
தானத்தை முறியவிடாமற்செய்ய ப்ரான்ஸுடன் ப்ரிட்
டன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டது. கடைசி
யில், புதிய விவகாரங்களேற்பட்டு சமாதானம் நீடித்தி
ருக்க வழியில்லாமற்போயிற்று.

11. **பால்க்கன் தேசத்திற் குழப்பம்.** — ஐரோப்பாவின்
தென்கிழக்கு நாடுகளில் வெகுகாலமாய் குழப்பம் ஏற்
பட்டிருந்தது. கொஞ்சங் கொஞ்சமாய் பால்க்கன் நாட்
டுக் கிறிஸ்தவக்கூட்டத்தார் துருக்கர் ஆட்சியைத்
தொலைத்துவிட்டனர். ஆயினும், அவர்கள் அடிக்கடி
ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர்.


பால்க்கன் ஜனங்களுக்குள்ளிருந்த பொறாமையைக்கண்டு சமயம் பார்த்து அவர்களுக்குள் விவகாரங்களை கிளப்பி விட்டு, ஆஸ்ட்ரியாவின் உதவியைக்கொண்டு, கடைசியில் அவர்களெல்லோரையும் தங்களுடைய அதிகாரத்திற்கு உட்படுத்திவிடலாமென்று ஜெர்மனியார் நினைத்தனர். துருக்கரைத் தங்களுக்குச் சிநேகிதராக்கிக்கொண்டனர். இதனால் இந்தியாவில் ப்ரிட்டிஷ் அதிகாரத்தை எதிர்ப்பதற்கு அவர்களுக்கு துருக்கியர் தங்கள் நாடுகள் வழியாய்ச் செல்லுவதற்கு வழிவிடுவார்களென நினைத்தார்கள்.

12. மஹாயுத்தம் ஆரம்பித்தது—1914 ஆம் வருஷத்திய கோடையில் ஸெர்பியா வாசியொருவன் ஆஸ்ட்ரியாதேச அரசிற்கு பாத்தியஸ்தனை ஒருவனைக் கொன்றுவிட்டான். இக்குற்றம் ஸெர்பியாவின் சூழ்ச்சியாலேற்பட்டதென்று ஆஸ்ட்ரியா பழிசுமத்திற்று. ஆஸ்ட்ரியா, ஜெர்மனி தேசங்களின் அதிகாரத்திற்கு இடையூறாயிருந்த பால்க்கன் பிரதேசத்திலுள்ள கிறிஸ்தவ மகாணங்களில் ஸெர்பியாவொன்று. அது ருஷ்யா அபிமானித்த நாடு. இந்தக் கொலையைப் போலிக்காரணமாக வைத்துக்கொண்டு ஸெர்பியர்களை அடக்குவதற்கு ஆஸ்ட்ரியாவுக்கு ஜெர்மன் சக்ரவர்த்தி இரண்டாம் வில்லியம் உதவிபுரிந்தான். அதன்மேல் ஸெர்பியாவுக்கு உதவி செய்ய ருஷ்யா சன்னத்தராயினர். யுத்தமுயற்சியை ருஷ்யா ஒழித்தாலொழிய தங்களுடன் போருக்கு வர வேண்டிவருமென்று ஜெர்மனி உடனே ருஷ்யாவுக்குத் தெரிவித்தது. அதற்கு ருஷ்யா மறுக்கவே, ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் அதனுடன் போருக்குச் செல்லுவதாகப் பிரசுரம் செய்தன. ப்ரான்ஸ் பிறகு ருஷ்யாவின் உதவிக்குச்சென்றது.

13. பெல்ஜியத்தைத் தாக்குதல்.—யுத்தத்திற்குத் த[illegible]ராகவிருந்தது ஜெர்மனிதேசந்தான். முதலில் ப்ரா[illegible]ஸை விரைவில் நசுக்கிவிட்டுப் பிறகு ருஷ்யாவை அடக்க வேண்டுமென்பதுதான் ஜெர்மனிசெய்த சூழ்ச்சி. ஜெர்மனிக்கு எதிரில் ப்ரான்ஸ் தேசத்தின் கிழக்கு எல்லையில், அநேக ராணுவக்கோட்டைகளிருந்தன. ஆனால், பெல்



ஜியத்திற்கு முன்னுள்ள ப்ரான்ஸின் வடக்கெல்லையைக் காக்க பலம் ஒன்றுமேயில்லை. இதற்குக் காரணம் யாதெ



னில், பெல்ஜியம் ஐரோப்பிய யுத்தங்களில் சம்பந்தப்படாத பொதுநாடென்று வெகுகாலத்திற்குமுன்னரே

எல்லா ஐரோப்பிய ராஜாங்கத்தாரும் ஒப்புக்கொண்டிருந்தார்கள். ஆயினும், பெல்ஜியம் வழியாய்ப் ப்ரான்ஸை எளிதில் தாக்கக்கூடுமாதலால், ஜெர்மனியார் இந்த ஒப்பந்தத்தைமீறி தங்கள் சேனையை அந்நாட்டின் வழியாய் அனுப்பினார்கள். ஜெர்மனி இவ்விதம் ஒப்பந்தத்திற்கு விரோதமாய் பெல்ஜியத்தின்மீது படையெடுத்தது தகாதகாரியமென்று ப்ரிட்டிஷார் ஆட்சேபனை செய்தனர். ப்ரிட்டிஷார் சமாதானத்தையே விரும்பி போருக்குவர அஞ்சுவார்களென்றும், ப்ரிட்டிஷ்சேனை பலமற்றபடியால் அவர்கள் ப்ரான்ஸுடன் சேர்ந்துகொண்டாலும் தங்களுக்குக் கெடுதியில்லையென்றும் ஜெர்மனியார் நினைத்தனர். ஆனால், பெல்ஜியத்துக்குள் ஜெர்மன்சேனை நுழைந்துவிட்டதென்று கண்டவுடன், ப்ரிட்டிஷார் ஜெர்மனிக்கு விரோதமாய் யுத்த விளம்பரஞ்செய்து, தங்களுடையசேனை ஒன்றைப் ப்ரான்ஸுக்கு அனுப்பினார்கள்.

14. மார்ன் நதிச் சண்டை.—துவக்கத்தில் ஜெர்மனி நினைத்தபடியே எல்லாம் நடந்தது. பெல்ஜியத்தின்மீது படையெடுத்து ப்ரான்ஸின் வடக்குஎல்லை வழியாய் ப்ரான்ஸுக்குள் நுழைந்து, ப்ரெஞ்சுக்காரரையும், அவருக்குதவிசெய்த ப்ரிட்டிஷாரையும் துரத்தியடித்து, ஜெர்மன்சேனைகள் பாரிஸ்நகரை முன்னோக்கிச் சென்றன. பாரிஸ்நகரத்திற்கு நாற்பதுமைல் தூரத்திற்கப்பால் ஜெர்மன்சேனை வரமுடியவில்லை. மார்ன்நதிக்கரையில் நடந்த பெரிய சண்டையில் ஜெர்மனியார் தோல்வியடைந்து பின்னடையவேண்டியதாயிற்று. கொஞ்சகாலத்திற்குள் பிரெஞ்சுக்காரர்கள் பலவிடங்களில் அகழ்களைத் (Trench) தோண்டி, அவைகளுக்குள் மறைந்துநின்று போர்செய்தார்கள். எதிரிகளும் முன்னோக்கிவர முடியாமற்போயிற்று.

15. சுரங்கச் சண்டைக்காலம்.—சேனைகள் வேகமாய் முன்னோக்கிச்சென்று சண்டையிடும் முறைமாறி, சுரங்கங்களில் மறைந்து சண்டையிடும் வழக்கம் மூன்றுவருஷகாலம் நடைபெற்றது. வடகடல்முதல் ஸ்விஸ் எல்லைவரைக்கும் திரண்ட சேனைகள் சுரங்கங்களிற்



ஸொப்பட்டேமியா, கிழக்குஆபிரிக்கா தேசங்களில் இந்தியச்சேனைகளும் மிகவும் நேர்த்தியாக உதவிசெய்து வந்தன. இந்த யுத்தத்திற்குமுன்னால் போர்ப்படையில்லாத ஐக்கிய ராஜ்யத்தாரும் அட்லாண்டிக் மஹாசமுத்திரவழியாய் இருபதுலட்சம் போர்வீரரை அனுப்பினார்கள். இத்திரண்டசேனையும் வந்துசேர்ந்தவுடன் வரவர ஜெர்மனியார் தோல்வியடைவார் என எல்லாருக்கும் புலப்பட்டது.

20. லாயிட் ஜார்ஜ் மந்திரியானது.—ஐக்கியகட்சியாருக்குத் தங்களுடைய திரண்ட சேனைகளைக் கொஞ்சங்கொஞ்சமாகத்தான் சேகரிக்கமுடிந்தது. செய்த முயற்சிகளிற் சில வீணாயின. ஆஸ்க்வித் மந்திரி-கட்சியார் கூடியவரையில் பாடுபட்டனர். ஆயினும், முடிவில் களைத்துவிட்டனர். அப்போது லாயிட் ஜார்ஜ் யுத்தமந்திரியானான். ராஜ்யத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் மிகுந்த ஊக்கத்துடன் வேலைசெய்தான். 1916 இல் கூட்டுமந்திரிகட்சிக்குத் தலைமைமந்திரியானான். அதில் எல்லாக்கட்சியாரும் ஒத்துவேலைசெய்தார்கள். எல்லா விஷயங்களையும் ராஜாங்கத்தார் தங்களுடைய நேர்விசாரணையில் வைத்துக்கொண்டார்கள். யுத்தத்திற்கு வேண்டியவற்றைத் தாங்களே நேரில் அனுப்பினர். உணவுப்பொருள்களைக்கொண்டுவந்து சமாளித்தனர். தரைப்படையையும், கப்பற்படையையும் நடத்தும் விஷயத்தில் அநேக மாறுதல்களைச்செய்து, தகுதியானவர்களைத் தலைமையாக நியமித்தனர். பிசகான விஷயங்கள் எவ்வளவோ நேர்ந்தபோதிலும் அதையும் பாராமல் யுத்தத்தில் வெற்றிபெறதேசத்தார் எல்லோரும் சலிக்காமற் பாடுபட்டனர்.

21. ஐக்கிய கட்சியார் தோல்வியடைந்தது.—இவ்விதம் சேனைவலிமை அதிகரித்தும், ஜெர்மனியாரைத் துரத்துவது அசாத்தியமாயிற்று. டக்லஸ் ஹெக் சேனாபதியின் தலைமையின்கீழ் ப்ரான்ஸில் சண்டைசெய்த ப்ரிட்டிஷ் சேனைகள் ஏராளமான நஷ்டத்துடன் கொஞ்சங்கொஞ்சமாய் முன்சென்றன. ஆஸ்ட்ரியர் இட்டாலியரைதோற்கடித்து, இட்டலியின் வடகிழக்குபாகத்தை ஜயித்துவிட்டனர்.

22. **சேனைத்தலைமை ஒருவன் கைக்குள்வந்தது.**—1918 ஆம் வருஷத்தொடக்கத்தில் ஜெர்மனியார் கடைசியாக பெரிய முயற்சி ஒன்றைச் செய்தனர். ப்ரான்ஸிலிருந்து ப்ரிட்டிஷ், ப்ரெஞ்சு சேனைகளை வசந்தகாலத்தில் பின்னடைந்து ஓடும்படி செய்தனர். பாரிஸ் நகரத்தையும், ஆங்கிலக்கால்வாய் துறைமுகப்பட்டினங்களையும் பிடித்துவிடுவார்போல் இருந்தது. அவர்களுடைய வெற்றிக்குக் காரணம் யாதெனில், துணைக்கட்சியாரின் சேனைகள் தனித்தனியே சண்டையிட்டபடியினால் முழுயுத்தத்தையும் ஒரே சேனைத்தலைவன் நடத்தாததே. கடைசியில் ப்ரெஞ்சு சேனைத்தலைவருள் சிறந்தவனான **மார்ஷல் போஷ்** எல்லாப்படைக்கும் சேனாதிபதியானான். அவனுக்கு கீழ் இருந்து ப்ரிட்டிஷ் சேனைத்தலைவனை ஹேக் ஒழுங்காய் வேலைசெய்தான்.

23. **வெற்றியின்போக்கு திரும்பியவிதம்.** —அமெரிக்கர் சேனை வருவதற்கு முன்னர் வெற்றியடையவேண்டுமென்று ஜெர்மனியார்செய்த முயற்சிக்கு அளவேயில்லை. அந்த ஆத்திரத்தில் அளவுகடந்து முன்சென்றனர். அவர்கள் செய்த பிசகை மார்ஷல்போஷ் தனக்கு அனுகூலமாகச் செய்துகொண்டான். தான்செய்த ஏற்பாடுகள் முதிரும்வரையில் சும்மாவிருந்து, பிறகு எதிர்க்கமுடியாத சேனைகளுடன் அவர்கள்மீது தாக்கினான். இவ்விதம் 1918 இல் மேற்குநாட்டு யுத்தமுகத்தில் வெற்றியின்போக்கு கடைசியாகத் திரும்பியது. ஜூலைமுதல் அக்டோபர்வரைக்கும் ஜெர்மனியார் வீராவேசத்துடன் போர்புரிந்தனர். ஆயினும், தங்களைவிட தங்கள் எதிரிகள் சண்டையில் மேற்பட்டவர்கள் என்று கண்டுகொண்டனர்.

24. **கிழக்குநாட்டில்வெற்றிவந்தது.**—மேற்குயுத்தமுகத்தில் வெற்றிப்பிரவாகம் திரும்புமுன்னரே கிழக்குநாடுகளில் துணைக்கட்சியாருக்கு பலவெற்றிகள் கிடைத்தன. ப்ரிட்டிஷ் சேனையொன்று மெஸொப்பட்டேமியாவை ஜயித்தது. மற்றொன்று பாலஸ்ட்டைன் நாடுமீது படையெடுத்து ஜெருஸலேமைப் பிடித்துக்கொண்டு, ஸிரியா நாட்டிற்குள் நுழைந்தது. இந்த இரண்டு யுத்தத்திலும்



பதுங்கி, ஒருவரையொருவர் கவனித்துப்பார்த்து, எதிரிகளுக்கு எவ்விடத்தில் பலக்குறைவு யிருக்கிறதென்று கண்டுகொள்ள முயன்றுவந்தார்கள்.

16. **ருஷ்யாவில் யுத்தம்.**—இந்தச் சமயத்தில் யுத்தம் எங்கும் பரவிற்று. ஐரோப்பாவின் கிழக்கு நாடுகளிலும், ஆசியாவிலும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. ருஷ்யா ஆஸ்ட்ரியாமீதில் படையெடுத்தது. ஜெர்மனி அதற்கு உதவிபுரிந்து ருஷ்யாமீதில் படையெடுத்தது. கடைசியில் 1917 இல் ருஷ்யாவில் புரட்சியொன்று ஏற்பட்டது. ருஷ்யா சக்ரவர்த்தியை ஆட்சியினின்று விலக்கி, அத்தேசத்தார் ஒரு குடியரசுமுறையை ஏற்படுத்தினர். **போல்ஷிவிக்கர் (Bolsheviks)** என்ற பெயர் கொண்ட ஒரு முரட்டுக்கூட்டத்தார் ருஷ்ய ராஜாங்கத்தைக் கைவசமாக்கிக்கொண்டு, ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட நண்பர்களைக் கைவிட்டு, ஜெர்மனியுடனும், ஆஸ்ட்ரியாவினுடனும் சமாதானஞ் செய்துகொண்டனர். இதனால் ஜெர்மனியாருக்கும், ஆஸ்ட்ரியருக்கும், கிழக்குநாடுகளில் போர்செய்துகொண்டிருந்த சேனைகளை ப்ரான்ஸில் சண்டைசெய்வதற்கு அனுப்ப இடமுண்டாயிற்று.

17. **துருக்கருடன் யுத்தம்.** — ஐரோப்பாவின் தென்கிழக்கு நாடுகளிலும், ஆசியாவிலுங்கூட சண்டைநடந்துகொண்டிருந்தது. ஆஸ்ட்ரியரும், ஜெர்மனியாரும், துருக்கரைத் தங்களுடைய கட்சியில்சேர்ந்துகொள்ளச்செய்துவிட்டனர். அதன்பேரில், ப்ரிட்டிஷார் **டார்டனெல்ஸ்** (Dardanelles) என்ற விடத்திற்கு படையெழுச்சி ஒன்றைச் செய்தனர். ஒன்பதுமாதம் பலமாய்ச் சண்டைசெய்தும் பலிக்காமற் சேனைத் திரும்பிவந்தது. மாஸிடோனியாவிலும், மெஸொப்பட்டேமியாவிலும் துருக்கரைத் தாக்கியதில் பயனொன்றும் ஏற்படவில்லை. துணைக்கட்சியாருக்கு மிகுந்த உபகாரமாய் ஏற்பட்ட விஷயம் யாதெனில், இட்டலி மூவர்கூட்டிலிருந்து பிரிந்து ஆஸ்ட்ரியாவுடன் யுத்தத்திற்குச் சென்றதே.

18. **கடற்சண்டை.** — ப்ரிட்டிஷார் கடலில் தங்களுக்குள்ள மேன்மைப்பதவியை வெகு கஷ்டத்துடன் காப்

பாற்றிவந்தனர். தொடக்கத்தில் ஜெர்மன் சண்டைக்
கப்பற்களுக்கு எதிர்பாராத வெற்றிகிடைத்தது. 1916
இல் ஜட்லண்டில் நடந்த கப்பற்சண்டைதான் முக்கிய
மானது. இருகட்சிக்கும் அதிக நஷ்டமுண்டாயிற்று.
ஆயினும், ஜெர்மனியார் இருட்டில் ஓடி நாசம் அடையா
மல் தப்பினர். இனி வேறொரு கப்பற்சண்டை செய்வ
தற்கு அவர்களுக்கு தைரியமே போய்விட்டது. இனி
ஆழி மூழ்கிகளையும் (Submarine) கனிகளையும் உபயோகிக்
கும் சூழ்ச்சியை கண்டுபிடித்து ப்ரிட்டிஷ் கப்பற்சேனை
யின் பலத்தைச் சிதைக்க முயன்றனர். ஜெர்மன் ஆழிமூழ்
கிகளிலிருந்து வெடித்துவருங் குண்டுகளால் (Torpe-
does) யுத்தத்தில் சம்பந்தப்படாத தேசத்தார்களுடை
யவும், துணைக் கட்சியாருடையவுமான வியாபாரக்கப்
பல்கள் அநேகம் கடலில் மூழ்கிப்போயின. கடலுள்
எல்லாவிடத்திலும் ஜெர்மனியார் வெடிகனிகளை நிரப்பி
யிருந்தனர். அவைகளைத் தொட்ட கப்பல்கள் வெடியால்
அழிந்துபோயின. ஜெர்மனியார் ஆகாயக்கப்பல்களையும்,
விமானங்களையும் செலுத்தி, ஆங்கில, ப்ரெஞ்சு பட்ட
ணங்களையும் அழித்துவந்தனர். இப்படிச் செய்வதினால்
ஆயிரக்கணக்கான உயிர்ச்சேதமும், சொத்து நஷ்டமும்
ஏற்பட்டபோதிலும், ப்ரிட்டன் தேசத்திற்கு ஆகாரம்
கிடைக்கவொட்டாமற்செய்ய அவர்களால் முடியவில்லை.
உலகமுழுவதும் துணைக்கட்சியாருடைய சேனைகள் செல்
லுவதைத் தடுக்கவும் அவர்களால் முடியவில்லை. அன்றி
யும், யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்களும் அவர்க
ளுக்கு விரோதிகளானார்கள். இப்படி ஆனவர்களில்
அமெரிக்கா ஐக்கியநாட்டார் முக்கியமானவர். 1917
இல் ஜெர்மனியாருக்கு விரோதமாய் ஐக்கிய நாட்டாரும்
சேர்ந்துகொண்டனர்.

19. **ஐக்கியகட்சியார் செய்த பலமான முயற்சி.**—நாள
டைவில்ப்ரிட்டிஷாரும், அவர்களைச் சேர்ந்தவரும், இந்த
யுத்தத்தை நடத்துவதற்கு திரண்ட சேனைகளை சேகரித்
தனர். கானடா, ஆஸ்ட்ரேலியா, ந்யூஜிலண்டு முதலிய
ப்ரிட்டிஷ்நாடுகள் இந்தக் கடினமானவேலையை பரிபூர்
ணத்துடன் ஏற்றுக்கொண்டன. பாலஸ்ட்டைன், மெ



கை அதிகரித்து, பெண்மக்களுக்கும் தேர்ந்தெடுக்கு மதி
காரம் வந்தது. ஐர்லண்டுக்கு சுயராஜ்ய வதிகாரம்
கொடுத்த ஓர்சட்டமும் ஏற்பட்டது. இதனால் கிழக்கு
அல்ஸ்டர் மாகாணத்திற்கொன்றும், ஐர்லண்டின் மற்ற
பாகங்களுக்கெல்லாம் ஒன்றுமாக ஐர்லண்டில் ப்ரிட்டி
ஷாருக்குள்ளடங்கின இரண்டு பார்லிமெண்ட் சபைக
ளேற்பட்டன. புதியமதத்தினர் வசிக்கும் அல்ஸ்டர்
தனக்குக்கிடைத்த பார்லிமெண்டை ஏற்றுக்கொண்டது.
ஆயினும், ஐர்லண்டின் மற்ற பாகங்களிலுள்ளவர் இந்த
ஏற்பாட்டை வெறுத்தனர். ஸின் பீன் என்ற ஒரு கட்
சியார் இந்த ஏற்பாட்டை ஓர் கேவலமான பாசாங்கு
என்று சொல்லி, ஐர்லண்டு முழுவதும் சுயராஜ்யவதிகார
முள்ள குடியரசாகவேண்டுமென்று கூறினர். இந்தச்
சட்டம் அமலுக்குவரவொட்டாமல் ஸின்பீன் கட்சியார்
தடுத்து, உள்நாட்டுப்போரைக் கிளப்பிவிட்டனர். முடி
வில், ஆங்கில ராஜாங்கத்தார் ஐரிஷாருடன் ஒருவித ஒப்
பந்தஞ் செய்துகொண்டார்கள். இதன்படி, கானடா,
ஆஸ்ட்ரேலியாவைப்போன்ற கடற்கப்பாலுள்ள சுய
வாட்சி பெற்ற குடியேற்ற நாடுகளுக்குள்ள சுதந்தரம்,
கிழக்கு அல்ஸ்டர் நீங்கலாக மற்ற முழுஐர்லண்டுக்கும்
உண்டென்று ஏற்பட்டது. அதன்பிரகாரம் 1922 இல்
ஐரிஷ் சுயவாட்சி ராஜாங்கம், பார்லிமெண்ட் சட்டப்படி
ஏற்பட்டது. ஐரிஷாரில் அநேகர் இதற்கு உடன்படா
மல், பூரணமான சுவாதீனம் வேண்டுமென்று பிடிவாதம்
பிடித்தனர். இதன்முடிவுயாதெனில், ஐர்லண்டிலேயே
மிதக்கட்சியென்றும், அமிதக்கட்சியென்றும் இரண்டு
கட்சிகள் ஏற்பட்டு, உள்நாட்டுயுத்தம் உண்டாயிற்று.
கடைசியில் மிதக்கட்சியாரின்கை ஓங்கிற்று. ஆகையால்,
இந்தப்புதிய ராஜரிகமுறை நடைபெறுவதற்கு இடமுண்
டாயிற்று.

29. **இந்திய ராஜாங்கச்சட்டம்.**—1919 இல் ஏற்பட்ட
இந்தியராஜாங்கச்சட்டம்என்ற சட்டப்படி இந்திய ஆட்
சிமுறையில்சிலபெரியமாறுதல்கள் உண்டாயின. மற்றக்
குடியேற்றநாடுகளின் ஆட்சி, குடியேற்றத்தாரின் குடி
யரசாக மாறி ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பகுதிகளாக

எப்படி ஆயினவோ அதேமாதிரி இந்தியாவில் ஏற்பட்ட
மாறுதல்களும் ஒத்திருந்தன. இந்தியருக்கு ஆட்சி தந்
திரமுறையில் அனுபவம் அதிகரிக்க வதிகரிக்க படிப்படி
யாய் சுயவாட்சி அதிகாரம் கொடுப்பதே தங்களுடைய
அபிப்பிராயமென்று ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தார் வெளிப்ப
டையாய்த் தெரிவித்தனர். சுயவாட்சி முறையில் தேர்ச்
சியடையச் செய்யக்கூடிய சாதனங்களை மாகாணங்க
ளில் உண்டுபண்ணினார். அங்கே இரட்டை ஆட்சிமுறை
(Diarchy) என்ற ஒரு உபாயம் ஏற்பட்டது. அதன்படி
சட்டநிரூபண சபையோரில் அச்சபையோரின் பொறுப்
புள்ள சிலரை மந்திரிகளாக நியமித்து, அந்த மந்தி
ரிகள்வசம் துரைத்தன சம்பந்தமான சில இலாக்காக்க
ளின் மேல் நிர்வாக அதிகாரத்தை கொடுத்தார்கள். மற்ற
விஷயங்கள் மாகாண அதிபதியின் வசத்திலும், ராஜகாரி
யத்தை நடத்தும் அவனுடைய சபையோர் வசத்திலும்
விட்டனர். மாகாண ஆட்சிகளுக்கெல்லாம் மேற்பட்ட
பொது ராஜாங்கத்தில் இரட்டை ஆட்சிமுறை ஏற்பட
வில்லை. ஆயினும், ஜனங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிக
ளுக்கு ஏற்கனவே இருந்ததைவிட அதிகமான மேல்விசா
ரணை அதிகாரங்கள் வந்தன. முக்கியமாய்ப் பணவிஷ
யத்தில் இவ்வதிகாரம் கிடைத்தது. பொது ராஜாங்கச்
சட்ட நிருமாண சபையில் ஜனங்களால் தேர்ந்தெடுத்தப்
பிரதிநிதிகள் அதிகமாயிருந்தனர்.

30. **பழநடைக்கட்சியார் அதிகாரஞ்செலுத்தியதும், தொழி
லாளிக்கட்சியார் அதிகாரஞ்செலுத்தியதும் (Labour Ministry).**
—1922 இல் பழநடைக்கட்சியார்கூட்டுமந்திரி ஆட்சிக்
காரரை ஆதரிக்க மறுத்து, அவர்களை வேலையை விட்டு
விலகும்படி செய்தனர். உடனே பொதுத் தேர்ச்சி
யொன்று ஏற்பட்டது. அதன்படி பார்லிமென்டில் பழ
நடைக்கட்சியாருக்கு அதிக ஆதரவுண்டாயிற்று. அவர்
கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைமாத்திரம் மந்தி
ரிகளாக நியமித்தனர். சேம்பர்லின் ஆதரித்துவந்த
'வியாபாரச்சரக்குவரி', 'குடியேற்ற நாட்டாரின் சரக்கு
களுக்கு ஏற்றங்கொடுத்தல்' என்ற பழய ஏற்பாடுகளை
ஸ்டான்லி பால்ட்வின் என்ற பிரதான மந்திரி மீண்டும்



இந்தியச்சேனை முக்கியமான வேலைசெய்தது. துணைக்
கட்சியார் வெகுகாலம் ஸலோனிகாவில் சும்மாவிருந்து
பிறகு ஸெர்பியாநாட்டை மீண்டும் ஜயிக்க வாரம்பித்த
னர். துருக்கர் ஆயுதங்களை விட்டெறிந்து கீழ்ப்படிந்த
னர். இட்டாலியர் ஆஸ்ட்ரியரைத் தங்களுடைய எல்லைக்
கப்பால் திரும்பி ஓடும்படி அடித்தனர். நவம்பர்மாதத்
தொடக்கத்தில் ஆஸ்ட்ரியர் துருக்கரைப்போல் ஸமாதா
னத்திற்கு உடன்படவேண்டியவரானார்.

25. **போர் ஓய்வு ஏற்பட்டது.** — உலகமுழுவதையும்
எதிர்த்துப் போர்செய்ய ஜெர்மனியாருக்குத் தனிமை
யாக வலிமையில்லை. ஆகையால், 1918ஆம் நவம்பர்மாதம்
பதினோராந்தேதியில்போர்ஓய்வுக்குவரச்சம்மதித்தனர்.
ப்ரான்ஸிலும், பெல்ஜியத்திலும் ஏற்கனவே துணைக்கட்
சியார் ஜயித்தவிடங்களைக் கைவசமாக்கிக்கொண்டு, ஜெர்
மனிதேசத்தில் ரைன்நதிக்கரைவரையிலுமுள்ள நாட்
டையும் கைப்பற்றினர். மேலும், ஜெர்மனியார் தங்களு
டைய போர்க்கப்பல்களையும், பீரங்கிகளையும், தாங்கள்
சிறைப்பிடித்தவர்களையும், துணைக்கட்சியார்வசம் ஒப்பு
வித்தனர். இந்த யுத்தத்தை நடத்திய ஜெர்மனி, ஆஸ்ட்
ரியா சக்ரவர்த்திகள் அத்தேசத்தில் நடந்த புரட்சிக
ளால் அரசிழந்து ஓடிப்போயினர். பிறகு, சமாதான
விவகாரங்கள் சுலபமாய் நடந்தேறின.

26. **வேர்ஸேல்ஸ் உடன்படிக்கை.**—1919 ஆம் வருஷம்
ஜூனில் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின்படி தங்கள்பே
ரில் சுமத்திய நிபந்தனைகளை ஜெர்மனியார் சம்மதக்
குறைவுடன் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று.ஜெர்மனி
ஒரு சிறிய தரைப்படையையும், கப்பற்படையையுந்
தான் வைத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. துணைக்
கட்சியாருக்கு நேரிட்ட நஷ்டத்திற்காக பலமான பரி
காரஞ்செய்யவேண்டியதாயிற்று. ப்ரான்ஸுக்கு ஆல்
ஸாஸ், லொரேன் நாடுகளை ஜெர்மனி திருப்பிக்கொடுத்து
விடவேண்டுமென்றும், எதிரிகள் வசத்தில் தன்னுடைய
குடியேற்றநாடுகளை விட்டுவிடவேண்டுமென்றும், மறு
படியும் உயிர்த்தெழுந்த போலண்டு ராஜ்யத்தின் பாக
மாகத் தான் பிடித்திருந்த போலிஷ் மாகாணங்களை கொ

டுத்துவிடவேண்டுமென்றும் ஏற்பட்டது. ஆஸ்ட்ரியா
பல சிறிய அரசாங்கங்களாகப் பிரிந்தது. இதற்கு முந்தி
அதனுடைய ஆட்சிக்குள்ளடங்கியிருந்த வெவ்வேறு ஜா
தியார் தனித்தனியே பிரிந்தனர்.

27. சர்வதேச சங்கம்.—சர்வதேச சங்கம் ஒன்று ஏற்
படுத்தவேண்டுமென்ற ஏற்பாடும் இந்த உடன்படிக்கைக்
குள் கண்டிருந்தது. இதன்படி உலகமெங்குமுள்ள ஜாதி
யாரின் பிரதிநிதிகள் ஒவ்வொரு வருஷமும் கூட்டங்கூடி
இனிமேல் யுத்தங்கள் வராமலிருக்கவாவது, அல்லது
வருவதை துர்லபமாகச் செய்யவாவது முயலவேண்டு
மென்ற நிபந்தனையும் அதிற்கண்டிருந்தது. விரோதிக
ளுக்குள் சமாதானமாய் ஒத்துப்போகவேண்டுமென்ற
எண்ணம் இருந்தாலொழிய, இக்கூட்டத்தார் ஒன்றுஞ்
செய்யமுடியாது. 1919 க்குப் பிறகு இவ்விதவெண்ணம்
கொஞ்சகாலம் நடைபெறவில்லை. போல்ஷிவிக் ருஷ்யா
வுடன் விவகாரம் வைத்துக்கொள்வது அசாத்தியமா
யிருந்தது. துருக்கியுடன் செய்துகொள்ளவேண்டிய
சமாதானத்தின் நிபந்தனைகள் துருக்கியர் ஒப்புக்கொள்
ளக் கூடாதவைகளாயிருந்தபடியால் கிழக்கு நாடுகளில்
மறுபடியும் யுத்தம்வந்தது. கடைசியில் 1923 இல்
துணைவர்கூட்டத்தார் அந்த நிபந்தனைகளை மாற்ற ஏற்
றுக்கொண்டனர். கிழக்கிலும், மேற்கிலும் துணைக்கூட்
டத்தாருள் ஒருவருக்கொருவர் அபிப்பிராயபேதமுண்
டாயிற்று. ஜெர்மனியும் தான் வலுவில் ஒப்புக்கொள்ள
வேண்டிய நிபந்தனைகளை நிறைவேற்ற இஷ்டமில்லாத
தாயிற்று. மேலும், இந்த கூட்டுறவில் அமெரிக்கா ஐக்
கிய ராஜ்யங்கள் சேர மறுத்துவிட்டு, ஐரோப்பா ஆட்சி
விஷயங்களில் தலையிடாமல் விலகின. ஆகவே விஷயங்கள்
திருப்தியை யுண்டுபண்ணக் கூடியனவாகவில்லை. கடை
சியில் விஷயங்கள் கொஞ்சம் சரிவர அமைந்தன. பின்னர்
இந்த சர்வதேச சங்கத்தில் ஜெர்மனியும் சேர்ந்துகொண்
டது.

28. நான்காம் சீர்திருத்தச் சட்டம்.—இங்கிலண்டில் கூட்
டுமந்திரிக் கட்சியார் 1918 இல் ஒரு புதிய சீர்திருத்தச்சட்
டம் ஏற்படுத்தினர். அதனால் தேர்ந்தெடுப்போரின் தொ



ஆதரிக்கத்தலைப்பட்டான். அதனால், பழநடைக்கட்சிக்
குப் பலம் குறைந்தது. புதிய தேர்ச்சியொன்று திரும்ப
வும் ஏற்பட்டு, பால்ட்வின் தன் செல்வாக்கையிழந்து வே
லையைவிட்டகன்றான். 1922ஆம் முதல் முன்னேற்றக் கட்
சிக்கு பலம் குறைந்துகொண்டே வந்தது. அதனால் தொ
ழிற்கட்சிக்கு அதிகாரம் வந்தது. ஏனென்றால், அக்கட்
சியினர்தான் எதிர்க்கட்சியில் வலுத்தவராயிருந்தனர்.
சில மாதங்கள்வரைக்கும் ராம்லே மாக்டொனால்ட் தலை
மையின்கீழ் தொழிற்கட்சியார் அதிகாரஞ்செலுத்தினர்.
அது முன்னேற்றக்கட்சியார் ஆதரவில்தான் இருக்க
வேண்டியிருந்தது. அவ்வாதரவு சீக்கிரத்திற் போய்
விட்டது. பிறகு பழநடைக்கட்சியார் மீண்டும் அதிகா
ரத்திற்கு வந்தனர். 1927 வரை இன்னும் அவர்களே
வேலைபார்த்து வருகின்றனர். ஆனால் எதிர்க்கட்சியில்
பலமுடையவர் தொழிலாளிகளே.

31. சாம்ராஜ்ய மஹாநாடு.—லண்டன் நகரத்தில் 1926
இல் பால்ட்வின் கட்சியார் ப்ரிட்டிஷ் சாம்ராஜ்ய அங்கத்
தினரையழைத்து மஹாநாடொன்று கூட்டினார். அந்த
மஹாநாட்டின் தீர்மானங்களின்படி ப்ரிட்டிஷ் குடியேற்
றத்தாரின் குடியரசுமுறையானது ஒருபடி விருத்தியா
யிற்று. அரசனுடைய பொதுவாட்சியின்கீழுள்ள சுய
ராஜ்ய அதிகாரம்பெற்ற நாடுகளின் சுதந்தரபாத்தியத்
தை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

## GLOSSARY—பொருள் விளக்கம்

Abbey = மடம்.

Abbot = மடாதிபதி.

Act = சட்டம்.

Allies = துணைக்கட்சியார்.

Anti-Corn Law League = தானியச் சட்ட விரோதச் சங்கம்.

Archbishop = பிரதான மதத்தலைவன்.

Armistice = சண்டை விலக்கு; போர் ஓய்வு.

Baron = பாரன்; பிரபு.

Bill = மசோதா.

Bishop = மதத்தலைவன்.

Board of Control = மேல்விசாரணை சபை.

Borough = தேர்தல் அதிகாரம் பெற்ற பட்டணம்.

Budget = வரவு, செலவு மதிப்புக் கணக்கு.

Cabinet = மந்திரிக்கூட்டம்.

Cavalier = குதிரைவீரன்.

Chancellor = மந்திரி; பொக்கிஷதாரன்.

Charter = சாஸனம்.

Church = கோவில்.

Coalition = கூட்டு

Colonial Preference = குடியேற்றநாட்டுச் சரக்குக்கு ஏற்றம்.

Commoner = பொதுஜனக்கட்சியைச் சேர்ந்தவன்.

Commonwealth = குடியரசாட்சி.

Confessor = பக்திமான்; பக்திமான்.

Conference = மகாநாடு; மேலைாம்.

Conservatives = பழகமைப்பற்றுள்ளோர்; பழமைக் கட்சியார்.

Constitution = ராஜமுறை; ராஜாங்க ஒழுங்கு.

Corn Law = தானியச் சட்டம்.

Crusade = சிலுவைச் சண்டை.

Declaration = விளம்பரம்.

Defender = ரட்சகன்.

Democracy = குடியரசு.

Diwani = வரிவசூல் அதிகாரம்.

Dual Alliance = இருவர்கூட்டு.

Duke = டியூக்; பிரதான பிரபு.

Earl = இயர்ல்; பிரபு.

East India Company = கிழக்கு இந்தியச் சங்கம்.

Education Act = கல்விச்சட்டம்.

Election = தேர்தல்; அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்தல்.

Empire = சாம்ராஜ்யம்.

Exclusion Bill = விலக்கு மசோதா.

Fief = ஜாகீர்நிலம் [illegible]

Feudal System = நிலமானிய ஒழுங்கு.

Free Trade = (இறக்குமதி) வரியில்லாத தடையற்ற வியாபாரம்.



Government of India Act = இந்திய ராஜாங்கமுறைச் சட்டம்.

Heretic = மதத்துரோகி.

Home Rulers = சுயஆட்சிக்கட்சி.

House of Commons = பொதுஜன சபை.

House of Lords = பிரபுக்கள் சபை; பிரபு சங்கதார்.

Indulgence = இடங்கொடுத்தல்.

Jacobites = ஜேம்ஸ் கட்சியார்; (ஜாகொபைட்டர்.)

Jury = பிரமாணஞ்செய்வோர்.

King-maker = அரசரை ஆக்குவோன்.

Knight = போர்வீரன்.

Labour Party = தொழிலாளிக் கட்சி; தொழிற்கட்சி.

League of Nations = [illegible] சங்கம்.

Liberals = முன்னேற்றக் கட்சியார்.

Lollards = லாலர்டுகள்; [illegible]

Magna Carta = பெரிய பட்டயசாஸனம்

Marches = எல்லைநாடு.

Monarchy = ஒரே அரசன் ஆட்சி.

National Debt = தேசப் பொதுக்கடன்.

Nationalists = தேசியக்கட்சியார்.

Oxford, the Provisions of = ஆக்ஸ்போர்ட் நிபந்தனைகள்.

Parliament = பார்லிமெண்ட்.

Party Government = கட்சியாட்சி.

Petition of Right = பாத்திய மனு.

Pope = போப் மதத்தலைவர்.

Prayer Book, Common = பொதுஜன ஜெப புத்தகம்.

Presbyters = போதகன்; ப்ரெஸ்பிட்டர்கள்.

Pretender = போலிபாத்தியஸ்தன்.

Prime Minister = பிரதான மந்திரி.

Proclamation = விளம்பரம்.

Protection = காப்பு.

Protectionist = பிறநாட்டுச் சரக்குக்கு வரி விதித்து உள்நாட்டு வியாபாரத்தைக் காப்போன்; ரட்சகன்.

Protector = ரட்சகன்.

Protestant = [illegible]; புதிய மதத்தினன்.

Puritan = சுத்தமதஸ்தன்.

Reforms = சீர்திருத்தங்கள்.

Reform Bill = சீர்திருத்த மசோதா.

Regent = ராஜப்பிரதிநிதி.

Repealers = ரத்துசெய்வோர்.

Resolution = தீர்மானம்.

Restoration = பழமுறை மீட்சி; திருத்தம்.

Revolution = புரட்சி.

Roundheads = உருண்டைத்தலையர்.

Royalists = அரசன் கட்சியார்.

Ship-money = கப்பல்வரி.

Social Reform = பொதுஜன பழக்கத்திருத்தம்.

South Sea Bubble = தென் [illegible]

Star Chamber = நக்ஷத்திர மாளிகை.

Suspending Power = (சட்ட) விலக்கு அதிகாரம்.

Tariff Reform = வியாபாரச் சரக்குவரி முறைத்திருத்தம்.

Test Act = சோதனைச்சட்டம்; பரீக்ஷைச் சட்டம்.

Thorough = தீர; திருத்தமான; சம்பூரண.

Toleration Act = மத விதி விலக்கில்லாச்சட்டம்; ஒப்பற்சட்டம்.

Tory = டோரி கட்சி.

Triple Alliance = மூவர் கூட்

Union Act = ஐக்கியச்சட்டம்.

Unionists = ஐக்கிய கட்சி.

Veto = தடை.

Voter = தேர்ச்சி அதிகாரம் பெற்றவன்; வாக்காளன்.

Whigs = விக் கட்சி.

600 008.
1759
125984

PRINTED ... MADRAS—1928 R 4170